# லங்காபுரம்



தேவகாந்தன்

# லங்காபுரம்

தேவகாந்தன்

இலக்கு

# லங்காபுரம்

(நாவல்)

தேவகாந்தன்

இலக்கு

LANKAPURAM A NOVEL BY
DEVAKANTHAN
ILAKKU

OCTOBER 2010
©AUTHOR

▶ லங்காபுரம்

▶ நாவல்

▶ முதற்பதிப்பு ஐப்பசி 2010

▶ டெம்மி 1/8

▶ பக்.232

▶ உரிமை: ஆசிரியருக்கே

▶ இலக்கு வெளியீடு,
F - 3, கணேஷ் ரோயல், 2, பஜனை கோயில் வீதி,
புழுதிவாக்கம், சென்னை - 600 091

▶ மின்னஞ்சல்: Ilakkubooks@gmail.com

▶ கணினி: வடலி, சென்னை - 24

▶ அச்சு: மணி ஆஃசெட், சென்னை - 5

▶ விலை ரூபா: 120

❖

எங்கேயும்

எப்போதும்

ஒரு போர் அடித்துத் துரத்தும்

மனிதத்தின் நினைவுகளுக்கு

நன்றி....

தொடராக எழுத என்னை ஊக்கியும்
இரண்டு மூன்று அத்தியாயங்களினைத் தான்
ஆசிரியாக இருந்த 'பறை' இதழில்
வெளிவரவும் வைத்த நண்பர் மாமூலனுக்கும்,

முதல் அத்தியாயத்திலிருந்து நாவலை வெளியிட்டு
அதன் இறுதி அத்தியாயம் வரை பத்திரிகையை
மிகுந்த சிரமங்களிடையே நடாத்தி
நாவலை முற்றுப்பெற வைத்த 'வைகறை' ஆசிரியர்
நண்பர் ரவிக்கும்,

நாவலை தொடராக எழுத நேர்ந்த வேளை
என்னை எதிர்கொண்ட சில சிரமங்களை
நான் நீக்கக்கூடிய விதமாக
அதன் ஆரம்ப அத்தியாயங்கள் சிலவற்றை வாசித்து
தகுந்த ஆலோசனைகள் தந்த
நண்பர் என். கே. மகாலிங்கத்துக்கும்

**தேவகாந்தன்**

# பாகம் 1

# ஒன்று

**பொ**ழுது படு கரையில் இன்னும் மெதுவாகத் தெரிந்து கொண்டிருந்தது, இறங்கும் சூரிய குடத்தின் இறுதி விசைக் கதிர்கள். அதனெதிர்த் திசையில் இருள் விரிந்தெழுந்துகொண்டிருந்தது. அவ் விரிதலின் கதியில் காலத்தின் மிகச் சிறு துகள்ப் பொழுதான கணங்களையும் கண்டபடி நடந்துகொண்டிருந்தான் நாகன்.

ஒரு பரவசத்தில்போல் கண்கள் அவனுக்குக் கிறங்கியிருந்தன. தன் வலிய கால் பதித்து தும்.. தும்மென நடந்தவாறே மனித சாத்தியமற்ற தூரங்களையும், வெளியையும் அளக்கும் தன் பயணங்களின் பெறுபேறெனப் பலரிடமும் தான் சொல்லியது போன்றதாய் அப்போதும் ஒரு பரவசம் தன்னில் திகைந்தெழுவதை அவன் உணர்ந்துகொண்டிருந்தான்.

தடுக்கவியலா விரைவு கொண்டதுபோல் சூரியன் கீழே, இன்னும் கீழேயாய் விழுந்துகொண்டிருந்தது. அப்போதுதான் திணியும் அவ்விருளில் வழிகடத்தல் அரிதாகப் போகின்றமை அவனின் பிரக்ஞையில் உறைத்தது. சட்டென அவனை மூடிக் கவிந்தெழுந்தது ஓர் ஆயாசச் சுழல்.

எட்டிக் காலெறிந்து நடந்துகொண்டிருந்தவன் வேகம் தணிந்தான். பொழுது படுவதன் முன் தலைநகர் எல்லையைச் சேர்ந்துவிடுகிற தனதெண்ணத்தின் சாத்தியம் கண்ணெதிரிலேயே தொலைந்து கொண்டிருப்பது கண்டான். முதிரும் தன் வயதிலும், அதனாலான தளர்ச்சியிலும் அவனுக்கு அத்தருணம் எரிச்சலாக வந்தது. நெடுந்தொலைவாகவும், நெடுங்காலமாகவும் தான் ஒரு பயணியாய் இருந்துகொண்டிருப்பதுகூட தளர்ச்சியை வருவிப்பதானதேயென்று ஒரு தயவினை கொஞ்சங்கூட அவன் தன்மேல் பட்டுக்கொள்ளவில்லை.

அவனிடத்தில் மிக முக்கியமான வி'யங்கள் இருந்தன, அரசனோடு பேசுவதற்கு. அவனுக்கில்லையெனினும் அரசனுக்கு முக்கியமான தகவல்கள் அவை. அவை அவன் மனத்துக்குள் கிடந்து தாமே பறந்து போய்விடுவனபோல் துடித்துக்கொண்டிருந்தன. பாண்டிய நாட்டின் தலைநகரான கபாடபுரத்திலிருந்து ஓர் அவசரத்தில் புறப்பட்டவன் ஒரு வேகத்தில் ஏறிப்போய்தான் மாந்தையை நடைசாரியாய் அடைந்திருந்தான். கண் முன்னால் பாலைவெளி விரிந்து பரந்திருந்தது. காற்றின் மெல்லிய அசைவுக்கும் வெளியின் தூசி மேலெழுந்துகொண்டிருந்தது. மனிதக் கண்ணீரும், வியர்வையும் தவிர வேறு திரவச் சுவை காணாத கோடையின் பாலை அது. பின்னால்கூட அவன் கடக்கவேண்டியிருந்த வெளியிலும் வேறு பயணிகள், யாத்திரீகர்கள், வணிகக் குழுக்களின் துணைக்குக் காத்திருக்காமல் அவன் தனி வழிநடை மேற்கொண்டு வந்ததுக்கும் அதுவன்றி வேறு காரணம் அவனிடம் இல்லை. அதனால்தான் தகவல்சுமையை இறக்கிவைக்கும் அவசத்தை மறுநாள்வரைகூட ஆறப்போட அவன் மனது சம்மதப் படாதிருந்தது.

நாகன் எதிரே விரிந்து பரந்து கிடந்த வெளியில் பார்வையை வீசினான்.

ஒரு ஊமை இறுக்கத்துள் முனங்கிக்கொண்டு போல் வறண்டும், பிளவைகள் பட்டும், காற்றசைவில் பொடி பறத்தியும்கொண்டு நெடித்துக் கிடந்தது எதிர் கிடந்த மலைப்பிரதேசம். இன்னும் ஓரிரண்டு கூப்பிடு தொலைவில் அப்போது அய்தாகத் தொடங்கியிருந்த அவ் வனம் வெளியாக விரியத் துவங்கிவிடும். வடமேற்குத் திசைநோக்கிய அந்நெடும் பாதை ஊடறுத்த அந்த வனம், கொடுவிலங்கினத்தின் வாழிடமாக இருந்தது. பாதையில் குறுக்கும்மறுக்குமாக விலங்குகளின் அலைவு இல்லையெனினும், இருமருங்கு வனவோரங்களும் அடர்த்தி குறைந்தனவாயும் இருக்கவில்லை. அச்சம் அடர்த்தியுள் அடங்கிக் கிடந்தது.

முதல்நாளிரவினை வனாந்தரப் பாதை ஓரத்திலேயே அவன் கழித்திருந்தான். கவனிப்பற்றதில் அழிபாடடைந்த ஒரு பயணிகள் மடம் மாந்தைக் கரையிலிருந்து பத்துக் கல்லெறி தொலைவில் இருந்தது. சூளை வைத்த மண்கல்களில் எழும்பியிருந்தது. மடத்தின் தோற்றமே அச்சத்தின் ஆதாரத்தில் நின்று போல் தங்க வருவோரை அச்சப்பட வைத்துக்கொண்டிருந்தது. நித்திரையை ஊடறுத்து அவ்வப்போது அச்சங்கள் தம்மிருப்பைக் காட்டிக்கொண்டே இருந்தன நாகனில். விடிதலை அவன் நேசிக்கும்படிக்கே மனத்தில் அந்தரம் முகிழ்த்திருந்தது. விடிந்த வெளியில்தான் ஆசுவாசம் நிறைந்தான் நாகன்.

அப்போது அவன் பயணப்படவேண்டியிருந்த அம் மலைப்பகுதி, கடந்து வந்த வனப்பிரதேசத்தைவிடக் கடுமையானதும் கொடுமையானதுமாகும். மலைதிரி வேடரும், நகரமும் கிராமமும் சாராக் குழுமம் குழுமமான இயக்கரும் சதா செய்யும் பயணிகளின் வதையிலும் கொலையிலும் வெகு ருசி பெற்றிருந்தனர். திருட்டு தேவைக்கானதாகவும், வதையும் கொலையும் சுகத்துக்கானவை யாகவும் இருந்தன அவர்களுக்கு. இரவு தங்களுக்காகவே வருவதுபோல்தான் அவர்களது அட்டகாசம், மக்களின் ஊசலாட்டம் குறைவான அவ்வெளியில் அதிகமிருந்ததை அவன் அறிந்திருந்தான்.

மூன்று மலைமுடிகள் அம் மங்கிய வெளிச்சத்திலும் தொலைவிலாய்த் தெரிந்துகொண்டிருந்தன. அவற்றைக் கடந்தால் தென்னிலங்கைத் தலைநகர் லங்காபுரம்தான். அவற்றுள் குறுமையான இரண்டு மலைகளினிடையே பாதை இரட்டை வெண்வரிகளாய் ஓடி மறைந்திருந்தது. அதுதான் வடமேற்கிலிருந்து லங்காபுரத்தை அடைவதற்கான பிரதான பாதை. பயணங்களும் வாணிபப் பொருள்களும் அப்பாதையூடாகவே தலைநகரத்தை அடைந்தும் நீங்கியும் கொண்டிருந்தன. கிழக்கே ஒரு துறைமுகம் இருந்தது நாவாய்களினூடான பொருள்களின் இறக்குமதிக்கு. அரசன் நினைத்திருந்தால் அவ் வனப்பாதையின் பயமழித்து மனித சஞ்சாரத்தைச் சுலபமானதாக ஆக்கியிருக்க முடியும். உண்மையில் அது அப்படி இல்லாததில் அவனுக்கேதுமில்லைத்தான். பாதுகாப்பு ஒரு யோசனையாகவே அவனில் கிளரும். அஞ்சி அவன் பயணம் கைவிட்ட தருணங்கள் அதுவரை ஏதுமில்லை. ஆனால் கடத்தலரிதானதாய் அந்த வடமேற்குத் திசைப் பாதை ஏன் இருந்ததென்று அவன் அதிகமான வேளைகளில் எண்ணியதுண்டு. அதைத் திட்டமிட்டேதான் ராவணன் விட்டுவைத்திருப்பதாகச் சிலமுறை அவன் எண்ணமெழப் பெற்றிருக்கிறான். அச்சத்தைக் குறிப்பிட்ட ஓரிடத்தில் வளர்த்து வைத்திருப்பதென்பது அவனளவில் சின்ன விஷயமில்லை. ஒரு வாய்ப்பானபொழுதில் தன் சந்தேகத்தை ராவணனிடம் கேட்டுவிடுகிற தீர்மானம் கொண்டான் நாகன்.

அவன் மறுபடி கண்ணோடியபொழுது மலைமுகடுகளின்மேல் ஒருபெரும் கருந்துணி அசைந்துகொண்டிருப்பது தெரிந்தது. மழை வந்தாலும் வரலாம், பிறகு அம் மலைவழியில் நடப்பது இயலாததாக இருக்குமென அவன் எண்ணி முடிக்குமுன்னரே அது மழை முகிலில்லையென ஏதோவொன்று இரகசியமாய் அவனது காதுக்குள் சொல்லிப் போனதுபோலிருந்தது. அம்மாதிரி மேகங்களது கவிவின் பின் ஊர்களுக்கு, அரசுகளுக்கு

சொல்லிவைத்ததுபோல் தீங்குகளே விளைந்திருக்கின்றதை அவன் தன் நீண்ட வாழ்நாட் காலத்தில் அதிகமும் கண்டிருக்கிறான். ஆம், அது துன்னிமித்தத்தின் அடையாளம்.

அவனும், அவன் மக்களும், தந்திரங்களும் மாயங்களும் நிறையச் செய்பவர்களான சில குழும இயக்கர்களும்கூட இன்னும் காரணமறியாது தவித்திருக்கும் இயற்கையின் சில பூடகங்களுள் அது ஒன்று.

அது இலையுதிர்வின் முதிர் காலமாயிருந்தது. மரங்கள் பலவும் இலையுதிர்த்து நிறு மாணமாய் நின்றுகொண்டிருந்தன. வீசிய சற்றுப் பலமாயான காற்றுக்குச் சருகுகள் உருண்டு பறந்து அம் மலைப் பக்கமாய் அள்ளுண்டு போயின. ஒரு பயங்கரமான வேதாளத்தின் வாய்க்குள் அவை அடித்துச் செல்லப்படுவனபோல் மனதில் பட்டுக்கொண்டிருந்தது அவனுக்கு. சிறிதுநேரத்தில் தானே அதற்குள் அடங்கச் செல்வதாக ஒரு கற்பிதமெழ, அவனுக்கு மெல்லிய கலவரமொன்றின் மனத்துள்ளான படர்கை. அச்சங்களை வெல்லும் தன் அறிவினதும் உடம்பினதும் திண்மை யினால் அது வியாபித்தெழும்பு முன்னமே நாகன் அடங்கிப்போகச் செய்துகொண்டான்.

சிறிதுநேரத்தில் அப்போது தான் அடைந்துகொண்டிருந்த உணர்வுகளின் மூலமாயிருந்தவை தனக்கு என்றைக்கும் இல்லாதவாறான விசித்திரமாய் உருவாகியிருந்ததை அவன் அதிசயத்தோடு எண்ணினான்.

அவனுக்குச் சிரிப்பு வந்தது.

எனக்கு என்ன நடந்தது? அச்ச உறைப்பின் ருசியெழல் என்னுள்ளும் நிகழ்ந்துவிட்டிருக்கிறதா? என சொல்கள் அவன் மனத்தில் பெருக்கெடுத்தன.

மெய்தான். தன்னை அதிர வந்த அச்சத்தை அவன் என்றைக்கும் அடைந்ததில்லை. ஆறு ஏழு குகைவாழ் இயக்கர்களே ஒன்றுதிரண்டு வந்தாலும் அஞ்சுகிற மனதில்லை அவனது. அஞ்சுகிற உடம்புமில்லைத்தான். அய்ந்து முழ உயர மேனி. தோள்வரை தொங்கும் விரிசடை. அடிக் கமுகின் வலிய கால்கள். கைகளும் அவைபோல. வெய்யிலும், மழையும், பனியும், காற்றும் சிதைக்க முயன்று முடியாது தோற்றது அவனிடத்தில்தான் நடந்திருந்தது. அந்தப் பெருமைகளை அவனே சிலவேளைகளில் நெருக்க மானவர்களிடம் கூறுவதுண்டு. தனக்குள்ளோ அவற்றை எண்ணிக் கர்வமாய்ப் படுவான்.

முன்னிரவு நேரத்தில் தலைநகருள் நுழைந்தாலும் அவனால் அரண்மனைக்குள் தடையேதுமின்றிச் சென்றிருக்க முடியும். அவனுக்கிருந்த அரசனைச் சந்திப்பதற்கான அவசரம் அரசனுக்கேயானதுதான். ஆனாலும் அதை அகாலத்தில் செய்துவிட அவன் மனது சம்மதிக்காது. அதனால் இரவோடிரவாகத் தலை நகரை அடைவதின் ஆவல் அவனுக்குக் கெட ஆரம்பித்தது. இடையே எங்காவது தங்கி மறுநாள் அதிகாலையில் பயணத்தைத் தொடங்குவதுதான் உசிதமென்றாகினான்.

நாகன் அன்றைக்கான தங்குமிடத்தைக் கண்களால் துளாவியவாறு கவியும் இருட்போர்வைக்குள் போய்க் கொண்டிருந்தான். இடையே ஒரு குறுகலான வழி பிரிந்து புதர்களூக்குள்ளால் ஓடி காட்டுள் மறைந்திருந்தது. மனித இருப்பில் நம்பிக்கை எழுந்தது. நாகன் மேலே யோசிக்காமல் திரும்பி அவ்வழியில் நடந்தான்.

வெகுதூரம் போகுமுன்னரே, 'நாகரே!' என்று தடித்த குரலின் அழைப்பொன்று காட்டின் இடையிலிருந்து கேட்டது. திரும்பிப் பாராமலும், ஞாபகத்தைப் புரட்டாமலும்கூட அது யாரின் குரலென்பதைச் சட்டெனவே அடையாளம் கண்டுகொண்டான் நாகன்.

வியாழியை அவனால் அத்தனை இலகுவில் மறந்துவிட முடியாது.

# இரண்டு

அவனது பயணங்கள் முடிந்தவோ தொடங்குமுன்னவோவான ஏதோவொரு பொழுதில், அத் தீவைச் சுற்றிய ஏதோவொருவிடத்தில் அவர்கள் சந்திப்பு நிகழ்ந்துகொண்டேயிருந்தது. அவனது அப்போதைய பயணத்தின் முடிவிலும் அங்கே வியாழி!

அவன் நாடிச் செல்லாமலே வலிய வரும் இன்பமாகவிருந்தாள் அவள். அவளை அணுகுவதில் அதிக சுகிப்பின் பயமிருந்தது அவனுக்கு. அவன் தூர தேசங்கள் பயணியாய்ப் போன கடந்த இரண்டு வருங்காலத்தில் அவளை அவன் நினைக்கவில்லை. காமமெழுந்து சதிரிடா வயது ஆகியவன் அவன். எனினும், ஆசையே இல்லையென்றுமில்லை. கழிக்கவேண்டியிருந்த இரவுப்போதும் அவள் இடம் செல்ல அவனை உந்தியது. நாகன் தன் மேலில் போர்த்தியிருந்த போர்வை விலகிக் கையினில் விழ திரும்பினான்.

வியாழி ஒரு குச்சு வாசலின் முன்னாலுள்ள மரத்தோடு அட்டகாசமாக நின்றுகொண்டிருந்தாள்.

நாகன் மெல்ல அவளை நெருங்கினான். அவளது திணிந்த முகத்தில் கண்களை வீசினான். கண்கள் சிவந்திருந்தாள் இயக்கி. .. பானகம் ஏதோ அருந்தியிருந்தாளென்று புரிந்தது. ஈஞ்சு மூங்கில்களது ஓலை தழைகளால் வேயவும் அடைக்கவும் பெற்றிருந்த அந்தக் குச்சுக்குள் இருள் பரந்திருந்தது. குழந்தையொன்று தூங்கிக் கொண்டிருந்திருக்க வேண்டும். அசைவில் தெரிந்தான் நாகன். போன தடவை சந்தித்தபோது அவளுக்கு அந்தளவு சின்ன வயதில் குழந்தை இருக்கவில்லை. அதனால் அதற்கு இரண்டு வயதுக்குள் இருக்கவேண்டுமென அவனால் அனுமானிக்க முடிந்தது. அப்போது அவளோடு கூட வசித்துக்கொண்டிருந்தவன் மூலமாகப் பெற்றுக் கொண்ட பிள்ளையாக இருக்கலாமென்று கருதுதலும் சுலபத்தில் கூடியது. அவன் எங்கேயோ? என்றொரு எண்ணமெழுந்தது

நாகனிடத்தில். வளர்ந்த ஒரு மகனும் வியாழிக்கு இருந்தான். அவன் எங்கே.

முன்னர் வேறொருவன் அவளோடு கூட இருந்து கொண்டிருந்தான். அவனை தான் விரட்டியடித்துவிட்டதாக அவளே சொல்லியிருந்தாள். அவன் ஊண் மிகவுண்டான் என்பது அவளது குற்றச்சாட்டு. அவள் தனியாகவேதான் என்றுமிருந்திருக்கிறாள்போல அப்போது நினைக்கத் தோன்றியது நாகனுக்கு. ஏறக்குறைய உண்மையும் அதுதான். புணர்ச்சியும் உறக்கமும் தீனியுமான உலகம் அவளது. புற உலகத்து விதிகள் அவளைக் கட்டுப்படுத்துவதில்லை. இயக்கர்களில் ஊர் துறந்தோரினதே தனியுலகம்தான். வியாழியினதோ இன்னும் தனியானது. அவள் ஒருவனோடு மட்டும் வாழ்தல் அறியாதவள். அவளுக்கு, வெளியே வேறு உலகமில்லை. இருக்குமெனில் அதில் அவளுக்குக் கரிசனையில்லை. தன்னுலகத்தில் தன்னிச்சைகளில் அவளது வாழ்வு நிலைகொண்டிருந்தது. நகரோ கலையும் கல்வியும் அழகும் செல்வமும் பூண்டது. ஊர்கூட உழைப்பு என்றும், உறவுகள் சுற்றங்களின் அணைப்பு என்றும், அவ்வாழ் தலுக்கான வழிபாடுகள் நியமங்களென்றும் ஒரு கட்டுமானத்துக்குள் அடங்கியது. அவளதோ உணர்ச்சியும், ஊணும், உறக்கமும் என்றுமட்டுமாகி கட்டுமானம் உடைத்தது. நாகன் கண்ட தேசங்களில் வியாழியினது வியக்கக்கூடிய வாழ்க்கை.

அவன் எண்ணி முடியுமுன்னே தொலைவிலெங்கோ பார்வை பதித்திருந்தவள், நிதானமாகித் திரும்பி, 'இந்தநேர வாக்கில் எங்கைபோலே' என்று கேட்டாள்.

'தலைநகருக்கு' எனப் பதிலிறுத்தான் நாகன்.

'கண்டும் கன காலம்.'

'ரண்டு ஆண்டு.'

'அவ்வளவு காலமோ?'

'ம்!'

'இருக்கும்தான். எத்தனை மாரி வந்துபோயிற்று! அப்போ போனதுக்கு இப்போதான் திரும்புகையா.'

'ம்' என்றான் மறுபடி அவன்.

'அங்க பார்த்தீரா, கரும்புகார்.'

'ம், கண்டேன்.'

'கண்டுமா அந்த வேகத்தில் நடை.'

'எங்காவது தங்கிப் போக இடம்தேடித்தான் இந்தத் திக்கு வந்தேன்.'

'அதுசரி, வியாழி குடிலில் தங்கிப் போறதுதானே. வாரும் உள்ளே' என்று வழி விலகினாள் வியாழி.

அப்போதுதான் இன்னொரு பெரிய உருவமும் அங்கே படுத்திருப்பதைக் காணக் கூடியதாகவிருந்தது நாகனால். நாகன் தயங்கினான். அவளது வாழ்வில் எதிர்ப்பட்ட இன்னுமொருவனோ? நாகனின் விழிகள் வியாழியைநோக்கித் திரும்பின.

அவனது விழிகளின் வினாவை அறிந்துகொண்ட வியாழி அவசரமாய்ச் சொன்னாள்: 'அது ஒரு வழிப்போக்கு. மிகச் சின்ன வயது. நீர் வரக் கொஞ்சம் முந்தித்தான் கரும்புகாரும், மலைவழியின் இருட்டும் கண்டு அஞ்சிக்கொண்டு இந்தப் பாதையில் வந்துகொண்டிருந்தது. நானேதான் கூப்பிட்டு படுத்திட்டு முதல் வெளிச்சத்தில் எழும்பிப்போகக் கேட்டேன்.'

நாகன் சமாதானமடைந்தான். ஆனால் பேச்சரவத்தில் எழும்பிய அம் மனிதன்தான் கலவரத்தோடு நாகனை நோக்கினான்.

அவன் பார்வைக்கு வியாபாரிபோலத் தோன்றினான். இளமையாகவிருந்தான். ஒற்றன்போல் அவன் பார்வை நாகனில், வியாழியில் ஏற இறங்க மொய்த்தபடியிருந்தது சந்தேகம் கிளர்த்தி. வியாபாரியெனில் கூட்டமாக வந்திருக்கக்கூடிய தன் மற்றைய வியாபார நண்பர்களை எங்கே தொலைத்தானோ.

இளம் விருந்தினனின் முகத்தில் பயப் பரவலைக் கண்ட வியாழி நாகன் தனக்கு வேண்டியவனென்றும், அரசனின் அணுக்ககார னெனவும் சொல்லி அவனைத் தெளிவித்தாள். மறுகணமே மறுபடியும் படுத்துக்கொண்டு அவன் தூங்க ஆரம்பித்துவிட்டான்.

வியர்வையில் அப்பிய புழுதிச் சுமையில் தன் உடம்பு கனப்பதாய்த் தெரிந்தான் நாகன். வியாழி காட்டிய குளத்தில் அவன் குளித்துவிட்டு வர, தேனில் போட்டு வைத்திருந்த இறைச்சியம், மதுக் குடுவையுமாக நின்றுகொண்டிருந்தாள் அவள். உண்டும் அருந்தியும் அவளது உபசாரத்தை ஏற்ற பிறகு, நிதானமாய் வியாழிநோக்கித் திரும்பினான் நாகன்.

கண்கள் அவளை அளைய ஆரம்பித்தன.

அவள் மென்தோலாலான ஆடையொன்றை இடுப்பில் கட்டியிருந்தாள். நெஞ்சகம் வெறுமையாய்க் கிடந்தது. இரண்டு கருமுலைகளும் இன்னும் மதர்த்து நிமிர்ந்துநின்று திமிறிக்கொண்டிருந்தன. அகன்ற இடுப்பின் கீழே வலிதோடு சதைத்

திரட்சிபெற்ற கால்கள் இறங்கியிருந்தன. அந்த ஆகிருதியோடு அவளால் எவரையும் அச்சப்படவைக்க முடியும். ஆனாலும் அப்போது ஒரு சாந்த நிலையிலும், காம எறிகையுடனும் அவள் நின்றுகொண்டிருந்தாள். அக்கணம் அவள் வெகு அழகுபோல் தோன்றினாள் நாகனுக்கு.

தன் மேல் பதியும் நாக பார்வையினை மெல்லிய கிறக்கத்தோடு மேனிச் சூடு கிளர அனுபவித்துக்கொண்டிருந்தாள் வியாழி. குடுவையை எடுத்து மேலும் தனக்குப் போதையேற்றினாள்.

சிறிது நேரத்தில் நாகன் கேட்டான்: 'உன்னோடு இருந்தானே ஒருத்தன், இப்ப எங்கே.'

'முசுறன்! போய்விட்டான் முடிந்துபோனான்.'

'எப்படி.'

'சிங்கம் கடித்துத் தின்றுவிட்டது.'

'அய்யோ! எப்படி நடந்தது.'

வியாழி சொன்னாள்.

அவளது நினைவுகள் புரள ஆரம்பித்தன.

அவளுக்கு வேட்டை பிடித்திருந்தது. குழுமத்தைவிட்டுத் தனியாய் அலைய ஆரம்பித்ததன் பின்னர் வேட்டையே ஜீவனோபாயத்துக்கான ஒரே மார்க்கமாகவும் இருந்ததில் பிடிப்பினைச் செயற்படுத்துவது அவசியமாகவும் போய்விட்டிருந்தது. இச்சாபூர்வமான திரிதலில் அவள் லயம் கண்டிருந்தாள். சிறிதுகாலம் அவள் குழந்தைப் பேறு காரணமாய் வேட்டைக்குச் செல்லமுடியாதவளாக இருக்கையில் முசுறனே வேட்டையென்று போய் இயன்றதை அடித்துவந்து போட்டான். தோள் வலுவிருந்தும் வில்அம்பின் தேர்ச்சி குறைந்திருந்தவனால் பெரிதாக என்ன இரையை அடித்துவந்து போட்டிருக்க முடியும். அதனால் வியாழி குழந்தைப்பேறு முடிந்து சுகதேகம் கொள்வதன் முன்னேயே அவனையும் அழைத்துக்கொண்டு வேட்டைக்குப் புறப்பட்டிருந்தாள் ஒருநாள். கோடையின் அனல் திசைகள்தோறும் பறந்துகொண்டிருந்த நாளாயிருந்தது அது. அடர்ந்த காடடைய கைக்குழந்தை தடையாகவிருந்ததில், அன்றைய வேட்டையை கரைக்காடுகளிலேயே மையப்படுத்தியிருந்தாள் வியாழி. வெகுநேரம் காட்டில் அலைந்தும் தோதான மிருகமேதும் அவர்களது பார்வைக்கு அகப்படவில்லை. நேரம் மத்தியானத்தைக் கடந்துகொண்டிருந்தது. பிள்ளைப்பேற்றில் வியாழி மிகவும் வாடிப் போயிருந்ததில் அன்றைக்கு மிருக தடத்தைக் கண்டு வேட்டையை முன்னெடுத்தது பெரும்பாலும் முசுறனாகவிருந்தான். நேரமாக ஆக

களைப்பும், பின் பசியும் தாகமும் மேவிப்போனாள் வியாழி. நடை நலிந்தது. சிறிதுநேரத்தில் அவள் முசுறனைவிட்டுப் பின்தங்கியும் போனாள். முசுறன் திரும்பிப் பார்த்து அவள் வருத்தத்தைக் கண்டுகொண்டு அவளை அங்குள்ள பாறையொன்றில் அமர வைத்து விட்டுத் தண்ணீர் தேடிவரப் போனான். அவன் போய் வெகுநேரமில்லை. திடீரென முசுறனின் அலறல் கேட்டது. கூட மிருகத்தின் ஆக்ரோ'மான கர்ச்சனை. வியாழி இயலாமை மறந்தாள். பாய்ந்தெழுந்து சத்தத் திசைநோக்கிப் பறந்தாள். எருத்து மயிர் சிலிர்த்து நிற்ப, சிங்கமொன்று முசுறனைக் கழுத்துப் பிடியில் பிடித்திருந்தது. முசுறன் எதிர்ப்படங்கி சிங்கத்துக்கு அனேகமாகத் தன்னைத் தோற்கக் கொடுத்துக்கொண்டிருந்தான். வியாழி கதிகலங்கிப் போனாள். ஆனாலும் கணம் தாமதமற்ற சுதாரிப்போடு வில்லை உயர்த்தினாள். வளைத்த வில்லிலிருந்து சீறிப் பறந்தது ஒரு விசை அம்பு. அது சிங்கத்தின் பளுவினுள் புகுந்தது. ஏதோ இடைஞ்சலில் சிங்கம் சினத்தோடு ஒரவிழி திருப்பியது வியாழியின் திசையி;ல். பின்னர்தான் தன்னுள் புகுந்த அம்பின் வலியை அது உணர்ந்ததுபோலும். உயிர் வகிரும் எய்திறனுடன் அம்பு உள்ளே புகுந்திருந்ததில், எய்தக்கூடிய மரண சாத்தியத்தைத் தெரிந்ததுபோல் முசுறனின் மார்பை நிலத்தோடு அழுத்தியிருந்த தன் முன்பாதம் விலக்கிக்கொண்டு மெல்ல நடந்து அடவியினுள் மறைந்தது. வியாழி கிட்ட ஓடிப்போய்ப் பார்த்தாள். சிங்கப் பற்கள் முசுறனின் கழுத்தை பெரும்பாலும் அறுந்துதொங்கும் நிலைக்காக்கிவிட்டிருந்தன. ஏற்கனவே செத்துப்போயும் விட்டிருந்தான். வியாழி செய்ய எதுவும் இருக்கவில்லை. குகையொன்று தேடி அதனுள் அவனை இழுத்துப்போய் வைத்து கல்லுகளெடுத்து மூடிவிட்டுத் திரும்பினாள். அவன் அவளுக்கு இதமாக நடந்தவன். அவனுக்கு முசுறு என்பது காரணமான பெயராகத்தான் வந்தது. அவன் எல்லோரோடும் வெடுவெடுப்பாகவே பேசுவான். எடுத்ததற்கெல்லாம் எவரோடும் எரிந்தும் விழுந்தான். ஆனாலும் வியாழியோடு அவன் ஏவியது செய்து பொறுமையாகவே வாழ்ந்தான். வியாழிக்கு இரண்டு தினங்கள் துக்கம் துக்கமாகவே வந்துகொண்டிருந்தது. பின்னர் எல்லாம் இயல்பாகிப்போனது.

'முசுறன் செத்து இப்ப ஆறேமு நிலாக் காலம்' என்று முடித்தாள் அவள்.

மரணம் அதற்குமேல் அவர்களுக்குப் பாதிப்பைச் செய்வதில்லைத்தான்! நாகன் எண்ணினான். பிறகு கேட்டான்: 'நீ இங்கு வந்து எவ்வளவு காலம்.'

'கொஞ்சம்தான். கெதியில் வேறிடம் போய்விடுவேன்.'

'உன் மகன் எங்கே.'

'வருவான். இருட்டு அவனுக்கு அச்சம். அதனால் சிலசமயம் நாளை காலையில் வருவான்.'

தான் வெள;ளென எழும்பவேண்டுமென்றும், வெளியே அந்த வெங்கிணாந்தி மரத்தோடு படுத்தால் பறவைகளே துயிலெழுப்பி விட்டுவிடும் என்றும் கூறிக்கொண்டு நாகன் வெளியே நடந்தான். அவனை விழுங்கும் வேட்கையோடு பார்த்தபடி மறுப்பின்றி நின்றுகொண்டிருந்தாள் வியாழி. அவன் வெளியே படுப்பதுதான் வசதிபோல் அவளது விழிகளில் மெல்லிய சிரிப்பின் வரிகள்.

# மூன்று

உடம்பில் பட்டிருந்த அலுப்பை உணர்ந்து விரைவாய் வெங்கிணாந்தி மரத்தையடைந்த நாகன், அவசர அவசரமாய்த் தளச் செப்பத்தை காலினால் தடவி உறுதிசெய்து படுத்துக் கொண்டபோதிலும், அதிசயமாய் அவனுக்கு நித்திரை வரப் பின்னடித்துக்கொண்டிருந்தது. இலையுதிர் காலத்திலும் அவசியத்துக்குப்போல் சில இலைகளை உதிர்த்துவிட்டு இன்னும் செழிக்கச் சடைத்திருந்த மரக் கிளைகளில் அவன் பார்வையைப் படரவிட்டுப் படுத்திருந்தான். வீச்சான அசைவில் தம்முள் மோதி இலைகள் எழுப்பிய சளசளப்பொலிகள் காதில் விழுந்து கொண்டிருந்தன. எங்கோ ஒரு பறவை அப்போது பறந்ததில் இறக்கைகளின் சடசடப்பொலியும் கேட்டது. இன்னும் மெல்லென உருண்டோடிய நீரொழுக்கின் சத்தமும் கேட்டான். முப்புறம் கடல் விரிய நின்ற அப் பூமியின் நடுவண் பகுதி மலைகளிலிருந்து சுரப்பெடுத்து லங்காபுரத்தின் பரந்த வயல் நிலங்களைப் பசுமையாக்கிவிட்டு அங்கேயே உறைவடைந்துபோகத் தூரவாய் ஓடிய ஓர் ஆற்றின் சப்த எழுகையே அதுவென்பதை மிகச் சுலபமாகவே தெரிந்தான் நாகன். அவன் என்றுமே காணாது ஒலி மட்டும் கேட்ட நதியாகவிருந்தது அது. மட்டுமில்லை. பெருமழைக் காலத்தில் பொங்கிப் பெருகி கண்டவற்றையெல்லாம் வாரிச் சுருட்டிக்கொண்டு எங்கே போய் தான் ஒழிகிறதென்பதையும் மறைத்து அது புதிர்கொண்டு விளங்கியது.

அது உற்பவமாகும் மலைப் பகுதியானது மர்மங்களின் முடிச்சுகளைக் கொண்டிருப்பதை அவன் அப்போது நினைத்துப் பார்த்தான்.

விலங்கினம்கூடச் சஞ்சாரமறுத்த வனங்களும், புகார்களின் கவிவால் காட்சி மறுக்கப்பட்டிருந்ததில் வெஞ்சினங்கொண்டு

இன்னும் மேலே மேலேயென வளர்ந்துகொண்டிருந்த மலைகளுமான அப்பகுதி, உறவுகளைக் கைவிட்ட தேவதைகளின் குளிர் ஊர்களைக் கொண்டிருப்பதாய்த் தன் நெடும் பயணத்தில் எங்கோவொரு இடத்தில் அவன் சிலர் சொல்லக் கேட்டிருந்தான். தன் நிலக் கதைகளை வேற்று நிலத்தான் அறிந்து சொன்னது அவனுக்கு அதிசயமாகவே இருந்தது. ஆனாலும் அக் கணம்வரையில் அதுபற்றி அவனுக்கு மறுநினைப்பு எழுந்ததில்லை.

அப்போது எழுந்தது.

தேவதைகள் நீரில் மிதந்தும், காற்றில் பறந்தும் திரிந்தனராம். ஏதோவொரு தேவதை அப்போதுகூட அச் சலசலக்கும் நீரில் மிதந்து வருதல் கூடுமோவென ஒரு பிரமிப்பான எண்ணமெழப்பெற்றான் நாகன்.

தொடர்ந்து தேவதைகள் எப்படியிருப்பரென்ற கேள்வி அவனுக்குள் பிறந்தது. பனிமலைத் தொடர்த் திசையில் வடமேல் கணவாயினூடான வெண்மனிதர்களின் வரவுக்குப் பிறகே, அதுபோல் மிகவினிதான கதைகள் புனைவிலேறிப் பரவிக்கொண்டிருப்பதாய் கபாடபுரத்தில் ஓர் அந்தணன் சொல்லியிருந்ததையும் அப்போது நினைக்க அவனால் முடிந்தது. வடக்கின் பூர்வ இனக் குடிகளின் தேவதைகள் தெற்கில் நீரர மகளிர் எனப்படுவதாய்ச் சொன்னதும் அவ்வந்தணன்தான். அவ்வாறெனின் சீதை தேவதையா? என வினா பிறந்தது அவனிடத்தில்.

அயோத்தி என்ற தேசத்தின் சீதை என்பவள் அரசிழந்த தன் கணவனோடும் அவனிளவலோடும் வனம் திரிவதான கதையை நாகன் முன்பே அறிந்திருந்தான். முந்திய ஒரு பயண முடிவில் வந்து அதுபற்றி ராவணனுக்குத் தெரிவித்ததும் அவன்தான். ஆனால் அரசிழந்த கணவனோடு வனங்களினூடாய்ச் சீதை தென்புலம்நோக்கி நகர்வதாகவும், அவளின் பேரெழில் பற்றியும் அந்தணன் சொன்னது நாகனுக்குப் புதியவை. அவ்வளவேயெனின் நாகனில் அவை மறதியாகிப் போயிருக்கும். ஆனால் அந்தணன் சீதையைத் திருவென்றான். அவள் பொன் நிறமாய் ஒளி வீசுபவளாம் என்றான். அவள் செல்லும் திசையெங்கும் பொன்னொளிர் பரவிச் செல்லுமாமெனச் சொன்னான். அவற்றை நாகனது மறதி விழுங்க மறுத்தது. மட்டுமில்லை. நினைப்பிலிருந்து உறுத்தி ராவணனிடம் சொல்லத் துரத்தியும் விட்டிருந்தன.

எனினும் தன் நித்திரையைக் குழப்பிய இடையூறுகள் அவைமட்டுமேயல்ல என்பதையும் அவன் அறியவே செய்தான். நதியின் குரல், வனத்தினொலி, ஊர் அரவங்களுள் அவனால்

சுலபமாகத் தூங்கமுடியும். இது வேறொன்று. ஒரு பெருவிஷயத்தைச் சொல்வதற்காகவே அவனது வருகையில் அவசரம் பிறந்தது. அதில் அளப்பரிய ஓர் அழகின் சேதி இருந்தது. ஆனால் கரும் புகார்களின் மலைக் கவிவு கண்ட பின்னால் ஏதோ ஒரு மனத் துயரத்துள் அவன் விழுந்துபோனான். கரும்புகார் அவன் கண்டுகொண்டிருக்கவே விலகிப் போயிற்றெனினும், அது மீண்டும் வந்து கவியாதென்பதற்கும் உறுதியேதும் இருக்கவில்லை. அது உற்பாதமாயிருந்தாலும், மழையின் அறிகுறியாயிருந்தாலும் எதுகுமே நல்லதுக்கில்லை. அது மழையாகவிருந்தால் வழிநடையின் சகல இடையூறுகளையும் மறுநாள் அவன் சந்திக்கவேண்டியிருக்கும். உற்பாதமாயிருந்தால் அந்த நாடு எதிர்கொள்ளவிருக்கும் இன்னல்கள் அளப்பரியதானவை. இத்தகைய உணர் குவியலில், காற்றளைந்த குளத்தின் சலனமாய் வந்து கலந்திருந்தாள் வியாழியும். அவள்மேல் அவனுக்குப் பெருவிருப் பென்று ஏதுமில்லையெனினும், அவளே ஒரு தேவையாகியிருந்தாள் என்பதையும் நிராகரிப்பதற்கு இயலாதவனாயிருந்தான். அவளோடு கொண்ட உறவின் அனுபவ நாள்கள் வந்துவந்து சுகம்செய்து போய்க்கொண்டிருந்தன.

அவ்வேளையில் அவனில் நித்திரை வந்து கவிந்தது.

வீச்சான காற்று விசையடங்கி மெல்லென இழைய ஆரம்பித்துநின்ற பொழுதில் அந் நித்திரை மிகச் சுகமானதாகவிருந்தது அவனுக்கு. மனம் சலனமாகி தன்னுள் உருவ அசைவுகள் கிளர்த்தாத அசதியான தூக்கம்கொண்டான்.

சிறிதுநேரத்தில் அந்த அசதியில் எழுந்த தூக்கச் சுகம், வேறொரு பரிமாணம் பெற்று எழுச்சிச் சுகமாய் அவனது உடலில் திகைந்தெழுந்துகொண்டிருந்தது. அப்படியான பொழுதின் இடையில் அவனுக்கு உள்விழிப்புப் பிறந்தது.

மாலையில் மும்மலைகளை மூடிக் கவிந்தலைந்த கரும்புகார் அப்போது தன்மேல் வந்து மூடி அசைவறுத்து நின்று கொண்டிருப்பதுபோல் ஒரு பிரமை. பின்னர் தன்னை அமுக்குவது போல் ஓர் உணர்கை. அப்படியே அது தன்னை அமுக்கிச் சாகடித்துவிடுமோ என்று மனம் பதறுவதற்கிடையில், நடுவுடம்பி லிருந்து ஒரு பரவசம் பொங்கிப் பிரவாகித்து ஒருபுறம் உள்ளங்கால் வரையுமாய், மறுபுறத்தில் உச்சந்தலைவரையுமாகப் படர்வதுபோல் தோன்ற, நாகன் மூச்சடக்கிக் கிடந்தான். இன்பம் கிளரக் கிளர தன்மேற் பாரமும் அதிகரிப்பதுபோல் தோன்றிற்று. இன்பத்துக்காக பாரத்தைத் தாங்கலாம்போல இருந்ததில் பேசாது கிடந்தான்.

ஒருபொழுதில் நரம்புகளின் புடைப்பு பொறுக்கவியலாததாய்ப் போக, இறுகத் தழுவியணைக்கும் வேகமெழப்பெற்றான் நாகன். கைகளை வீசியெறிந்து வாரியிழுத்தான். கண்களைத் திறந்து நோக்க, அம் மெல்லிய இருளில் வியாழி தெரிந்தாள். வெண்முகைப் பல் முனைகள் கீறுகாட்ட, அவன்மேலிருந்து வேகவேகமாக இயங்கிக் கொண்டிருந்தாள். இன்பச் சுரப்பின் காரணம் வெளித்தது அவனுக்கு. வெளியின் அவதானமிழந்ததாய்க் கணங்கள் கணங்களாய்ச் சுகம் நீட்சிபெற்றுப் பொழுது கழிய, மின்னல் வெடித்ததுபோல் வீரியம் சிதறி வெறி அடங்கினான் நாகன். வியாழியும் இயங்குதல் நிறுத்திக் களைத்தாள்.

ஒரு சிறுபொழுது உடம்பும் மனமும் நிதானப்படத் தேவைப் பட்டவளாய் அசைவற்றுக் கிடந்த வியாழி அவனிலிருந்து வழிந்து அருகில் சரிந்தாள்.

இரவு தளர்ந்துகொண்டிருந்தது.

பேச்சும் அசைவுமற்றுக் கிடந்தவள் மெல்ல, 'நாகரே' என்றாள்.

'ம்' என்றான் அவன்.

எப்படித் துவங்க என்பதுபோல் சிறிது தயக்கம் காட்டியவள் பிறகு கேட்டாள்: 'உமது பயணம் துவங்கி இரண்டு மழைக்காலமென்கிறீர். இந்தக் காலத்தில் என்னை எப்பவாவது நீர் நினைத்திருக்கிறீரா.'

நாகனுக்குச் சங்கடமாயிருந்தது. அவளது கனிவு அவனை உண்மையான பதிலைச் சொல்வதிலிருந்து பின்வாங்கியிழுத்தது. வியாழியின் விழிகளிலிருந்த தசைச் சுக விழைச்சலை மாலையில் கண்டிருந்தான்தான். ஆனாலும் அத்தகு அன்பின் முறுக்கத்தை வியாழியில் அவன் நினைத்தும் பார்த்ததில்லை. அவன் தனிநடை போபவன். வாழ்வின் அந்தத்தைப் போலவே அதன் நீண்ட பயணத்திலும். அவன் துணை கொள்ளாதவன். துணை வேண்டாதவன். நாக நாட்டிலிருந்து எப்போதோ லங்காபுரம் வந்தவன், பயணியாயே தொடர்வதும், மீதிநாளில் ராவணன்கூடத் தங்குவதும், ஊர் அலைவதுமாய்;க் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தான். அதுவே அவனுக்குப் பிடித்திருந்தது.

என்ன, எதுவும் பேசாமல்' என்று வியாழி மறுபடி உசுப்ப, 'பயணத்தின் கடுமை அறியாமல் பேசுகிறாய் நீ என்று அவளுக்கு மறுமொழி புகலத் துவங்கினான் நாகன். 'அதை நான் விரும்புகிறேனென்றாலும், பயணமானது தன்னில் சவாரிப்போருக்கு என்றைக்குமே இதத்தைச் செய்ததில்லை. நாளை என்ற பொழுதே எப்பவும் எதிர்பார்ப்பிலிருக்கும். தேடலே குறியாயிருக்கும்.

நாகவினத்தானாய் என் வாழ்வியலின் கூறுகளை வேறுவேறு நாடுகளிலேயும் காணுகையில் நான் சிலிர்த்துப்போகிறன், வியாழி. அங்கேயிருந்தெல்லாம் பல கதைகளை இங்கே காவி வருகிறேன். அதுபோல பல கதைகளை அங்கைஅங்கேயும் விட்டு. புதிது புதிதான நிலங்கள் காணும்போது அவற்றை என் நிலமாயும், புதிது புதிதான மனிதரின் சந்திப்பில் உறவினர் சந்திப்பையும் என்னால் இதில் உணர முடியும். எல்லாமே என் நாடாய், எல்லாருமே என் உறவாய்ப் பாவனை பண்ண முடிவது பெரிய பேறு. நானும் இதைத் தவிர வேறை நினைத்ததுமில்லை. வேறை அடைந்ததுமில்லை.'

துளிதுளியாய்ப் பொழுது கழிந்துகொண்டிருந்தது. நாகன் அவளின் சுதாரிப்பைத் தெரிந்துகொண்டவனாய் சற்றேனும் தன் உள்ளக் கிடக்கையினைத் தெரிவித்துவிடும் உறுதிபெற்று மேலே சொன்னான்: 'பெருவிருப்பம் செலுத்துவதற்குரியவராய் இதுவரை யாரும் ஆனதில்லை எனக்கு. உன்னிலே எனக்கிருக்கிற விருப்பம், மறைக்காமல் சொல்லுகிறேன், உடம்பு சார்ந்ததுதான். இதை நீ விளங்கிக்கொள்.'

அவளின் மூச்சிழையும் ஒலி மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது.

இனி அவளே பேசட்டும் என்பதுபோல் சிறிதுநேரம் பேசாமல் கிடந்தான் நாகன்.

# நான்கு

மௌனம் வெடித்து அருகெங்கும் சிதறிக்கிடந்தது. அதை மிகைப்பிப்பதாய் சூழலில் நதியினொலி, வனத்தின் முனகல். எங்கோ கொட்டும் பெருமழையில் குளித்துப்போல் வந்த மெல்லிய குளிர்ந்த காற்று மேனியை அள்ளந்து சென்றது.

அவளும் மனவலி படல் கூடுமோ. அவள் ஆசைவயப்படுபவள், ஆசையின் வதை படுபவளல்ல என்றொரு தீர்மானகரம் நாகனிடத்திலிருந்தது. அப்போது அது சிதறப் பார்த்தது.

ஆனால், 'அதைவிடும்' என்று சுயம் மீளப்பெற்ற வியாழி கூறி, உரை தொடர்ந்தாள்: 'எல்லோரும் கட்டுக்குள் அடங்கிக்கொண்டு. நான் அடங்க மறுத்து ஓடிக்கொண்டு. அதிலேயே இன்பமும். எனக்கே இந்தமாதிரியான ஈடுபாடு என்னில் வந்தது வியப்புத்தான்.'

நாகனால் அவளது தோல்வியின் வலியுணர்வை உணரமுடிந்தது. ஒரு பெண்ணாய் நிமிர்ந்திருந்தவள், தாரமாய் அடங்க நினைத்ததை நாகனால் புரியமுடியவில்லை. அவள் ஒருவனை வரிக்காதவள். தனக்கானதாய்க் குழந்தைப் பேறை நினைத்தவள். காமத்திலும் தானே இயங்கியவள். வெளிப்புல மக்களின் நிறைந்த வருகைகள் வியாழியிலும் மாற்றத்தை உண்டாக்கியிருக்க முடியுமோவென எண்ணியபடி இருளில் அழுந்திக் கிடந்தான் நாகன்.

ஒருபொழுது கபாடபுரத்திலும், அதை அண்டிய சில ஊர்களிலுமிருந்து நிறையச் சிற்பிகளை குடும்பம் குடும்பமாக லங்காபுரம் வருவித்திருந்தான் ராவணன். பிரமாண்டமான மலைக் கோவிலின் கட்டுமானப் பணி துவங்கியிருந்த காலமது. பின்னால் கோயில் பராமரிப்பு, கோயிற் சேவைகளுக்காக பல ஆண்கள் பெண்களை லங்காபுரம் வரவழைத்து குடியமர்த்தியிருந்தான். ஆடற் கணிகையரின் வரவும் சுயாதீனத்திலும், வரவழைப்பிலுமாய் நிறைய

இருந்தது. இயக்க நாக இனங்களோடு கலந்து அவர்களில் பலர் லங்காபுர வாசிகளாகவே ஆகிவிட்டிருந்தனர். அவர்களின் பழக்க வழக்கக் கூறுகளில் பெரிதாக மாறுபட்டில்லையெனினும், ஆணும் பெண்ணுமாய் நிரந்தரமான ஒரு இணைவில் அவர்கள் வாழப் பழகிக்கொண்டிருந்தமை விசேடமாகவே இருந்தது.

பிறகு விஷய திசையை மாற்றவேண்டிப்போல் நாகன் கேட்டான்: 'உன் மகன் இரவே வந்துவிட்டானா.'

இல்லை, அவனுக்கு இம்மாதிரிப் புகார்க் கவிவு, மின்னல் வெட்டுகளில் பயம் அதிகம்.'

'எனக்கே பயம் வந்ததே. அவன் சிறுவன்தானே. பயப்படாம லிருப்பது எப்படி. அதுசரி, அவனுக்கு என்ன பருவமாகிறது.'

'தாயைப் பெண்டாளப் பார்க்கிற பருவம்தான்.'

நாகன் புரியாமல் குழம்பினான்.

பின் அவள் சொல்லின் கனதி அறிகையாக அவன் அதிர்ந்து போனான். மனமுளைந்து அவளிலொரு இரக்கம் பிறந்தது. அவனோடான இணைவின் அவளது விருப்பம், புதல்வனிடமிருந்தான ஒரு தப்புகைக்காய்ப் பிறந்ததோ என்றும் எண்ணமெழுந்தது. கூடி வாழ்தலில்கூட அடங்கிநிற்க மறுக்கிற ஆசை அவளது. இயக்க நாக இனத்தாரிலும் மணமுறையானது வாழ்தலின் ஒரு அம்சமாய்ப் பெருகிவரும் அக்காலத்தில், அவள் தன்னிச்சை மட்டுமே பிரதானமாய்க் கொண்டலைபவள் என்பதாய் அவன் சரியாகவேதான் கணித்திருந்தான். அவளுக்கும்கூட ஒரு தேவைக்காயேனும் ஒருவனோடு கூடிவாழ்தல் அவசியமாகக்கூடுமென்பதை அவள் தன் விருப்பை மறைமுகமாய் வெளியிட்ட தருணத்திலேயே நாகன் நினைத்திருந்தான். ஆனால் ஒரு தப்பியோடுகையே அதன் காரணமென்று தெரிந்தவளவில் அவனுக்கு உறையவே நேர்ந்தது.

அவள் உடம்பழகு கொண்டிருந்தவள். ஆனாலும் அதில் அவனுக்கு ஆகக் கூடுதலாய்த் தோன்றக்கூடியது ஆசைமட்டுமே. விருப்பம் கொள்ளுதல்களுக்கு அவன் அப்பாற்பட்டவன். மட்டுமில்லை. சீதையின் அழகுபற்றி கபாடபுரத்து அந்தணன் சொன்னது கேட்டபிறகு, அவன் அழகுகள்பற்றி நிறைய யோசிக்கவும் ஆரம்பித்திருந்தான். ஆடற்பெண்களின் அழகுகள் சிற்பங்களாய்க்; கோவில் தூண்களில் ஏற்றப்பட்டிருப்பதை அவன் வியக்க வியக்கப் பல்வேறு நாடுகளில் கண்டிருக்கிறான். இனி அழகு என்ற அம்சத்தில் தவிர, அழகிகளில்கூட அவனால் விருப்பம் கொண்டுவிடமுடியாமலே இருக்கும். வியாழியில் ஆகக்கூடுதலாய் அவனால் கொள்ளக்கூடியது அப்போதைக்கு இரக்கப்படல் மட்டுமே.

மனத்திடமெழுந்ததும், 'வியாழி, நீ போ. அதிகாலையில் என் பயணம். நான் சிறிது துயில்கொள்ளவேண்டும்' என்றான் நாகன்.

வியாழி நிமிர்ந்தமர்ந்தாள். போதை யாவும் முறிந்திருந்தது அவளிடத்தில். கூரான முலைகள் நிழலுருக் காட்டின. அவளைப் பொறுத்தவரை, அவள்போன்ற எவர்களைப் பொறுத்தவரையும்கூட, முலைகள் பாலூட்டலுக்கானவை மட்டுமே. உடலின் வலிதையும் வாழ்ந்த காலத்தின் அளவையும்கூட அவை காட்டுபவை. காமத்தின் அம்சமாய் முலைகள் கருதப்படாத காலம் அது. பயணியாய் இருப்பதால் அவன் மட்டுமே முழு உடம்பும் போர்த்திய மாதர்களின் நாகரீகங்கள் கண்டிருந்ததில் அங்க வசீகரங்களுக்கு எழுச்சிப்பட முடிந்தவனாய் இருந்தான்.

வியாழி கேட்டாள்: 'திரும்ப இந்த வழியால் எப்ப வருவீர்.'

'அறியேன்' என்றான் நாகன்.

'வரும்போது என்னைக் காண்பீரா.'

'காண்பேன். ஆனால் நீதான் வேறிடம் செல்லப்போவதாய்ச் சொன்னாயே. வழக்கம்போல் எங்கள் சந்திப்பு எதிர்பாராத விதமாய் என்றோ, ஏதோவொரு இடத்திலோதான் மறுபடியும் நிகழப்போகிறது.'

'ஒருவேளை நான் இங்கேயே காத்திருக்கவும் கூடும்.'

வியாழி எழுந்து போய்விட்டாள்.

நாகன் வெகுநேரம் விழித்திருந்தான். ஒருபொழுதில் அவனறியாதே தூக்கம் வந்தது. அவ்வாறு எவ்வளவு நேரம் கழிந்ததோ. திடீரென்று உலுப்பப்பட்டதுபோல் துயில் கலைந்தான். அச்சம் உடல் முழுக்கப் பரந்தது. மேனியில் வியர்வையின் எறியங்கள்.

அவன் திடுக்கிட்டே எழும்பும்படிக்காய் என்ன நடந்தது. அவன் எதையோ கேட்டானா. ஓ, என்ன நொருங்குகை. அதுவும் மண்ணின் மடியுள்? சத்தம் பூமியுள்தான் கேட்டதா என்றும் ஒரு சமுசயம்.

அகழ்வாரை நிலம் தாங்கும். நிலத்தைப் பூமித்தாய் தாங்குவாள். பூமி பொறுமையின் வடிவமென்பர். அவளாலும் ஆவேசப்பட முடியுமோ. ஒரொரு பொழுதுகளில் முடியும்தான். ஆனால் அது ஆவேசத்தின் குரலாகவா இருந்தது. அவலத்தின் அழுகைபோலும் இல்லையே.

நீண்டநேரம் யோசித்தான் நாகன். அவனால் இப்போது ஒரு நிச்சயத்துக்கு வர முடிந்தது. அவன் நிலத்துள்ளிருந்து எழுந்த சத்தம்தான் கேட்டான். அதுவும் ஒரு தொடரில். அவனுக்குக் கீழ்

ஒரு புள்ளியிலிருந்து தொடங்கி விரைவுவிரைவாய் அப்பால் நகர்ந்துபோன சத்தம்.

அவனால் என்றும் அறியப்பட்டிராத, என்றும் கேட்கப்பட்டிராத ஒரு சத்த நிகழ்வு அது. ஒப்பிடக்கூடியதாய் அப்போது ஒரு சம்பவம் நெஞ்சில் நினைவாகியது.

கோடை காலத்தில் ஒருநாள் அவன் தனிவழி போய்க் கொண்டிருக்கிறான். கானகத்தை ஊடறுத்து ஓடிய ஒரு கான்யாற்றின் பள்ளத்திலிருந்து உயிரை உலுப்பும்படியான ஒரு மிருகத்தின் தீனக்குரல் எழுகிறது. நாகன் திடுக்கிட்டுப்போகிறான். ஒரு உந்துதலில் ஓடிப்போய் பள்ளத்துள் பார்க்கும்போது புடைத்த மலைப்பாம்பொன்று ஒரு மானை இறுகச் சுற்றியிருக்கிறது தன் பெருத்த உடம்பினால். தலையை ஒருபுறம் நிதானமாக வைத்துக்கொண்டு மானின் அவஸ்தையை அனுபவிப்பதுபோல் அமைதியாய்ப் படுத்துக்கிடக்கிறது. மான் உயிர் தப்பும் கடைசி முயற்சியாக ஒரு பயங்கரத் திமிறலைச் செய்கிறது நாகனின் கண் சாட்சியாக. மலைப்பாம்பு சிரிப்பதுபோல மெல்ல அசைந்து தன்னுள் ஒரு முறை சுருங்குகிறது. அவ்வளவுதான். மொடமொடவென்ற ஓசை. எலும்புகளின் நொருங்குகையோடு மான் துடிப்படங்குகிறது. காட்சியிலும் ஓசையிலும் விறைத்தவனாய் நிலைகுத்தி நின்ற நாகன், அவ்விடத்தைவிட்டு வெகுநேரத்தின் பின்னரே தன் வழி தொடர முடிந்திருந்தான்.

அவனுக்குச் சந்தேகமிருக்கவில்லை. அதேபோன்ற, ஆனால் அதைவிடப் பெரிதானதாயே அவன் நிலத்துள் எழுந்த சத்தம் கேட்டான். பெருங்கடலின் நெரிப்பில் பூமித்தாயின் ஏதோவொரு பாகத்தின் எலும்புகள் உடைந்திருக்கின்றனவோ.

மாலையில் மும்மலை கவிந்த கரும்புகாரினதும் நினைவெழ, அவையெல்லாம் விளையப்போகும் ஏதோவொரு துக்கத்தின் அடையாளமென்பது அப்போது உறுதியானது நாகனுக்கு. அவனது உடம்பு மெல்ல நடுங்கியது.

நாகன் அப்படியே பணிய அமர்ந்திருந்தான் வெகுநேரமாய்.

மாக்கடல் திசையில் வெளுப்புத் தெரிந்தது.

# ஐந்து

வெளியெங்கும் வெளிச்சம் நிறைந்து, சத்தங்களும் பெருகத் துவங்கியிருந்தன. நாகன் சூழலின் பிரக்ஞை கொண்டான். முதல்நாள் பின்பகலில் தான் கண்டிருந்த உலகமாக அது அப்போதில்லை யென்பது ஒரு வியப்பைக் கிளர்த்திக்கொண்டு அவனில் தெரிதலானது. ஆகாசம் வெளிர்நீலமாய்க் கிடந்தது. மிதந்த ஓரிரு வெண்முகில்களும் அதன் மாசறுத்த நிலையையே துலாம்பரப்படுத்திக் காட்டிக் கொண்டிருந்தன. காற்று மெல்ல இழைந்துகொண்டிருந்தது. அவ்வப்போது சிறுசிறு சுழலாய். சருகுகள் பறந்தும், அடங்கியும் கிடந்துகொண்டிருந்தன. மரங்கள் வெறியாடியும், வெறியடங்கியுமாய்.

தூரத்தில் வியாழி நாகனையே நோக்கியபடி நின்றிருந்தாள். நாகனின் நிலைகுத்துகை அவளில் ஆச்சரியங்களைக் கிளர்த்திக் கொண்டிருந்தது. காமம் தீர்ந்த அசதியில் சிறிது படுத்துறங்கியவள் மறுபடி எழுந்தபோது இளைஞன் படுத்திருந்த இடத்தில் வெறுமைதான் காணக்கிடந்தது. அவன் அதிகாலையிலேயே எழுந்து தன் பயணத்தை ஆரம்பித்துவிட்டான் என்பது சுலபமாய்ப் புரிந்தது. தலைநகர்போவதாக அவனே சொல்லியிருந்தான். எதற்காய் இருக்கும்? அவளுள் வினாவெழுந்தது. அவன் வணிகனாயிருக்கலாம் என்று நேற்றே அவளுள் எழுந்திருந்தது ஒரு ஊகம். அந்தவகையில் அரசனைச் சந்திப்பதற்காயிருக்கலாமென்ற விடை சிரமமின்றியே கிடைத்தது. நாகனும் போயிருப்பானோ? என்று அதிர்வாயடித்த எண்ணத்தில்தான் அவள் பதைத்தெழுந்து வெளியே ஓடிவந்தது.

அவன் கூறாமல் போபவன்தான். நேற்றிரவு வெறியடங்கிக் கிடந்த அச் சிறுபொழுதின் உரையாடலிலேயே ஒரு விடைபெறுதல் நடந்து முடிந்துவிட்டிருந்தது. ஆனாலும் ஏதோவொரு அவனிலான பெருவிருப்பு அவளிலிருந்து அவனது பிரிவைச் சகிக்க மறுத்துக்கொண்டிருந்தது.

அவள் ஓடி வெளிவந்து கண்ட காட்சி இதம்செய்த அதேவேளை அவனிருந்த நிலை அவளைக் குலைய வைத்தது.

அவள் கிட்ட வந்தாள்.

நாகன் வியர்த்திருந்தான். கலக்கம் படர்ந்திருந்து காய்ந்த முகம் கறுத்துக் கிடந்தது. உயிர்க் களைப்பும் தெரிந்தது அதில்.

'நாகரே, என்ன இப்படி' என்றாள்.

நாகன் வியாழியின் முன்னிலையை உணர்ந்தான். தன்வயமாதலுக்காய் முகத்தை இரண்டு அகங்கைகளினாலும் தேய்த்துத் துடைத்தான். வயப்பாடு மெல்ல விளைந்துவந்தது. பிறகு, 'கேட்டாயோ நீயும் நிலமடியுள் நொருங்குகை ஒலி' என்றான்.

'நிலத்துக்குள்ளா...ஒலியா..' என்று குழம்பினாள் வியாழி.

'ஓ.. நிலத்துக்குள்ளிருந்துதான்.. ஒலிதான்..காய்ந்த மூங்கில் குழல் நொருங்கியதுபோல்..அப்படியான ஏதேனுமொலி நீயும் கேட்டாயோ.'

'இல்லையே. விலங்கு, மனிதர்காலடி அரவம் தவிர வேறு எதிலுமே என் உறக்கம் கலையாதது' என்று கூறிச் சிரிக்க முயன்றாள் அவள். பின் அவன் அதில் கவனமுறாதது கண்டு, 'என்ன இது மாயமாய், மண்ணுக்குள்ளிருந்து ஒலி வருவதென்பது' என்று திகைப்புக் காட்டினாள்.

'நான் கேட்டேனே. பெரும் மாயம்தான். ஆனால் இனி அது முக்கியமில்லை. நான் புறப்படவேண்டும். அந்த வணிக இளைஞன் எங்கே. போய்விட்டானா.'

'போய்விட்டான்.'

நாகன் எழுந்தான். 'என் நீர்ப் பையை எடு. கைக்கோலையும், பொதியையும் கூட.'

வியாழி குடிசைக்கு ஓடிப்போய் எடுத்துவந்து கொடுக்க வாங்கி பைகளைத் தோளினில் தொங்கப் போட்டவன், 'இரவுக்குள் நான் தலைநகர்அடைந்தாகவேண்டும். முக்கியமான வேலைகள் இருக்கின்றன' என்றுவிட்டு தலைநகர்நோக்கி ஓடிய பெருவழியைத் தொட்டுக்கிடந்த புதர்நசுங்கிய பாதையில் இறங்கினான்.

ஒரு கணத்தில் அவன் தன் உடலின் களைப்பையும், முகத்திலிருந்த கலவரத்தின் சுவடுகளையும் அழித்துவிட்டிருந்தான். மறுபடி அவன் பழைய நாகனாய் மாறிவிட்டிருந்தமையை அவன் காலெறிந்து நடந்த வேகத்தில் கண்ட வியாழிக்கு மனதெங்கும் அமைதியின் செறிவு. அவள் கவலை நீங்கினாள்.

நாகனின் உருவம் தூரத்து வெளியில் மறைந்தது. இனி அவள் திரும்பலாம்.

மெல்ல மெல்லத் தன் உடல் கல்லாவதுபோல் ஓர்உணர்கை அவளில். நாகனுக்காகவே தான் அவ்வளவு நேரமும் மென்மைப்பட்டிருந்ததை அப்போது ஒரு நிறைவோடு நினைக்க அவளால் முடிந்தது.

குடிலை அடைந்தவள் அங்கே ஒரு மூலையில் கிடந்த மரத்தினாலான அம்புகளையும், வில்லையும் நோக்கியபடி சிறிதுநேரம் நின்றிருந்தாள். பின் அவற்றைக் குனிந்தெடுத்து அம்பின் கூர்மையை, வில்லினது நாண் வலிதை கைகளில் தேர்ந்தாள். வரப்போகும் மாரிக்கான ஊண் தேடுதலில் விளைந்திருந்த தாமதத்தின் மனவுளைச்சல் நாணது வலிதில், அம்புகளது கூர்மையில் அமைதிப்பட்டது. அவள் வனம் புகுந்துவிட்டால் தேவையானது எப்போதும் இரையாகவே இருக்கும். குறி தவறா வில் செலுத்துகையின் சொந்தக்காரி அவள்.

நாகன் தன் வழியில் வேகவேகமாக நடந்துகொண்டிருந்தான். தூரங்கள் பின்னாய் நகர்ந்துகொண்டிருந்தன.

மெதுவான காற்று உரசிச் சென்றது. ஆனாலும் இலையுதிர்த்த தருக்கள் நிழலிதம் செய்யாதிருந்ததனால் மேனி வெம்மையடைந்து வியர்வை சுரக்க ஆரம்பித்திருந்தான்.

உச்சிச் சூரியன் மேற்கில் நகர ஆரம்பித்துச் சிறிதுநேரமான பொழுதில், மும்மலையைக் கடக்க முடிந்திருந்தது அவனால். மாலைக்குள் தலைநகரை அடைந்துவிடுகிற முடிவுக்கு இனித் தோல்வியில்லை என்ற எண்ணம் அவனுக்கு மேலும் உற்சாகத்தையும், அமைதியையும் தந்தது.

மேலே சூரிய திசைக்கு எதிராய் நடப்பது சுலபமாகவும் இருந்தது. மட்டுமில்லை. இலையுதிர்பருவத்தின் இறுதியைச் சொல்லிக்கொண்டிருந்த காலம், மும்மலை கடந்த பிறகு மறுசுழற்சி கொண்டுவிட்டதுபோலிருந்தது.

இளவேனிலின் படர்கை ஆறு காலங்களிலும் அற்றுவிடாதது லங்காபுரம். புறநகர்எல்லையிலிருந்து தலைநகர்வரை செழிப்பு எந்நேரமும் அங்கே மய்யங்கொண்டிருக்கும். மா, பலா, வாழை யெனவும், கரும்பு நெல் தெங்கு எனவும் சோலைகளாலும் கழனிகளாலும் பரந்திருந்தது அப் பூமி. பாடலிசைத்து அசைந்த மூங்கில்கள் அருகே ஆற்றின் இருப்பைத் தெரிவித்துக்கொண்டிருந்தன. ஆறு மூங்கிலிசையில் இளகி நடனமாடிச் சென்றது. இவ்வாறாக

காட்சிகளின் படர்வும், தென்றலின் இழைவும், சூழ்ந்த ஒலிகளின் உணர்கையும் இதம் செய்ததில் சொற்ப நேரத்துக்குள்ளேயே ஆசுவாசம் மேவிப்போனான் நாகன்.

அப்போது அவனால் கடந்த வழியைத் திரும்பிப் பார்க்க முடிந்தது. மும்மலைகளில் ஒன்றாகிய கோயில்மலையின் முகடுநோக்கி அவனது நோக்குச் சென்றது. உச்சியில் சுண்ணாம்பின் சுளீர்வெள்ளை கண்ணில் அப்பியது. கருங்கற் குற்றியாய் அசையாதிருக்கும் சிவவுரு மனக்கண்ணில் காட்சியாகிற்று. நாகன் மெய்சிலிர்த்தான். சிவனே! எனக் கூவினான். நினையாப் பிரகாரமே.

சிவன் அவனது இல்லை, அவனது அரசனின் தெய்வம். ராவணன் முப்போதும், எப்போதும் வணங்கும் தெய்வம் அது.

மலையேறிச் சென்று நாகன் கண்டிருக்கிறான்.

குறியாய் விறைத்து நின்றிருந்தது கருங்கற் குற்றி. அதை அப்போதுதான் தெய்வமாய் அநேகமான லங்காபுரவாசிகளையும் வணங்க வைத்துக்கொண்டிருந்தது ராவணனின் பெருந்தெய்வமாய்ச் சிவவணக்கம் இருக்கிறதென்ற பேச்சு. இயக்கர்களிடையே இருந்தளவு சிவவணக்கம் நாகர்களிடையே இருக்கவில்லை. நாகர்கள் முதன்மையாய்ப் பாம்பையே வழிபட்டனர்.

பாம்புகள் அரவமேதுமற்று நடந்தன. எதிர்ப்பட்டால் சீறியெழுந்தன. சில பாம்புகள் பறந்தன. நிலத்தின்மேல்போல் நீரிலும் ஓடின. மரங்களிலும், மலைகளிலும், திண்ணைகளிலும், சுவர்களிலும் அவை ஏறவல்லவையாயிருந்தன. ஒருவரை வெட்டுவதன்மூலம் நஞ்சைச் செலுத்தி இறப்பை விளைவிக்க முடியுமானவையாய் இருந்தன அவை. பாம்பின் துரத்துகையிலிருந்து ஓடித் தப்பியவர்களும் எவருமில்லையாயிருந்தது என்பதே மக்களிடத்தில் பெரும் பயத்தை விளைத்திருந்தது. அது உரித்துவிட்ட செட்டைகூட இக் காரணங்களால் வணக்கத்துக்கு உரியதாயிருந்தது. நஞ்சிலிருந்து தப்ப பாம்பையே தஞ்சமடைவதுதான் சரியான உபாயமாகத் தெரிய, நாக வணக்கம் பல்கிப் பெருகியது குழுக்களிடையே. வடக்குத் திக்கின் நாக அரசு நாக மணிகளினாலான அரியாசனத்தைக் கொண்டிருந்தது. நாக அரசனின் ஆணையில் நாகங்கள் கக்கிய ஒளிர்கல்களில் இயன்றது அது.

அதுபற்றிப் பேசும்போது ராவணன் கண்ணில் திரளும் அவாவினைப் பார்க்கவேண்டுமே. எவரும் திகைத்துப் பயமடைந்து போவார்கள். நாகனுக்கே அந்த அவா ராவணினில் அதிசயமும், பயமும். ராவணன் பெருஞ்செல்வத்தின் அதிபதி. அவனோடு நன்கு பழகியவர்களுக்குக்கூட அவனது பெறுமதியற்ற குவைகுவையான

ஒளிர்கல்களின் அளவு தெரியாதிருந்தது. வியாழி குடிசையில் கண்ட இளைஞன்கூட ஏதாவது விலையுயர்ந்த கல்லை ராவணனிடத்தில் விற்பதற்காகச் செல்பவனாக இருக்கலாம். அப்படிக்கு பரவலாக அறியப்பட்டிருந்தது அவனது கல்களின்மீதான இச்சை. அதற்கு அடுத்தபடியானது சிவதெய்வத்தின் மீதான வழிபாடு.

மும்மலைக் கோயிலை விரிவாக்குவது, கலாநேர்த்தி மிக்க தாக்குவதென நாகனோடுகூட பலவேளைகளில் விழிகளில் கனவு பொங்கப் பொங்கப் பேசியிருக்கிறான் ராவணன். ஆயிரம் தூண்கள்கொண்ட அழகிய பெருவாலயம் அவனது சிந்தையிலிருந்தது. தானில்லாத கடந்த இரண்டு ஆண்டுகளிலும் என்ன விந்தைகளை அந்த மலைக்கோவிலில் அவன் நிகழ்த்தியிருக்கிறானோ என்று நினைக்க நாகனுக்கு தன் அவசரமே மறந்துபோனது.

சிவனின் மீதான ஈர்ப்பு ராவணனில் எப்படி ஏற்பட்டது? நாகன் நினைவுகளைப் புரட்டினான்.

நிலத்திலிருந்து எழுந்துநின்ற வடிவமே சிவன். சிவன் கல்லாயிருந்தது. நிமிர்ந்து நின்றது. திண்மையாயிருந்தது. கருமையாயிருந்தது. இத்தனையிலுமிருந்தே ஓர்அற்புதமான ஆயதம் பிறக்கமுடியும். ஆயுதமானது செலுத்தப்படுவதுதான். அதேவேளை செல்லுவதுமாகும். செலுத்தப்படும் குறியினைத் தவறாது சென்று தாக்குவது அதன் பண்பாயிருக்கவேண்டும். இத்தகு நேர்த்திக்கான மய்யமாக சிவன் இருந்தது. சிவன் தனது தெய்வமான வரலாற்றை ராவணன் இவ்வாறுதான் சொல்லியிருந்தான். சிவன் ராவணனது தெய்வமானதாலேயே தலைநகர்நாகர்களுக்கு சற்று மனக்குறையு மிருந்தது. ராவணனின் மனைவி மண்டோதரிக்குக்கூடத்தான் அது.

ராவணன் அவர்களை தன் வழிபாட்டுப் பக்கமாய் வெல்ல நினைத்துக்கொண்டிருந்தான். வெல்வதாயும் நினைத்துக் கொண்டிருந்தான்.

ராவணன் வெல்லுவான்! என நினைத்துக்கொண்டான் நாகன். ஏனெனில் ராவணன் திண்மையானவன் சிவன்போல். சிவன்போல் நிமிர்ந்து நிற்பவன். சிவன்போல் கருமையானவன். சிவதெய்வம் வெல்லவைப்பதெனில் ராவணன் வெல்வான்.

மேலே மக்களின் நடமாட்டம் அதிகரிக்கத் தொடங்கியது மெல்லமெல்ல.

மக்கள் குதூகலமாகத்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்! என எண்ணினான் நாகன். அவர்கள் எறிந்த பார்வைகளில் கலக்கம் இல்லாதிருந்தது. முகங்களில் கவலை தெரியாதிருந்தது. அவன் சென்றிருந்த வடதிசையின் ஒரு தூரதேசத்தில் அவனைக் கண்டே

மக்கள் அலறியடித்து ஓடினார்கள். இங்கே அவன் அவர்களுக்குப் பொருளாயே இல்லாதிருந்தான். ராவணன் ஆட்சியில் அவர்கள் அச்சப்பட்டு வாழ வேண்டியிருக்கவில்லைத்தான்.

ஒருவாறு ஞாயிறு மறையும் நேரத்தில் புறநகர்எல்லை கடந்து நகருள் பிரவேசித்தான் நாகன்.

நகர்கலகலப்பாகவிருந்தது. மார்மறைத்த பெண்கள் நடந்து திரிந்துகொண்டிருந்தனர். வியன்வலுகொண்ட ஆண்கள் இறுமாந்து திரிந்தனர். வடக்குவீதியின் ஒரு தெருவில் பரத்தையர்குடியிருந்தனர். இன்னொரு தெரு இசைக் கலைஞர்களுக்கானதாய் இருந்தது. இருள் விழத் துவங்குமுன்னமே போதை மணக்கும் தெருக்களும் இருந்தன. இசைக் கலைஞர்தெருவில் வாத்தியங்களின் மெல்லிய ஆரம்ப ஒலிக் கலவைகள் கிளர்ந்து மனபோதையை உண்டாக்கிக்கொண்டிருந்தன.

அவன் நடையின் வேகத்தைச் சற்று மிகுப்பித்தான். சிறிதுநேரத்தில் ராவணனின் கன்மலைக் கோட்டையின் உச்சியில் வாளரவக் கொடி பறந்துகொண்டிருந்தமை தெரிந்தது.

நெருங்க நெருங்க அது கையசைப்பதுபோல் ஒரு தோற்றம். அது விட்டுவிட்டுப் பறந்ததில் நாகனால் அவ்வாறே உருவகிக்க முடிந்திருந்தது. போ என்கிறதா? வா என்கிறதா? எதைத் தெரிவிக்க முனைகிறது? மேலே நினைவோடும் முன்னம் கோட்டை வாயிலை அடைந்திருந்தான் அவன்.

கதவுகள் மூடப்பட்டிருந்தன. முக்கியமான அரசதிகாரிகளுக்கன்றி இனி காலைவரை கபாடம் திறக்கப்படமாட்டாது.

ஆனாலும் நாகனை அடையாளம் கண்டுகொண்ட வெளிக் காவலர்களின் தலைவனது குரலெடுப்பில், கோட்டையின் முழு மரங்களைப் பிளவுபடுத்திய பாதிகளால் இணைக்கப்பட்டிருந்த சிறகுப் பெருங் கதவங்கள் நற நறவென்ற ஒலியெழுப்பியபடி திறக்கத் தொடங்கின.

# ஆறு

இரவின் மவுனங்கள் குழம்பத் துவங்கிவிட்டிருந்தன புலரியின் உதயத்தோடு.

சிறிதுநேரத்தில் ராவணனின் குரல் அரண்மனையெங்கும் அதிர எழும்பியது. அவனது குரல் அதிர்வில் காவல் நேரம் முடிந்து கடமை மாறவிருந்த காவலாளிகள்கூட அசைவு மறந்து ஸ்தம்பிதமாகினர். ஆடைகளை மீறிப் பெருமுலைகள் பிதுங்க நடமாடிக்கொண்டிருந்த ராணி மாளிகையின் பெண்காவலாளிகள் விதிர்விதிர்த்தனர். குரல் அவர்ளைநோக்கி வந்துகொண்டிருப்பதான பிரமையில் அவர்கள். ராவணனே எவரையும் கலங்கவைக்கும் அச்சவுரு படைத்தவன். அவன் கோபமேறிய வேளையில் இன்னும் பயங்கரமான தோற்றம் பெற்றிருப்பான். கால அவதாரமாய்க் கலங்கவைப்பான். எத்திசையிலிருந்து ராவணன் வருகிறான் என்பதைக்கூட அனுமானிக்க முடியாமலிருந்தது காவலாளிகளால். நான்கு திசைகளிலிருந்தும் அவன் குரல் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

'இன்னுமா வரவில்லை, அந்தப் பரத்தை மகள். எங்கே போய்த் தொலைந்தாளோ. கூடச் சென்றது யார். ஒரு இரவு முழுவதுமா வெளியே தங்குவாள் ஒரு இளம்பெண். தன் தாயைப்போலவேதான் சரியாக. இப்படித்தான் அவளும் இரவிரவாய் யோனிப் பசிகொண்டு அலைந்தாள். வரட்டும், அந்தச் சின்னப் பரத்தையைத் திருகிப் போட்டுவிடுகிறேன்.'

குரலடங்கிச் சொற்ப நேரமாகவில்லை, தும்.தும்மென அதிர்ந்தெழுந்தன காலடிச் சத்தங்கள்.

அதிர்வு வந்த திசையில் இயக்கியர் விழி திரும்பினர்.

அரண்மனையிலிருந்து ராணிமாளிகைநோக்கி விரிந்திருந்த நடைபாதையில் தூரவாய் ராவணனின் உருவம் தெரிந்தது.

கண்கள் சிவந்திருந்தான் ராவணன். சடைமுடி கலைந்து தோளில் சுருண்டு தொங்கியபடி புரண்டுகொண்டிருந்தது. முடி தரிக்கவில்லை. இடையில் உடைவாளில்லை. குளித்திருக்கவில்லை.

ராணி மாளிகையின் வாசலைச் சமீபிக்கும்வரைகூட அவனது வாய் வசை பொழிந்துகொண்டேயிருந்தது. 'எங்கே போய் மாய்ந்தாள் அந்தச் சின்னப் பரத்தை. வரட்டும் அவள், கொன்றுபோட்டுவிடுகிறேன்.'

அவனது காலடி அதிர்வு வாசலை நெருங்க கபாடம் ஒருபொறி முறையில்போல் அரவமின்றித் திறந்தது. மாரீசனின் கைவண்ணம் அது. அந்த அரண்மனையின் பொறி நுட்பங்களெல்லாம் அவனால் நிர்மாணிக்கப்பட்டவைதான். சுருங்கை வழிகள், நிலவறைகள் என்று அரண்மனை மர்மங்கள் நிறைந்தது. மாரீசனும் ராவணனும் தவிர பல பொறிமுறைகள் எங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன என்றுகூட எவரும் அறியாதிருந்தனர்.

ராவணன் உள்ளே இன்னும் அறா விசையுடன் புகுந்தான்.

அப்போது அவன்போல் பெருத்த உருவமொன்று மாளிகையின் மறுமுனையிலிருந்து சென்று மறைந்ததை ராவணன் கண்டான். வீடாணனாய்த்தான் இருக்கும்! வேறு யார்? காலையிலேயே வந்து அண்ணன் மனைவியின் புலம்பலைக் கேட்டுக்கொண்டு போகிறான்போலும்! தங்கையென்று ஒருத்தி இரவிரவாய்க் காணாமல் போகிறாளே, எங்கே போகிறாள் என்ற எந்த எண்ணமும் இல்லை. இவனுக்கு அண்ணன் மனைவியின் புலம்பல்மட்டும் பெரிதாகப் போய்விட்டது! ராவணன் சலித்தான்.

அவனது வெறும் பாதங்களின் பதிவில் அதிர்ந்தெழுந்த ஒலியில் ராவணன் வந்துகொண்டதைத் தெரிந்து மந்தாகினி வந்தாள்.

நீலப் பூப்போலிருந்தாள் மந்தாகினி. முகம்மட்டும் செந்தாமரையின் வர்ணம்பெற்றதுபோல் ஓர் ஒளிர்வு. இடை சிறுத்து, இடுப்பு அகன்று நெடிது வளர்ந்த உடல் அவளது. ஒரு நாகத்தின் வாளிப்பும் வீறும் மேனியெங்கும் தெளித்திருந்தது. சாயா முலைகள் இன்னுமோர் அழகு. சித்தனின் தாயெனில் தெரிந்தவர் தவிர யார்தான் நம்பக்கூடும். ஆனாலும் அந்த வடிவின் முகத்தில் அப்போது ஒரு வாட்டமும் காணக்கிடந்தது. சில நாளாக அவள் அடைந்துகொண்டிருந்த மனவேதனையின் தாக்கம் அது என்பது ராவணனுக்குத் தெரியும். அடையட்டும்! இன்னும் சிறிதுகாலத்துக்குத்தானே! சிற்பியின் மகனும் வந்துவிட்டான். என் சித்தம் வடிவுபெற வெகுநாட்கள் ஆகிவிடா. பின்னர் எல்லாம் நலமே முடிந்துவிடும்! என எண்ணிக்கொண்ட ராவணன், 'சூர்ப்பாநகை எங்கே போய்த் தொலைந்தாள். உனக்காவது சொல்லிவிட்டுப் போனாளா' என இரைந்தான்.

'சூர்ப்பாநகை மாளிகையில் இல்லையா. நேற்று மாலையில் கொண்டனாமிகையுடன் இங்கே வந்திருந்தாள். சித்தனோடு பேசிக் கொண்டிருந்தாள். பின் சொல்லக்கூடவில்லை, போய்விட்டாள். யார் இந்த மாளிகையில் என்னைப் பொருள்செய்து போகிற வருகிற இடம் சொல்வது. கணவனும் அப்படி, கணவன் தங்கையும் அப்படி.'

அவள் தன் குறைசுரக்கும் களமாக அதை ஆக்கப்போவதைக் கண்ட ராவணன் 'சித்தன் எங்கே' என்றான்.

'அமைச்சரோடு ஆயுத சாலை போனான். பயிற்சியிலிருப்பான்.'

ராவணன் திரும்பினான். அவனால் அங்கே அதிகநேரம் நின்றுவிட முடியாது. உறவுகள் கலகலக்கத் துவங்கியிருந்த காலம் அது. அதில் ஒரு மர்ம அரசியலும் இழையோடியிருந்தது. எல்லாவற்றையும் அவன் விரைவில் சீர்படுத்துவான். அதுவரை ஒரு ஒதுக்கம் தேவையாக விருந்தது அவனுக்கு.

அப்போது ஒரு வேலையாள் ஓடிவந்து, 'சூர்ப்பாநகை மாளிகை வந்துவிட்டார்' என்று சொல்லிப்போனான்.

சூர்ப்பாநகையின் இல்லம்நோக்கி நடக்கத் துவங்கினான் ராவணன் வந்த வேகம் மாறாமலே.

எதிரே நாகன் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. ராவணன் நடையின் வேகத்தைத் தணித்தான். 'வா, ஆறாடி. எப்போது பயணம் திரும்பினாய்.'

'நேற்று இரவில்.'

'நேற்றேயா.'

'அந்தநேரத்தில் உமக்கு சிரமம் எதற்கென்று விருந்தினர் குடிலில் போய்த் தங்கிக்கொண்டேன்.'

'என்னை அழைப்பித்திருக்கலாம். நான் அரண்மனையில்தான் தங்கியிருந்தேன்.'

'ஏன், சண்டைபிடித்துக்கொண்டீரா மந்தாகினியுடன்.'

'அரண்மனை கலம்பகப்படத் தொடங்கியிருக்கிறது, நாகா. உறவுகள், சகோதரங்கள், மனைவியென்று எல்லோருமே ஒரு மனச் சுழற்சியின் பூடகத்தில். மர்மங்களும், பூசல்களும் உள்நிறைந்ததாய்ப் போய்விட்டது அரண்மனை. சிக்கலிலிருந்து இன்னொரு சிக்கல். அந்தச் சிக்கலிலிருந்து இன்னொன்று. வேகப்படத்தான் முடிகிறது. கோபப்படவும் முடிகிறது. யோசிக்கவே முடியவில்லை. உன்னை வெகுநாளாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.'

'அப்படியென்ன.'

'வா, பேசுவோம்.'

ராவணன் நடக்கத் தொடங்க, ஒரு முக்கியமான செய்தியை நான் ராவணனிடத்தில் முன்வைக்க வந்தேன், ராவணனோ இன்னொரு முக்கியமான செய்தியோடு காத்திருக்கிறான் எனக்காக. என்ன செய்ய? என் பக்கச் செய்திகளைக் கொஞ்சம் பின்போட்டுவிடலாமா? எனச் சிந்தனையோட பின்தொடர்ந்து கொண்டிருந்தான் நாகன்.

ராவணன் கூறியவற்றிலிருந்த கனதி மேலே நடந்து போய்க்கொண்டிருக்கும்போதுதான் அவனுக்கு வெளிப்பட ஆரம்பித்தது.

எல்லாம் மர்மங்களும் பூசல்களும் நிறைந்ததாய்ப் போய்விட்டது! ராவணன் சொன்னதில் இனி நாகனுக்கு அய்யம் எழாது. அவனது தோற்றமே அதைச் நிச்சயப்படுத்தி விட்டிருந்தது.

அவன் அதுமாதிரி என்றைக்கும் இருந்ததில்லை என்பது யோசிக்க நாகனுக்கு வெளித்தது. இல்லையேல் ஆறாடி, வா! வா! என்றானென்றால் என்ன புளகம் இருந்திருக்கும் அக் குரலில்! ஆறு ஆடி அவன் அடைந்துவந்த அனுபவங்களை அக்கணமே அறிந்துவிடவும், கதைகளை இரவிரவாய்க் கேட்டுவிடவும் எவ்வளவு பரபரப்பினைக் காட்டியிருப்பான்! ராவணனின் அறிவென்பதே அதுமாதிரி அனுபவங்களை, கதைகளைக் கேட்டுச் சேகரமாக்கியதுதானே.

ராவணனின் அப் பெரிய ஆகிருதியில் ஒரு சினத்தின் அடக்கத்தையும், துக்கத்தின் செறிவையும்தான் அப்போது நாகனால் பார்க்க முடிந்திருந்தது.

ராவணன் சொல்ல விரும்பியதைச் சொன்னதின் பின், எல்லாவற்றையும் விரிவாகக்; கேட்டுத் தெரிந்துகொள்ள நிச்சயப்பட்டான் நாகன்.

இருண்ட நடைபாதையின் இருமருங்கும் ஏற்றிவைக்கப்படும் தீப்பந்தங்கள் பல அணைந்து வெகுநேரமாகியிருந்தன. சில அப்போதுதான் அணைந்து எண்ணெய்ப் புகை விரித்து நின்றிருந்தன. சில அணையத் தயாராக காற்றில் தம் இறுதிச் சுடர் வரிகளை எழுதிக்கொண்டிருந்தன.

கடல் திசையில் பெருவெளிச்சம் தெரிந்தவளவிற்கு அரண்மனை இருள் கலைத்திருக்கவில்லை. ஆனாலும் பலபலவென்ற விடியலின் குறிகளை கண்வழி காணல் கூடியதாயிருந்தது.

மாளிகை புகுந்த ராவணன் தொம்மென ஒரு ஆசனத்தில் அமர்ந்தான்.

அவன் களைத்திருக்கிறான்தான். முதற்கண் மனத்தினால்! எண்ணியபடி எதிரே அமர்ந்தான் நாகனும்.

எதிர்த் திசைச் சாளரங்களினூடாக மாளிகைத் தோட்டத்தின் புறக் கொட்டகையில் ராவணனின் கால்வல் நெடுந்தேர் நின்று கொண்டிருந்தது. சூரியன் வலு பெறப் பெற வெண்மையாய்த் தகதகத்தது. சுழற்சிப் பாகங்கள் உலோகத்தினால் அமையப்பெற்று திண்மையும் மெதுமையும் சேர விசைத் தேராய் அதை ஆக்குவித்திருந்தான் ராவணன். மாரீசனின் நுட்பத் தொழில்முறையின் உச்சம்பெற்று விளங்கியது தேர். தானே பறக்கத் தயாராய்ப்போல் ஒரு விசையுடன் அத் தேர் நின்றுகொண்டிருப்பதாய்ப் பட்டது நாகனுக்கு. தன்னிலேயே ஒரு விசை செறிவதுபோல் உணர்ந்து பரவசமானான் அவன்.

# ஏழு

நொடிநொடியாய்ப் பொழுது கழிந்துகொண்டிருந்தது. மெலிதாய்ச் சூரிய கிரணங்கள் மாளிகைச் சாளரங்களை ஊடறுத்து ராவணன் முகத்தில் பட்டுக்கொண்டிருந்தன. ஆனாலும் அவன் எதுவும் பேசாமல் சிந்தனை வலயத்துள் ஆழ்ந்துபோயிருந்தான். நாகன் புதிதான காட்சி காண்டலின் வியப்போடு ராவணன் எதிரே அமர்ந்திருந்தான்.

அந்த வேளையில் மவுனமாயிருந்துவிடுதலே தக்கதென்பது நாகனின் அனுபவம். அவனானவே பேசத் தொடங்கவேண்டும்.

ராவணன் களைத்திருந்தான் என்பது தெரிந்தது நாகனுக்கு. ஏன் என்று அவனால் அனுமானிக்கக்கூட முடியாதிருந்தது. கடந்த இரண்டு வருடங்களில் விளைந்து அவனையே குழம்பவைத்த அந்த அம்சம் எதுவாக இருக்கமுடியுமென்று அவன் யூகிக்க முயன்றான்.

திடீரென ராவணன் எழுந்தான். ‘நாகா, இரு வெளிக்கிட்டு வருகிறேன். மலைக்கோயில் போகவேண்டும்’ என்றுவிட்டு மாளிகையுள் நடந்தான். ராவணன் திரும்பிவந்தபோதும் நாகனின் ஸ்தம்பிதம் கலையாமலே இருந்தது.

மலைக்கோயில் போய்க்கொண்டிருந்தபோதுகூட ராவணன் பேச்சை ஆரம்பிக்கவில்லை. குதிரைகள் இரண்டும் இயல்பான கதியில் ஓடிக்கொண்டிருந்தன. பின்னால் வெகுதொலைவில் அமைச்சர், ஏவலர், காவலர் பின்தொடர்ந்துகொண்டிருந்தனர். ராவணன் கோவில் செல்லும் பொழுதில் அது இயல்பான வெளிதான்.

மலைக்கோயிலுக்கான பாதை நாகன் முதல்நாள் நடந்து வந்த பாதை போலன்றி விசாலமானதாக இருந்தது. கடந்த இரண்டாண்டுப் போக்குவரத்தின் வலிதை அது உரைத்தது. தன் கனவை ராவணன் நிறைவேற்றிவிட்டானா? நாகன் ஆவல் மேலிட்டான்.

இனி ராவணனுக்காக நாகனால் காத்திருக்கமுடியாது. 'அரசே, மலைக்கோட்டை வேலைகள் பூர்த்தியாகிவிட்டனவா?' என்று ஆவலோடு கேட்டான்.

'ம், முடிந்தமாதிரித்தான். சிவன்கூட பொழியப்பட்டாயிற்று. அதில் செய்யவேண்டிய செப்பமொன்றுதான் மீதி. கபாடபுரச் சிற்பியின் கைவண்ணத்தில் அற்புதமாக எழும்பியிருக்கிறது நாகா, கோயில். சிற்பி இறுதிக் கட்டத்தில் நோய்வாய்ப்பட்டுப் போனான். சிவசெப்பம் மட்டும் தாமதமாகிறது. அதனால் அவன் மகனைக் கபாடபுரத்தி லிருந்து அழைப்பித்திருந்;தேன் தந்தைக்கு உதவியாயிருந்து வேலையை விரைவில் பூர்த்தியாக்க. அவனும் நேற்று மாலையில்தான் வந்துசேர்ந்தான். இனி வேலை துரிதமாக முடிந்துவிடும். அதைப் பார்க்கத்தான் போய்க்கொண்டிருக்கிறோம்' என்றான் ராவணன்.

செய்யவிருந்த செப்பமென்ன என்பது குறித்து ராவணன் எதுவும் சொல்லவில்லை. அது நாகனில் அவசத்தை உண்டாக்கியிருந்தது. மட்டுமில்லை. முதல்நாள் மாலை வந்து சேர்ந்த சிற்பியின் மகன்தான் வியாழி குடிசையில் தங்கிய இளைஞனோ என்றொரு எண்ணமும் எழுந்தது அவனிடத்தில். காண்பதற்கான பரபரப்பு உண்டாகியது.

மலைக்கோவில்பற்றிச் சொல்லும்போதே ராவணன் தெளிந்துவிட்டிருந்தது கண்டான் நாகன். அவன் ஏறக்குறைய பழைய ராவணனாய் உருவெடுத்திருந்தான். இனி எல்லாம் இயல்பாய் பேச ஆரம்பித்துவிடுவான் என்ற நம்பிக்கை பிறந்தது நாகனிடத்தில்.

தூரத் தெரிந்தது மலைக்கோயில். மலையின் உச்சியில் ஒரு வெண்முகில் படுத்திருந்ததுபோல் தோன்றியது நாகனுக்கு. முதல்நாள் மாலையில் அம் மலை கடந்தவேளை அதன் முழு பிரமாண்டத்தையும் நாகனால் காணமுடியவில்லை. லங்காபுரத்தின் தென்மேல் மூலையில் கீழ்த் திசைநோக்கிய வெளியிலிருந்து பார்த்தபோது நாகன் பிரமித்தான். அப் பிரமிப்பின் உச்சம் இனிமேல்தான் அடையப்படப்போகிறது என எண்ணுகையில் நாகனின் மேனி புல்லரித்தது.

ராவணன் கோவில் வாசலை அடைய அங்கிருந்த ஏவலாளிகள் சிலர் ஓடிவந்து அவர்களது குதிரைகளைப் பிடித்து அப்பால் நடத்திச் சென்றனர். அவர்கள் உள்ளே நுழைந்தனர்.

உள்ளே ஒளி வெள்ளமாய் வடிந்துகொண்டிருந்தது. வெள்ளிய சுண்ணம் எங்கும் பூசப்பட்டிருந்தது. செம்மண் பூச்சுகள்வேறு. ஆங்காங்கே கருஞ்சாந்தும். தூண்கள் வரிசையில் விறைத்து நிமிர்ந்து நின்றிருந்தன. அடியிலிருந்து தலைவரை சிற்ப வேலைப்பாடுகள். ஒரு கனவு அங்கே காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. நாகன் அசைவு மறந்தான்.

எந்த நாட்டில், எந்த அரண்மனையில், எந்தக் கோவிலில் இம்மாதிரி அவன் கண்டான். சிற்பி வேறு நாட்டவன்தான். ஆனாலும் கனவு ராவணனது. தன்னை நிலைக்க வைக்கவா இத்தனையும். இல்லை, தன் தெய்வத்தை ஏற்றிவைக்கவா.

லங்காபுர அரண்மனை விசாலமானது. ஆனாலும் ஓர் இருண்மை எந்நேரமும் அங்கே விழுந்துகிடக்கும். தீப்பந்தங்களாலும் அகற்றமுடியாதது அது. மாயங்களால் அது வலுப்பெற்றிருந்ததுதான். என்றாலும் அச்சத்தைத் தவிர வேறுணர்வு அதில் பிறப்பதில்லை. ஆனால் மலைக்கோயில்ஞ்? இரவுகளில் பகல்களில் என்று ராவணன் பேசிக்கொண்டிருந்த பரவசத்தின் பிரத்தியட்சம் கண்டதில் அவனையே கட்டித்தழுவ உந்துதல் பெற்றுவிட்டான் நாகன்.

பக்கத்தே வந்து ராவணன் மெல்லச் சிரித்தான். 'நாகா, ஆயிரம் தூண்கள். எண்ணிவிடுவாயா. உனக்கு பாதி நாளாவது வேண்டும்.'

நாகன் பேசாது தலையசைத்தான்.

'என்ன நாகா.'

'எனக்கு இன்னும் இரண்டு கண்கள்வேண்டும், அரசே.'

ராவணன் கடகடவெனச் சிரித்தான். பின், 'அதோ அந்த நடுப்பகுதியில்தான் நடந்துகொண்டிருக்கிறது, சிவசெப்பம்! வா, அதையும் பார்த்துவிடுவோம்.'

நாகன் ராவணனைப் பின்தொடர்ந்தான்.

கோவில் மத்தியில் ஒரு குறுமலைபோல் நின்றிருந்தது சிவன். சில சிற்பிகள் சூழநின்று பல்வேறு வேலைகளையும் செய்து கொண்டிருந்தனர். ஒரு முதியவர், குந்தியமர்ந்து இளஞ்சிற்பியொருவர் செய்யும் சிற்பப் பொழிவை நுட்பமாய்க் கவனித்துக்கொண்டிருந்தார். அவர்தான் நோய்வாய்ப்பட்டிருக்கும் தலைமைச் சிற்பியென்பதை அனுமானிக்க அதிக சிரமம் இருக்கவில்லை நாகனுக்கு. மனித உயரத்துக்கு நெடிதாய் நின்றிருந்தது சிவன். புதுக் கல்லின் நிறம் கண்ணை வசீகரித்தது. அங்காங்கே பொழிவு பட்ட இடங்களில் வைரம்போல் அது மினுங்கியது.

இளஞ் சிற்பியின் உளிக் கொத்தல்கள் விழுந்துகொண்டிருந்த இடத்தை உன்னிப்பாய்க் கவனித்தான் நாகன். பாம்பின் நச்சு வளையக் குறி! அப்படியானால் செதுக்கப்பட்டுக்கொண்டிருப்பது பைரவு! நாகன் புரியாமல் ராவணன் பக்கம் திரும்பினான். ராவணன் கேள்வி கேட்கப்படும் நிலைமையில் இல்லை. அவனே ஒரு மெய்ம்மறதியில். நாகன் சிவன் சிலைநோக்கி மறுபடி திரும்பினான். அப்போது இளஞ்சிற்பி எழும்பினான். நாகனைக் கண்டதும் அடைந்த ஆச்சரியத்திலிருந்து மீண்டு மெல்லச் சிரித்தான். வியாழி குடிசையில்

வியாபாரிபோல் தோற்றம் கொடுத்துக்கொண்டிருந்த அதே இளைஞன்தான். நாகனும் புன்னகைத்து அறிமுகம் காட்டினான். ராவணனைக் கண்டு அரசனென்று தெரிந்து இளைஞன் அப்பால் நகர, தலைமைச் சிற்பி வணங்கியபடி முன்னே வந்தார்.

'சிற்பியே, நான் சொல்லியவையெல்லாம் தெளிவாய் ஞாபகமிருக்கிறதா.'

'இருக்கிறது, அரசே.'

'ம். இந்த நச்சு வளையத்தின் பருமனுக்குமேலே புடைப்போ குழிவோ போகவேண்டியதில்லை.'

'சரி, அரசே. நானே நின்று கவனித்துக்கொள்வேன்.'

'நல்லது' என்ற ராவணன் நாகன் பக்கம் திரும்பி, 'வா, நாகா' என்றுவிட்டு நடந்தான். நாகன் பின்தொடர்ந்தான்.

அவனுள் கேள்விகள் சடைத்துக்கொண்டிருந்தன. சிவனில் நாகம் எதற்கு. செய்யப்படுவது செப்பமா, திருத்தமா. திருத்தமெனில் ஏன்.

மலையிலிருந்து பார்த்தபோது லங்காபுரம் ஒரு சிறிய நகர்போல் கீழே அசைந்துகொண்டு இருந்தது. அரண்மனைநோக்கி ஓடிய வெண்வீதி அசைவற்ற பாம்புபோல் கிடந்தது. பாம்பு! நாகம்! அரவு! நாகனின் மெய்யில் பதற்றம்போன்ற ஓர் உணர்வு மெல்லப் பரவத் தொடங்கியது.

## எட்டு

**த**ன் சொந்தப் பாதங்களினதே போன்றெழுந்த 'தும்' ஓசைகளில் ராவணன் வருவது தெரிந்துதான் அரசி மாளிகையைவிட்டு அவசரமாக விலகியிருந்தான் வீடாணன்.

அவன் ஒன்றும் சொல்லியிருக்கப்போவதில்லை என்பது வீடாணனுக்குத் தெரியும். ஆனாலும் அவனின் எதிர்நின்று கதைத்து வீடாணன் என்றும் அறிந்ததில்லை. அவன் பலமேயளவு தான் கொண்டிருந்தபோதும்தான் அந்தமாதிரி. ஒரு மரியாதைக்கான ஒதுக்கம்போன்ற அது, அண்ணன் என்பதனால் இல்லை. அரசன் என்பதினாலுமில்லை. எது காரணத்தாலோ சின்னவயது முதலே ஒதுங்கி ஒதுங்கி அது ஒரு இடைவெளியாய் விழுந்துவிட்டிருந்தது அவனில்.

அத்துடன், ராவணனை எதிர்கொள்வதில் அப்போது மனத்துக் குள்ளான ஒரு தடையிருந்தும் அவனை விலகப் பண்ணியிருந்தது.

அது ஒதுக்கமில்லை, ஒதுக்குதல் என்று, இப்போதுதான் மந்தாகினியுடனான அணுக்கம் அதிகரித்திருக்கும் வேளையில் அவனுக்குப் புரிந்தது. தானே ஒருவகையில் ஒதுக்கப்பட்டுக் கொண்டிருப்பதாய் அவள் சொன்னது நிஜமாயே இருக்கவேண்டும்! ஆனாலும் அவன் அடங்கிப்போகிற தம்பிதான். எல்லாத் தம்பியர் களும்போல. மந்தாகினியளவுகூட அவனால் ராவணனின் எதிர்நின்று எதுவும் சொல்லிவிட முடியாது.

ராவணன் எப்போதுமே அப்படித்தான் என்றாலும், சிவ தெய்வத்தை அவ்வளவு கொண்டாடத் தொடங்கிய பிறகுதான் அவன் அவ்வாறு ஆனதாய் மந்தாகினி எண்ணுகிறாள். அது உண்மை யாகக்கூட இருக்கலாம். தனது மீட்சியை அந்தத் தளத்திலிருந்து காண அவள் எடுக்கும் முயற்சிக்கு ஆதரவாயிருப்பதென்று அவன் எண்ணி வெகுகாலம். அவள் சுழியாய் இழுத்தமிழ்த்தும் பேரழகாயும்,

பேரறிவாயும் இருக்கிறவரை அவனுக்கு அவ்வண்ணம் செய்வதுதவிர வேறுவழியில்லை.

அவன் அவளிலிருந்து கற்றுக்கொண்டிருந்தான் வாழ்வியல். நாகரீகமும். இன்னும் கல்வியின் முக்கியத்துவமும். அவன் அவற்றை அதுவரை அடையாதேயிருந்தான் என்பதுதானே முதன்முதலாய் அவள் அவனிடத்தில் சுட்டிக்காட்டிய குறை.

நீயே களை என்றான் அவன்.

என் சொல்படி நட என்றாள் அவள்.

அந்தவகையில் அவள் அவனது ஆசான் ஆகக்கூடியவள்.

காலையில் அவள் தரிசனம், அவளது குறையிரங்கும் உரையாடல் கேட்டல், பின்னால்தான் ஆயுத மண்டபத்தில் பயிற்சிகளைக் கவனித்தலென்று நாளொழுங்குகள் அவனுக்கு ஏற்பட்டிருந்தன.

காலையில் எழுந்ததுமே முதல்நாள் மாலையில் தன் தோழியுடன் வெளியே புறப்பட்டுச் சென்ற சூர்ப்பாநகை விடிந்து அவ்வேளையாகியும் இல் திரும்பவில்லையென்று அறிந்ததிலிருந்து ராவணன் அதிரத் தொடங்கியிருந்தான். வீடாணனுக்குத் தெரியும், இனி அரண்மனையே கதிகலங்கப்போகிறதென்று. இயல்பிலேயே வெடுசொல்லன்றி வேறுசொல் அறியாதவன் ராவணன். அவ்வாறு கோபங்கொண்டிருக்கும் வேளையோவெனில், அவனது வார்த்தைகளே கொதியெண்ணெய் ஊற்றியதுபோல் துடிக்கவைத்துவிடும் எவரையும்;. கண்டதையெல்லாம் துலீக்கியெறிந்து, கண்டவர்களையெல்லாம் பற்றிப்பிடித்துத் திருகி பேரழிவு செய்துகொண்டிருப்பான்.

கூடப் பிறந்தவர்களிலேயே சூர்ப்பாநகையுடன்தான் கொஞ்சமேனும் சாந்த சுபாவியாக அவன் பேசுவது. ஆனால் கோப நச்சு தலைக்கேறியிருக்கும் வேளையில் அவளைக்கூட இழுத்துப் போட்டு துவம்சம் பண்ணிவிடுவான். பின்னால் அப்படிச் செய்துவிட்டேனேயென்று அன்பினில் குழைந்து அவன் அழவே கூடும். ஆனால் கோபவெறி கண் மறைத்திருக்கும் வேளையில் உறவு மட்டுமில்லை, அன்பும் அவன் கருத்தில் பட்டுவிடுவதில்லை.

அதனால்தான் சமயோசிதமாக அவன் ஒரு வேலையாளை அழைத்து தான் சொல்லியபடி தன் அண்ணனிடம் சூர்ப்பாநகை இல்லம் திரும்பிவிட்டதாகச் சேதி தெரிவிக்கச் சொன்னது. அதை உண்மையானதாக வேலையாள் நம்பும்படியே சொல்லியிருப்பினும், வேலையாள் அது உண்மையில்லையென்பதை எதுவிதமாகவோ அறிந்துவிட்டான்போலும். ராவணனிடத்தில் அதுவரை அவன் சேதியைச் சேர்க்காதிருந்ததன் காரணம் அதுதான். ராவணன்

மந்தாகினியின் மாளிகை செல்லும்வரை காத்திருந்து, போய்ச் சொல்லப்போகிறானோ.

மந்தாகினி இல்லில் அவன் சொல்வது பொய்யென்பது தெரியவந்திடினும், உயிராவது பிழைக்க முடியும். ஏனோ, மந்தாகினி முன்னால் ராவணன் சற்று தன் ஆவேசங்களை அடக்கியே காட்டிக் கொண்டான்.

தும் தும்மென தன் இல்லம் நோக்கி நடந்துகொண்டிருந்தவன் மனத்தில் சூர்ப்பநகை எங்கே போயிருப்பாள்? என்ற கேள்வி எழுந்து வெறியாட்டம் போடத் துவங்கியது.

அவள் அவ்வாறு முன்பேயும் நடந்திருக்கிறாள்தான். சொல்வது கேட்கிற குணமில்லை அவளுக்கு. கூடத் திரியும் அவளது நண்பி கொண்டனாமிகையும் தன் தலைவி போக்கு ஒன்றானவள். 'நல்ல பெயர்கள்! ஒருத்தி சூர்ப்பநகை. மற்றவள் கொண்டல்..நகைமிகை!' என்று நகைப்பான எண்ணமொன்று அப்போது ஓடியது அவனது மனத்தில்.

ஆனாலும் இரவுகளில் அவள் வெளியே தங்குவதை ராவணன் கடுமையாக மறுத்திருந்தான். தன் பகைவர் யாரேனும் தன்னைத் துன்புறுத்த முடியாத காரணத்தால், அவளைத் துன்புறுத்தி இன்பங்காண முனையக்கூடுமென்று அவன் காரணம் கூறினான் அப்போது.

ராவணனுக்காக இல்லாவிட்டாலும், அவளது அழகுக்காகவே சூர்ப்பநகை துன்புறுத்தப்படக் கூடியதற்கான சாத்தியங்கள் நிறையவே இருந்தனதான். நாக குலத்தவரில் மந்தாகினி அழகியெனில், சூர்ப்பநகை இயக்க குலத்தவரில் அழகி.

அன்று காலையில் வீடாணன் அரசிமாளிகை சென்ற வேளை, மந்தாகினி வெறிச்சோடிய பார்வையோடு வெளிநோக்கி நின்றிருந்தாள். மெல்லிய துகிலொன்று தோளில் புரண்டு கொண்டிருந்தது. காற்றில் அசைந்தது தொங்கியபடி. கிழக்கின் வர்த்தகனிடம் சிறிதுகாலம் முன்னர் அவள் பொன் கொடுத்து சொல்லிவைத்து வாங்கிய துகில்தான் அது.

அவன் அழைக்கும் முன்னமே காத்திருந்தவள்போல், 'வா, வீடாணா' என்று மந்தாகினி திரும்பினாள். மறைந்திருந்தும் கருவட்டங்கள் காட்டி நிமிர்ந்து நின்ற மார்பகங்கள் குலுங்கி அடங்கின. பின்னரே அவற்றின்மேல் புரண்டுகொண்டிருந்த ஆபரணங்களின் துள்ளல் அடங்கியது.

அவளை அண்ணன் மனைவியாய் அன்றி, அரசியாயன்றி, குருவாய் அவன் மதிப்பவன்தான். ஆனாலும் அந்த இங்கிதமான காலை வேளையில் அந்தக் காட்சி அவன் மனத்தில் அலைக்கழிப்பை உண்டாக்கியது. வீடாணன் பார்வை தாழ முன்னே வந்தான்.

'அரசரின் இந்தப் போக்கினுக்கு உன்னாலாவது காரணம் காண முடிகிறதா சொல்' என்று வழக்கம்போல் குறை பகர்தலோடேயே ஆரம்பித்தாள். 'சித்தனைப்பற்றியாவது அக்கறையாய் நினைக்கக் கூடாதா. அவனை நாள்தோறும் அமைச்சரே வந்து ஆயுதப் பயிற்சிக்கு அழைத்துச்செல்கிறார். தந்தையே கூடிச்சென்று அவனது நலன்களில் அக்கறைகாட்டுவதுதானே தக்கது.'

அவனுக்கு சூர்ப்பாநகைபற்றிப் பேசவிருந்தது. அதைவிட அரண்மனைச் சுருங்கைவழிகள்பற்றி பிரானோடு தான் அன்று பேசவிருப்பதுபற்றிக் கூறவேண்டியிருந்தது. மர்மத்தில் இயங்கும் அரண்மனைப் பேரதிசயங்களை முடிந்தளவு அறிந்துவிடமுடியுமென தான் நம்புவது குறித்தும் சொல்லவேண்டியிருந்தான். ஆனாலும் அவள்முன்னால் வாயடைத்து, முகம் தாழ்ந்து நிலம் பார்த்து நின்றிருக்கவே முடிந்திருந்தது.

அப்போதுதான் மாளிகையின் வெளி நடைபாதையில் நிலத்தினுள் புதைந்துவிடும்படியான வன்மையோடு காலடிப் பதிப்புகள் இறங்கும் ஒலி கிளர்ந்தெழும்பிக்கொண்டிருந்ததை அவன் செவிமடுத்தான்.

திரும்பியாகிவிட்டது. சூர்ப்பாநகைபற்றியும் பேசவில்லை. அன்று மாலையில் நிகழவிருந்த லங்காபரத்தின் தலைசிறந்த சிற்பி பிரானுடனான தனது சந்திப்புப்பற்றியும் கூறவில்லை.

அவளது மன ஏக்கங்களைக் கொஞ்சமேனும் அறிந்தவன் வீடாணன். ஏற்படப்போகும் சந்திப்பில் பிரான் தரக்கூடிய தகவல் களின்மூலம் சில புதிர்களுக்கான விடைகள் சாத்தியமாகப்போவதைக் கூறி அவளைச் சிறிது மகிழ்ச்சிப்படுத்தக்கூடிய வாய்ப்பொன்று நழுவிப்போனதில் அவனுக்குச் சிறிது வருத்தமாகவே இருந்தது.

தன் இல் அடைந்த வீடாணன், ஆயுதப் பயிற்சி மண்டபத்துக்குச் செல்ல சிறிதுநேரத்தில் வெளியே வந்தபோது, தூரத்தில் தனித்தனிக் குதிரைகளில் ராவணனும் நாகனும் அரண்மனையிலிருந்து கிளம்பிப் போய்க்கொண்டிருப்பதைக் கண்டான்.

நாகன் இரண்டு ஆண்டுகளின் பின் தன் உலக சஞ்சாரம் முடித்து முதல்நாள் இரவு நகர் திரும்பியிருந்தமையை அவன் ஏற்கனவே அறிந்திருந்தான்.

மலைக் கோவிலுக்காய் இருக்கும்! என எண்ணிக்கொண்டான். ஆயிரம் கால்களோடு அந்தப் பெரிய சிவ கோவிலின் மர்மப் புதைவுகள்பற்றி ராவணன் அவனுக்கேனும் ஏதாவது கூறுவானா? வீடாணன் மனத்தில் யோசனை பிடித்தது.

மலைக் கோயில் கட்டுமானம் ஆரம்பித்தவேளை அவனும் மிக உற்சாகமாகத்தான் ஓடியோடிப் போய் அதன் படிநிலை வளர்ச்சிகளைக் கவனித்துவந்தான். ஆனால் அதுவே மந்தாகினியின் உள்ளுறை சோகத்துக்குக் காரணம் என்பது தெரிந்த கணத்திலிருந்து, அந்த ஆர்வத்தைத் தூக்கியெறிந்துவிட்டான் வீடாணன். கபாடபுரத்திலிருந்து வருவிக்கப்பட்;ட தலைமைச் சிற்பி எழினிக்கும் அவன்கீழான பதின்ம சிற்பிகளுக்கும் கீழ் நூறு லங்காபுரச் சிற்பிகளும், ஆயிரம் வேலையாள்களும் ஆண்டிரண்டில் கட்டிமுடித்திருந்த அந்தச் சிவகோயில், நாடு தழுவி எல்லோரதும் பேச்சாகவிருந்தது. ஆயினும்தான் அதை எட்டிப் பார்த்துவிடக்கூடச் செய்யாது, அதுபற்றி உலவும் கதைகளைக் கேட்டவாறு ஒதுக்க மடைந்திருந்துவிட்டான் அவன்.

அந்த அதிருப்தியின் மய்யமாய் மந்தாகினியே இருப்பதாய்ப் பட்டது வீடாணனுக்கு. அந்த மய்யத்திலிருந்தே அலையலையாய்க் கிளர்ந்து அரண்மனை அடங்கிலும், நகர் அடங்கிலும் திருப்தி யின்மையொன்று மெல்லமெல்லச் செறிந்துகொண்டிருந்தது போலிருந்தது. பிரான் இன்னொரு அதிருப்தி. அவன் மலைக்கோயில் சிற்ப கட்டுமானப் பணியின் பொறுப்புக் கேட்டவன். ராவணன் கடைசிவரை மறுமொழியேதும் கூறாதிருந்துவிட்டு கடைசியில் அந்த கபாடபுரத்துச் சிற்பியை அழைப்பித்துவிட்டான். பிரான் பங்கப்பட்டுப்போனான். கர்வ பங்கம்! கலைஞன் பங்கப்படுமிடம் முக்கியமானது. அது அவனது வித்தை சார்ந்ததாய் இருக்கும்பட்சத்தில் அந்தப் பங்கம் படுபயங்கரமான எதிர்விளைவினை உண்டாக்கக் கூடியது. மந்தாகினிதான் சொல்லியிருந்தாள்.

இந்தக் கூட்டில் தனது பங்கான பங்கம் என்ன. வீடாணன் தன்னையே கேட்டுக்கொண்டான். நெடுநேரமாகியும் விடை கிடைக்க வில்லை அவனுக்கு.

அப்படியொரு பங்கப்பட்டதான அம்சமே தனக்குள் இல்லையோ என்றுகூட வீடாணன் எண்ணத் தலைப்பட்டான்.

பிறகு தனக்குள் சொல்லிக்கொண்டான்: இருக்கிறது! உடன்பிறப்பின் பங்கம்!

அவன் ஆயுத மண்டபத்தை அடைந்தான்.

சித்தன் ஆசானிடத்தில் வித்தைகள் காட்டிக்கொண்டிருந்தான். அதிசயம் மேவினான் வீடாணன். அந்த வில் திறன் ராவணனதற்கு நிகரானது. அவனுமே ஒரு சின்ன ராவணனாயே வளர்ந்துமிருந்தான்.

எல்லாம் காண ஓர் மெல்லிய அச்ச அலை மெதுமெதுவாய் அவனுள்ளத்தில் பரவத் தொடங்கியது, எதற்காயென்று காரணம் புரியாமலே.

## ஒன்பது

மழைக் குறியேதும் காட்டாத வானத்தில் சூரியன் உறைப்பாக எறித்துக்கொண்டிருந்தது. இருந்தும் உச்சிவர இன்னும் வேளையிருந்தது. ஓரளவு களிப்பாங்கான தரையில் விரிந்திருந்த கட்டிபட்ட பாதை போக்குவரத்தின் அபரிமிதத்தால் லேசான மண்பொடி பட்டுக்கிடந்தது. வெய்யில் சாய்வாக அடித்துக் கொண்டிருந்த வாகில் சிலவேளைகளில் வைரப்பொடிகளைக் கொட்டிவிட்டனபோல் இடையிடையே மினுக்கங்கள் தோன்றிக்கொண்டிருந்தன. மஞ்சளொளி சிதறும் மண் குருணைகள் சிலபோது. நாகன் முன்பேயும் அவற்றை அவதானித்திருக்கிறான்.

லங்காபுரம் செல்வ நகரமில்லை. ஆனால் செல்வமுள்ள நகரம். அது தன்னுள் பல அதிசயங்களை நிறைத்துக்கொண்டிருந்ததாய் ஒரு செய்தி ரகசியத்தில் உலவிக்கொண்டிருந்தது. அது எல்லைகள் கடந்துசென்று வியாபாரிகளின் அவாவினை அதிகரிப்பித்தது. மொழியறியா, நிறம் சேரா வியாபாரிகளின் வருகை, ஆறான பருவ காலங்களில் மூன்றினிலே லங்காபுரத்தில் அலைமோதுவதைக் காண முடியும். வியாபாரம் செய்யவந்து, லங்காபுரத்தின் கணிகையர்வீதியினில் அலைந்து தம் கைப்பொருளை இழந்து லங்காபுரவாசிகளாகவே ஆகி பிச்சையெடுப்பதும், எடுத்த பிச்சையைக் கள்ளுண்டு களிப்பதுமாய்க் காலம் கடத்திக்கொண்டிருந்தார்கள் அவர்களில் சிலர். அத்தனைக்கு லங்காபுரம் பெரும்பேர்பெற்ற பதிதான். நாகன் அறிவான். ஆனாலும் அந்தப் பெருமையையெல்லாம் எண்ணிப்பார்த்து மனமகிழ்வெய்தும் நிலையில் அப்போது அவன் இல்லை.

தூரத்தில் அரண்மனை முகப்பின் முடி செம்மையாய்த் தெரிந்தது. சூரியன் விரைவுவிரைவாய் உச்சிநோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது. காற்றின் வேகத்தில் செல்ல புரவிகளை விரட்டுவதும், பின் திரும்பிப்பார்த்து நாகன் பின்தங்கிவிட்டதைக் கண்டுகொண்டு வேகத் தணிப்பபைச் செய்வதுமாய் இருந்தான் ராவணன்.

அது அவனது மனவேகத்தில் இயல்பாய் நடக்கின்றமை தெரிந்த நாகன், தன் வேகத்தைக் கூட்டவோ குறைக்கவோ செய்யாமல் வந்துகொண்டிருந்தான். புரவியின் வேகத்தை அதிகரித்தால், தன்னோடு போட்டிபோட முனைந்ததாக எண்ணிக்கொண்டு ராவணன் சினமெறிந்த நாள்கள் நாகனுக்கு இன்னும் மறக்காமலிருந்தன. அவனையே காயப்படுத்தும் சொல்களை வீசுவான். ஆறாடி, என்ன எல்லாம் மறந்தாயா? குதிரை எப்போது ஏறப் பழகினாய்? என்னிடம் வந்த பிறகுதானே? என்றெல்லாம் வார்த்தைகளை அள்ளி விட்டிருக்கிறான்.

கோட்டை நெருங்கிக்கொண்டிருந்தது.

இதுவரை அவன் பேசியிருக்கவேண்டும். பேச வேண்டிய வியம் அவசரமானதாயும் இரகசியப் பகிர்வுக்கானதாயும் இருக்கிற வகையில், பயண வழி அல்லது வழியில் தங்கக்கூடிய ஓரிடம்தவிர வேறிடம் அதற்கேற்றதாய் இருக்கமுடியாது. பயணம் முடியவிருந்த நிலையிலும் ராவணனது மௌனம் நாகனைச் சற்றே எரிச்சலடையச் செய்தது.

'ராவணரே!' நாகன் இரைந்தான்.

குதிரையின் வேகத்தைக் குறைத்து ராவணன் திரும்பினான். அது திரும்புகையில்லை. ஒரு முகம் அவன் பின்னால்கொண்டிருப்பதுபோல் அப்படியொரு நேர்நோக்கு. நாகன் திகைத்தான். அதிலிருந்து மீள உணர்கையாகியது தன் தவறு. நாகன் அருகே வரும்வண்ணம் குதிரையை மெதுவாகச் செலுத்திய ராவணன், 'என்ன, ஆறாடி, வெகுட்சியா. இல்லாவிட்டால் இப்படி என் பெயரைச் சொல்லி நீ அழைத்திருக்க மாட்டாயே' என்றான்.

'பொறுத்தருள வேண்டும். ஏதோ உணர்ச்சிவசமானதில் அவ்வாறு நேர்ந்துவிட்டது' என்று அவசரமாய்க் கூறி வருந்தினான நாகன்.

'பரவாயில்லை, நீதானே அழைத்தாய்! ஒரு நட்பாளனாய் நீமட்டும்தான் அவ்வாறு அழைக்கவும் முடியும்' என்ற ராவணன் தொடர்ந்து குதிரையைச் செலுத்தியபடி சொன்னான்: 'வா பேசலாம் எனக் கூட்டிவந்து எதுவும் சொல்லாமலிருக்கிறேன் என்றுதானே சினமடைந்தாய். விடு அதை. நான் நீண்ட நாள்களுக்குப் பிறகு இன்று கொஞ்சம் அமைதிபெற்றிருக்கிறேன், நாகா. ஒரு தலைவனாய் என்னில் ஏறியிருந்த சில சிக்கல்களின் விடைகள் எனக்கு இன்று வெளிச்மாகியிருக்கின்றன. ஆனாலும் உன்னோடு நான் பேசவேண்டிய தகவல்களும் உண்டு. அதன்முன் சில விளக்கங்களை நானே சொல்லாமல் நீயாகக் காணவேண்டுமென்பதற்காகவே உன்னை என்னோடு அழைத்துவந்தது. உன்னில் இப்போது கேள்விகள் விசைபெற்றிருக்கும். பதில்களைக் காண முயற்சிகொள். நாம் இன்றிரவுதான் பேசப்போகிறோம். அதுவரை பொறுத்திரு.'

பக்கமாய் அமைந்த முகமொன்று தன்னை நேரே தீர்க்கமாய்ப் பார்த்தபடி பேசிக்கொண்டிருந்ததாய் உணர்ந்துகொண்டிருந்தான் நாகன்.

ராவணன் வழக்கத்தைவிட அன்று அதிகமாய்ப் பேசியிருந்தான். இயக்க நாக மொழிக் கலவையாக அது இருந்ததும் அறிகையானது. சிவத்தில் நாக அடையாளம் ஒரு கலவை. எலு மொழியோடு நாகமொழி கலந்த பேச்சு இன்னுமொரு கலவை.

தான் நினைப்பது சரியெனில், ராவணன் இனக்குழுமப் பிரச்சினைக்குள் அழுந்தியிருக்கிறான், அதை நிவர்த்தியாக்கும் முயற்சியே இந்தக் கலவைகள் என நாகன் மனத்தில் எண்ணங்கள் எழுந்தன.

நாகன் மவுனமாய் குதிரையைச் செலுத்திக்கொண்டிருந்தான்.

ராவணன் தூரத்தே வருவது கண்டு தம்மைச் சுதாரித்து நிமிர்ந்தனர்கோட்டைக் காவலாளிகள். ராவணனும் நாகனும் நெருங்குமுன்னமே கோட்டைக் கதவுகள் அகலத் திறந்தன.

அரண்மனைநோக்கிச் செல்லாமல் வெளிவீதியில் ராவணன் குதிரையைச் செலுத்தியமை நாகனுக்குப் புதிராய் இருந்தது. என்ன ஆச்சரியம் காட்டப்போகிறானோ. நாகன் மனம் காத்துக்கிடக்க முடியாது அலைபாய்ந்தது.

ஒரு பெரும் மர மண்டபத்தின் முன்னால் வந்துநின்றான் ராவணன். அவன் உள்ளே நுழைய நாகனும் சென்றான். அரசனைக் கண்ட வேலையாள்கள் பணிவோடு வணங்கினர். அவர்களுள் ஒரு வெண்தோல் மனிதனும் நின்றிருந்தான். அவனே அவ்வேலை யாள்களின் தலைவனாய் இருக்கவேண்டும்போல் தோன்றியது.

ராவணன் முகத்தில் மலர்ச்சியின் வரிகள் பதிந்தன. எதையோ காட்டுவதற்குப்போல் முன்னே நடந்தான் கம்மான். பின் தொடருகையில் நாகன் பக்கம் திரும்பாமலே, 'வா, நாகா' என்றுவிட்டு விரைந்தான் ராவணன்.

அங்கே என்ன நடக்கிறது. ஆயுதக் கிடங்குக்கான தளவாட உற்பத்தியா. அரசனுக்கான கவசத் தயாரிப்பா. வேறுவேறு தேசங்களில்போல் நாணயத் தயாரிப்பா. மேலே வானம் மட்டுமே பார்க்கும்படியாகத் திறந்த வெளியாய்க் கிடந்த அந்த உலைக்களச் சாலையில் என்னதான் நடக்கமுடியும்.

உலைக்களம் தணிந்திருந்தது. அதனருகில் ஆடையால் போர்த்திக்கொண்டு ஒரு மனிதன் குந்தி இருந்ததுபோல் ஒரு பொருள் நெருப்பில் காய்ந்து கரித்துப்போயிருந்தது. அதை ஒரு வேலையாள்

உரசித் தேய்த்துக்கொண்டிருந்தான் கையடக்க மரத்துண்டொன்றினால்.

கிட்ட நெருங்கிய பின்னர்தான் தெரிந்தது அது ஒரு காண்டா மணியென்பது.

வேலையாள் தேய்த்துக்கொண்டிருந்த இடத்தில் பார்வைபட்ட ராவணனது முகம் ஒளிர்வடைந்தது. நிலாப்போல் பிரகாசித்தது அந்த இடம். நாகன் நெருங்கிச் சென்று ராவணனது பார்வை பட்டு பரவசமாகிநின்ற இடத்தை நோக்கினான். தங்கமாய் ஜொலித்துக் கொண்டிருந்தது அந்த இடம்.

நாகன் கேள்விப்பட்டிருக்கிறான். சிலநாடுகளில் கண்டுமிருக்கிறான் அதுவல்லாத வேறு உலோகங்களில் செய்யப்பட்ட பெருமணிகளை. இது அற்புதம்!

ராவணன் எதுவும் ஒரு சிறுபொழுது பேசவில்லை. பின் திரும்பி வெண்தோல் மனிதனிடம் ஏதோ கூறிவிட்டு வெளியேற வேகமாய் நடந்தான்.

குதிரையிலேறி அரண்மனைநோக்கிச் சென்றுகொண்டிருந்த பொழுது ராவணன் சொன்னான்: 'சிவகோவிலுக்கான காண்டாமணி. அதைப் பொறுப்பெடுத்துச் செய்துகொண்டிருக்கும் வெண்தோல் மனிதன் பனிவரைத் தேயக்காரன். அவன்போன்றவர்களை உன் பயணங்களில் நீயும் கண்டிருப்பாயே.'

'சிலரை.'

அதிசயங்களில் ஊறியிருந்தவனுக்குப் பேச்சு அதிகம் வரவில்லை.

அரண்மனை வாசலையடைய காவலாளிகள் ஓடிவந்து குதிரைகளை வாங்கிச் சென்றனர். 'நாகா, விருந்தினர்மடுவத்தில் போய்ச் சாப்பிடு. தேவையென்றால் ஓய்வெடு. மாலையில் வெளியே போவதானால் போ. இரவு மறுபடி நாம் சந்திப்போம். அங்கே பார்த்தாயா, எனக்காக எல்லைப்புற காவலாளிகள் காத்துநிற்பதை. சூர்ப்பாநகையைப் பார்த்து கண்டிக்கவேண்டுமென்று நினைத் திருந்தேன். அதுவும் இன்றைக்கு முடியாது போலிருக்கிறது.'

பின்னால் பல வார்த்தைகளையும் ராவணன் போய்க் கொண்டேதான் சொல்லியிருந்தான்.

நாகன் விருந்தினர்குடில் திரும்பினான்.

ஊண் களைப்பில் உறக்கம்வரப் பார்த்தது. உடம்பின் கெஞ்சுதலுக்காய் சிறிதுபடுத்தெழும்ப சூரியன் மறையும் தறுவாயிலிருந்தது. ஆசறுதியான தூக்கம்தான். நாகன் குடிலைவிட்டு

வெளியேறினான். திரும்ப நேரமாகலாம் எனக் கோட்டைக் காவலர் தலைவனிடம் சொல்லிக்கொண்டு நகரின் கலகலப்பு பார்த்துவர நடந்தான்.

தோற்றத்தினால் மட்டுமின்றி இயக்கத்தினாலும் நகர்மாற்றம் பெற்றிருந்தது. இரவுகள் நீண்டபொழுதுகளுக்கு இன்பக்களன் களாகியிருந்ததைக் கண்மடுக்க முடிந்திருந்தது. ஒருபுறம் கொட்டும், கிண்கிணியும், பாட்டிசையும் கிளர்ந்துகொண்டிருந்தன. எவளாவது கணிகை களியாட்டம் ஆடிக் கொண்டிருப்பாள் என எண்ணிக் கொண்டான் நாகன். தவிர்க்கவியலாதபடிக்கு வியாழியின் ஞாபகம் வந்தது. கூட அவளது தேவையும்.

நாகன் நடந்து இருண்ட சந்து ஒன்றினுள் நுழைந்தான். தலைநகரின் இன்பத் தேடலுக்கான அல்லது உத்தரிப்பிற்கான இடத்துக்கு அது அவனை இட்டுச் சென்றது. களிகொண்டோர் பாடல்களும், களி முடிந்து கைப்பொருளை இழந்த மனவாதைப் பட்டோரின் வசைப் பேச்சுக்களும் செவிகளில் மாறிமாறிப் பாய்ந்து கொண்டிருந்தன. நொண்டிகள், நோயாளிகள், ஐயமெடுப்போர், அரச அதிகாரிகள், வாணிகர்கள், சிற்பிகள், வேற்றுத் தேயக் கம்மான்கள், இசைவாணர், ஆடல் தெரிந்தோர்என அறிய முடியாதபடி முட்டாக்கு களுக்குள் வெறும் அடையாளமற்ற உருவங்களாய் பலர்அலைந்து திரிந்துகொண்டிருந்தனர். வெகுநேரம் சுற்றியலைந்துவிட்டு வந்தவழியே திரும்பினான் நாகன்.

பரத்தையொருத்தி கடகடவெனச் சிரித்துக் கேட்டது அருகிலே ஓர்இல்லில். கள்வெறியேறியிருப்பாள் என நினைத்துக்கொண்டான் நாகன். தொடர்ந்து, 'நாகா' என அவள் கூவியது கேட்டது. நாகன் திடுக்கிட்டு நின்றான். பிறகு அவள் ஏதோ சொல்லியது செவியில் விழ, ஆர்வத்தில் அசைவற்று நின்று அதைச் செவிமடுக்க முனைந்தான். எப்போது வந்தாலும் என்னை அடித்துப்போட்டதுமாதிரி ஆக்கிவிடுகிறாயே! காமம் வற்றி வெறுங்குளமாய் ஆகிவிடுகிறதே! எத்தனை நாளாய் எதிர்பார்த்திருந்தேன் உன்னை! என்ற வார்த்தைகள் தட்டுத்தடுமாறிக் கிளர்ந்துகொண்டிருந்தன.

தன்னையல்ல என்பது நாகனுக்குத் தெளிவானது.

பதிலேதும் வராததாற்போலும் மறுபடி, 'நாகா!' எனக் கத்தினாள் பரத்தை.

'பொறு..பொறு.. வருவேன்' என்று பக்கத்தில்போல் குரல்கேட்க நாகன் இருளில் உறைந்தவாறு நின்றபடியே குரல்த் திசை நோக்கினான். பரத்தையின் குடில்பக்கமாய் புறம்காட்டி மூத்திரம் பெய்வதுபோல் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். பரத்தை

சுட்டியழைத்த நாகன் அவனாயே இருக்கலாம் எனத் தெரிந்தது நாகனுக்கு. அவ்வளவு நேரமாய் என்ன செய்துகொண்டிருக்கிறானோ என்று அதிசயப்பட்டுக்கொண்டிருக்கையில் பரத்தை மறுபடியும் அழைத்தாள்.

நாகன் இன்னும் கிட்டச் சென்று அவன் செய்வது காண இருளை ஊடறுத்தான்.

விறைத்து நீண்ட தன் குறியை வேகமாக காற்றில் இயக்கிக் கொண்டிருந்தான் அவன். தருணங்களில் ம்..ம்..ம்..என முனங்கினான்.

நாகன் மேலே அங்கே நிற்கவில்லை.

'வா, வந்து என்னைப் பாழ்படுத்து' என பரத்தை கத்தியது தூரத்தில் கேட்டது.

பாழ்படுத்தும் கலையினுடைய மூலம் விளங்கியிருந்த நாகனுக்குச் சிரிப்பு வந்தது.

அரண்மனையை அவன் அடைந்தபோது ராவணன் அவனுக்காகக் காத்திருந்தான்.

# பத்து

**மா**ளிகை வாயிலிலும் அதன் நடைபாதையிலுமாய்ச் சில காவலாளிகளின் காவல் நிறுவப்பட்டிருந்தது. அவர்கள் இருள்களுள் நின்றிருந்தனர். வெளிச்சம் குறைவானதாலும், சாய்ந்து நின்றுநின்று தோளும் அவர்களது எண்ணெய் படிந்த தலையும் பட்டிருந்ததில் சுவர்களும் தூண்களும் அழுக்கானதாலும் ஆன இருள்மை அது.

அவர்களின் நிறமும் அசைவின்மையும் இருளையும் உருவங்களையும் அபேதங்களாய்த் தெரியவைத்தன. தூண்டப்படாத் திரிகளாலான விளக்குகளும், நெய்குறைந்த தீப்பந்தங்களும் தூரத்துக்கொன்றாய் மினுக்கிக்கொண்டிருந்தன.

அவர்கள் தம் கூர்த்த பார்வையில் வருவது யாரென்ற அனுமானம் கொண்டு நாகன் மேலேசெல்ல வழிவிலகி நின்றனர்.

வழக்கத்தைவிட அன்று காவல் குறைவாகவிருந்தமையை அவன் உள்நுழைய்ப்போது கவனிக்கவே செய்திருந்தான். அன்று மட்டுமே அப்படியா, தான் இல்லாத காலங்களிலும் குறைவாவென்பது நாகனுக்குத் தெரியவில்லை. ஆனால் முன்பெல்லாம் அப்படி யில்லையென்பதை அவன் சுலபமாக ஞாபகமாகினான்.

அத்திபாரங்களும் தூண்களும் சுவர்களும் தடித்த மரக் கதவுகளும் மாளிகைகளின் உள்கட்டுமானத்தை நிர்மாணிப்பனபோல், காவல்கள் அவற்றின் வெளிக்கட்டுமானத்தை நிச்சயிப்பனவாகும். மனிதர்களுக்கு காவல் பாதுகாப்பளிக்கின்ற வேளையில், மனிதர்களின் இரகசியங் களுக்கு பெரும் பெரும் தருணங்களில் அவை அச்சுறுத்தலாகப் போய்விடுகின்றன. உட்காவல்களின் குறைவு மாளிகையொன்றின் இரகசியத்தை உறுதிப்படுத்துவதாகும். உண்மையில் அகக் காவலென்பது அவற்றை அடைதற் சாத்தியமான வழிகளினைத் திறப்பதே ஆகும்.

அன்று ராவணன் இரகசியங்கள் கதைக்கப்போகின்றான் என்பது நாகனுக்கு நிச்சயமாயிற்று.

அருகிலிருந்த மந்தாகினி மாளிகையின் காவற் பெண்ணொருத்தி அடக்கிச் சிரித்த சிரிப்பொலி கலகலவென்று கேட்டது தூரதூரத்துக் குமாக. காற்றிழைந்த சத்தமும் கேட்டற் சாத்தியமாயிற்று. ராவணன் சுவாசமும்கூட.

இரவில் அரவங்கள் மாளிகையில் அரசோச்சுகின்றனதான்.

நாகன் பேசாமல் ராவணன் எதிரில் அமர்ந்தான். கண்டுகொண்டு ஓர் அழகிய இயக்கி மதுக் குடுவையையும் இயத்துகளையும் அவன் முன் கொண்டுவந்து வைத்துப் போனாள்.

நாகனின் கண்களில் விழைந்த ஆச்சரியங்கள் அவளழகைத் துரத்திக்கொண்டிருந்தன. சிறிதுநேரத்தில் பார்வையைத் திருப்பி ராவணன் முகத்தில் பதித்தான். தூரத்துத் தீப்பந்தங்களின் மஞ்சள்நிறக் கதிர்கள் அவனது முகத்தில் படிந்து அமுக்கமாகிக்கொண்டிருந்தன. நாகன் அவனது கண்களில் சிவப்பைக் கண்டான். கூகைபோல் அவை எப்போதும் சிவந்திருப்பன. அப்போது மேலுமாய்ச் சிவந்திருந்தன. அவன் ஏற்கனவே நிறைய மது அருந்தியிருந்தமையைத் தெரிய முடிந்தது நாகனால்.

'ஆறாடித் திரிந்த காலத்தில் நீ அழகேதும் கண்டு பரவசப்பட்டதில்லையோ, அனுபவித்ததில்லையோ' என்று நாகனின் பார்வையில் விளைந்திருந்த ஆச்சரியங்களைக் கவனித்திருந்தான்போல் கேட்டான் ராவணன்.

நாகன் அவனது அவதானத்தில் ஆச்சரியப்படவில்லை. ராவணனால் பல விசயங்களை ஒரேநேரத்தில் அலட்சியமாய்க் கவனிக்கமுடியும். வேண்டியிருந்தால் பத்து விசயங்களைக்கூட. நாகன் சொன்னான்: 'ஆறாடும் கலைபற்றி அறியாதவரில்லையே நீர். சுரங்களும், வனங்களின் விலங்குகளும், நாடுகளுள் வம்பமாக்களும் ஆகிய அதன் கனங்கள் எவருக்குமே மிகக் கடினமானவை. உடலும் மனமும்கூடச் சோர்ந்துபோகிற கணங்கள் சம்பவிக்கும். தப்பிப்பிழைத்தவராய் வருதலே சாதனையென்று ஆகிவிடுவது அது.'

'மெய்தான். அறிவேன். ஆனாலும்....நீ காமத்தைத் துரத்து பவனல்லவெனினும் காமம் உன்னைத் துரத்துவதாய் இருக்கின்றதே நடப்பு. அதனால் கேட்டேன்.'

'வியாழியை எதிர்பாராத விதமாக வன எல்லையில் சந்தித்ததுதான். அவளோடுதான் இரண்டு நாள் முந்திய இரவை நான் கழித்ததும். அதனால் தாபமேதும் எழுந்து அடங்கமறுத்து அலைபாய்வதாக இல்லை உடம்பில். என் பார்வையின் காரணமே வேறு. இந்த உமது பணிப்பெண் என்றுமே இளமையாய் இருப்பவளென்பது

தெரிந்ததுதான். ஆனால் இளமையைத் திரும்பவும் சிறிதுசிறிதாகப் பெற்றுக்கொண்டேயிருப்பதுதான் என்னை உசும்ப வைத்தது.'

'இழக்கும் இளமையை யார்தான் திரும்பப் பெறமுடியும். இவள் இழந்த இளமையைத் திரும்பப் பெற்றுக்கொண்டிருப்பவளல்ல, இளமையாயே இருப்பவள்.'

'அப்படியானால்..?'

'நீ குறிப்பிடும் பணிப்பெண்ணின் மகள். புசமித்தையென்று அழைக்கப்படுகிறாள். இங்கே சிலகாலமாகத்தான் வேலைசெய்து கொண்டிருக்கிறாள்.'

'இரண்டு இயக்க இன ஆண்களைப் பொருதி வெல்ல இவள் தாயாரால் முடியும்.'

'இவளால் நான்கு ஆண்களை வெற்றிபெற முடியும்.'

'வியாழிபோல.'

'அறிவேன'

'வியாழியை அறிவீரா.'

'வியாழியை மட்டுமில்லை. அந்தச் சுற்றாடலில் எவரையும்தான் அறிந்துவைத்திருக்கிறேன். ஒருவகையில் லங்காபுரத்தின் நியமிக்கப்படா எல்லைக் காவலர்கள் அவர்கள்தானே.'

நாகனுக்கு இப்போது திண்ணமாயிற்று. வனப்பாதைகளின் கரடுமுரடும், ஆறலை கள்வரின் அலைவும் திட்டமிட்டே விடப்பட்டுள்ளன என்பது. இனி ராவணனிடம் அவன் அதுபற்றிக் கேட்கவேண்டியதில்லை. ஆனால் அந்தவகையான கடும் பாதுகாப்பு எதற்காக.

ஏதோ சிந்தனையிலிருந்த ராவணன் சுதாரித்துக்கொண்டு, 'உனது பயணமெல்லாம் எப்படி இருந்தது, நாகா' என்று கேட்டான்.

எந்த முக்கியமும் அதில் இருக்கப்போவதில்லை என்று ஏற்கனவே அவன் தீர்மானித்துவிட்டிருந்ததை அல்லது தான் சொல்லப்போகிற விசயத்தைவிட முக்கியத்துவமானதில்லை என்று திண்ணப் பட்டிருந்தமையை நாகனால் உணர முடிந்தது.

முக்கியமான விபரங்கள் நாகனிடம் உண்டு. ஆனால் அதை அப்போதைக்கு அவன் சொல்லிவிடமாட்டான்.

அவனது பயணங்களெல்லாமே ஒருவகையில் ராவணனது ஊக்குவிப்பில் பிறந்தவையே. உலகம் தழுவிய நிகழ்வுகளின், எண்ணங் களின், நிலைமைகளின் அறிதற் சாத்தியம் அதனாலும்

அதிகரிக்கப்பெற்றவன் அவன். இருந்தும் அறிதலைச் செய்ய அன்று அவன் பின்நின்றமையை நாகனால் புரிய முடிந்தது. அவன் அரசி மாளிகையை இரவுகளில் அணுகாதிருப்பதாய்ச் சொன்னதிலிருந்து அரண்மனையின் கலகலத்திருக்கும் உறவை அவன் புரிந்திருந்தான். அதனால் ராவணனே தன் மனத்தைக் கொட்டட்டும் எனவெண்ணி, 'பெரிதாயில்லை' என்று சொல்லி அடங்கினான்.

'ம்' என்றான் ராவணன். பின் சொன்னான்: 'நீ இரண்டாண்டு களுக்கு முன்பு சென்றபோதிருந்த நிலைமையில், வெளிப்படையாய் எந்த மாற்றமும் தெரியாதுதான். ஆனால் உள் கலகலத்துப் போயிருக்கிறது, நாகா. இதை ஓரளவு நீயும் அனுமானித்திருப்பா யென்றே நினைக்கிறேன். தம்பி தம்பியாக நிலைத்திருப்பானா, மனைவி மனைவியாகத் தொடர்ந்திருப்பாளா என்று ஏனோ ஒரு மனவுளைச்சல் சிலகாலமாகவே என்னில்.'

'மந்தாகினியின் அன்பினிலா உமக்குச் சந்தேகம்.' நாகனால் வியப்பை அடக்கமுடியவில்லை.

'அன்பினில் அல்ல, அவள் போக்கினில். அவள் எண்ணத்தில்.'

'எப்படிச் சொல்கிறீர்.'

'ஓர் அரசியல் சுழலுக்குள் தன்னையறியாமலே அமிழ்ந்து போய்க் கொண்டிருக்கின்றாள்போல் சிலகாலமாக எனக்குள் தோன்றத் தொடங்கியிருக்கிறது.'

'அரசியல் சுழல்....? அப்படியென்ன. எதிர்ப்புக் காட்டக்கூடியது நாக இனத்து அரசுரிமைக்காரர் மட்டும்தான். அவர்களுக்கும் தம் அழிநிலையிலிருந்து மீள ஓரிரு தலைமுறைக் காலங்கள் போதா.'

'ஓரிரு தலைமுறைகளென்ன, எப்போதும் இயலாது. ராவணன் இருக்கும்வரை இயலாது.'

'அது மெய்யே. உமது பெயரே சிறு குலத் தலைவர்களையெல்லாம் வனங்கடந்து ஓடவைத்திருக்கிறது. வனத்துக்குள் புதைய வைத்திருக்கிறது. அப்ப ஏன்....'

'லங்காபுரத்துக்குள்ளேயே கிளம்பியுள்ள சுழல்தான் அது. நாக, இயக்க இனமென்ற பாகுபாடு மக்களிடையே இல்லாதிருப்பினும், அதைப் புகைந்தெழ வைப்பதற்கு பெருமுயற்சி நடப்பதாய் ஓர் ஐயம். அரசில் அங்கம் வகிக்கும் பெரும்பதவியாளர்களிடத்தில் ஒரு சூழ்வினை முயற்சி தோன்றியிருப்பதாய் ஒரு தோற்றம். குறிப்பாக சிவதெய்வத்துக்கான மலைக்கோயில் நிர்மாணத்துக்குப் பிறகுதான் இந்த வெடிப்பு என் அவதானத்துக்கு வந்தது, நாகா. இதில் நேரடியாக மந்தாகினி எதுவும் செய்துவிட முடியாதுதான். செய்துவிடவும்

மாட்டாள். ஆனாலும் நாக இனத்தவளாய் அந்த இனத்தின் சில உள்மன விருப்புக்களை அவள் கொண்டிருத்தல் சாத்தியமென்றே நினைக்கிறேன்.'

'மந்தாகினியின் உள்மன விருப்பங்கள் என்ன.'

'மேலாண்மை. என்னிலும், அரசிலும்.'

'அதனால்தான் படுக்கையே வகிர்பட்டுப்போனதா.'

'ஒரு சூழ்வினை என்னைச் சூழ எழுந்திருக்கிற நிலையில் நான் மனைவியோடு புணர்ச்சி விழைந்து மகிழ்ந்திருந்துவிட முடியமா, சொல்லு. இந்த மாளிகையின் காவல் பகலின் மறைவோடு நேரடியாக என் கண்காணிப்பில் வந்துவிடுகிறது, நாகா.'

'ம்' என்று புரிதல் காட்டினான் நாகன்.

'அவளே இங்கு வரலாம் என்னிடமான ஏதாவது தேவைக்கும், என்னையே ஆகும் தேவைக்குமாக. ஆனாலும் இதுவரை அவள் முயலவில்லை. அவளின் குணம் தெரிந்திருந்ததுதான். ஒன்று. அவளைச் சமாதானப்படுத்துவதற்கான முனைப்பாக இருக்கவேண்டும். மற்றது, அதிருப்திப்பட்டிருக்கும் நாக இனத்தாரை திருப்திப்படுத்துவதாக இருக்கவேண்டும். அதனால்தான் ஒரு நாக, இயக்க கலப்பாக ராவண தெய்வ நிருமாணத்தைச் செய்விக்க நினைத்தேன், நாகா. சிவத்தில் நாக சின்னத்தின் காரணம் அதுதான்.'

நாகன் அதையும் ஓரளவு ஊகித்தே இருந்தான். அந்தப் பதில் இப்போது போதாமலிருந்தது. அதுமட்டுமேதான் காரணமாக இருக்கமுடியுமென்பதில் அவன் திருப்திப்பட்டுவிட முடியாது. பரந்த இவ்வுலகத்தில் அரசுகளின் உரிமை காரணமாகவே யுத்தங்களும், சூழ்ச்சிகளும், கொலைகளும் நடந்தேறியிருக்கின்றன. அவன் சென்ற ஊர்களிலெல்லாம் அவைபோல் எத்தனை கதைகள்! லங்காபுரத்தைப் பொறுத்தவரை போட்டி அரசுரிமையாளராக எவரும் இல்லாதிருக்கிற பட்சத்தில், வேறொன்றுதான் காரணமாக இருக்க முடியும்.

நாகன் அதை ராவணனிடத்தில் சொன்னான்.

'அதையும் நான் யோசித்தே இருக்கிறேன். அதுசரி, மது அருந்தினாயா..'

'சிறிது.'

'சரி வா, காரணத்தைக் காட்டுகிறேன்' என்று கையிலே மதுக்குடுவையை எடுத்துக்கொண்டு ராவணன் எழுந்தான். 'இயத்துகளை எடு' என்று சொல்லிவிட்டு நடந்தவனை நாகன் பின்தொடர்ந்தான்.

# பதினொன்று

அந்தக் காலையில் ராவணனது வருகை ஒரு புயல்போலும், அவனது புறப்பாடு அதன் விலகல்போலும் இருந்ததை நினைக்க, மந்தாகினியின் மனத்தில் சொல்லரிய ஆற்றாமையொன்று விளைந்து விட்டிருந்தது. அவளுக்கு முன்னால் அவன் தன் ஆவேசமடங்கியே பேசியிருந்தான். ஆனாலும் தானே முழுமுதலான அரச தலைவன் என்ற நிலைமையிலிருந்தே பேசியிருந்தான் என்ற அறிகையிலிருந்து அந்த ஆற்றாமை பிறந்திருந்தது. அவள் அவனுக்கு இரண்டாவது இடத்திலேகூட இல்லைப்போல அவன் நடந்திருந்தான் என்பது மீண்டும் நினைக்கையிலும் அவளுக்கு உறுதியாயிற்று. எல்லாம், எல்லாவிதமான அவளது நம்பிக்கைகளினதும், ஆசைகளினதும் சிறுசிறு துளிகளையும்கூட வாரியடித்துச் சென்றுகொண்டிருந்தன.

காற்று வெளியே இழைந்துகொண்டிருந்தது. இன்னும் மெல்லிய குளிர்விரவியிருந்தது அதில். ஆனாலும் தன் மேனியில் பட்டு பொசுங்கியே அப்பால் சென்றுகொண்டிருந்தது போலிருந்தது அவளுக்கு. காலதரூடு கசிந்த மாருதம் இரவில் எந்த இனிப்பையும் மேனியில் தடவவே செய்யாதிருந்ததைப்போல், காலையின் வெளியும். அவளது உடல் கனன்றுபோயிருந்ததை மட்டுமே தென்றல் விண்டுவீரைத்துப் போய்க்கொண்டிருந்தது.

உடல் காய்வது அதனுள் தீ கொழுந்துவிட்டு எரிவதன் அடையாளம்.

அவன் அவளைத் தேடிவந்து அணைந்து பல திங்கள்கள் ஆகியிருந்தன. தன் அழகைத் தேடாதிருந்ததே பேய் மனமாய்த் தெரிந்தது அவளுக்கு. வீடாணன் வந்து எதிர்நின்றபோது, அவனது பார்வைகூட அவள் அங்கங்களின் பொங்கெழிலில் ஒருகணம் பதிந்து சிதறியது. அவளது விளிப்பிலேயே மீண்டும் உருவானான். ஒழுங்குகளை மீறவிட்டிருந்தால் அவனே அவளை ஒரு சுக ஓடையில்

திளைக்க தூக்கிவீசிவிட்டுப் போயிருக்கக்கூடும். அவனது எழுச்சி அவ்வளவு வீறானதாய் இருந்ததை அவளே கண்டாள். ஆனால் ராவணன்.. தன் அழகையும், வீறையும், தவனத்தையும் கண்டுகொள்ள வேயில்லையே.

அவள் மனைவியான அந்தஸ்திலிருந்தும் இறங்குவதென்பது எவ்வளவு கீழ்மையானது! நாக இனத்தாளாய் அதை அவளால் தாங்கிக்கொள்ள முடியாது. கீழ்மைகளில் வாழ்தலை நாக இனம் மறுத்தது. நாகம் ஊர்ந்துபோவது. ஆனால் அதன் விடைத்தல்கள் எவரையும் கலங்கவைப்பன. நாகமாய் எழுந்துநின்று அவள் படம் விரித்து தன் நச்சுப் பை தெரியும்படி வல்லாண்மையும் காட்டினாள். ராவணன் கவனம் கொள்வானாயில்லை. என்ன செய்யப்போகிறாள்.

தான் அதுபற்றி நிறைவாக யோசித்தேயாகவேண்டுமென்று மந்தாகினிக்குத் தோன்றியது. இனியும் அவள் வீடாணனை, தளபதி சேனனை, முது அமைச்சன் உத்திக்கனை நம்பி இருந்துவிட முடியாது. ஒன்றில் தாயாய், தாரமாய் அந்த மாளிகையில் அடங்கிப் போகவேண்டும். இல்லையேல் தலைவியாய் சமதையில் வாழ வேண்டும்.

அவள் எட்ட இருந்த ஒரு பளிங்குக் கல் இருக்கையைநோக்கி நடந்தாள்.

அந்தத் திசையில் அரண்மனை வாயில் தெரிந்தது.

அவளது நெஞ்சின் வலிகிளர்த்தும் அந்த இடத்திலேயே அதன் நிவர்த்திகள் தேட அவள் திண்ணமாய் அதில் ஆசறுதியானாள்.

அரண்மனை மாயங்கள் நிறைந்துபோனதாய் எல்லாரும் பேசிக்கொண்டார்கள். வீடாணன், உத்திக்கன் என்பவர்களும் சொன்னார்கள். ஆனால் என்ன மாயம் என்பதுதான் அவர்களுக்கே விளங்காதிருக்கிறதாம். அதுவே அவர்கள் திறமையில் அவள் ஐயப்பாடுகொள்ளப் போதுமாயிருந்தது. அது இன்னொருவகையில் ராவணன் முழுஅதிகாரத்தையும் கொண்டிருப்பதன் அடையாள மாகவும் இருப்பதை அவளால் புரியமுடியும். ஒரு மவுனத்தின் எறிகையைச் செய்துவிட்டு, ஒரு மர்மத்தின் விரிவை அங்கே படரவிட எப்படி முடிந்தது ராவணனால். அதையும் ஏன் செய்தான். தன்னைக் கூறுபடுத்தி விலக்கும் எண்ணம் ஏன் எழுந்தது அவனில்.

அவள் எல்லாவற்றையும், எல்லாவற்றையுமேதான், யோசித்தாக வேண்டும். அவளது மீட்சிக்கான கபாடம் அந்தத் திசைவழியில்தான் இருக்க வாய்ப்பு.

ராவணன் ஆரம்ப காலங்களில் அந்தமாதிரி இருந்ததில்லை. அவர்களுக்கு திருமணமான புதிதில் அவளில் மையலாகி எந்நேரமும்

அவளுடைய வெறுமேனியில் விழுந்துகிடந்தவன்தான் அவன். அவளோடு ஆலோசிக்காமல் ஓர்அரச காரியத்தை அவன் செய்தறியாதவன். இத்தனைக்குள் அவளே பல விபரங்களை அவனுக்கு எடுத்துச்சொல்லி நடைமுறைப்படுத்த வைத்திருக்கிறாள்.

ராவணனின் தாய் ஒரு காடேறியாக அலைந்தவள். இனக் குழுமத்தின் தலைவியாய் அவள் செய்ததெல்லாம், தன்னைப் பிறர் அச்சுறுத்தலோடு அணுகாதவகையில் அந்தக் கோட்டையைப் பலப்படுத்தியது மட்டும்தானெனவே மந்தாகினி திருமணமாகி அங்கே வந்த புதிதில் நினைத்திருக்கிறாள். ராவணன் அரசதிகாரம் பெற்றதன் பின் அவள் மறுபடியும் வீறார்ந்த காடேறியாகவே அலைந்து மடிந்தவள்.

ராவணன் அவளிலிருந்து பெரு வித்தியாசம் படைத்திருக்கவில்லை. ஆனாலும் அவனும் அச்சத்தின்மூலமே ஆட்சியை நடத்திக் கொண்டிருந்தவன். அவனதே அச்சம்தரும் தோற்றம். அப்படியானவன் மூர்க்கமாயும் நடக்கும்போது குடிகளிடத்தில் பேரச்சம் பிறந்தது. ஆனாலும் தன் முன்னோர்போன்றில்லை அவன். அவள் அறிந்திருந்தாள்.

சித்தன் பிறக்கும்வரை அவ்வண்ணம் இருந்த நிலைமை அவனது மாமனான மாரீசனின் அணுக்கத்தோடு சிறிதுசிறிதாக மாற ஆரம்பித்துவிட்டது. அவள் அவர்கள் உறவுக்கிடையில் நுழைந்து கொள்ளாது பார்வையாளியாக இருந்துகொண்டமை எவ்வளவு தவறு என்பது இப்போது விளங்கிற்று.

அவனை மாற்றிய பொழுதுகளை இப்போது அவளால் பகுத்துணர முடியும்.

ஒருநாள் விசைத்தேர்எடுப்பதுபற்றி அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அவள் கேட்டும் கேளாதவளாக தன்பாட்டில் இருந்துவிட்டாள். சின்னாட்களில் திண்தேர்அமைந்து முடிந்தது. அதில் விசைபொருத்த மாரீசன் பல்லுபாயங்களும் சொன்னான். அவனுக்காகவே வளர்த்தெடுக்கப்பட்ட நான்கு வன்புரவிகள் தேரில் பூட்டுவதற்காய்க் கொண்டுவரப்பட்டன. அதன்பிறகு ராவணன் எங்கே போனான், எப்போது போனான், எப்போது திரும்பிவந்தான் என்பதெதுவும் அவளுக்குத் தெரியாது போய்விட்டது. கடக்க அரிதான வழிகளையெல்லாம் அவன் கடந்ததாய்ப் பேசிக் கொண்டார்கள். இறக்கை முளைத்து அத் திண்தேர்வானில் பறந்ததாய்க்கூடச் சொல்லிக்கொண்டார்கள்.

அந்தப் புள்ளியையே அவன் மாற்றத்தின் ஆரம்பமாகக் கொள்ளலாமா. அப்படித்தான் தெரிந்தது மந்தாகினிக்கு.

ராவணன் எங்கு சென்றாலும், என்ன செய்தாலும் மந்தாகினி யென்று அப்போதெல்லாம் இருள் விழும்பொழுதிலேயே ஓடிவந்து விடுவான். விடியல் விழும்வரை போக மேடையாகிவிடும் படுக்கை. திருமணமான புதிதில் அந்தளவு ஆகுதிபெற்றவனாய் ராவணன் இல்லை. அப்போது மெல்ல ஆகிக்கொண்டிருந்தான். அது காமத்தின் தேவைக்கானதாயே அப்போது அவளால் கருதப்பட்டிருந்தது. அந்தக் கருமலையிலிருந்து அருவிபோல் மதநீர்பெருகிக்கொண்டிருந்தது. அவளும் சளைக்காதவளாகவே அதில் மஞ்சனமாடினாள்.

ராவணன் நாளாக ஆக அளவு கடந்த உற்சாகத்திலேறியிருப்ப தாய்ப் பட்டது மந்தாகினிக்கு. அப்போதாவது அவள் அதன் காரணத்தை அக்கறையெடுத்து வினவியிருக்கவேண்டும். செய்யவில்லை. ஒரு செல்வக் குவையினைப் பெற்றதுபோல் அப்படியொரு திருப்தியின் வரிகள் அவன் மயிரடர்ந்த கருமுகமெங்கும். ராவணன் பிரகாசமாகிப்போனான்.

பின்னர்மலைக்கோயில் கட்டுமானம் தொடங்கினான். எப்போதும் அந்த நாகனோடேயே திரிந்தான். அவன் காரணமோ இல்லையோ, அந்தக் காலத்தில் நாகனது உடனிருக்கை அதிகமாகவும் இருந்து கொண்டிருந்தது. ராவணன் தன் மாளிகையிலிருந்து ஒதுங்கியது அந்தக் காலத்தில்தான் என்பது இப்போது யோசிக்க தெரிந்தது மந்தாகினிக்கு. சிற்பிகள், இசைவாணர்கள், வியாபாரிகளின் வருகைகள் அக் காலத்தில் அதிகரித்தன. தடித்த துணிகளைப் போர்த்தி தன் மேனியின் அழகு பார்த்தவன், மென்துகில்களைக் கொண்டுவந்து 'உனக்காகவே எடுப்பித்தேன்' என்று மடியில் போட்டுவிட்டுப் போனான். கூந்தலைவிடவும், மலரிதழைவிடவுமே அவை மென்மை யானவையாய் இருந்தன. மேனியில் போர்த்த சிறிது வேளையிலேயே உடலுள் காமக் கனலெழுப்ப அவற்றினால் முடிந்திருந்தது. வேறொருத்தியை அவன் நடாதது தெரிந்திருந்த வகையில், அவளும் என்னைத் தேடி வருவாய்தானே! என்பதுபோல் வாளா இருந்து விட்டாள். உண்மையில் அந்த அவளது முடிவு சரியானதுதான். காமம் கிளர்ந்தாலும் இயங்குதல் தெரியாதவன் ராவணன். அந்தச் சூட்சுமம் அவள் மட்டுமே அறிந்தது. போகத்தில் பெரும்பாகமாய் இயங்கியவள் அவள்தான். தானறியாவண்ணம் தனதுடலினுள் திகைந்தெழும் அலையைத் தன் துணையுடன் தணித்தலே புணர்ச்சியென்றிருந்த அதுவரையான எண்ணத்தின் தகர்ப்பைச் செய்தவள் அவள். இயங்குதலில் அவள் காட்டிய விதங்களில் ராவணன் பெருங் கூச்சலெடுத்திருக்கிறான் இரவுகள் நகைக்கும்வண்ணம்.

இன்று எதுவும் அப்படியில்லை.

அவள் சில காலங்களுக்கே காத்திருக்கும் வல்லமைபெற்றிருந்தாள். அவனை அந்த அரசாளும் மூரக்கத்திலிருந்து விடுவித்தால்தான்

உண்டு என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு, வீடாணனை ஒரு கருவியாக, அவன் தானுமே உள்ளில் வதைபட்டுக்கொண்டு திரிவதுபோன்ற தோற்றம் கண்டு, துணிந்து குறையிரப்புப் பண்ணினாள். அவன் ஏற்கனவே அவளது கருத்தைக் கொண்டிருந்தான். அதுபோன்ற கருத்தினையுடைய ஒரு நாக இன அரசதிகார வட்டமே இருப்பதாய் வீடாணன் சொன்னான். வீடாணனுக்கு உடன்பாடான சில அதிகாரிகள் அவளை அவ்வப்போது அணுகினர். அவர்கள், மலைக்கோயில் இயக்க இன மேலாதிக்க அம்சம் என்றது. இவள், இயக்கன் அரசனாயிருந்தால் அவனாதிக்க தெய்வம்தானே மலையேறும்! என்று தெரிவித்துவிட்டு பேசாதிருந்துவிட்டாள்.

மெல்லமெல்ல அரண்மனையில் சூழ்வினை ஆலோசனைகள் புரியப்படலாயின. ஆலோசனைகள் அவளோடு பரிமாறப்படலாயின.

பின்னால் அந்நிய மனிதர்கள் வந்து உலோகங்கள் உருக்கிவார்த்து பெரும்பணி செய்யத் துவங்கினர். ராவணன் அவளோடு மட்டுமில்லை, அண்ணாஞ்அண்ணாஞ்என்று பெரும் அடக்கத்தோடு திரியும் வீடாணனுடன்கூட அதுபற்றிப் பேசவில்லை. இனியாவது அந்தப் பூடகங்களுக்கு அவளுக்கு விடை தெரிந்தாகவேண்டும். படுக்கையும் பகிர்படாத நிலையில் ஆட்சி அதிகாரமும் அவ்வாறு வகிர்பட்டுப்போக அவளால் விட்டுவிட முடியாது.

இயக்க இனக் குழு, தலைவனை மட்டுமில்லை, தலைவியையும் வணங்குவது. அவளில்லாமல் ஆட்சி இயங்க முடியுமென்ற நிலையை ராவணன் உருவாக்குவதைப் பார்த்துக்கொண்டிருப்பது, தன்னதிகாரத்தை மட்டுமில்லை, தாயதிகாரத்தின் அம்சத்தையே மாற்ற அனுமதித்தாக ஆகிவிடும். ஆட்டங்காணத் தொடங்கியிருக்கும் அந்த நிலைமையை அவளால் மாற்றியமைக்க முடியுமா.

வினாக்கள்ஞ்வினாக்கள்!

அவற்றால் மந்தாகினி பாரமேறினாள் மனதில்.

அப்போது ராவணனும் நாகனும் குதிரைகளிலேறி அரண்மனையிலிருந்து வெளியேறிக்கொண்டிருப்பது தெரிந்தது. மலைக்கோயிலுக்காய் இருக்கலாம் என எண்ணிக்கொண்டாள்.

நாகனில் ஏனோ ஒருவகை வெறுப்பு பிறந்தது அவளில். நாக இனத்தானாய் இருந்தும் எப்படி ஒரு இயக்கனாய் நடந்துகொள்ள முடிகிறது அவனால்? சிந்தையில் சுழன்றெழுந்தது ஒரு விடையற்ற வினா.

எல்லி மேலெழ ஆரம்பித்திருந்தது. முகமறைந்தாற்போல் கதிர்கள் சுடவாரம்பித்தன. மந்தாகினி தன் சிந்தனையிலெழுந்த பல கேள்விகளுக்கும் விடைகிடைக்காமலே அவ்விடத்தைவிட்டு நகர்ந்தாள்.

# பன்னிரண்டு

இரவின் அமளிகள் மெல்லமாய்க் குறைய இருளும், அமானுஷ்யமும் பரந்து பெருகிக்கிடந்தது லங்காபுர நகர வீதிகளில். போதையர், பேதையர் தவிர வேறுபேர் தென்படுதல் இலதாகியிருந்தது. வழி தவறியோர், அருகதை தவறியோர், தம் நிலை இழந்தோர், தம் நலம் இழந்தோர் என்று வழமையான ஒரு தெருக்கூட்டம் என்றும் லங்காபுரத் தெருக்களின் ஓரத்தில் இரவைக் கடத்திக்கொண்டிருக்கும். அன்றும் அந்தக் கூட்டத்தின் அடைவை தெருவோரங்களில் காணக்கூடியதாய் இருந்தது.

ஒரு நகர் வளர்வதென்பது உன்னதங்களால் மட்டுமில்லை, அதன் இழிவுகளினாலுமே அறிதற் சாத்தியமானது.

வல்லிய உடம்பும், திமிர்த்த நடையுடையாரையும்போலவே, வற்றிய உடம்பும் நடை நலிந்தோரையும்கூட கொண்டதுதான் ஒரு பெருநகர். உள்ளவர் உடையதெனில், இல்லவரும் உடையதாயே அது இருத்தல் முடியும். வண்மையுள்ளதெனில், வறுமையையும் அந்நகர் உடைத்தது என்பதே பொருள்பட்டு நிற்கும்.

லங்காபுரம் மட்டுமில்லை, எந்த நகருமே இந்த இலக்கணங்கள் மீறி அமைந்திருந்து விடுவதில்லை.

இரவு இறுக விழுந்ததின் பின் இன்பத்துக்கான திரை விலகினாலும், நள்ளிரவுக்குமேல் மறுபடி திரைவிழுதல் அந்நகரின் இயல்பு. பரத்தமை ஆண்களின் பண்பற்ற பேச்சொலியும் பரத்தையரின் கிண்கிணிச் சிரிப்பொலியும், இசைத் தெருவின் இன்னிசை சதுர்க் கச்சேரிகளும் இரவின் முன்பொழுதிலேயே அடங்கத் தொடங்கிவிடும்.

நெடுங்காலமாகவே இந்தச் சீர்தான் நிலவிக்கொண்டிருந்தது அங்கே.

நல்லவர்போல் தீயவரும் அஞ்சுகிற இரவுதான் லங்காபுரத்தில் விழுவது. அந்த இரவை அஞ்சாத மனித ஜீவன் ராவணன் மட்டுமாகவே இருந்தான். சிலவேளை அவன் தம்பி கதக்கண்ணனும்.

மழை வரலாம்போல சொல்லிக்கொண்டிருந்தது ஒரு மெல்லிய குளிர்விரவிய காற்று. விண்ணில் உடுக்கள் சிலவாயிருந்து மினுக்கின. கோட்டை வாசலின் உள்காவல் கொட்டடியில் தீப்பந்தமொன்று எரிந்துகொண்டிருந்தது. அருகே நின்றபடியே தூங்கி வழிந்து கொண்டிருந்தான் ஒரு காவலாளி. தள்ளி சில காவலாளிகள் ஏதோ பேசிச் சிரித்துக்கொண்டிருந்தனர். அடங்கிய தொனியில்தான்.

அவ்வேளை மாளிகைப் பக்கமிருந்து மெல்லிய குதிரைக் குளம்படி நெருங்கிக் கொண்டிருந்தது கோட்டைக் கதவினைநோக்கி. நின்றிருந்த காவலாளி திடுக்கிட்டு விழித்து சத்த திசையில் திரும்பினான். அவனது கண்கள் ஒருமுறை கூர்த்தன. பின் அகல விரிந்தன. கோட்டைக் குறுவாயில் சட்டெனத் திறந்தது. வீடாணன் குதிரையில் அமர்ந்திருந்தபடியே முன்சரிந்து மெல்ல திறந்த வழியினூடு வெளியேறினான். குளம்படிகளின் மெல்லிய சத்தமும் சிறிதுநேரத்தில் தேய்ந்து மறைந்தது.

வெளியில் அவனை அஞ்சுவதற்கு ஆட்கள் இலரெனினும், அவன் அஞ்சுவதற்கு நிறைய வாய்ப்பிருந்தது. அவனை இனங்காணக்கூடிய எவரும் அவனை அஞ்சவைக்க முடியும். அவன் மேற்கொண்டிருப்பது ஓர் இரகசியச் சந்திப்பை நிகழ்த்த மட்டுமில்லை. ராவணனுக்கு எதிரான சந்திப்பாகவும் ஆகிவிட்டிருந்தது அது. ராவணனின் சார்பானவர்கள் அவனது ரகசியங்களை வாங்க அவ்வளவு சிரமப் பட்டு அலைந்துகொண்டிருக்க மாட்டார்கள்.

ராவணனின் மர்மங்கள் விளைந்த பெருங்காலத்தில் அவனோடு அதிகமும் பழகிய சிற்பி பிரான், கபாடபுரத்திலிருந்து அண்மை யிலேதான் திரும்பியிருந்தான்.

போதையும், போகமுமாய் ஒரு விச்ராந்தித்தனத்தில் ராவண னுடனான முரணின் பின் அவன் அலைந்து கொண்டிருப்பதைப் பலருமே அறிந்திருந்திருந்தார்கள். எங்கேயோ, எப்போதோ ஒரு சிலைசெய்துவிட்டு அதை தன் அகங்குளிரக் கண்டு களித்ததின் பின் தானே அடித்து நொருக்கிச் சிதைத்துக் கொண்டிருந்ததை நகரின் செல்வந்த நாக இனம் வேடிக்கையாய்ச் சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தது.

அன்று ஊர்புறத்தேயுள்ள குன்றத்தில் அவனைச் சந்திப்பதற்கு ஏற்பாடாகியிருந்தது வீடாணனுக்கு.

அந்தச் சந்திப்பை ஏற்படுத்த வீடாணனின் தலைமை ஏவலாள் மிகுந்த சிரமப்பட வேண்டியிருந்தான். நாகநாடு போனான். காடுகளில் அலைந்தான். வேடர்களைத் தொடர்பு கொண்டான். சிற்றின மலைக் குழுக்களைச் சென்று கண்டான். கடைசியில் ஒரு மலையடி வாரத்தில்தான் அவனைக் காண முடிந்திருந்தது ஏவலாளால்.

சந்திப்புக்குப்போலவே, சந்திப்பும் சிரமத்தைக் கொடுத்துவிட்டது. வானம் கறுத்த அந்த இரவில் தன் மனைவிக்கும் தெரியாமல் மாளிகையைவிட்டு வெளியேறி வந்திருக்கிறான் வீடாணன். கோட்டையைவிட்டு வெளியேறத் தேவையான எச்சரிக்கை, கோட்டைக்கு வெளியே வேண்டியதில்லைத்தான். ஆனாலும் ஊனமுற்றோராய், பிச்சைக்காரராய், வழி தொலைந்தவராய் நிறையப்பேர் அந்த நகரில் வேவுகள் செய்துகொணடிருப்பது வீடாணனுக்குத் தெரியும். அவர்கள் உறங்குவதுபோல் தோன்றினாலும் உறக்கமிழந்தவராயே இருப்பது அவன் அறிந்ததே. கண்கள் மூடியிருந்தாலும், கண்களை அப்பால் வைத்துவிட்டுப்போல் கடமையைச் செய்வதே நடந்துகொண்டிருக்கக்கூடும்.

வீடாணன் மிகுந்த எச்சரிக்கையுடன் தன் உருவத்தைக் குறுக்கியபடி குதிரையிலமர்ந்திருந்தான். ராவணனுக்கு சமமான அவனது ஆகிருதி எவருக்குமே இலகுவில் அடையாளமாகக்கூடியது.

நிலைமையைத் தெரிந்ததுபோல்தான் குதிரையும் பெருஞ்சத்தம் கிளர்த்தாமல் பையப் போய்க்கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் ஊர்ப்புறத்தை வந்தடைந்தான் வீடாணன்.

மேலும் சிறிதுநேரப் பயணத்தில் குன்றம் தெரிந்தது.

இன்னும் சிலபொழுதாக அதில் நின்றிருந்த ஒரு உருவத்தைக் கண்டான் வீடாணன். அவனுக்குச் சந்தேகமில்லை. அது பிரான்தான். வீடாணன் குதிரையைவிட்டு இறங்கி, பிரானை நெருங்கினான்.

தூரத்தில் வரும்போதே குதிரையைக் கண்டுகொண்டான் பிரான். குதிரை குன்றினடியில் நின்றபோதும் அவன் தன்னிடத்தைவிட்டு நகரவில்லை. எண்ணிச் செய்யாமல், இயல்பில் ஒரு உறைவாய் நடந்தது அது. வீடாணன் குதிரையைவிட்டு இறங்கி குன்றில் ஏறத் துவங்கியபோதும்கூட பிரான் அசையவில்லை. அது வீடாணன் என்று நிச்சயமாகத் தெரியும்வரை, அவனால் அசைந்துவிட முடியாது. ராவணனது ஆகிருதியளவே வீடாணனதும். எதிரில் வந்து பேசுமளவும் அவன் மவுனியாகிவிடுதல்தான் அந்த இக்கட்டான நிலைமையில் தக்கதாக இருக்கமுடியும்.

குன்றில் வந்து நின்ற அத்தனை நேரமளவில், குடிலைவிட்டுப் புறப்படுகையில் தோன்றியதுபோல் வராதுவிட்டிருக்கலாமோவென்று பலமுறை அவன் நினைத்துவிட்டான். அந்தக் களவு அவனை ஏதோ செய்தது. ராவணன் அவனுக்கு விரும்பாதவன் ஆகிவிட்டிருந் தான்தான். ஆனாலும் எதிரியாக அல்ல. அவன் தன் பிணக்கை தானேதான் தீர்த்துக்கொள்ள எண்ணியிருந்தான். அவனே அரண்மனைக்கு நேரடியாகச் சென்றுவிடமுடியும். ராவணனையும் சந்திக்கவேண்டுமென்றால் சந்தித்திருக்க முடியும். அவனுக்குத்தான் பிணக்கு. ராவணனுக்கு இல்லையே!

ஆனாலும் ஏதோவொரு சுகம் ராவணன் அறியாது செய்யப்படும் அந்தச் சந்திப்பில் இருப்பதாய்ப் பட கிளம்பிவிட்டான். குன்றை அடைகிறவரை வீடாணச் சந்திப்பு எது குறித்ததாய் இருக்கக்கூடும் என ஆயிரம் தடவைகள் அவன் மனத்தில் வினாக்கள் எழுந்து விட்டன. சரியான விடையினை அடைந்திருக்காவிட்டாலும் அதில் ஒரு சூது இருந்ததனை அவனது மனம் உள்ளுணர்ந்துகொண்டு விட்டது.

குன்றம் வந்து காத்திருந்தபோதும் தான் அவசரப்பட்டு விட்டோமோவென்று அவன் எண்ணவே செய்திருந்தான். ஆனாலும் பின்னர் செய்ய எதுவுமிருக்கவில்லை.

எதிரே வந்த வீடாணன், 'பிரான்!' என மெல்ல அழைத்தான்.

நெஞ்சுக்குள் தண்ணீர் அப்போதுதான் குபு...குபு..என இறங்கியது அவனுக்கு.

'வீடாணரே, நான்தான்' என்றான் பிரான்.

# பதின்மூன்று

அக்குன்றின் சிறிது தொலைவுக்கு அப்பாலுள்ள இயக்கக் குடியிருப்புக்கள் இருளில் அழுந்திக் கிடந்திருந்தன. காற்றினசைப்பில் பூமியில் இருள் அசைந்துகொண்டிருப்பதுபோல் தோற்றம் விளைந்தது. வானத்தில் புள்ளிகளாய்த் தெரிந்தும் தெரியாமலுமான விண்மீன்களின் மினுக்கத்தைப்போலவே, இயக்கக் குடியிருப்புப் பகுதியிலிருந்து கேட்கவும் கேட்க முடியாதனவுமாய்ச் சில சத்தங்கள். இரவு எல்லோரையுமா உறங்கவைத்துவிடுகிறது! எந்த இயக்கன் எந்த இயக்கியையோ, எந்த இயக்கி எந்த இயக்கனையோ இன்ப இம்சைப் படுத்திக்கொண்டிருக்கவும் கூடும்தான். இரவின் அந்தவகை இம்சைகளது எகிறல் கணங்களின் முனகல்களை இரவுகள் அமுக்கத் தெரிந்திருந்தன. அதில் பிதுங்கி வெளிவந்துவிடுபவையும் உண்டு.

தலைநகரின் மிகத் தொலைவான பகுதியில்லை அது. ஆனாலும் இரவு தொலைதூரக் குடியிருப்பினதுபோலவே சலனமறச் செய்திருந்தது அதை.

அந்த இடத்தைத் தேர்ந்தமைக்காக வீடாணனை மனத்துள் பாராட்டியபடியேதான் தன் காத்திருத்தலைச் செய்து கொண்டிருந்தான் பிரான். நேரில் வீடாணன் வர அதை வாய்மொழியவும் செய்தான். 'வீடாணரே, களவான இச் சந்திப்புக்கு நீர் தேர்ந்த இடம் மிகப்பொருத்தமானது. இந்தத் தேர்விலேயே துணிவுபெற்று இங்கே காத்திருந்தேன்.'

'மெய்தான். ஆனாலும் அரசருக்குத் தெரியாத இந்தச் சந்திப்புக்காக நான் கோட்டை வாயிலை அடையும்வரை பட்ட பதற்றம் இருக்கிறதே, வார்த்தைகளில்லை அதை விளக்க. இங்கிருந்து மறுபடி மாளிகை சேரும்வரைகூட நான் அஞ்சியே ஆகவேண்டும். போகட்டும். காரியத்தின் அவசரமும் முக்கியமும் இவ்வாறு ஆக்கிவிட்டிருக்கிறது எம்மை.'

‘இதில் நானும் அஞ்சநேர்ந்தது கொடுமை, இல்லையா வீடாணரே.’

‘எனக்கான நன்மை கருதியில்லை, அரசியின் விருப்பம் கருதியே நான் இவ்வாறு செய்ய நேர்ந்தது, பிரான். இது ஒருவகையில் என் அண்ணனாகிய அரசனின் நன்மையும் குறித்ததே. உன் செயலில் நீ எதுவித மனச் சஞ்சலமும் இதுகுறித்து அடையவேண்டியதில்லை. அப்படி அமர்வோமா சிறிதுநேரம்’ என்று ஒரு பாறையைச் சுட்டிய வீடாணன் அதை நோக்கி நடந்தான்.

பிரான் மெல்லப் பின்தொடர்ந்து போய் வீடாணன் பக்கத்தில் அமர்ந்தான். வெகுநேரமும் ஏதேதோ வி'யங்கள் குறித்தே வீடாணன் பேசிக்கொண்டிருந்தான். அனைத்தும் நடைமுறைத் தகவல்கள் குறித்தவையாயிருந்ததை பிரான் கவனிக்கத் தவறவில்லை. அவன் பேச வந்த முக்கியமான பொருள் என்ன என்பதை பிரானால் அனுமானிக்கக்கூட முடியவில்லை. ‘நீர் பேசவந்த காரியத்தை விரைவில் முடிப்பது நல்லது’ என்று சற்றே தன் அதிருப்தியைப் புலப்படுத்தினான் அவன்.

‘சொல்கிறேன்’ என்ற வீடாணன் சிறிது தன் சிரத்தையான வியத்தை ஒழுங்காக்கிக்கொண்டு, ‘உன்னைத்தவிர இந்த அம்சத்தில் உதவிசெய்யக்கூடியவர் வேறுபேர் இல்லையென்று அரசி நினைக்கிறார்’ எனத் தொடங்கினான்.

‘அரசி எங்கே இதில் வந்தார்.’

‘அவருக்காகவே இங்கே நான் உன்னைச் சந்திக்க வந்திருப்பது.’

‘அவருக்கு என்ன உதவி தேவை. அதுவும் .... அரசர் அறியாமல்.’

‘இந்த விவகாரம் மிக நுட்பமானது, பிரான். நான் முன்பே சொன்னதுபோல், அரசரின் நன்மை குறித்ததாயினும் அரசர் அறியாமலேதான் இதையும் செய்யவேண்டியிருக்கிறது.’

‘சொல்லும்.’

‘வாழ்க்கை அழகாக இருந்தபோது புறத்தில் நடப்பது கவனமாகவில்லை, பிரான். அகத்தில் எழுந்த ஒவ்வொரு அசைவுமே புறம் சார்ந்தது என்று தெரிந்திருந்தபோதும்தான். இப்போது ஒரு அதிர்வோடு அது தெரியவந்திருக்கிறது.’

‘எது.’

‘புறம் குழம்பத் தொடங்கிருப்பது.’

‘வாழ்க்கையின் அழகு குழம்ப அது தெரியவந்திருக்கிறது.’

'சரியாக.'

'யாரின் வாழ்க்கை.'

'நம் எல்லோரதும்தான்.'

'எனதுமா' என்று கேட்டு கடகடவென சந்திப்பின் ரகசியம் மறந்து சிரித்தான் பிரான்.

கலைஞனாய் அவனது வாழ்க்கை வித்தியாசமானது. மட்டுமில்லை. விசித்திரமானதும். அவன் நினைத்தபடி நடப்பதற்கு கலை தவிர்ந்த வேறு கரிசனைகளற்றவன். கொஞ்சக் காலமாய், ராவணனோடு மனமாறுபாடு கொண்டிருந்தபோது, மலைப்பகுதியெல்லாம் திரிந்து தனக்கே தன் சிற்பத் திறமையை நிரூபிப்பதுபோல் சிலைகளாய்ப் பொழிந்து தள்ளிக்கொண்டிருந்தான். அப்போது உருப்பெற்ற வடிவம்தான் பூதாகினி சிலையானது. பெருமுலைகளிலிருந்து பால் ஒழுக, பெருந்தோள்களிலும் பெருவயிற்றினிலும் குழந்தைகள் ஏறி அமர்ந்திருக்கும்படியான காமமும் தாய்மையும் சேர்ந்த வடிவம். வகைவகையாய்ச் செய்தான். அவற்றின் அம்சங்களில் கழிபேருவகை கொண்டு செய்தவற்றை ஒரு அசுரத்தனத்தில் தானே நொருக்கிச் சிதைத்தான். பிறகு ஊர் ஊராய்த் திரிந்தான். யார் சிரிக்கவில்லை, அவனது கிறுக்குத்தனம் கேள்வியில்பட்டு. ஆனால் அது அவனுக்குப் பொருளாயிருக்கவில்லை. பின்னர் கபாடபுரம் சென்றான். பாடும் பரத்தையரிடம், ஆடும் பரத்தையரிடம் என்று போதையேறிப் பிரமித்துக்கிடந்தான். இப்போது மீண்டும் லங்காபுரம் வந்திருக்கிறான். நாளை எங்கு போவான் என யாரால் அறுதியிட்டுக் கூறமுடியும். உளியும் சுத்தியும் தவிர வேறெந்தச் சுமையுமில்லாதவன் வாழ்வும் எதனாலெனி;னும் பாதிக்கப்படுவதுண்டோ.

'உஸ்ஸ்..'என்ற வீடாணனனின் எச்சரிக்கையையும் பொருட் படுத்தாமல் சிரித்து நிறுத்திய பிரான், 'என்னைத் தவிர என்று சொல்ல வேண்டும், வீடாணரே' என்றான்.

'அதைவிடு. சிவகோயில் கட்டுமானத்தை அண்ணன் ஆரம்பிப் பதற்கு முன் அவரோடு அதிகமும் பழகியவன் நீ.'

'என்னைவிட நாகனுக்குத்தான் பழக்கம் அதிகமிருந்தது.'

'அவனெங்கே லங்காபுரத்தில் தங்குகிறான். மூன்று திங்கள் அல்லது நான்கு திங்கள் தங்குவான். பின் கம்பையும் நீட்டிக்கொண்டு ஊர் ஊராய்க் கிளம்பிவிடுவான். திரும்பிவர ஆண்டொன்று, ஆண்டிரண்டு என்று ஆகும்.'

'இருக்கட்டும். ஆனால் தன் அந்தரங்கத்தை ராவணர் அவனோடுதான் பேசினார்.'

'ஆனால் கட்டுமான வேலைகளில், சுருங்கை வேலைகளில் நீ அறிந்ததும் அதிகமாக இருக்குமல்லவா.'

வீடாணன் தன்னோடு பேசவந்த காரியத்தை பிரான் அறிந்துவிட்டான். அது அவனை ஒரு ஸ்தம்பிதத்தில் சிறிதுநேரம் ஆழ்த்தியது.

அவன் சிற்பியே தவிர, கட்டுமானக்காரன் அல்ல. ஆனாலும் அவனும் பல இரகசிய கட்டுமானங்களில் பங்குகொண்டவன்தான். ஆலோசகனாகவே. அவன் தெரிந்துகொண்டிருந்த வி'யங்கள் நம்பிக்கைச் சொத்து. அதை வீடாணனனுக்கு மட்டுமில்லை, தலைவி மந்தாகினிக்கு மட்டுமில்லை, எவருக்கும்தான் கொடுக்க அவன் நெஞ்சு சம்மதிக்காது. ராவணன் கேட்டாலே மறுபடி சொல்லமுடியாத அளவுக்கு அந்த இரகசியங்கள் அவன் நெஞ்சுள்போட்டு புதைக்கப்பட்டுவிட்டன.

இன்னுமொருவன் இவை தெரிந்தவனாய் இருக்கிறான். அவனை இவர்கள் இரகசியத்தில் பேச வாவென அணுகக்கூட முடியாது. அவன்தான் மாரீசன். ராவண சகோதரர்களின் மாமன்.

அவன் காற்றிலேறிப் பயணிப்பவன். மான்போல் துள்ளிப் பாய்பவன். வனமே கதியாய்க் கிடப்பவன். வன மிருகங்களின் மொழி அறிந்தவன். இப்படி பல்வேறு திறமைகள் அவனுக்கு. இவை காரணமாயே அவனை மாயங்கள் வல்லவனாய் ஊர் அதீத மரியாதை காட்டியது. ராவண குடும்பத்தில் ஒட்டியுலர்ந்து, வதங்கி மெலிந்து ஒரு ஜீவன் இருக்கிறதெனில் அது மாரீசனனாய்த்தான் இருக்கமுடியும். ஆனாலும் அந்த மெலிதான உடலினுள் அடங்கிக் கிடந்த ஆற்றல் அளப்பரியது. மட்டுமில்லை. அவனது கூர்மையான அறிவினை நிகரப் பெற்றவர்கூட லங்காபுரத்தினில் யாரும் இல்லை. மாமனாய் அன்றி அறிவு வல்லானாயே ராவணனாதியோரால் அவன் மதிக்கப் பெறுபவன். அவனிடமே போய்க் கேட்கவேண்டியதுதானே, ராவணனுக்கு நன்மையானதாலேயே அவனது ரகசியங்களை அறிய விரும்புகிறோம், தயைகூர்ந்து அவற்றினைச் சொல்லியருள்க என்று. அக்கணமே இரு கூறாக்கிவிடுவான் கேட்போரை.

பிரான் இளைத்தவன்தானே! வெறுமனே ஒரு சிற்பிதானே! அதுதான் அழைத்து, கேட்க நினைக்கிறார்கள். கேட்டென்ன, கேளாது விட்டென்ன. அவன் இரகசியங்கள் கிடந்த தன் மனதுக் கபாடங்கள் திறக்கத் தெரியாதவன். அவற்றின் திறவுகோல் அவன்வசம் இல்லை.

நீண்டநேரமாய் பிரான் ஒரு மவுன வலயத்துள் அடங்கிக் கிடப்பது கண்டு, 'என்ன பிரான், என்ன அப்படி ஆழ்ந்த யோசனை' என்றான் வீடாணன்.

நினைவுலகிலிருந்து சுதாரித்து மீண்ட பிரான் லேசாகச் சிரித்தான். பின், 'என்னை எதற்காக இந்த நள்ளிரவு தாண்டிய வேளையில் இங்கே வரச்சொன்னீர், நடுநிசியும் தாண்டியாகிவிட்டது. என்னை புலரிமுன் சென்று படுப்பதற்காவது விட்டுவிடும்' என்றான் சற்றே எரிச்சலடைந்தவனாய்.

வீடாணன் மேலும் நசிந்தான். பிறகு மெல்லிய குரலில், 'பிரான், பெரிதாக ஒன்றுமில்லை. அரண்மனை உனக்கும் பகையிடமாகி யிருப்பது. மகிழ்ச்சியோடு நீ இதைச் செய்யலாம். மாளிகையின் மர்மங்களை அறிய விரும்புகிறோம். சுருங்கை வழிகளைப்பற்றித் தெரிவிக்கவேண்டும். நம் முன்னோர்களின் பெருஞ் செல்வம் பாதுகாக்கப்படும் பாதாள அறைகளைப் பற்றிக் கூறவேண்டும்' என்றான்.

'வீடாணரே, இந்த விடயம் என்னைவிட உமக்கு நன்கு தெரியுமல்லவா. இன்று நீர் எது காரணத்தாலோ உமது சகோதரருடன் மாறுபாடு கொண்டுவிட்டீர். இல்லாத கற்பனைகளோடு செல்வங்கள் குவித்து வைத்துள்ள பாதாள அறைகள்பற்றி விபரம் கேட்கிறீர். நீரே அறியாததும், அரசியாரே அறியாததுமான செல்வக் குவைகளைப்பற்றி நான் ஒரு சாதாரண சிற்பி எப்படி அறிந்திருக்கமுடியுமென நம்புகிறீர், சொல்லும்.;'

'பிரான், நீ அவ்வாறான செல்வக் குவைகள் இல்லை என்கிறாயா, அல்லது சொல்லமாட்டேன் என்கிறாயா' என குழம்பினான் வீடாணன். அது ஒரு அச்சுறுக்கையின் அதைப்போடிருந்ததை பிரான் கண்டான்.

பிரானுக்குப் பயமில்லை. ஆனாலும் ஒரு சச்சரவை அரச குலத்தாரோடு கொண்டுவிடுவதிலுள்ள பிரதிகூலங்களை அவன் அவர்களோடு பழகியே அறிந்தவன். அதனால் அவன் சற்று இறங்கிய தொனியில் சொல்லலுற்றான்: 'வீடாணரே, பெருஞ் செல்வம்... பெருஞ்செல்வம்... என்று சொல்கிறீரே, அப்படி ஒன்று உண்மையிலேயே இருக்குமானாலும் நான் அதை அறிதல் எங்ஙனம் கூடும். இன்னும் அப்படி ஒரு பெருஞ்செல்வம் ராவணரிடம் உண்டா என்பதே இப்போது எனக்குச் சந்தேகமாயிருக்கிறது.'

'உண்டு பிரானே, உண்டு. அள்ள அள்ள வற்றாத செல்வம். பாதாள அறைகள் நிறைந்து வழியும் செல்வம். இல்லையெனில் பாதாள அறைகளின் தேவைதான் எதுவென நீ நினைக்கிறாய். அவைபற்றி நீ கேள்விப்பட்டதே இல்லையா.'

வீடாணனின் குரலில் தெரிந்த பேராசை பிரானை உலுக்கியது.

'பாதாள அறைகள்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன், வீடாணரே. அரண்மனையிலிருந்து அவை கிளைகிளையாய் நிலமிறங்கிக் கிடக்கின்றன. ஆனால் அவை பெருஞ்செல்வம் கொட்டி வைப்பதற்கானவையென்பது இப்போதுதான் நீர் சொல்லி நான் அறிகிறேன். எனினும் அதன் வழிகளோ, வழிகளை அடைத்துள்ள கதவுகளின் சூட்சும திறவை முறைகளோ நான் அறிந்தவனல்ல. அவை மாரீச நுட்பத்தில் அமைந்தவை.' ஒரு பெருமூச்சோடு சொல்லி முடித்தான் பிரான்.

இருவரும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். இரங்கியும், லேசான அச்சுதலாயுமென்று பலவழிகளிலும் பிரானைக் கேட்டான் வீடாணன். 'ஒரு நாகனாய் இந்த ரகசியங்களை வெளியிட நீ கடமைப்பட்டவன், பிரான்.'

'அதை ஒரு இயக்கராய் இருக்கும் நீர் சுட்டிக்காட்டுவது எனக்குப் புதுமையாயிருக்கிறது, வீடாணரே.'

பிரானின் மனத்திலுள்ள இரகசியக் கதவம் திறக்கவே இல்லை.

பாதாள அறைகளின் இருப்பு உறுதியானதும், அவை அரண்மனையிலிருந்து வழிபடைத்தவையென்பதும் அறிந்த திருப்தியோடு வீடாணன் சொல்லிக்கொண்டு சென்று நெடுநேரமாகியும் அந்தக் குன்றிலேயே அமர்ந்திருந்தான் பிரான்.

செல்வம் இருக்கிறதோ இல்லையோ, அது குறித்த ஒரு பிளவை சகோதரர்களுக்கிடையே விழுந்துவிட்டதென்பது அவனுக்குத் திண்ணமானது. அது லங்காபுரத்துக்கு நல்லதில்லையென்பதை உள்ளிலிருந்து எதுவோ சொல்லிக்கொண்டிருந்தது.

கிழக்கில் மெல்லிய வெளிச்சப் பரவல் கண்டு திடுக்கிட்டு எழுந்து விரைந்து தனது தங்குமிடம்நோக்கி நடந்தான் பிரான்.

# பதினான்கு

**கொ**ஞ்சம் போதை போலவும், கொஞ்சம் இருளின் மம்மர் போலவும் உணர்கையாகியது நாகனுக்கு. ஆனாலும் தும்..தும்மென அடி பதித்து நடக்கும் ராவணனை விடாது பின்தொடர்ந்து கொண்டிருந்தான். திடீரென ஒரு இடத்தில் ராவணன் நின்றான். அவன் அசைந்தது தெரிந்தது. பின் கறமுறவென்ற ஓசையோடு கல் பெயர்ந்தது கேட்டது.

நாகனுக்கு இப்போது ராவணன் தன்னை அழைத்துச் செல்லப் போகிற இடம் எதுவென்று அனுமானத்திலானது. சுருங்கை வழி! நிலக்கீழறைகள்!

வெளியினூடே தெரிந்தது இன்னும் இறுகிய இருள்.

குனிந்து ஒருமுறை இருளைக் கண்களால் துழாவிய ராவணன், 'நாகா, இயத்தை நீட்டு' என்றான். இயத்துள் வார்த்த மதுவை நாகன் அருந்து முன்னமே குடுவையோடு தன் வாயில் மீதி மதுவைக் கவிழ்த்து முடித்தான். 'இந்த மது தரப்போகிற அவதானம் முக்கியம், நாகா. நாம் இருளில் நுழையப்போகிறோம். அந்தத் தீப்பந்தத்தை எடு'.

நாகன் தீப்பந்தத்தை எடுத்து நீட்ட, மதுக் குடுவையைக் கீழே போட்டுவிட்டு தன் வலிய கரத்தால் அதை வாங்கிக்கொண்ட ராவணன், 'உள்ளே நுழை' என்றான். நாகன் நுழைய தானும் உள்ளே சென்றுகொண்டு மறுபடி எதையோ இயக்கி கதவை மூடவைத்தான். இப்போது இருள் பலமிழந்து வந்தது. இருளை ஊடறுத்துப் பார்க்கக்கூடியதாக இருந்தது. சுவர்ப் பாறையும் தெரிந்தது.

ராவணன் நாகனை விலக்கிக்கொண்டு முன்னே நடந்தான். முன்னேறும் ஒளியினை மய்யமாய்க்கொண்டு பின்தொடர ஆரம்பித்தான் நாகன்.

இருவரும் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தனர். ஒருபோது கடகடவென்ற பேரோசை கேட்டது. 'வெளியே நல்ல மழையா யிருக்கும்' என்றான் நாகன்.

'எப்படிச் சொல்கிறாய்.'

'முகில்கள் மோதுமொலி கேட்கிறதே.' பதிலிறுத்தான் நாகன்.

அப்போது அடக்கமாய்ச் சிரித்தான் ராவணன். பின், 'இரண்டு ஆண்டுகள் கழிந்து வந்திருக்கிற உன்னை இந்த இருட்குகைக்குள் அழைத்துச் செல்வதைப்பற்றி நீ என்ன எண்ணுவாய் என்று நினைக்க எனக்குச் சிரிப்பாக வந்தது' என்று சொல்லி மீண்டும் மெதுவாய்ச் சிரித்தான் அவன்.

'நான் என்ன நினைப்பேனென்று நீர் நினைத்தீர்.'

'எங்கே கொண்டுபோய் என்னைக் கொன்றுபோடப் போகிறான் இந்த ராவணன் என்று நினைத்தாய், இல்லையா' என்றான் ராவணன்.

'என்னை நீர் கொன்றுபோடக் காரணம் இல்லை. அப்படியே கொன்றுபோடுவதானாலும் எனக்கு மறுப்பில்லை. மரணத்தை நாகன் உறவாய்க் கொண்டிருப்பவன், ராவணரே. அதைப்பற்றி நாகனுக்கு நிறைந்த அபிமானம்தான் உண்டு. அதை ஏன்தான் ஒருவர் அஞ்சவேண்டும். பிறக்கும்போதே கூடப் பிறப்பது அது. பிறப்பு மரணத்தைப் பிறப்பிக்கிறது என்றாலும் சரிதான். இது புரியாதவனா நாகன். மேலும் நீரே செய்வதெனில் கொலைபடுவதும் எனக்கு இன்பமே. என்னை நீர் புரியவே இல்லை, ராவணரே' என்று கூறி அப்போது நகுந்தான் நாகன்.

'மெய்தான். கூடவே பிறக்கும் மரணத்தை யார்தான், ஏன்தான் அஞ்சவேண்டும். அப்படியானால் நான் எதற்காக, எங்கே கூட்டிச்செல்கிறேன் என்பது தெரியாமலே என் பின்னால் வந்து கொண்டிருக்கிறாய் என்று சொல்.'

'எப்போது அவ்வாறு தெரிந்துகொண்டு கூடவந்திருக்கிறேன். ஆனாலும் இப்போது அனுமானம் உண்டு.'

ராவணன் மேலே பேசவில்லை. அவனது நடையின் வேகம் மெல்லமெல்ல அதிகரித்துவந்தது. அவன் தீவிர சிந்தனையில் ஆழ்ந்து விட்டதன் அறிகுறி அது என்பது உணர்ந்த நாகன் மேற்கொண்டு வாயடங்கி மவுனியாய்ப் பின்தொடர்ந்து கொண்டிருந்தான்.

நீரொழுகும் ஓசை கேட்டது. இருந்துவிட்டு பல்லிகள் எடுத்த கெக்களிப்புகள். சில எலிகள் ஓடி பாதையில் தறிகெட்டன.

ராவணன் நின்றான். மறுபடி கல் நகரும் ஓசை.

கண்ட காட்சியில் நாகன் வாய் பிளந்து சிலையானான்.

திங்கள் அடைபட்டிருந்ததோ. கற் கதவம் திறக்க ஒளிக் கற்றைகள் விசிறியடித்து வெளிக் கிளர்ந்தன. திங்களின் கதிர் மட்டுமா. வெள்ளிகளின் கதிர்கற்றைகளும். இன்னும் நீல, சிவப்பு, பச்சை நிற ஒளிக்கற்றைகளும் போட்டிபோட்டுக்கொண்டு வெளியேறிக் கொண்டிருந்தன. ராவணன் கையிலிருந்த தீப்பந்த ஒளி மங்கி மறைந்து போனது. பகலின் வெளியில் மின்மினி என்ன அருகதை பெறும்.

தீப்பந்தத்தை ராவணன் அங்கேயிருந்த ஒரு கொழுக்கியில் மாட்டிவிட்டு உள்ளே நுழைந்தான். அப்பெரிய அறை கும்பம் கும்பமாய் பொன்னும், இன்னும் அதைவிட விலையுயர்ந்த மணிகளுமாய் நிறைந்து கிடந்தது. நித்திலம் ஒரு பக்கம். மாணிக்கம் ஒரு பக்கம். கோமேதகம் ஒரு புறம். மறுபுறத்தில் முத்துக்கள். இன்னொரு புறத்தில் வைரமலை. பக்கத்தே புட்பராக மலை.

லங்காபுரம் ஏன் செல்வம் செழித்த நாடு என திக்குகள்தோறும் பேசப்படுகின்றது என்ற இரகசியம் அப்போது வெளிச்சமானான் நாகன்.

கண்டிருக்காவிட்டால் அவ்வளவு பெருஞ்செல்வத்தின் குவையை அவன் நம்பியிருக்கவேமாட்டான். அப்போது கண்கள் கூசக் கண்டு மெய்ம்மறந்து போயிருந்தான்.

ராவணன் குதித்தோடிப் போய் ஒரு மணிக்குன்றில் ஏறினான். மணிபொதிந்த காலாபரணம் அணிந்த ஆயிரம் குமரிகள் ஒருசேர நடந்தாற்போன்ற ஓசையெழுந்து அடங்கியது. இன்னொரு குன்றத்தில் ஓடி ஏறினான். ஆடற் கணிகையர் ஆயிரவர் கையின் வளை யினொலிபோல் பெருக்கு எழுந்துறங்கியது.

மலைகள் உருகி ஆறானதை ஆர் கண்டிருப்பர். அப்போது, அங்கே நாகன் கண்டான்

'என்ன நாகா, சிலையாகிப் போனாயா' என்று கேட்டுச் சிரித்த ராவணன், 'வா, இப்படி இந்தக் குவையிலே அமர்' என்றான்.

நாகன் மெல்ல நடந்துபோய் ஒரு குவையினோரம் குந்தினான்.

'பார், நாகா, ஒளியினழகை. பார், பரந்து கிடக்கிற புவியின் மொத்த செல்வத்தையும். இதுபோல் கண்டவர், கேட்டவர் யாருண்டு, சொல்.'

இன்னும்தான் மவுனம் கலையாதிருந்தான் நாகன்.

'பத்துத் தலைமுறைச் செல்வம் நாகா. என் பாட்டி, என் முப்பாட்டி, அவளின் தாய், அதன்முன் அவளின் பாட்டியென்றும்,

பிறகு என் தாய் என்றும் பத்துத் தலைமுறை காத்த செல்வம் இது. என் தாய், ஆட்சிவன்மை அற்றவள்தான். தாபம் அறத் தெரியாது அமர் செறிந்து அலைந்தவள்தான். ஆனாலும் தன் முன்னோரின் செல்வக் குவைகளைக் காத்திருக்கத் தெரிந்திருந்துவிட்டாள். இப்பெரும் செல்வ இருப்பை நான், மாரீசன், கதக்கண்ணன் தவிர அறிந்தவர் இன்றுவரை வேறுபேரில்லை. இன்றோடு உன்னையும் சேர்த்து நான்காகியது. வீடாணன் அறியாதது, மந்தாகினி அறியாதது-நீ அறிந்திருக்கிறாய், நாகா. காரணத்தோடுதான் காட்டியிருக்கிறேன்.

ராவணன் நிறுத்தினான்.

நாகன் நிமிர்ந்து நோக்கினான்.

ராவணன் தன் போதை யாவும் அழிந்திருந்தான். அவனது இருண்ட முகம் பிரகாசம் பெற்றிருந்தது. கருமை மறைந்து பொன் நிறம் அடைந்திருந்தது. ஒரு வாழ்நாட் குறியின் அடைதலின் வெற்றியா அது. குவை குவையான பெருஞ்செல்வத்தின் அதிபதியாகியிருக்கும் நிறைவு அவன் கண்களில் நிறைந்திருந்தது. அதை அன்றுவரை கட்டிக்காத்ததிலும் அந்த நிறைவு. ஆனால் அடுத்த பொழுதில்....? அவன் மாறிப்போனான். கோபத்தின் கீறல்கள் கண்களில் காணத் துவங்கின.

அப்போது ஏதோ அதிர்வின்பேரில் குவையொன்றின் கலைவு நிகழ கலகலவென்ற ஓசை கிளர்ந்தடங்கியது. ராவணன் தன்னைச் சுதாரித்திருப்பான். அவனிடமிருந்து அதனடையாளமாக ஒரு பெருமூச்சு சுழித்தெழுந்தது. அப்போது இன்னுமொரு குவியல் தானாய்க் கலைந்தது. பொலபொலவென ஓசை கிளர்ந்தது. பின் அமைதி செறிந்தது.

ராவணன் தொடர்ந்தான்: ' நாகா, இவை என் செல்வங்களில்லை. என் பாதுகாப்பிலுள்ள செல்வங்கள்மட்டுமே. அப்படியானால் இவை யாரின் செல்வங்கள். லங்காபுரத்தின் செல்வங்கள். ஒரு இயக்கத் தலைவியின் மகனாய் இவற்றை அடைந்திருந்தாலும் யாரையும் அனுசரிக்காத ஒரு தலைமைத்துவத்தால் என் மூதாதையரின் இச் செல்வக் குவைகளின் காப்பினைச் சரியாகவேதான் செய்திருக்கிறேன். இனிவரும் காலங்களிலும் இதுவே என் ஒரே குறியாக இருக்கும். ஆனாலும் இந்தக் கர்வம், இந்தத் திருப்திகளை தொடர்ந்தும் நான் அடைய வாய்ப்பிருக்கும் என்பது ஐயுறவடைந்திருக்கிறது. அதனை அழிக்கும்படியான சூழ்ச்சிகள் தலையெடுக்கத் தொடங்கியிருக்கின்றன இன்று. அரண்மனையிலும், வெளியிலும்.'

மலை குடைந்தெடுத்த வைப்பிடம். நிலம் குடைந்தெடுத்த செல்வழி. அதனை மனங்குடைந்தெடுத்த மாரீச நுட்பம் காத்திருக்கிறது. இடையூறு எப்படி ஏறபடமுடியும். நாகன் அதிசயித்தான்.

ராவணன் தன் கரம் நீட்டி நாகனின் தோளைத் தொட்டான். 'கடந்த ஒன்பது தலைமுறைகளையும் என் தலைமீது சுமந்து கொண்டிருக்கிறேன். என் தலை கனக்கிறது. என் உடம்பு களைக்கிறது. என் மகிழ்ச்சி என்னிடமிருந்து தப்பி ஓடுகிறது. என் மனைவி ஒரு புறம். என் தம்பி ஒரு புறம். அமைச்சு புரிவோர் இன்னொரு புறம்... யாவரும் இதனால் புறமாகிப்போயிருக்கிறார்கள். ஆனாலும்... நான் இந்தக் காத்தலைச் செய்துதான் ஆகவேண்டும்.'

நாகன் வாய் திறக்கவில்லை. அவன் அம் மணிக்குவியல் கண்ட அதிர்விலிருந்து மீள, மீண்டுமோர் அதிர்வு, அதிலிருந்தும் மீள மற்றுமோர் அதிர்வாய் அனுபவமாகிக்கொண்டிருந்தான். தானில்லாத கடந்த இரண்டு ஆண்டுகளிலும் அரண்மனையில் முகிழ்த்திருக்கூடிய அவதிகளின் கனம் நாகனுக்குத் தெரிந்ததில் அப்போது அந்த நிலைகுத்துகை அவனில் பிறந்திருந்தது.

மேல்தளத்தில், சுவர்களில் என்று வானவில் நிறங்கள் மாறிமாறியெழும் விந்தைகளைக் கண்மடுத்தபடி, ராவணனின் கருத்துக்களை மனமடுத்துக்கொண்டிருந்தான் அவன்.

அப்போது மேலும் சில மணிக்குவைகள் கலைந்து அதிர்ந்தன.

# பதினைந்து

அறையெங்கும் ஒளியின் நர்த்தனங்கள். ஓசையின் எறியங்கள். ராவணனின் முகத்தில் நிலைகுத்தியிருந்த தன் பார்வையை விலக்கி புறத்தில் எறிந்து கண்கொள்ளும் இன்பம் அடைந்தான் நாகன். ஆனாலும் அவன் வெளியிட்ட தகவல்களின் கனம் மனத்தின் ஒரு மூலையிலிருந்து அழுத்தவே செய்துகொண்டிருந்ததை நாகன் உணரத் தவறவில்லை. மறுபடி அவன் பார்வையைத் திருப்பியபோது நிகழ்காலப் பிரச்சினைகளில் மனம் நிலையாக அழுந்தியது.

வீடாணன், மந்தாகினி, அமைச்சர்கள்..ஏன் புறத்தவர் ஆகிப்போயினர் ராவணனுக்கு. தன் தலைமுறைச் செல்வத்தைத் தொடர்ந்தும் பாதுகாப்புச்செய்வதில் அவனுக்கு என்ன இடையூறுகள் ஏற்படக்கூடும். நாகனால் விடைகாண முடியவில்லை. ராவணனிடமே கேட்டுவிட முடியும். ஆனாலும் காத்திருந்தான். ராவணன் அவற்றைச் சொல்வதற்காகத்தான் அவனை அங்கே அழைத்துவந்திருக்கிறான். ராவணனே சொல்வான்.

ராவணன் சொன்னான்: 'சற்றுநேரத்துக்கு முன்னர் மரணம்பற்றிச் சொன்னாயல்லவா. தெரியாமலேதான் சொல்லியிருக்கிறாய். ஆனாலும் கடந்த சிலகாலமாக என் மனத்தினுள் இருக்கிற யோசனையும் அதுதான். ராவணன் தனியனாகிப்போயிருக்கிற இந்தச் சமயத்தில் அவனுக்கு எதுவாகிலும் நேருமானால், பாதாள அறைகளுள்ளிருக்கும் இந்தச் செல்வம் முழுவதும் பாதாள வைரவனுக்கே போய்ச் சேர்ந்துவிடும். அப்படி ஆகிவிடக்கூடாது, நாகா. எனக்குப் பின்னர் என் மகன் சித்தன் இருக்கிறான். என் காவலின் தொடர்ச்சி அவன். என் தலைமையின் தொடர்ச்சியும் அவன்தான். அவனிடம் இந்தச் செல்வத்தைச் சேர்ப்பிப்பதற்காகவாவது இது யாருக்காவது தெரிந்திருக்கவேண்டுமல்லவா. அதற்காகத்தான் உன்னை இன்று இங்கு அழைத்துவந்தேன். என் மாமனுக்கு இதன் இரகசியங்கள் அத்தனையும்

தெரியும்தான். ஆனால் அவன் அரண்மனைச் சகவாசம் அறுத்து ஓடிக்கொண்டிருப்பவன். அவனே ஒரு மாயத்தில் வாழ்கிறவன். அதனால் அவன் முடிவும் நிச்சயமாய்ச் சொல்ல முடியாதது. மீதி என் நம்பிக்கைக்குரிய ஒரே ஆள் நீதான். என் விருப்பத்தைப் பூர்த்திசெய்வாயா, நாகா.'

'நான், நீரே சொல்வதுபோல் ஒரு ஆறாடி, அரசே. நீர் இல்லையேல் அரச தொடர்பு ஏது, அரண்மனை வாழ்வு ஏது. பரத்தையர் குடில்களில் பாரமாய்ப் படுத்துக்கிடக்கிறார்களே, அந்தப் பாணர் களைப்போல் கறங்காய் அலைந்துகொண்டு இருந்திருப்பேன் இன்றைக்கு.'

'வேழம் தன் வலிதினைத் தானே அறிந்ததில்லையல்லவா. உன் வலி உனக்குத் தெரியாது. உன் பயணங்களும், அனுபவங்களும், அவற்றின் அறிவுச் சேகரங்களும் வேறு எந்த நாக இனத்தானிடம் உண்டு, நீயே சொல். உன் மனமும் அதுபோல் யாருக்கும் அமையாது. நான்கு நாக கன்னியர் வந்து வணங்கி வரவேற்றாலும், அவ்வின்பங் களை உதறியெறிந்துவிட்டு நட்பாளனாய் மிளிர உன்னால் மட்டும்தான் முடியும். இல்லாவிட்டால் இன்றைக்கு எந்த நாட்டிலோ, எந்த அரண்மனையிலோ, எந்த அரச பரிவாரத்துக்கிடையிலோ உன்னால் நின்றிருக்கமுடியும். அவ்வாறான பேறுகளைவிட்டு ஓட இந்தப் பேருலகில் உன்னைத் தவிர யாருமில்லை, நாகா.'

'என் பயணங்களும், நீயும் எனக்கு என்றும்வேண்டும், ராவணா' என்று நா தழுதழுத்தான் நாகன்.

'அழுதுவிடாதே. நீய் குடித்துமிருக்கிறாய். எவர் அழுவதும் ராவணனுக்குப் பிடிப்பில்லாதது. நீ அதைச் செய்தால் தாங்க முடியாதிருக்கும்' என்றுவிட்டு அவனைத் தேற்றும் ஒரு சிரிப்பைச் செய்தான் ராவணன்.

'உன் விருப்பத்தை நான் நிறைவேற்றுவேன் என்பதிருக்கட்டும். உன் மனையாள் மந்தாகினி எங்கே போனாள்.'

நாகனின் கேள்வியில் மெல்லச் சலித்தான் ராவணன். பின் சிறிதுநேரம் மௌனமாய் இருந்தான். தன்னைச் சுதாரிப்பதுபோல் தலையை இங்குமங்குமாய் அசைத்தான். அப்போது அவனது சுருண்ட முடிக் கற்றைகள் தோளிலும் முதுகிலுமாய் அசைந்து அமைந்தன. பிறகு ராவணன் சொன்னான்: 'என் இறுதி வரும்போது தானும் இறுதியடைந்துவிடுவேன் என்று சொல்லிக்கொண்டிருந்தவள் அவள். கூடற்காலங்களில்தான். ஆனாலும் அவளிடத்தில் ஒரு மனப்பிளவு வந்துவிட்டதை நானறிவேன். இன்று நான் இயக்க இனத்தானாய்த் தெரியவாரம்பித்துவிட்டேன் அவளுக்கு. அதுபோல் தன்னையும்

அடையாளம் கண்டுகொண்டிருக்கிறாள். நாக இனத்தாளாய் இருப்பதினாலான பெருமை மந்தாகினியிடத்தில் நிறைய, நாகா. அவளது போக்கு, பேச்சு, பார்வை, எடுப்பு எல்லாமே அதைத்தான் சொல்கின்றன. உனக்கு அந்த இனப்பெருமை இருக்கிறதோ இல்லையோ, பல நாகர்களிடம் இருக்கிறது. தாய் முந்துவரிசை பெறும் மக்களினத்தின் தலைமைக் குலம் சார்ந்தவள் அவள். தலைமை, அதிகாரப் பங்கு யாவும் தனக்களவான வகையில் தன்னிடமிருக்க வேண்டுமென்று கருதுகிறாள் அவள். என் செல்வப் பதுக்குகையையும், அதன் காவலுக்கான ஒதுங்குதலையும் தன்னிடமிருந்தே நான் ஒதுங்குவதாக நினைத்தும், தன்னை அரச காரியங்களில் நான் புறக்கணிப்பதாகக் கருதியும் என்னிலிருந்து பின்னமாகிப் போயிருக்கிறாள்.'

நாகன் செவிமடுத்தவண்ணம் இருந்தான்.

ராவணன் தொடர்ந்தான்: ' மந்தாகினியின் இந்த மனப்போக்கை நான் அறிந்தேன், நாகா. அதனால்தான் அவள் மனமகிழும்படி எனக்காகவே நான் கட்டுவித்த ஆயிரகால் கோயிலில் நிறுத்தவிருந்த சிவ சிலையில் நாக அடையாளமிடச் சொன்னேன். சிவன் இயக்கவினத் தெய்வமெனில், நாகம் நாகவினத் தெய்வமல்லவா. சிவனும் நாகமும் இணைந்திருந்தால், இயக்கரும் நாகருமே இணைந்ததாகி நாக இனத்தார் தம் பேதம் மறக்கக்கூடுமென்பது என் நம்பிக்கை. நாளை மலைக்கோயிலில் நாகமசையும் மேனியுடன் சிவச் சிலை நிறுவப்படும்போது அவள் தன் மனப்பின்னம் மறந்து இயல்பு நிலையை அடையக்கூடும்.'

'வீடாணர்...?'

'வீடாணன் அன்பான தம்பிதான். ஆனாலுஞ் ஆசை ஊடாடிப்போனவன். தன் மளையாளுக்காக அவ்வண்ணம் ஆனான். அவனை நம்பலாம். அவனது ஆசையை நம்ப நான் செய்யமாட்டேன்.'

'கதக்கண்ணர்..?'

'அன்புடையவன், அடக்கமுமுடையவன். ஆனாலும் போதையுள். அடங்கிக்கிடப்பவன். மிகை ஊண் பிரியன். அதுபோல் மிகைப் புணர்ச்சிக்காரனும். இன்றுபோல் நாளையும் எனக்காகவே இருப்பான். நானில்லையேல் அவன் அவனாயிருக்கான்.'

ராவணன் அதுவரை கூறிய எல்லாவற்றையும் நாகன் ஓரளவு அனுமானித்தேயிருந்தான். ஆனாலும் ராவணன் அதைச் சொன்னபோதுதான் அவற்றின் பிரமாண்டம் அவனுக்குத் தெரிந்தது. தானில்லாத கடந்த இரண்டு ஆண்டுகளிலும் அரச குடும்பத்துள்

நிகழ்ந்த வெடிப்புக்களை எண்ண அவனுக்கு பேச்சே வெளிவராது அடைத்துக்கொண்டது.

'என்ன பேசாமலிருக்கிறாய், நாகா.'

'பேச என்ன இருக்கிறது. எல்லாம் இந்த நிறக் கற்றைகளை வீசும் மணிக்குவியல்களினால் வந்ததுதானா' என்று அங்கலாய்த்தான் நாகன்.

'அப்படியும் சொல்லலாம்தான்' என்று கூறிச் சிரித்தான் ராவணன்.

நாகன், 'ம்' என்று முனகினான். பிறகு சொன்னான்: 'நான் முந்தியா, நீர் முந்தியா என்று யாருக்குத் தெரியும். நீர் இறந்து நான் இருக்க நேர்ந்தால் நிச்சயமாக உமது எண்ணத்தை நான் நிறைவேற்றி வைப்பேன். அதையிட்டு கொஞ்சமும் ஐயம் வேண்டாம் உமக்கு.'

'அதுபோதும், நாகா. எழும்பு, இனி போகலாம்' என்றபடி துள்ளி எழுந்தான் ராவணன்.

நாகனும் எழுந்தான்.

# பதினாறு

அரண்மனை மண்டபத்துக்குள் பிரவேசித்தபோது கூடத்தில் இன்னொரு ராவணன்போல் வீடாணன் நிற்பதைக் கண்டு திகைத்துப் போனான் நாகன். ராவணனில் அந்தத் திகைப்பு இருந்ததா தெரியவில்லை.

கொட்டகைத் திசையில் பார்வையைப் பதித்திருந்தான். அவர்கள் வந்ததைக் கண்டிருந்தானா. கல் கதவங்கள் பெயர்ந்த அரவம் கேட்டிருப்பானா. அவர்கள் இல்லாத வெற்றரண்மனை அவர்கள் எங்கிருக்கக்கூடும் என்ற ஊகத்தையாவது அவனிடத்தில் உண்டாக்கி யிருக்குமா. இவை எல்லாமே சாத்தியங்களானதன் ஓர் உருவம்போல் வீடாணனின் மேனி வெய்துயிர்த்துக்கொண்டிருந்தது. வீடாணனின் மனத்தில் ஓடியிருக்கக்கூடிய உட்கனல் உடனடியாக விளங்கியது நாகனுக்கு. அரண்மனையில் கலகத்தின் ஆரம்பத்தை ராவணன் சொன்னபோது அவனடைந்ததைவிட கலக்கம் ஏழு மடங்கு அதிகமாயிருந்தது அப்போது.

ராவணனும் நாகனும் நெருங்க காலடியோசையில் வீடாணன் திரும்பினான். அவர்கள் வந்ததை, வந்த திசையை அவன் காணவே இல்லையோ. திடுக்கிட்டான். பின் சிரிக்க முனைந்தான்.

ராவணன் அவன் முகமாறுபாட்டினைத் துலக்கமாய்க் கண்டிருப்பினும், கண்டுகொள்ளாதவன்போலவே, 'என்ன, வீடாணா' என்றான். 'அதுவும் இந்தநேரத்தில்...?' ராவணன் குரல் கரகரத்தது. அவன் விரும்பாத நேரம் அது!

ராவணனில் போதையும், போதையின்மையும் பெரும்பாலும் வெளித்தெரியாது. ஆனாலும் உடன்பிறப்பாளன் ஆனபடியால் அப்போது மிதமான ஒரு போதையில் அவன் இருந்து கொண்டிருப்பதைத் தெரிந்தான். கூடவிருந்த நாகனும் அநாவசியமாகச்

சிரிக்க முனைந்து தோற்றது கண்டதில், தனது அனுமானம் நிச்சயம்பெற்றான் அவன்.

எங்கேயிருந்து வந்துகொண்டிருக்கிறார்கள் என்ற வினா மனத்துள் துள்ளிக்கொண்டிருப்பினும், அதைவிட அவன் கவனம்கொள்ள வேண்டிய வேறு அம்சம் இருந்தது. பிரானுடனான சந்திப்பு பெரிய நன்மையாய் முடிந்ததென்று மந்தாகினிக்குச் சொன்னதுபோலவே அவனுக்குள் எண்ணமில்லை. இன்னும் ஏமாற்றமாய் முடிந்தது என்பதே அவனளவில் சரியானதாகவும் இருந்தது. அந்த ஏமாற்றத்தோடு உறங்கச் செல்ல ஆயத்தமாகும்போதுதான் கிழ அமைச்சன் உத்திக்கன் அனுப்பிய வேலையாள் வந்து செய்தி சொல்லிப் போனான். தென்கிழக்கெல்லையிலுள்ள இயக்க, நாக படைக் குடியிருப்புக்கள் சற்று அமைதி கலைந்து கலகத்துக்கான ஒரு வெம்மை தகிக்க இருப்பதாய் அமைச்சன் அனுப்பிய செய்தி முக்கியமானது. அது உண்மையெனில் அதைச் சரியாகக் கையாளத் தெரிந்தால் அவனால் ஆட்சியையே கலகலத்துப்போகச் செய்ய முடியும். பிரானுடனான சந்திப்பின் தோல்வியை தென்கீழைப்புற படைக் குடியிருப்புகளின் கலக நிலையில் அடைய அவன் விழைந்தான்.

மறுநாள் அதிகாலை புறப்படுவதெனில் அப்போதே அதுகுறித்து ராவணனுடன் பேசுவது நல்லதென எண்ணியே அரண்மனை வந்திருந்தான். அதனால் ராவணன் ஒப்புக்கொள்ளும் வண்ணம் அதை எடுத்துச்சொல்வதில் அவன் நிறையக் கவனம் குவிக்கவேண்டியவனாக இருந்தான். அவனது அவசரங்களில் ராவணன் எதுவித சந்தேகமும் பட்டுவிடக்கூடாதென்பது மிகவும் முக்கியம். அந்தக் கவன நிலையை உலுப்பிக்கொண்டு ராவணனின் கடுத்த பேச்சும், கூர்த்த பார்வையும் எழுந்ததில் சற்று ஆடித்தான் போனான் வீடாணன்.

பிரானுக்கும் தனக்குமிடையில் ஏற்பட்ட சந்திப்புப் பற்றி ஏதாவது மறைச் செய்தி வந்ததுதான் ராவணனின் அந்தக் கடுமையான பார்வையும் பேச்சும் தோன்றக் காரணமோவென ஒருகணம் திகைக்கவும் செய்தான். நாகனின் வெறும்சிரிப்பில் நிலைமை இயல்பாயே இருப்பதைத் தெரிய முடிந்தது. பின்னர்தான் அவனும் மெல்லியதாய்ச் சிரிக்கச்செய்தான்.

அண்ணனை நெருங்கியவன் வணக்கமாய்ச் சொன்னான்: ‘நாளை நான் தென்கீழ் படைவீடுகள்வரை போய்வர எண்ணுகிறேன்.’

‘ஏன் அவ்வளவு அவசரமாக. முன்னேற்பாடுகள் செய்துகொண்டு போவதுதான் வழக்கம்’ என உசாவினான் ராவணன்.

'மழையின் முன்பாக அவ்வாறு போய்வருவது எல்லா ஆண்டிலும் நிகழ்வதுதானே, அண்ணா. இந்தமுறை நாம்தான் கொஞ்சம் தாமதமாகிப்போனோம்.'

சிறிதுநேரம் மௌனமாயிருந்த ராவணன், 'நினைத்துவிட்டாய். இனி முடிக்காமல் விடமாட்டாய். சரி, எப்போது கிளம்புகிறாய்' என்றான்.

'நாளை காலையில்.'

'உதவிக்கு ஆட்களை அழைத்துச் செல்.'

'அவ்வாறு செய்தால் பயணம் விரைவாக நடக்காது. அதனால் நான் தனியாகவே புறப்படப்போகிறேன். கூட நெடுவேலனைமட்டும் அழைத்துப்போவேன்.'

'நெடுவேலனா. அவன் எங்கே இங்கே வந்தான். அவனைத்தான் மேற்புறக் காவல் முகாமுக்கு அனுப்பியிருந்தேனே.'

'காவல் மாற்றம். இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் தலைநகருக்கு வந்தான்.'

ராவணன் சிறிதுநேரம் யோசித்தான். பின், 'ஏவலாளிகள் சிலரையும், வில்லாளிகள் சிலரையும் கூடவழைத்துப் போகாவிட்டால் வேண்டாம். எதுவும் இதுவரை நடக்கவில்லைத்தான். ஆனாலும் வெடிப்புக் கண்ட களிமண் திட்டாய்க் கலகலத்துக் கிடக்கிறது லங்காபுரம். சூர்ப்பநகை சொல்லாமல் வெளியிடம் சென்றதால் நான் கொண்ட சினம்கூட இம்மாதிரி நிலைமையின் காரணமானதுதான். இப்படியான நேரத்தில் உனது பாதுகாப்பு முக்கியமானது, வீடணா. மட்டுமில்லை. அது எனது தலைமையின் வலிமை சார்ந்ததுமானது. நான் சொன்னபடி செய், இல்லையேல் விட்டுவிடு' என்றபடி ஆசனத்தில் போயமர்ந்தான் ராவணன்.

சிறிதுநேரம் என்னசெய்வதெனத் தெரியாமல் திண்டாடிய வீடணன், இறுதியாக, 'சரியண்ணா, நீ சொன்னபடியே செய்கிறேன்' என்றான்.

'விரைவில் சிவ சிலையின் வேலை முடிந்துவிடும். காண்டாமணி வேலையும் முடிகிற மாதிரித்தான். மலைக்கோயிலை குடிமக்கள் வணக்கத்துக்காகத் திறந்துவிட நினைத்திருக்கிறேன். நீ எதனாலும் தாமதமாகிவிடாதே;

'சரியண்ணா.'

மேலே அதிகநேரம் வீடணன் நிற்கவில்லை. விறுவிறுவெனப் புறப்பட்டுவிட்டான்.

ஒரு இருள் நடந்ததுபோல் வீடாணன் போய்க்கொண்டிருப்பதையே இமைக்கா விழிகளால் கண்டுகொண்டிருந்தான் நாகன். அந்தக் கணம்வரை தான் சிறிது போதையில் இருந்ததாய்த்தான் அவன் எண்ணிக்கொண்டிருந்தான். அப்போது எல்லாம் முறிந்து போயிருந்தது. முறிந்துபோக வைத்திருந்தான் வீடாணன், புறப்படும் போது நாகனில் எறிந்த பார்வையின் கடூரத்தால்.

ராவண சகோதரர்களோடு அதிகம் நெருங்கிப் பழகாதவன்தான் நாகன். அவனுக்குள்ள நெருக்கமெல்லாம் ராவணனோடு மட்டுமே. ஆனாலும் யாவரும் அவனை அவனது அண்ணனின் நட்பாளன் என்றவகையில் மரியாதை காட்டியே பழகினார்கள். மாரீசன்கூட சற்று மரியாதையாக உரையாடியும், அவனெதிரில் தன் இயல்பான சேட்;டைகளை அடக்கியுமே பழகினான். வீடாணன்கூட அன்று வரையில் அம்மாதிரி அவமரியாதையாக நடந்ததில்லை. அப்போது மட்டும்..?

ராவணன் கண்டிருக்கவில்லையென்பதை நாகன் உணர்ந்தான். அவனிடம் சொல்வதில் எந்த நிலைமையும் இறுக்கமடையவே வாய்ப்புண்டாகும்.

அவர்களும் மேலே பேசும் மனநிலையற்றிருந்தார்கள். அதனால் ராவணன் அவனைப் படுக்கப்போகும்படி சொல்லிவிட்டு தன்னறையுள் நடந்தான்.

விருந்தினர் குடிலுக்கு வந்த நாகனுக்கு எல்லாம் நினைக்க ஆச்சரியங்களாய் விளைந்துகொண்டிருந்தன. ராவணனே முதல் ஆச்சரியத்தை ஏற்படுத்தியவன். அரண்மனை நிலைமை அடுத்த பங்கைச் செய்தது. சூர்ப்பாநகையின் போக்கு மேலும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. சிவ சிலையில் நாகக்குறி அடுத்த ஆச்சரியமாகும். ராவணன் அழைத்துப்போய்க் காட்டிய மணிக் குவைகள் அடுத்ததானது. இப்போது.. வீடாணன் செய்த பார்வைக் கடூரம்.

அவனால் இனி அரண்மனையில் தரித்திருந்துவிட முடியாது. அவனது சுபாவத்துக்கும், அரண்மனையின் அவசரங்களுக்குமே ஒத்து வருவதில்லை. இப்போது முரண்கள் முளைக்கத் துவங்கியிருக்கின்றன. அது அவனுக்கு ஒவ்வாது. ராவணன் என்றும் நட்பாளனாய் இருப்பான். அது அறாப் பந்தம். மற்றும்படி அவன் தேட, அவனைத் தேட அங்கே வேறு மனங்கள் இ;ல்லை.

நாகன் சாளரத்தினூடு வானத்தைப் பார்த்தான். விண்மீன்கள்கூட வறிதாகியிருந்தன. அது நிலாக்காலம் என்றே அவனுக்கு ஞாபகம். நிலவுதான் இல்லை, உடுக்கணங்களாவது தோற்றும் எனப் பார்த்தால், அவை நிலாவைப் பிடித்துச் சிறைசெய்துவிட்டு காவலுக்கிருக்கின்றன!

புகாராவது அசைந்துகொண்டிருக்குமா. கறுத்த விண்ணில் எதையும் பார்க்கமுடியவில்லை.

விடிவதற்கு வெகுநேரமில்லையென்பதை நாகன் உணர்ந்தான். ஆனாலும் தூக்கம் வர சிரமப்பட்டுக்கொண்டிருந்தது. மனத்தில் அவ்வளவு பாரமிருக்கையில் யாருக்கேனும் தூக்கம் வருவதில்லைத்தான்.

நாகன் மனத்தில் பல்வேறு நிகழ்வுகளின் மீட்பு இயல்பாய் நடந்துகொண்டிருந்தது. திடீரென வியாழியின் வடிவம் மனத்தில் சடைத்துக் கிளர்ந்தது. கூட அவளது காமத்தின் வரைவின்மை.

தன் வயதுமீறியே தான் தள்ளாடிப்போனதாய் ஓர் ஆற்றாமை அவனில் விழுந்தது. உண்மையில் அப்படியில்லாவிடினும் இனி அவனால் பயணங்கள் சாத்தியப்படா. உள்ளூர் அலைச்சல்கள்தான் இனி. அதுவும் இனிமையானதுதான்.

அப்போதுதான் அந்த நினைப்பு அவனில் எழுந்தது. அவன் அவசர அவசரமாக லங்காபுரம் வந்ததே, ராவணனிடத்தில் சில விவரங்களைச் சொல்வதற்காகத்தான். இப்போது நினைத்தாலும் அந்த இராவின் நடுத் தூக்கத்தில் கேட்ட மண்மடியுள்ளான நொருங்குகை, நடுக்கம் விளைக்கிறது அவனுள். வழி நடந்துகொண்டிருக்கையில் கரும் புகார் பதிய அசைந்து நடந்து மறைந்துபோனது. தென்திசை நோக்கி அரசிழந்த கணவனுடனும் அவன் இளவலுடனும் சீதை எனப்படும் அந்தமில் அழகி வனமூர்ந்து வருவது. அவள் பொன்னொத்த நிறத்தளாய், பொன்னொளிர் வீசுபவளாய் இருப்பதாய் கபாடபுரத்து அந்தணன் ஒருவன் சொல்லியமை. அனைத்தும் சொல்லும் அவசரத்திலேயே வியாழியின் விழிகளில் படிந்த துயரினைக் கண்ட பின்பும் தன் ஆதுரங்களையும் மீறி அவளை நீங்கி வந்திருந்தான் அவன். வழியிலும்தான் எத்தகைய விரைவு! ஆனாலும் எல்லாம் மறதியாகிப்போயிருந்தன அங்கே வந்தபின். ராவணனைக் கண்டும், தனிமையில் அமர்ந்து பேசியும்கூட அவை ஞாபகமாகி வரவில்லை.

அவற்றை அவன் ராவணனிடம் சொல்லியே ஆகவேண்டும். சொல்லியபின் அவன் தன் வழி புறப்படுவான்.

எங்கும் போக இடமில்லையேல் வியாழியிடம் போவான். அவனுக்கா இடமில்லை.

அதற்குமேல் அவனுக்கு மெல்லத் தூக்கம் வந்தது.

# பதினேழு

**த**ன் இல்லம் திரும்பிய வீடாணன் மனவமைதி இழந்தவனாய் நெடுநேரம் தாழ்வாரத்தில் உலவிக்கொண்டிருந்தான்.

அவன் அரண்மனை சென்றபோது ராவணன் அங்கேயில்லை. எங்கே அந்தநேரத்தில் போயிருப்பான் என எண்ணிக் கொண்டிருக்கையில் கல் பெயருமோசை கேட்டது. பாதாள அறைதான் மூடப்பெறுகிறது அல்லது திறக்கப்பெறுகிறது என்பதை அனுமானிக்க அதிகநேரம் பிடிக்கவில்லை வீடாணனுக்கு. அவன் அடைய எண்ணுகிற வழி! அவனுக்கும் உரிமையான சொத்து! சென்றுபார்க்க மனம் உந்துதலடைகிற பொழுதில் ராவணன் வந்து விட்டான்.

ராவணனுக்கு அடுத்த அதிகாரம் தனக்குத்தான் என ஒருபோது அவனுக்கு சமாதானமாயிருந்தது. இனி அது இல்லையென்பதை அன்று மதியத்தின் முன் ஆயுதப் பயிற்சிக் கூடத்தில் கண்ட காட்சி நிரூபணமாக்கி விட்டது. சித்தன் காட்டிய வில் திறன் அவன் கண்காணாதது. அடுத்த நிலை அதிகாரமாகிறவன் அவன்தான் என்பதைச் சொல்லாமல் சொல்லிவிட்டது அது.

அவன்தான் அதை அன்று அறிந்து விசனம் கொள்வது. அவன் மனைவி என்றோ அறிந்துவிட்டிருந்தாள். இந்தளவு ஆகிருதி இருந்தென்ன, இந்த லங்காபுரத்துக்கு ராவணன் தலைவனெனில், அடுத்த மரியாதை இனி சித்தனுக்குத்தான் போய்ச்சேரும், இருந்து பார்! என்றிருந்தாள் அவள். நிலைமை அப்படித்தான் ஆகும் என்பது நிச்சயமானது வீடாணனுக்கு.

மந்தாகினியின் மனக்குறைகளை வளரவைத்து, ஒரு அரசியல் சூழ்ச்சி வலை விரிப்பைத் தொடரலாமெனில் அது கைகூடாதுபோலத் தெரிந்தது. மேலும் இந்தச் சம்பவங்கள் குறித்து ராவணன் அறிவானேல் தம்பி என்றுகூடப் பார்க்கமாட்டான், வெட்டி

எறிந்துவிடுவான். அவன் அடையும் உடனடி ஆவேசத்துக்கு யாருமேதப்பமுடியாது. மந்தாகினியாகிலும், சித்தனாகிலும் சரிதான். அந்தக் கிழ அமைச்சன் ஆரம்ப காலத்தில் உறுதியாகவும், சுறுசுறுப்பாகவும்தான் இருந்தான். இப்போது ஒளிந்து ஒளிந்துகொள்கிறான். அவனும் ஒருவேளை ராவண கடுமையைத் தன்போல் யோசித்துத்தான் அவ்வாறு ஆனானோ என்றுமொரு எண்ணம் பிறந்தது வீடாணனில்.

பிரான்வரையில் அவன் நினைத்துச் சென்றது நடக்கவேயில்லை. அவனைத் தம் கூட்டுக்குள் இணைத்துவிட்டால் ராவணன்கூட தெரியும்போது ஆடிப்போகவே செய்வான். ஆனால் பாதாள அறைகளின் இருப்பு நிச்சயத்தை அறியுமளவுக்கே அவனுடனான உரையாடல் பயனாக இருந்தது. இந்த நிலையில் யாரோ ஒரு நடைப்பயணி பாதாள அறைகளெல்லாம் சென்று தான் காணாத இன்பங்களைக் கண்டுவருதலென்பது அவனளவில் தாங்கமுடியாதது. அண்ணன் முன்னால் தன் வெறுப்பைக் காட்டிவிடக் கூடாதென்றுதான் நினைத்தான். ஆனாலும் அவ்வாறு காட்டுதல் தவிர்க்கவியலாதவாறு நிகழ்ந்துவிட்டது. கீழ்த்திசையில் செய்யவிருக்கும் நாளைய பயணம் நாக வல்லாள்களைக் கண்டடைதலாகவே இருந்தது. நகரத்து இயக்க இளைஞர் சிலரும் சில அதிருப்திகளை சூர்ப்பாநகை குறித்து அடைந்திருந்தனர் என்பதை அவன் அறிந்திருந்தான். அவள் அழகில் மதிமயங்கி வரும் செல்வ இளைஞர்களைத் துச்சமாக நினைத்து ஆணவத்தோடு நடந்துகொண்டாளென்ற கதை பரவலாக அறியப்பட்டிருந்தது. அந்த அதிருப்திகளை இப்போதைக்கு ஒன்று சேர்ப்பது நல்லதென்பது அவனதெண்ணம். அதனால்தான் நெடுவேலனோடு தனித்து அதைத் தொடங்கவிருந்தான். ஆனால் ராவணன் சொல்கிறான், வில்லாளிகள் ஏவலாள்கள் சகிதமாக இல்லாவிட்டால் பயணத்தையே மேற்கொள்ள வேண்டாமென. அவர்களில் ராவணன் ஆள் யாரென எப்படித் தெரியமுடியும். அதைக்கூட ஒரு முன்யோசனையோடேயே ராவணன் அமைத்து விட்டிருந்ததை வீடாணன் கண்டான்.

இனி எதையும் திட்டமிடுவதில்லையென்று ஒரு திடம் எழுந்தது அவனில். ராவண வெறியில் தப்ப அதைவிட வேறுவழியுமில்லைத் தான்.

வீடாணன் உள்ளே நடந்தான்.

படுக்கையில் மனைவி வல்லோதி படுத்திருந்தாள். இறுகிய அவளுடம்பில் நிமிர்ந்திருந்த தசைக்கோளங்களில் பார்வை பட்டது. எங்கெங்கும் கொட்டிக் கிடந்தது, எங்கெங்கும் பேச்சாய் இருந்தது, எவரெவர்க்கும் கனவை விளைத்தது, நீ சொல்லுகிறாய், இப்போது அவை எங்கேயெனத் தெரியாதென, எங்கோ சுருங்கை வழியில்

தாமாகப் போய் ஒழித்துக் கொண்டனவா, கண்ணால்கூட கண்டிருப்பாயா அதன் மொத்தமும், மலைமலையாய்க் குவித்து வைத்திருக்கிறான் உன் அண்ணன், அதையேனும் அறிவாயா, நீ எங்கே, இந்த மலைகளைத்தான் பார்த்திருப்பாய்! என்று ஒருபோது சொல்லி அவற்றை அவள் கையினில் ஏந்தி எற்றிஎற்றிக் காட்டி யிருந்தாள். அந்த முலைகள்தான் அப்போது திறந்துகிடந்தன. உயிர்ப்பில் ஏறி இறங்கிக்கொண்டிருந்தன. வட்ட இருளாய் நடுமுலைகள். அதில் இன்னும் கூரிய இருளாய் இரு மணிகள்.

எப்போதும் பார்க்கிறவைதான். அவள் நடந்தால் முலைகள் சதிரிடும். பகலில் ஒரு தினவையேனும் செய்யாத அவை, இரவில் மனிதனை என்ன பாடு படுத்திவிடுகின்றன.

வல்லோதி தூங்குகிறாளாவென்று வீடாணனுக்குச் சந்தேகம். அவள் தன்னை தன் ஒதுங்குகை மூலம் நிராகரிக்கிறாள். குறியின் எழுச்சியில் ஆணாயிருக்கிறதைவிட, வல்லபத்தின்மூலம் ஆணாயிருப் பதையே அவள் பெரிதாகக் கருதுகிறாள். அவளது குலக்குழு வன்மைகளையே செல்வமாய் நினைப்பது. அவன் அறிவான் அதை.

அவளுக்காகவே எதையும் செய்துவிடலாம் போலத்தான் இருக்கிறது. ஆனால் ராவணனுக்காக எதையும் விட்டுவிடலாம் போலல்லவா தோன்றுகிறது.

அவன் படுக்கையை அடைந்தான். வல்லோதியின் அருகே சரிந்தான். மெல்ல அவளை அணைத்தான். அவனது மூச்சில் அவளது மேனி சுடுபாட்டிருக்குமோ. அடுத்த கணத்தில் அவளது தோள் அவனது கைகளுக்குள்ளிருந்து நழுவியது.

அந்த இரவு வெப்பம் அதிகம் செய்த இரவாக இருந்தது. உடுக்களற்ற இரவாகவும். அதுபோல் அரண்மனையில் பலருக்கும் நிம்மதியற்ற இரவுதான் அது.

வீடாணனின் இல்லின் முன்பாகத்தான் மந்தாகினி மாளிகை. மாளிகைகளுள்ளேயே பெரியதும் வசதி பொருந்தியதும் அதுதான். வினைத்திறன் மிகுந்தவர் அமைத்த கட்டில், இருக்கைகள், தளபாடங்கள். தளவமைப்பும் எல்லாம் அங்கே அழகாயிருக்கும். தூண்கள், சாளரங்கள், கதவுகள், சுவர்களென்று எல்லாமே அங்கு கலைதான். சூழ்ந்திருந்த மரங்களிலிருந்தும், நீர்த் தடாகங்களிலிருந்தும் அங்கே எப்போதும் ஒரு குளிர்மை வந்து விரவியவண்ணமிருக்கும். சூழவிருந்த தோட்டத்து மலர்கள் அழகைச் செய்தன. ஆனாலும் அங்குள்ள ஒரு இதயம்மட்டும் காதலில் பாதி, காமத்தில் பாதியாய் அமைதியழிந்திருந்தது.

அந்த இரவில் மந்தாகினி இரண்டு முறைகள் தூங்கி யெழுந்துவிட்டாள்.

மலையெனத் திரண்டிருந்த அவன் தோளணையாது ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளென்பது எவ்வளவு பெரிய காலம்! காமத்தில் கலைகள் கண்டவள் அவள். தினவடக்கத்துக்கானதாயிருந்த புணர்ச்சியை, இன்பத்துக்கானதாய்க் கொண்டது அவள்மட்டும்தான். இருந்தும் துறவாகிவிட்டதே வாழ்க்கை.

ராவணன் ஏன் தன்னிலிருந்து ஒதுங்கினானென இன்றுகூட அவளுக்கு காரணம் நிச்சயமில்லை. அவனொதுங்க, தானுமொதுங் கினாள். தன் குடும்ப செல்வங்களை எங்கோ கொண்டுபோய்ப் பதுக்கினான் சரி, சிவ தெய்வத்தை எங்கே கண்டடைந்தான்;. அதற்காக அந்தளவு செலவிலும் உயரத்திலுமாய் ஏன் ஒரு பெருங்கோவில். அந்த முரண்களின் விளைச்சலில் வாழ்க்கையே தலைகீழாய்ப் போனது.

அந்தப் பேதங்களை மறந்தும், தன் தாய்வழி அதிகார இச்சையை ஒதுக்கியும் விட்டாலும்கூட ராவணன் தன்னை வந்து இனிச் சேருவானா என்று அவளுக்குச் சந்தேகமாயிருந்தது. அவன் தனிப் பெண் புணர்ச்சிக்காரன். எந்த இயக்கியையோ, நாகியையோ ஒரு உடல் தேவையென்றுகூட அவன் சேர்ந்துவிடமாட்டான். ஆனாலும் தன் இச்சைகளை அவன் அடக்கினும் அடக்குவானே தவிர, தன்னை வந்தணைதல் இனி நிகழப் பெரு வாய்ப்பில்லையென்றே பட்டது அவளுக்கு.

அவன் வரும்போது இன்முகமும், தமிழ் தழுவிய பேச்சுமாய் ஒரு கூடலின் பிரியத்தைக் காட்டிவிட்டால்கூட அவன் புரிவது கூடுமாயிருக்கும். ஆனால் அவளால் அது முடியாதிருந்தது. இரவில் வரும் அக் கனிவு, பகலில் பறந்தோடிவிடுகிறது. அவள் என்ன செய்ய. பிறந்த பிறப்பின், வாழ்ந்த வாழ்வின் பழக்கங்களை எங்ஙனம் அவள் துறப்பாள்.

அடங்கிப்போவதில் இன்பம் கிடைக்கும் என்கிறாள் அவளது பணிப்பெண். ஆனால் அது ஒரு வாழ்க்கையா என்றுதானே பகலில் எண்ணம் உறுத்துகிறது.

இரவு முதிர்ந்து வந்துவிட்டிருந்ததை அதில் விரவியிருந்த குளிர் கொண்டு அறிந்தாள் மந்தாகினி. மேல் விறைத்ததுபோலுமிருந்தது. அருகே கிடந்த துணியை எடுத்து மார்பில் போட்டாள். இதம் விளைந்தது சிறிதுநேரத்தில். அதேவேளை உடம்பில் சூடும் ஏறத் தொடங்கியது. கால் இறைகளில் நசநசப்புத் தெரிந்தது. ராவணா! என மனம் கூவினாள்.

பொழுதில் விடியல் தெரிந்தது.

சூர்ப்பாநகைக்கு அப்போதுதான் விழிப்பு வந்தது. படுக்கையில் எழுந்தமர்ந்தவள் அருகே நிலத்தை நோக்கிப் பார்வையைத் திருப்பினாள். கொண்டனாமிகை அப்போதும் தூங்கிக் கொண்டிருந்தாள். பாவம், எப்போதும் என்னோடுதானே! எந்தவிட மென்றில்லை, எல்லாவிடமும் அலைகிறாள், பெண்ணாயிருந்தும் ஒரு இன்பத்தைக்கூட எண்ணுவதில்லை, என் வயதளவேதான் இவளுக்கும், இருந்தும் தான் அனுபவித்தில் பத்தில் ஒரு பங்கைக்கூட அனுபவித் திருப்பாளா, அரண்மனைச் சேவகம்மட்டுமே வாழ்க்கையாய்ப் போயிருக்கிறாள்! என ஒரு அனுதாபம் பிறந்தது அவளில்.

ஒருநாளின் இரவு முழுக்கத் தூங்கியிருக்கிறாள் சூர்ப்பாநகை. கடந்த இரண்டு நாள்களின் அலைச்சலின் அலுப்பு இன்னுமேதான் தீரவில்லை. அந்தமாதிரி கண்டவிடங்களெல்லாம் அலையக் கூடாதென ராவணன் தடுத்திருக்கிறான். ஆனால் என்ன செய்ய, அந்தமாதிரி அவ்வப்போது வெளியே போய் மதுவருந்தி, ஊனும் தேனும் உண்டு, கண்ணுக்குகந்தவனாய், எழுச்சி எப்போதும் அடங்காதவனாய் ஒருவனிடத்தில் தன்னை ஒப்புக்கொடுத்து ஒரு இரவைக் கழித்துவராவிட்டால் வாழ்க்கை வெறிதாகத் தோன்றி விடுகிறது அவளுக்கு. அதற்காகவென்றே இல்லாவிட்டாலும், ஒரு மனவிடுவிப்பு தேவையெனப் புறப்பட்டால், பெரும்பாலும் அப்படித்தான் முடிந்துகொண்டிருந்தது.

முந்தாநாள் மாலையில் புறப்பட்டவள் முதல்நாள் மாலை யிலேதான் தன் இல்லம் திரும்பியிருந்தாள். ராவணன் உறுமிக் கொண்டு திரிந்ததாய்த் தோழிகள் சொல்லினர். வீடாணன் அண்ணன்தான் சில உத்திகளின்மூலம் நிலைமை மோசமடைவதைத் தவிர்திருந்தானாம். எல்லாம் அறிந்தாள்.

ஒருவேளை அவள் வெளியே போனது தெரிந்து, எங்கேயடி பரத்தை போயிருந்தாய்? என அண்ணன் கேட்டிருந்தால் தன்னால் என்ன பதிலைச் சொல்லியிருக்க முடியமென அவளுக்குக் கலக்க மாயிருந்தது. வெள;ளை மனிதர்கள் இருக்கிறார்களாமே, அவ்வாறான சிலர் நாகநாடு வந்திருக்கிறார்களாமே, பார்கக்கலாமெனப் போயிருந்தேன்! என்றால் விட்டுவிடுவானா ராவணன்.

கொண்டானாமிகையிடம் அவ்வாறு சொல்லித்தான் கூட அழைத்துப்போனாள். வெள்ளை மனிதரா, தோல் வெள்ளை யாயிருக்குமா, அப்படியான மனிதரும் உண்டோ, அப்படியெனின் அவர்கள் நடுவிழி எப்படியிருக்கும், கூந்தல் எப்படியிருக்கும் என்று உசாவியவாறு அவள் ஆர்வமாய் வந்துகொண்டிருந்தாள். யாருக்குத்

தெரியும், அதைப் பார்க்கத்தானே போய்க்கொண்டிருக்கிறோம்! என அவளைத் தாக்குக்காட்டி வந்தாள் சூர்ப்பாநகை.

புரவிகள் புழுதி கிளர்த்திப் பறந்துகொண்டிருந்தன. சூர்ப்பா நகையும், கொண்டனாமிகையும் வேகத்தில் சுகம் பெற்றுக் கொண்டிருந்தனர். அப்போதுதான் 'நில்' என்று வழி தடுத்து கணை தொடுத்து நின்றிருந்தான் அந்த இளைஞன். 'என்ன செய்ய' என்று விரைந்து கேட்டாள் கொண்டனாமிகை. 'நிறுத்து. பார்க்கலாம்' என்றுவிட்டு புரவியின் வேகத்தைக் குறைத்தாள் சூர்ப்பாநகை.

அவள் யுத்தகாரி. ஆண்களாயிருந்தாலும் ஒருவர் இருவரெனில் அவளால் சிரமமில்லாமல் அவர்களை வெற்றிகொள்ள முடியும்.

வேழமொன்று வெறி பிடித்து சமீபமாயுள்ள வனத்தில் அலைவதைச் சொல்வதற்காகவே அவர்களை அவன் மறித்திருந்தான். அவனது சந்திப்பு அவ்வாறுதான் நிகழ்ந்தது. மலைவேம்பனென்று தன்னை அறிமுகமாக்கினான் அவன். அவள் தன்னை ராவணன் தங்கையென்றாள். அவர்கள் அவ்வளவு விரைவாய் எங்கே போய்க் கொண்டிருந்தார்கள் என அவன் வினவியபோதுதான் அவள் தன் எண்ணத்தைச் சொன்னது.

மலைவேம்பன் அதைக் கேட்டு கடகடவெனச் சிரித்தான். 'யாரிடமும்கேட்டுவிடாதே இந்தமாதிரி. வெள்ளையில் நீ யானை பார்த்திருக்கிறாயா. வெள்ளையில் நீ காக்கை பார்த்திருக்கிறாயா. அதுபோலத்தான் இதுவும்.'

வெள்ளை மனிதர்பற்றிய கதையை யார் அவளிடம் சொன்னதென்று அவளிடம் தீர்க்கமான ஞாபகமில்லை. ஆனால் யாரோ சொல்ல அவள் அறிந்திருக்கிறாள். அதன் உண்மையறியும் ஆவல் இன்றளவும் அவளிடம் இருக்கவே செய்கிறதுதான். இம்முறையில்லாவிட்டால் என்ன, அடுத்தமுறை அவள் அவ்வாறான மனிதர்களைத் தேடிக் காணத்தான் போகிறாள்.

அரண்மனையில் நாகன் வந்து தங்கியிருப்பதாக முதல்மாலையே அறிந்திருந்தாள். அவனிடம்கூட அவள் கேள்விக்குச் சரியான பதில் கிடைக்கமுடியும்.

அன்று நாகனைச் சந்திப்பதென்று தீர்மானமாகிக்கொண்டாள் சூர்ப்பாநகை.

# பதினெட்டு

இரவு வெகுநேரம் கழித்தே தூங்கியிருப்பினும், விடியல் எழுகிற வேளைக்குத் தானும் எழுந்துவிட்டான் நாகன். தன் ஆறாடி வாழ்க்கையில் அந்தமாதிரி கிடைக்கிறவேளையில் கிடைக்கிற அளவுக்குத் தூங்கியெழுந்து ஓய்வுத் தேவையினை ஈடுகட்ட அவன் பயின்றிருந்தான்.

ஒரு விடியலின் இதம் எதில் தங்கியிருக்கிறது. வெப்பமும் குளிரும் விரவியிருப்பதிலா. ஒளியும் இருளும் கலந்திருப்பதிலா. உழைப்பின் களைப்பும், ஆசைகளின் அசதியும் நீங்கி புத்துணர்ச்சியுடன் உடம்பு வீறுபெற்றெழுவதிலா. நாகன் பல நாள்களிலும் அது குறித்து விடையின்றி யோசித்திருக்கிறான். லங்காபுர அரண்மனையில் விருந்தினர் குடிலில் தங்கியிருக்கிற அப்போதும் அவனது யோசனை விடையின்றியே முடிவுற்றது.

புள்ளினங்கள் கீதமிசைக்க ஆரம்பித்திருந்தன. முலை முட்டிய பால் நிலத்தில் சிந்துவது தெரிந்து பசுக்கள் கன்றுகளை வருந்தியழைத்தன. தவனம் தீர்ந்த கன்றுகள் திமிரெடுத்த குரலெடுத்தன. விண்ணும் மண்ணும் நிறைவின் வரிகளைக் கிளர்திக்கொண்டிருந்தன.

இரவு உடம்பைச் சுகிப்பிக்கச் செய்வதாயிருக்கிறது. வைகறையோ மனத்தை இனிமையெழச் செய்விக்கிறாய் இருக்கிறது! என்று மட்டும் அவன் நினைத்துக்கொண்டான்.

உடனடியாகவே, அன்று ராவணனைச் சந்திக்கவேண்டியது அவசியமென நினைவாக, அரண்மனைக்குப் புறப்பட்டான். விருந்தினர் குடிலிலிருந்து அவன் வீதியில் கால்வைக்க மெல்லிய குளிர் உடம்பை வருடிச்சென்றது. இரவு கசிந்த வியர்வை காய்ந்திருந்த மேனியில் இரண்டு மூன்று தடவைகள் தென்றலின் கரம் தடவிய பிறகுதான் லேசான குளிர்மை உணர்தலாகியது. எங்கோ ஒரு குயில்

இசையெடுத்தது. கிளி குரலெடுத்தது. சோலையொன்றிலிருந்து மயிலின் அகவல். சற்றுநேரத்தில் தனியே நெஞ்சினுள் புகுந்து வருடி இதம்செய்வதான இன்னிசை காற்றில் மிதந்துவந்தது. யாழின் மெல்லிய நரம்புகளில் நளினமுள்ள விரல்களிலிருந்தும், மென்மைப் பட்ட மனத்திலிருந்தும் பிறக்கக்கூடியதான இசை அது. சகல வன்பிறவிகளையுமே வன்மையகன்று மயங்கிப்போகச் செய்யக்கூடிய இசையின் பெருக்கு.

ராவணனைத் தவிர அது யாராயிருக்க முடியும்.

ராவணனுக்கு அதுவும் மன லயிப்பான காரியம். யாழ் அவன் கையில் தானாக இசைந்தது என்னுமளவுக்கு இசை பெருக்கத் தெரிந் திருந்தவன் அவன். எங்கெங்கிருந்தோவெல்லாம் யாழ்வாணர்களை வரவழைத்து அதன் நுட்பங்களைத் தெரிந்ததோடு, பலரோடு இசைப்போட்டி புரிந்து வெற்றிகளும் பெற்றுக்கொண்டிருந்தான். மகர யாழ், செங்கோட்டி யாழ் என்பனவான யாழ் வகை எதனிலும் அருமையான கீதமெழச் செய்ய அவனால் முடியும். அவனால் மட்டும்தான் முடியும். ஒரு நாகியாக கல்வி செல்வங்களினால் அகந்தை பெறும் மந்தாகினி, அந்தப்பொழுதில் மட்டும்தான் தான் தானாயின்றி ஒரு பரத்தையாய் அவனது அடி பணிவது.

தன்னிலை, சூழல், காலம் யாவும் மறந்து இசை பொங்கச் செய்து கொண்டிருப்பான் ராவணன். தனக்காகவேதான் அவன் இசைப்பதும். அவ்வாறு தனக்காக இசைக்கும்போதுதான், இசையின் அதி உச்சபட்சத் திறமை அவனில் வெளிப்படுவதாக நாகன் பலமுறையும் கருதியிருக்கிறான்.

ஒருமுறை நீலோற்பலத் தடாகமொன்றில் நீராடிக்கொண்டிருந்த ஒரு நாக கன்னி, அவன் இசைநயத்தில் மயங்கி தான் நீராடிக் கொண்டிருப்பதும் மறந்து, தடாகத்தைவிட்டு வெளியேறி அந்த இசை வழித் திசையில் பரவசவடைந்தவளாய் முன்னேறத் தொடங்கி விட்டாள். கொடியென இடை அசைய, மலரென மார்பசைய, காரெனக் குழலசைய அவள் ஒரு குளிர்மலைப் பிரதேச மடந்தையாய் நடப்பது கண்டு அன்று லங்காபுரத்தின் புறநகர்த் தெரு மலைத்துப்போனது. உற்றமும் சுற்றமும் அறிந்து ஓடிவந்து அவளை அணங்குபிடித்தவளாய்ச் சொல்லி வலிந்திழுத்துப்போய் இல்லின்கண் கட்டிப் போட்டது.

நாகன் தானே ஒரு கனவில் மிதப்பவன்போல்தான் அப்போது சென்றுகொண்டிருந்தான்.

கல்நிற அரண்மனை மங்கலாய்த் தெரிந்தது. அதன் முன்னே நீண்டு கிடந்தது மெல்லிய வெண்கோடாய் மக்கி வீதி. மரங்கள்

சரசரத்தசைந்த அக் காலையம்பொழுதில் கனத்த இருளை ஊடறுக்க ஒளி சிரமமடைந்துகொண்டிருந்தது.

திடீரென கண்முன்னே விசையொன்று நகர்ந்தது கண்டான் நாகன். பாடிக்கொண்டிருந்த பறவை ஏதேனும் பறந்ததாயிருக்கலாமோ. பெரிய உருவமாய்த் தெரிந்திருந்தது. மானாய் இருக்கலாமோ. மான்போல் விசைகொண்ட வேறு ஏதேனும் விலங்காயிருக்கலாமோ. இரவில்கூட விலங்கு ஏதேனும் அரண்மனைச் சூழலில் உட்புகலாம். ஆனால் விடியுமப்போது, காவல் மாறவிருக்கும் தருணமாதலால் அதற்கான சாத்தியம் அறுத்தது. அப்படியானால்ஞ்?

மாரீசனாயிருக்கலாமோ என்று எண்ணமெழுந்தது நாகனில். அவன் தவிர வேறு மானுடப் பிறவிக்கு அந்த வேகம் அரிதானது. முந்திய தருணங்களிலும் அவன் வரவு அம்மாதிரி இரவும் பகலும் சந்தி பிரியும் வேளையாயிருந்ததை நாகன் அப்போது நினைத்துக் கொண்டான். சரி, மாரீசன் வந்துவிட்டான் என திண்ணப்பட்டுக் கொண்டான் நாகன்.

அந்நேரமளவில் நாகன் அரண்மனை வாசலை அடைந்திருந்தான். காவலாளிகள் சிலர் பார்வையைக் கூர்த்தது தெரிந்தது. நாகனென அறிந்ததும் அவர்கள் அவதானம் அடங்கினர். மாரீசனைக் கண்ட தடயம் அவர்கள் முகத்தில் இல்லாததை நாகன் அவதானித்தான். அவன் அவர்களுக்கும் தெரியாமலேதான் உட்புகுந்திருக்கிறான்.

சிறிதுநேரத்தில் ராவண கீதம் அடங்கியது.

நாகன் அரண்மனை நந்தவனத்தைநோக்கி நடந்தான்.

வந்த வேளையும், வந்தவனின் முகத்தில் எறியப்பட்டிருந்த கனங்களும் கண்டு ராவணன் அவன் முக்கியமான வி'யம் பேச வந்திருப்பதை உணர்ந்துகொண்டான். கடந்த இரண்டு நாள்களிலுமாய் மனத்தில் சொல்லப்படாது கிடந்த பெரும்பயண வி'யமெதையோதான் நாகன் சொல்ல வந்திருக்கிறானென்பது ராவணன் எண்ணம்.

ராவணனை நெருங்க நடையின் வேகத்தைத் தணித்தான் நாகன். ராவணன் முகம் பொலிந்திருந்தது. நீராடி மெல்லிய ஆடை அணிந்திருந்தான். தலையின் ஈரம் இன்னுமேதான் முழுவதுமாய் உலரவில்லையென்று தெரிந்தது, அது ஈரப்பாரத்தில் அசையா திருந்ததுகொண்டு.

'மகிழ்பொழுதாயிருக்கிறது.' நாகன் சொன்னான்.

'மிகவுமே. மனத்திலுள்ளதை நேற்றே உன்னிடம் இறக்கிவைத்து விட்டேன். சிவன் சிலை முடிந்துகொண்டு. காண்டாமணி தன் கருமை

நீங்கி பளீரென்று ஒளிபெற்றுக்கொண்டு. ஓரிரு நாள்களில் சிலை நிறுவி, மணியும் உயர்த்தி வழிபாடு ஆரம்பமாகிவிடும் மலைக் கோயிலில். மந்தாகினியை அழைத்துப்போய்க் காட்டுவேன். சிவன்சிலையில் நாக குறி கண்டு பூத்துப்போவாள். மனத்திலுள்ள கசடுகள் அழிவாள். வாழ்க்கை இனி இனிதே தொடங்கும்.' கனவில்போல் சொல்லிக்கொண்டிருந்தான் ராவணன். பின், 'நீதான் மனத்தை மூடிவைத்து வதைபட்டுக்கொண்டிருக்கிறாய். அது உன் முகத்தில் தெரிகிறது' என்று கூறினான்.

'மெய்தான். சொல்லாமல் நான் படும் அவதி மிகையாகவேயுள்ளது. சொல்லிவிட்டால் நானும் பாரமிழந்து உம்போல் மகிழ்ச்சியை அடைந்துவிடுவேன். அவசரமாக நான் லங்காபுரம் வந்ததே சில செய்திகளைத் உம்மிடம் தெரிவிப்பதற்காகத்தான். நீர்தான் அவற்றைக் கேட்கின்ற நிலையில் இருக்கவில்லை.'

'இப்போது சொல், கேட்கிறேன்.'

'லங்காபுரத்துப் புறவன எல்லையில்தான் ஒரு இரவைக் கழிக்க நேர்ந்தது எனக்கு.'

'வியாழிகூடவா.' ராவணன் சிரித்தான்.

'ம். அன்று நள்ளிரவின்மேல் கேட்ட ஒலி என்னை அதிர்ந்துபோக வைத்துவிட்டது. விண்ணில் ஒலி கேட்டிருக்கிறேன். மண்ணுள் ஒலி..? நீர் கேள்வியாவது பட்டதுண்டா.'

'அது எப்படி மண்ணுள்ளிருந்து ஒலி கிளரமுடியும்.'

'நான் கேட்டேனே.'

'அது வேறிடத்தில் எழுந்ததாயிருக்கும். மதவேழம் ஏதேனும் தன் வலிய கால் பதித்து ஓடியதாலாயிருக்கும்.'

'பின்னர் அதை நான் கேட்கவில்லை.'

'அது நின்றுவிட்டிருக்கும்.'

நாகன் குழம்பினான். 'இல்லை, அரசே. நான் மண்ணுள்ளேதான் அதன் நொறுங்குகை ஒலி கேட்டேன். அன்று மாலை கரும்புகார் ஒன்று அசைந்து அசைந்து கிழக்கே போய் மறைந்தது. ஏதோ ஓர் அச்சம். வடக்கேயுள்ள நாடுகளிலே இவை தீயவை நிகழப் போவதன் முன்குறிகள் என்கிறார்கள்.'

'அவ்வப்போது நடப்பதுதானே. நான்கூடக் கண்டேன் அக் கரும்புகாரை. தலைநகரைத் தழுவியபடி அசைந்துசென்று மறைந்தது. அதனாலென்ன. நீ மிகவும் குழம்பியிருக்கிறாய், நாகா. வடக்கேயுள்ளவர்களுக்கு அது நம்பிக்கை. இது நமது நம்பிக்கை. அதைவிட வேறு என்ன.'

நாகன் அவன் பதிலில் திருப்தியுறாமல் சில கணங்கள் நின்றான். பின் தன்னிலேயே ஐயம் எழுவதாய்த் தோன்றியது அவனுக்கு. வியாழி கேட்டிருக்கவில்லை அவ்வொலி என்றது ஞாபகமாகியது. அவன் அடுத்த விஷயத்தைத் தொட்டான். 'கபாடபுரத்தில் ஒரு அந்தணனைக் கண்டேன். அவனும் என்போல் ஆறலைப்பவன்தான். அவன் சொன்னதும் என்னை யோசிக்கவே வைத்தது.'

'அந்தணன் என்ன சொன்னான் .'

'வடக்கே வெகுதொலைவிலுள்ள ஒரு நாட்டில் அரசிழந்த ஒரு இளவரசனின் மனைவி தன் கணவனும் அவன் தம்பியும் உடன்வர தெற்கு நோக்கி வனமறுத்து வந்துகொண்டிருக்கிறாளாம்.'

ராவணன் நிமிர்ந்தான். அது புதியது. 'தந்தையின் வார்த்தைக்காக பட்டமேற்காது ஒரு இளவரசன் காடேகினதாகச் சொன்னாயே முன்பு. அந்த இளவரசனும் அவன் மனைவியுமா.'

'அவளாயுமிருக்கலாம். ஆனால் அந்தணன் இந்த அளவு மட்டுமே கூறினான். அவள் பெயர்கூட ஏதோ சொன்னான்..ம்..சீதை...சீதை என்பதாம் அவள் பெயர். அவள் பொன்போல் ஒளிர்ந்து கொண்டிருப்பாளாம். அவள் செல்லும் திக்குகள் மஞ்சள் ஒளிபெற்று வனப்படைகின்றனவாம். காண்போரின் கண்கள் கிறங்கி, மனங்கள் மயக்குறுகின்றனவாம் .'

'இவ்வாறே சொன்னானா. அவனே கண்டானா.'

ராவணன் கண்களில் விரிவு. ஆசையின் அலைகள் அடித்தன அதில். உள்ளேயிருந்த கெடுவின் உறக்கம் கலைந்துவிட்டான் போலிருந்தது. நாக நாட்டின் நாகமணிச் சிம்மாசனம்பற்றிப் பேசும்போது அவன் கண்கொள்ளும் அத்தனை ஆவலும் அப்போதும் தெரிந்தன.

நாகன் தயங்கினான். அதைச் சொல்லியிருக்கப்படாதோ என்று அப்போது தோன்றியது. ஆனாலும் இனித் திரும்புகையில்லை. 'சொல்லு, நாகா' என மறுபடி ராவணன் வற்புறுத்த, 'அவன் அதைக் காண்பதற்கே புறப்பட்டுக்கொண்டிருந்தான். அவள் பேரழகி என அவன் அறிந்திருந்தான். ஆனாலும் அந்தப் பயணம் அவள் உடலின் ஒளிர்வுபற்றிய உண்மை அறிவதற்கேயென்று அவன் தெரிவித்தான்;' எனக் கூறி முடித்தான் நாகன்.

ராவணன் உறைந்துபோயிருந்தான். அவனை அந்நிலை கலைப்பது உசிதமில்லையென நினைத்து மவுனம் காத்தான் நாகன்.

சிறிதுநேரத்தில், 'மாமனே' என எழுந்தான் ராவணன்.

நாகன் திரும்பினான். பின்னால் மாரீசன் நின்றுகொண்டிருந்தான்.

# பத்தொன்பது

ஒல்லியான அந்த உயர்ந்த உருவம் மான் தோலாடை அணிந்திருந்தது. இடையில் குறுவடிவான ஒரு கண்டகோடரி. மரப்பட்டைபோல் உட்புறக் கைகளில் சொரசொரப்பு. விரிந்த சடை. ஒரு வெகுளித்தனமான சிரிப்பு முகத்தில் மெல்லெனக் காணக்கிடந்தது. காற்றின் விசையொடும் போட்டிகொள்ளும் அந்த விசைமனிதன் நாகனால் பன்முறையும் அரண்மனையில் அவன் வந்து தங்கிச்செல்லும் காலைகளில் அவதானிக்கப்பட்டவன்தான். ஆனாலும் அப்போது புதிய ஒரு வடிவத்;தில்பட்டதுபோல் பார்வை வியப்போடு நோட்டம் விட்டுக்கொண்டிருந்தது.

மாரீசன் நாகனை நோக்கிப் புன்னகைத்தான். அது அறிமுகமான தாயின்றி வேறெதையும் காட்டாத புன்னகை.

மாமனே என எழுந்த ராவணன் மாரீசனை நெருங்கினான். கட்டித்தழுவினான். அவர்கள் நீண்டநாட்கள் சந்தித்திருக்கவில்லையென்பதை உணர்ந்தான் நாகன்.

'தேவையான வேளையில் வந்திருக்கிறாய். நாகன் சொன்னது கேட்டாயா?'

'கேட்டேன். பொன்போல் ஒளிரும் அணங்கு. புதுமையாகவே இருக்கிறது. ஆனாலும் மிக வடக்கே வெண்மை மனிதர்கள்பற்றிய கதை அண்மைக்காலமாக லங்காபுரத்தில் உலவிக்கொண்டிருக்கிறது.' பதிலிறுத்தான் மாரீசன்.

அவனது வருகையும் அவன் அறிந்துள்ள அந்த வெண்மை மனிதர்பற்றிய வியம் சார்ந்ததுதான் என்பதை அனுமானிக்க நாகனுக்கு அதிகநேரம் பிடிக்கவில்லை.

ராவணன் ஒரு பரவச நிலையையே அடைந்திருந்தான். 'நீலமணிக் கண்கள்..பவள இதழ் முத்துப் பற்கள்..கனக முலைகள்.... பொன் மேனி.. அவள் இருக்கவேண்டிய இடம் ராவண மாளிகையல்லவா, மாமனே!'

'மணிகள் என்று வந்துவிட்டாலே அவற்றை உனக்காக்கிக் கொள்ளும் ஆவல் வந்துவிடும் உனக்கு.'

'என் பிஞ்சு வயதில் வளர்ந்தது அந்த ஆசை. என் தாய் என்னை அள்ளிவிளையாட வைத்தது வகைவகையான மணிக் குவியல் களில்தானே. அவளுக்கே அப்படியொரு ஆவல் அந்த மணிவகைகளில். நீ அறிவாயல்லவா!'

'அறிவேன். அவள் எனக்கும் மறைத்தேதான் அந்த பரம்பரைச் செல்வங்களைப் பாதுகாத்து வந்திருந்தாலும், நான் அவ்வப் போதாயினும் அவைகளைப் பார்த்துள்ளேன். அவள் அவை குறித்து நிறையப் பேசினாள் என்னோடு. என்னோடுதான் பேசினாளும். அவள் செல்லுமிடமெங்கும் நானும் சென்றேன் பேச்சுத் துணையாய். சிலவேளை பாதுகாப்பாய்.'

'அவளுக்கும் அச்சமிருந்ததா.'

'அச்சமா. அது அவளறியாதது. ஆனாலும் பாதுகாப்பு என்பது கவசம்போல.'

'என் மனம் இந்தக் காலைவேளையில் மிகமிக மகிழ்ச்சியாக இருக்கிறது, மாமனே. அந்தச் செல்வக் குவைகள் அவளைச் சேர்ந்த கதையை சொல்லேன், கேட்கலாம்.' ராவணனின் கண்கள் நீரரும்பிப் பிரகாசித்தன.

மாரீசன் பூங்காவின் மறுமூலைக்கு நடந்தான். ஒற்றைக் கையினைச் சுட்டி நீட்டினான்.

ராவணன் தொடர பின்னே சென்ற நாகன் கைத்திசையை நோக்கித் திரும்பினான்.

மும்மலை தெரிந்தது.

'நீ சொல்லியிருக்கிறாய் முன்பும். வெட்ட வெட்டப் பொன்னும் மணியும் பெருக்கெடுத்தனபோல் கிளர்ந்ததாய். என் தாயும் சொல்லி யிருக்கிறாள்தான். ஆனாலும் அது பதுக்கிப் பாதுகாத்த இடமாயே இருந்திருக்கலாம், மாமனே. மலையுள் விளைவதெனில் இன்று என்ன ஆனது அவ் விளைச்சலுக்கு.'

'நீயும் மலை பிளந்தவன்தானே அது காண. ஆனால் ஒளிர்கல்கள் காணக்கிடைக்கவில்லை.'

'அதனால்தான் அது பதுக்கப்பட்ட இடமாய் இருந்திருக்க வேண்டுமென நான் நம்பக் காரணமானது.'

மாரீசன் எதுவும் பேசவில்லை.

நாகனும் மௌனமாய் இருவரையும் பார்த்தபடி. தான் அங்கே யிருப்பதால்தான் மாரீசன் அது குறித்துப் பேசத் தயங்குகிறானோ என்றும் ஒரு ஐயம் மெல்லென்று கிளர்ந்தது நாகனில். ராவணன் அப்படி நினைப்பவனல்ல. மாரீசன் நினைக்கக்கூடும்.

அவனது விரைவு அவனது ஐயத்திலிருந்து எழுந்தது. அவன் அரண்மனையை ஐயப்பட்டே காடேகினவன். காட்டிலும் மிருகங்கள் தவிர மனிதரை அணுகாதே வாழ்ந்துவருபவன். நாகன் அறிந்திருந்தான்.

செல்வ நகராக மட்டுமில்லை, பயங்களின் நகராகவும் லங்காபுரம் இருந்திருக்கிறது ஒருகாலத்தில். கல்பிளந்து மணியெடுத்துக் கொண்டிருந்த பொழுதில், இயக்கரும் நாகருமான மனிதர் இரகசியம் அறிய அண்மித்தவேளைகளில் அவர்கள் கொன்று போடப் பட்டதுதான் நடந்தது. ஆட்சிக்குப் பொறுப்பாயிருந்த எந்தத் தலைவனும் சிறிதுகூடக் கருணை காட்டவில்லை இந்த வியத்தில். இயக்க இனத்தின்மீதான பயம் காலகாலமாய் உறைந்து போகும் படியான மரணங்கள் அவை. ராவணன்மீதான பயத்தின் மூலம் அங்கே இருக்கிறது.

தானே கல்பிளந்த கதையை ராவணன் நாகனுக்குக் கூறியிருக்கிறான். தான் அந்தமாதிரி மணிக்குவை அடையாதது அவனுக்கு வருத்தமாயும் இருந்தது. மலைபிளந்த ராவணன் என்று சிறிதுகாலம் அவமாய் ஒருபெயரும் அவனில் நிலைத்திருந்தது. இவையும் நாகன் ராவணன் சொல்லி அறிந்தவையே.

சிறிதுநேரத்தில் ராவணன் கேட்டான்: 'என்ன செய்யலாம், மாமனே!'

'எதற்கு' என்றான் மாரீசன்.

'பொன்னொளிர் மங்கைபற்றிக் கேட்கிறேன்.'

பொன்னொளிர் மங்கையை என்ன செய்வதா. நாகன் திடுக்கிட்டான். அவன் அச் செய்தியை அவசரமாய்க் காவிவந்ததே ஒரு தகவலாய் ராவணன் அறிந்திருக்கட்டுமே என்பதற்காகத்தான். மேலும் வேற்றுநாட்டார் சிலர் தென்திசை நோக்கி வருவதும் ஒரு நாட்டின் அரசனாய் ராவணன் அறிந்திருக்கவேண்டிய விஷயமாகவே அவன் எண்ணத்திலிருந்தது. ஆனால் அவன் கேட்கிறான், அவளை என்ன செய்யலாம் என.

மாரீசன் சொன்னான்: ' உன் ஆசை புரிந்தது, ராவணா. எல்லா மணியையும்போல் அவளையும் உன் மணியாக்கப் பார்க்கிறாய்.

சொன்னால் நீ விடப்போவதில்லை. ஆகவே ..அடைந்துவிடு அவளை.'

'அவள் மாற்றான் மனைவி.' விரைந்து இடைமறித்தான் நாகன்.

'இல்லை, நாகா. மாற்றான் மணி. மணி என்பது எங்கே, எப்படி, யாருக்குச் சொந்தமானதாய் இருப்பினும் அது ராவணனிடத்தில் வந்துசேர்ந்தாக வேண்டும். லங்காபுரத்தின் இறுக்கமான சட்டம் நீ அறியாததா.' ராவணன் நிதானமாய்ச் சொன்னான்.

'அவள் வேற்றுநாட்டவள். உன் அதிகாரம் அவளெல்லையை அணுகாது.'

'அணுகும். அவர்கள் தென்திசைநோக்கி வருவதே போதுமானது எனக்கு. என் செல்வக் குவைகள்நோக்கி இன்னொரு செல்வக் குவை வந்துகொண்டிருக்கிறது. விட்டுவிடவா' எனக் கூறி கடகடவெனச் சிரித்தான் ராவணன்.

'அவள் தந்தை வடக்கே மிக வலிமை வாய்ந்த அரசனென்றான் என்னிடம் தகவல் தெரிவித்த கபாடபுரத்து அந்தணன்.'

'ராவண வலிமை அதைவிட அதிகம், நாகா' என்று அப்போது தலையிட்டான் மாரீசன். 'மாற்றான் மனைவி..வேற்று நாட்டார்.. என்பதெல்லாம் நாக இனத்து அளவுகோல்கள். எங்கள் இயக்க இனத்தில் வலிமையே சகலமானதும். வலிமையானவனுக்கே மனைவியும், நாடும், செல்வமும் எல்லாமும். ராவண வலிமைக்கு இந்த நாடு, இந்தச் செல்வம் எம்மாத்திரம்! ராவணன் அந்தப் பொன்னொளிர் மேனியாளை அடைவதே தக்கது.'

ராவணன் சொற்ப நேரம் ஏதோ சிந்தனையுள் மூழ்கியவனாய் நின்றிருந்தான்;. பின் அரண்மனையுள் நடந்தான். மாரீசனும் நாகனும் பின்தொடர்ந்தனர்.

ராவணன் வேலையாட்களை அழைத்தான். வாசலில் நின்றிருந்த இரு வேலையாட்கள் அக்கணமே அவன் முன்னால் ஓடிவந்து நின்றனர்.

'குதிரைகளைத் தேரிலே பூட்டி பயணத்துக்கு தயாராக்குங்கள.;' ராவண கட்டளை பிறந்தது.

நாகனுக்கு ராவணனின் திட்டம் விளங்கியது. இனி நியாயமுரைத்து அவனைத் தடுத்துவிடமுடியாது. 'நீர் காலநிலையையாவது யோசித்தாகவேண்டும். மழை பெய்திருக்கிறது சிறிதாயோ பெரிதாயோ நேற்று இரவில். வீசிய குளிர்மை அதையே காட்டியது. இந்தநிலையில் நீர் மாந்தைக்கு அப்பாலுள்ள பாலை வெளியைக் கடப்பது சிரமம்.

சேற்றில் தேர்ச் சில்லுகள் புதைந்து பயணம் இடையறுந்துபோகும். எண்ணத்தைக் கைவிடும்.'

'எனது தேர் பாலையைப் பறந்து கடக்கும், நாகா.'

நாகன் வாயடைத்து நின்றான்.

ராவணன் கதக்கண்ணனை அழைப்பித்தான். 'நான் வெளியே செல்லவேண்டியிருக்கிறது. திரும்பும்வரை அரண்மனைக் காவல் உன் வசத்தில்.'

ராவணன் தேர்க் கொட்டிலைநோக்கி நடந்தான்.

அவன் அகன்று வெகுநேரமாகியும் அசையாது அவ்விடத்திலேயே நின்றிருந்தான் நாகன். 'ராவண ஆசையைக் கிளறும் செய்தியைக் கூறி அவனைத் தகாதுசெய்யக் காரணமாகிவிட்டதான எண்ணம் அவனை நிலைகுலைந்துபோகச் செய்திருந்தது.

விளைவுகளை நாகனால் அனுமானிக்க முடிந்தது. அவன் அதுபோன்ற கதைகள் பலநூறுகளை அறிந்தவன். மனைவி ஒருவனின் சொந்தம் மட்டுமில்லை, சொத்தும். சீதையை இழக்கப்போகும் ஆட்சியிழந்த அரசகுல அவளது கணவனும், அவளின் தந்தையும் வாளாவிருந்துவிடமாட்டார்கள். யுத்தம் வெடிக்கும். மரணங்கள் நிறையும். ராவணன் சூாவியமாவான். அல்லது சீதை. ஆனால் லங்காபுரத்தின் இயல்பு என்னவாகும்.

நாகன் தன்னிலையடைய வெகுநேரமாயிற்று.

அவன் இனி அரண்மனையைவிட்டு நீங்கலாம். நீங்கிவிடவேண்டும். பல காரணங்களுக்குமாய் அதை அவன் செய்தாகவேண்டும்.

நாகன் மெல்ல நடந்தான். எதுவும் பேசாது விலகும் அவ்வுருவத்தைப் பார்த்தபடியே நின்றிருந்தான் கதக்கண்ணன்.

அப்போது விசைத் தேரின் ஒலி எழுந்தது. தொடர்ந்து மக்களின் ஆரவாரம்.

'தலைவா! தலைவா! தலைவா!'

# இருபது

**த**னித்துறங்கும் ஒரு பெண்ணுக்கு இரவு எவ்வளவு கொடுமையானது என்பதை அண்மைக் காலங்களில்தான் அனுபவங்களில் அடைந்துகொண்டிருந்தாள் மந்தாகினி. பருவகாலம் அவ்வாறாக இருந்தது. மேனியெங்கும் நசநசப்பாகியது. காற்றும் உறங்கியது அக் காலத்தில். துகில் பாரமாகி வெறுமேனியாய்க் கிடக்க ஓரளவு இதம் சேர்ந்தது. மழை வரப்போகும் குறிகள் அவ்வப்போது வெளித்தோன்றி துணைக்கான அழைப்பை தூதுகளில் அனுப்பத் தூண்டிக்கொண்டிருந்தன.

வெளிச்சக் கூடுகள், தீப்பந்தங்கள், விளக்குகள் ஏற்றப்பட்டாலும், அவை இருளையே பிறப்பித்துக்கொண்டிருப்பதான தோற்றத்தையே கொடுத்துக்கொண்டிருந்தன அவளுக்கு. மாளிகை மாலையில் பிரகாசிப்பதாய் இருக்கவில்லை. இருள் எந்நேரமும் அங்கே அடங்கி உறைந்திருக்கிறதா. அதுவேதான் மனவிருளையும் செய்து கொண்டிருக்கின்றதோ.

இருளிலும் தன் உழல்வு தெரியவேண்டாமென்று புசமித்தையை வேறிடத்தில் படுக்கச் சொல்லிவிட்டிருந்தாள். தன் உடல் கொள்ளும் வெறியை சாதாரணளுக்குக் காட்ட அவள் விரும்பாதிருந்ததே காரணம். விழித்தபொழுதில் துணைக்கழைத்துப் பேச அதனாலேயே யாருமற்றவளாய் இருந்தாள்.

இன்னோர் அறையில் சித்தன் உறங்கிக்கொண்டிருந்தான். அவள் ஒரு தாயாய்ப் பெருமை கொள்ளும்படிக்கான வளர்ச்சியில் அவன். அமைச்சனும், சிலபோது வீடாணனனும் சொல்வதிலிருந்து அவனது ஆயுத வித்தையின் அற்புதங்கள் அறிந்து அவள் பெருமிதப்பட்டுப் போகிறாள். கல் பிளக்க அம்பெய்யும் திறன் எக் காலத்தில், எவர் பெற்றிருந்தார். அவன் பெற்றிருந்தான். அந்த நீல மேனியில் சேடியரின் பார்வைகள் மறைந்துமறைந்து விழும்போது அவள் கண்டு கொள்ளும் இன்பம் ஒரு தாய்க்குமட்டுமானது. மனதை இன்னும்

அலைக்கழிக்கத் தெரியாத பிள்ளை அவன். வயதும் அப்படித்தான். மனம் தாயாக, உடம்பு தந்தையாய்ப் பிறந்த பிள்ளை சித்தன்.

உறக்கம் இழந்த இரவினைக் கழித்துவிட்டு மந்தாகினி தன் மஞ்ச அறையிலிருந்து வெளிவந்தாள். நீல விசும்பும், கீழ்ப் பரவையிலிருந்து பரிதி எறியும் சிவப்பும், பறவைகளின் கீதவகைகளும்கூட அப்பியிருந்த மனவிருளை விலக்கப் போதுமானதாயில்லை என்பதைக் கண்டு கொண்டாள்.

உடல் இனி தவனம் தாங்காது என ஆகியிருந்ததை அவள் புரிந்தாள்.

அப்போது ஒரு இனிமை தன் இழைகளைக் கலந்துகொண்டிருந்த காற்று அவள் பக்கலில் நகர்ந்து வந்தது. என்ன இது! இந்த நேரத்தில் அவனது இசை! என்ன இனிமை! யாழ் தன் இனிமைகளையெல்லாம் தானே பிழிந்து காற்றில் எறிகிறதா.

அது ராவணன்தான் என்பது யாரும் சொல்லி மந்தாகினி தெரியவேண்டியதில்லை. அவள் அதை அருகிருந்து பருகி அனுபவித்தவள்.

தன் உடலில் வெறியைக் கிளர்த்திய உணர்ச்சிகள் மெல்ல அச் சுவையில் தாமாய் அடங்கிக்கொண்டு போவதுபோல் இருந்தது அவளுக்கு. ராவணன் தன் சொந்தத் தாபத்தைத் தணிக்கத்தான் அந்த அதிகாலைவேளையில் யாழெடுத்தானோ என்றும் தோன்றியது. உலகின் கீதங்களையெல்லாம் மௌனமாக்கிய அந்த இசைவாணனை அப்போதே ஓடிப்போய்த் தழுவ, தன் உயிரினைப் பிழிந்து அமுதமாய்ப் பருக்க உள்ளம் பரபரப்படைந்தது.

அவள் விலகியிருப்பவள்!

அவளின் மெய், மனக் கனதிகள் மெல்லமெல்லமாய்த் தணிய கீதமும் தன் சுதியிறங்கி வந்து, வெளியில் வெறிதை நிறைத்துவிட்டு நின்றது. ராவணன இன்னும் இசைக்கமாட்டானா, தன் உயிரை வகிரும்படிக்கென்று கண்ணீர் கசிய அரண்மனைத் திக்கில் பார்த்து ஏக்குற்று நின்றிருந்தாள் அவள்.

மிக்க மனமகிழ்பொழுதுகளிலேயே ராவணன் அவ்வாறு யாழெத்து இசைப்பது வழக்கம். இரவுகளில் பெரும்பாலும் வேறுபேர் இசைக்கத்தான் ராவணன் அனுபவிப்பான். அதுவும் அன்றாடமின்றி அபூர்வமாய் நிகழ்வது. எல்லாம் யோசிக்க, தான் அவனிலிருந்து நிரந்தரமாய் அந்நியப்பட்டுப்போன உணர்வொன்று வந்து அவளை அமுத்தி மூடியது.

தன் ஒதுங்குதலால் அதுவரை என்ன மாற்றம் நிகழ்ந்தது ராவணனிடத்தில் என நினைத்தபோது, தன் மீதிக் காலமும் அவ்வாறே வெறிதே கழிந்துவிடுமோவென்ற அச்சம்தான் பிறந்தது அவளிடத்தில். தன் ஒதுங்குகை தானெடுத்திருக்கவேண்டிய சரியான வழிதானா என்ற ஐய்யப்பாடு சிந்தை முழுக்க நிறைந்தது. தான் தன் குல நியாயங்களின்படி அரச தலைவிக்கான சமதையான அதிகாரங்களை இச்சித்தது ஒருவேளை யார்யாரினதோ ஊக்குவிப்பில் அளவுக் கதிகமாகிவிட்டதோ எனவும் ஒருபோது எண்ணத் தலைப்பட்டாள்.

மலைக்கோயில் நிர்மாணம், ஆயிரங்கால் மண்டபம், காண்டாமணி யாவும் நாக வழிபாட்டினை அழிக்க ராவணன் எடுத்த முடிவோ என பிற நாக அரச அதிகாரிகள்போல் தானும் எண்ணியது பிழையானதா உண்மையில்.

நாடு மாறிக்கொண்டிருக்கிறது சிறிதாகவோ பெரிதாகவோ. வனவாசிகளும் மலைவாழுநரும்கூட கூடிவாழ்தலும், குடும்பமும் கொண்டு வாழத் தெரிந்துகொண்டு வருகிறார்கள். வேறு வேறு மொழிகள் பேசும், வேறுவேறு வணக்கங்களைப் பேணும் மனிதர்கள் லங்காபுரம் வந்துசெல்கின்றனர். சிலர் நிலையாகத் தங்கியும் விடுகிறார்கள். பரத்தையர், அந்தணர், சிற்பிகள், இசைவாணர் என பல்வேறு வகைகள். நாக குடி பாதிப்படையாதா எனச் சிலர் கேட்ட கேள்விகள் சூழலறியாதவையோ. தான் அவர்களை நம்பியதும், ஓரளவுக்கு தானே அவ்வாறாய் எண்ணியதும் பெரும்பிழையோ.

அவள் எண்ணங்களால் சிதைந்துகொண்டிருந்தாள்.

அந்தளவில் ராணிமாளிகையும் வேலையாட்களினதும், தோழிகளினதும் ஊசாடற் சலனமுறத் தொடங்கிவிட்டிருக்க, மந்தாகினி தோட்டத்துக்கு நடந்தாள்.

அந்தக் கோலத்தில் இருக்க அவள் என்றும் விரும்பியதில்லை. அவள் அவர்களின் வணக்கத்துக்குரியவள். அவள் அவர்களின் மாதிரிக்கானவள். அந்த மெல்லிய நீலநிற மேனி எந்நாளும் பளீரென்றுதான் இருந்திருக்கிறது அவர்கள் கண்காண. அணி கலகலத்து அசைந்தாடிக்கொண்டிருக்கும் மேனி அவளது. மந்தா கினியின் கழுத்தில் முக்கல் பதித்த அரிய மணிமாலையொன்று எப்போதும் அசைந்துகொண்டிருக்கும், மணிமாலை முலைகளை அசைத்ததா, முலைகள் மணிமாலையை அசைத்தனவா என அறியமுடியாதிருக்கும் அதிசயம் நிகழும்படிக்கு. அக்கணத்திலோ மணிமாலை, முன்கை நிறைந்த வளைகள், காதில் தொங்கும் வளையம் எதுவும் அற்றிருந்தாள். அது தன்நினைப்பும் இல்லையாகி இருந் திருக்கிறாள் என்பதை அவர்களிடத்தில் காட்டிவிடும்.

பூவனம் வந்தபோதுதான் அந்த ஆரவாரங்தளை அவள் செவிமடுத்தது. 'தலைவா! தலைவா!'

கோட்டையிலுள்ள காவலர்களின் வாழ்த்தொலி அது. ராவணன் விசைத்தேர் ஏறும் தருணங்களிலேயே அவ்வாறு வாழ்த்தொலி யெழுப்பி பரவசப்படும் படை. அவனது புறப்பாடு முன்தெரிந்த தெனில் கொம்புகள் ஊதியிருப்பார்கள். பறைகள் முழக்கியிருப்பார்கள். ராவணனது அந்த விஜயம் திடீரென ஏற்பட்டிருக்கிறது.

ராவணன் எங்கே போகிறான்.

அவள் மாளிகையின் மேல் தளத்துக்கு விரைந்தாள். பார்வை கோட்டை வாசல்வரை பரந்தது. அந்தளவில் கோட்டை வாசல் மறுபடி பூட்டிவிட்டிருந்தது. காவலர்களின் வாழ்த்தொலி அடங்கிக் கொண்டிருந்தது.

அவள் மனத்தில் இப்போது பலபட்டெழுந்தன வினாக்கள்.

முக்கியமான பொழுதுகளிலன்றி ராவணன் விசைத் தேர் எடுப்பதில்லை. ஒன்றில் போராயிருக்கும். அல்லது யாராவது நாக இனத் தலைவனின் தனியாளுகைக்கான முனைப்புகள் தெரிந்து அவனை ஒறுத்தல்செய்வதற்கான பயணமாக இருக்கும். அல்லது பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டு வரும் மேற்றிசை வன விளிம்பில் ஒவ்வாத மனிதரின் நடமாட்டம் அறிந்து விசாரணைசெய்ய அவன் விரைந்து செல்வதாயிருக்கும்.

சூரப்பாநகையின் ஒருநாள் இரவு மறைவு சம்பந்தப்பட்டதாய் அது இருக்குமோ. அதுபற்றி அவன், அதிசயப்படும்படி பின்னர் கண்டிக்காமலே விட்டிருந்தான். அறிந்த முதல் கணத்தில்தான் கத்தினான், குமுறினான், திருகிப்போட்டுவிடுவேன் என உறுமித் திரிந்தான். அவள் வந்த பின்னால்..? மறந்திருப்பானா. மறந்திருப் பானெனில் அவ்வாறு மறப்பதற்கான வலுவான வேறு காரணம் அவனது சிந்தையை இழுத்தெடுத்திருக்கவேண்டும்.

ஒருவேளை முதுஅமைச்சன், வீடாணன் ஆகியோரின் இரகசிய ஒன்றுகூடல்களும், லங்காபுரத்தின் செல்வக் குவியல்பற்றி அறியும் இரகசிய முயற்சிகளும் தெரிந்து அவர்களின் சூழுநரை முதலில் ஒறுக்கத்தான் காற்றுவேகத்தில் செல்ல விசைத்தேர் எடுத்தானோ.

பிரானை இரகசியத்தில் சந்தித்ததாய் வீடாணன் சொல்லி யிருந்தான். மணிக் குவைகள் பதுக்கிவைக்கப்பட்ட பாதாள அறைகள்பற்றி பிரான் அறிந்திருக்க முடியும். ஆனாலும் அவன் மௌனியாகிவிட்டிருக்கிறான். பிரான் கபாடபுரத்திலிருந்து அண்மையில்தான் லங்காபுரம் திரும்பியிருந்தான்;. ராவணனுக்குப்

பயந்தே நாட்டைவிட்டோடியதாக எல்லோரும் பேசிக் கொண்டார்கள். பிரானின் போக்குத்தான் ராவணனுக்குப் பிடிக் காதிருந்ததே தவிர, அவன் கலை பிடித்திருந்தது. மலைகளை யெல்லாம் சிலைகளாக்குவேன் எனச் சொல்லிக்கொண்டிருந்த அந்த குடிகாரச் சிற்பியை வெகுவாகக் கொண்டாடியவன் ராவணன். அவன் மீது சினங்கொண்டு தேடிச்செல்ல ராவணனுக்கு எதுவித காரணமு மில்லை.

பின் எது காரணத்தால் ராவணன் இந்த விடிகாலைப்பொழுதில் விசைத்தேர் பூட்டிச் சென்றான்.

முன்னரெல்லாம் தன்னிடம் வந்து விடைபெற்று அவன் சென்ற நிலைமையை எண்ணினாள் மந்தாகினி.

அது அவளைச் சாம்பவைத்தது.

அப்போது கீழே தொலைவில் சூர்ப்பாநகை தோழியர் சிலருடன் வந்துகொண்டிருப்பது தெரிய, புசமித்தையைக் கூப்பிட்டு, அவளை அழைத்துவரப் பணித்தாள்.

சிறிதுநேரத்தில் சூர்ப்பாநகை வந்தாள்.

'காணாமல்போன இரவிலிருந்து இங்கே வருவதை நிறுத்தி விட்டாயா. எங்கே போயிருந்தாய். உன் அண்ணன் குணம் உனக்குத் தெரியாதா. ஏதோ மறதியில் உன்னை மறுபடி அவன் பார்க்கவில்லை. பார்த்தானோ, தொலைந்திருப்பாய். இனிமேலாவது அவன் சொல்படி நட. அரண்மனை நடைமுறைகள் எல்லாம் மாறிக்கொண்டு வருகின்றன. ஊர் நிலைமையும் மாறிக்கொண்டுதான் வருகிறது. தலைவனாய் இருந்த ராவணன் அரசனாகிக்கொண்டு வருவதாக அமைச்சன் கூறுகிறான். அப்படியானால் தலைவனின் தங்கையாக இருந்த நீயும் இளவரசி ஆகிக்கொண்டிருக்கிறாயில்லையா. கவனமாய் இருந்துகொள்' என்றவள்,'சரி, இப்போது இந்த அதிகாலையில் எங்கே போய்வருகிறாய்' என்று சூர்ப்பாநகையைக் கேட்டாள்.

'நாகனைப் பார்க்க, விருந்தினர் குடிலுக்கு.'

'இந்த வேளையில் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கக்கூட மாட்டாயே முன்பெல்லாம். நாகனைச் சந்திக்க அப்படி என்ன அவசரம்.'

'நீண்டநாட்களாக மனத்தில் ஒரு கேள்வி. வட தூர திக்கில் வெண்மனிதர்கள் இருக்கிறார்களாம். அவர்கள் இடம்பெயர்ந்து தெற்குநோக்கி வருவதாகக் கதையும். அதுதான் நாகனிடம் கேட்டுவரப் போயிருந்தேன். நாகன் அண்மையில்தானே திரும்பியிருந்தான் தன் நெடும்பயணத்திலிருந்து.'

‘உன் கேள்விக்கு நாகன் விடை சொன்னானா.’

‘உம்..சொன்னான். வடக்கே பாரசீகம் என்றொரு நாடு உண்டாமே. அங்கிருந்து பனிமலை கடந்து வந்தவர்களாம் அவ்வெண்மனிதர்கள். அது பெரிய ஆவலைக் கிளர்த்திவிட்டிருக்கிறது என்னிடத்தில்.’

‘அதிலென்ன ஆவல் வந்தது உனக்கு.’

‘கோட்டைக்குள்ளே மரங்கள் எல்லாமே இலையுதிர்த்து. வெளியில் எங்குமே வெறுமை. புழுதியடிக்கிறது காற்றசைவில். மனம் திணறிக்கொண்டிருக்கிறது ஒரு சிறகடிபுக்காய். அதனால்தான் அன்று மாலை கொண்டனாமிகையுடன் வனப்பசுமை காணப் போயிருந்தேன். அப்போது சந்தித்த ஒருவனிடம் இதுபற்றிக் கேட்டேன். அவன் காக்கையில் வெண்காக்கை பார்த்திருக்கிறாயா, யானையில் வெண்யானை பார்த்திருக்கிறாயா, அப்படி இல்லாதபோது மனிதர் களில் மட்டும் வெண்மை எப்படியென்று என்னைப் பரிகசித்து விட்டான். நாகனோ வெண்மனிதர்களின் இருப்பைக் கூறுகிறான். பார்த்தால்தானே எதையும் நிச்சயமாய்த் தேரமுடியும்.’

‘பார்த்தே எல்லாவற்றையும் நிச்சயப்பட முடியுமெனில் பாதி மனிதரின் ஐயங்கள் எப்போதும் தீரமுடியாதவையாயே இருக்கும்.’

‘எனக்குப் பார்த்தால்தான் இந்த விசயத்தை நம்பலாம்போல இருக்கிறது. அறிவாயன்றி அனுபவமாய் அடைய மனம் விரும்புகிறது.’

‘இதைக் கூறிக்கொண்டு மறுபடி எங்கேயும் காணாமல் போய்விடாதே. உன் அண்ணன்கூட கோட்டையில் இல்லை. விசைத் தேர் பூட்டிக்கொண்டு போயிருக்கிறான். திரும்பவந்து கேட்டால் நான் பதில் சொல்லமுடியாது. அதுசரி, உன் அண்ணன் எங்கே போயிருக்கிறானென்று நாகன் ஏதாவது அறிந்தானா.’

‘நாகன் மனநிலை சரியில்லாதவனாயே இருந்தான் நான் சென்றபோது. என் கேள்வியைக்கூட அவன் உற்சாகமாய்க் கவனிக்கவில்லை. நான் திரும்பத் திரும்பக் கேட்கவேண்டியிருந்தது. அவன் மறுபடி பயணம் தொடங்கப்போகிறான்போலும்.’

‘அதற்குள்ளாகவா.’

‘அறியேன். அவன் சொல்லவில்லை. இது என் அனுமானம்தான். மாமன் வந்ததாயும், அவனுடனேயே அண்ணன் வெளியில் சென்றுள்ளதாகவும் சொன்னான்.’

‘மாரீசனுடனா.’

‘ம்.’

‘ஏனென்று சொன்னானா.’

‘இல்லை.’

‘நல்லதுக்காய் இருக்காது. நாகனின் புறப்பாடும் சந்தேகத்துக்குரியதே. அவன் இரண்டு ஆண்டுகளின் பின் நாடு திரும்பியிருப்பவன். வந்து சிலநாட்களே ஆகியுள்ள நிலையில் மறுபடி பயணம் தொடங்குவ தென்பது சாதாரணமானதல்ல.’

மந்தாகினி யோசனை வயமானாள்.

அவளின் சந்தேகங்கள் பொருளற்றவையாய்த் தெரிந்தன சூர்ப்பாநகைக்கு. அவள் சொல்லிக்கொண்டு தன் மாளிகை சேர்ந்தாள்.

மந்தாகினி இடம்பெயராது அந்த இடத்திலேயே.

அப்போது உயரத்தே வல்லூறு ஒன்று குரலெடுத்தபடி மிதந்து கொண்டிருப்பது கண்ணில் பட்டது. தூரத்து மரத்தில் காக்கைகள் சில சண்டை பிடித்தன.

மந்தாகினியின் உடம்பு நடுங்கியது.

# இருபத்தொன்று

சூர்ப்பாநகை வந்து சென்றபின்னர் ஒரு சிறுபொழுது கண் மூடியிருந்து தான் இனிச் செய்யவேண்டியது குறித்தான காரியங்களை மன அடுக்கில் ஒழுங்குபடுத்தினான் நாகன். அவனுள் முடிவு ஏற்கனவே விழுந்திருந்தது.

தனக்கேற்பட்ட புறக்கணிப்புக்களாலன்றி, தன் இரகசியப் பாதுகாப்பிற்காவது அவன் அரண்மனையைவிட்டுச் சிறிதுகாலம் நீங்கித்தான் இருக்கவேண்டும். அந்த நீங்குகை அப்போது நிகழ்வது தான் சிறப்பானதாய் இருக்கமுடியும்.

சரி, இனி அவன் கிளம்பலாம்.

தன் துணிப்பொதியையும், கைக்கோலையும் எடுத்தான் நாகன். அப்போது அங்கே வந்த குடில்களின் கவனிப்பைச் செய்து கொண்டிருந்த இயக்கப்பெண் சேத்தியா வந்தாள். அவனது திடும் பயணத்தில் ஆச்சரியப்பட்டு, 'நாகா, நீ புறப்படப் போகிறாயா' என்றாள்.

நாகன் மௌனமாய்த் தலையசைத்தான்.

'எல்லோரிடமும் சொல்லிவிட்டாயா' என மறுவினாத் தொடுத்தாள் அவள்.

நாகன் சிறிது தயங்கினான். ஒரு விருந்தாட்டை அயர்ந்துவிட்டு திடீரென விழிப்புப் பெற்று விடைபெறுதலின்றி ஓடுவது பண்பாடலல்லவென வேலைக்காரி உணர்ந்தவளவு தான் உணரவில்லையே என ஒரு கணம் குற்றவுணர்வுபட்டுக் கலங்கினான். அதைச் சூர்ப்பாநகையிடமாவது தெரிவித்திருக்கலாம் என அப்போது எண்ணமெழுந்தது. பின் தெளிந்துகொண்டு, 'இது பயணப்பாடு இல்லை. சிறிது வனமளாவித் திரியப்போகிறேன். விரைவில் திரும்புவேன்' என்றான்.

'நிச்சயமாக வருவாயா' என்றாள் சேத்தியா.

நாகன் அவளைத் திரும்பிப் பார்த்தான். அவளது முகத்தில் ஓடியிருப்பதென்ன. அவன் பிரியப்போவதன் வருத்தமா. ஏன். அவன் குடும்ப உறவுகளற்று ஊரூராய்த் திரிவதில், அவன் குறித்தான சில தவனங்கள் பிற பெண்கள் மனத்தில் சுழன்றோட வாய்ப்பாகுமெனக் கருதுதல் முடியுமாயிருந்தது.

நரை விழும் வயதிலும் தன்மீது ஏன் இப்பெண்களுக்கு மோகம் என அவனால் கண்டுகொள்ள முடியவில்லை. சேத்தியா போலவே வியாழியும். லங்காபுரம் செல்வவளம் பெற்ற நாடு. உண்ண உண்ணக் குறைவுபடாத ஊண்வகை மிகுந்த நாடு. அதனால்தான் அங்கே ஆடலும், பாடலும், யாழிசையும், சிற்பக் கலையும் பெருகிக்கிடந்தன. அது ஒரு மதர்ப்பை எவரிடத்திலும்தான் விளைத்தது.

இயக்கப் பெண்கள் வடிவில் குறைந்தவர்களெனினும் வாகானவர்கள். அந்த உடலம்சம் எந்த இனப் பெண்ணுக்கும் வாய்க்காதது. வியாழி அதன் உச்சம். அவள் இடையின் மேல்பகுதி மறைத்தறியாதவள். அழகின் அமைப்புக்கள் அப்பட்டமாகத் தெரியத் திரிபவள். அரண்மனையில் பெண்கள் மார்பு மறைத்தனர். ஆனால் தங்கள் ஆசைகளைத்தான் அவர்கள் மறைப்பதில்லை. காமம் லங்காபுரத்தில் பாவமாகக் கருதப்பட்டிருக்கவில்லை. ஓராணும் ஒரு பெண்ணும் விரும்பிவிட்டால் அவர்கள் குறியிடங்களில் சந்தித்து புணர்ச்சிகொள்ளத் தயங்காத பண்பாடு ஒன்று விரிந்திருந்தது அங்கே. பெண்ணே அதை அதிகமாகவும் செய்தாள். அவளது அதிகாரத்தின் சரிவு எங்கோ ஓரிடத்தில் நிகழ்ந்தபோதிலும், காமம் அவளது ஆட்சியிலேயே இருந்ததாய்ப்பட்டது நாகனுக்கு. அண்மையில்தான் ஒருவனோடு வாழ்தல் என்கிற ஒரு வாழ்முறை அங்கே பரவலாகிவந்துகொண்டிருந்தது. அந்நிலைமை அவன் கண்ட எந்த நாட்டிலும் போல்தான் அங்கேயும்.

சேத்தியாவில் சிலபோது அவன் இமைக்க மறந்து விழிகள் பதித்திருந்திருக்கிறான்தான். அப்போதெல்லாம் அவளையேயல்ல, வியாழியையே தேடி அவனுடலும் உள்ளமும் தவிப்படைந்தது. ஆனால் வெளிப்படுத்தப்படாத ஆசைகளுடன் சேத்தியாவும் தனக்குப் பணிவிடை செய்துவந்திருக்கிறாள் என்பதை அப்போதுதான் அவன் தெரிந்தான்.

அரண்மனையின் ஆடிகளில் சிலபோது அவன் தன் முகம்பார்க்கும் சந்தர்ப்பங்கள் நேர்ந்திருக்கின்றன. விரிந்த சடை. அதன் கீழ் விற்புருவங்கள்வரை சுருக்கங்கள் நிறைந்து நெற்றி. ஈட்டியின் முனைகளெனக் கூர்த்த கண்கள். வெயிலை ஊடறுத்து கூர்துக் கூர்த்துப் பார்வையெறிந்து ஒரு வறட்சியைக் கண்டவையாய் அவை.

கன்னங்கள் ஒடுங்கி. அவற்றைத் தொட்டுக்கொண்டு நீளமாய் மீசை. கீழே எப்போதாவது சிரைத்துக்கொள்ளும் தாடி. அது மீசையின் நீளமற்று சுருண்டு ஒதுங்கியிருந்தது. புஜங்கள் திரண்டு. அத்திரட்சியில் வலிமை அப்பியிருந்தது. அவனது பயணத்துக்கான வலிமையின் அடையாளம் அது. மற்றும்படி அவனில் சொல்ல என்ன இருக்கிறது. அவன் ஆணாக இருப்பதே ஆசைகளைப் பெண்களில் கிளர்த்துமா.

அவனுக்கு அவை இப்போது கரிசனமில்லை. ஆனால் சேத்தியாவின் சோகமான பார்வை, தனது ஆசைகளைப் பரத்தாது அடங்கிநின்று அனுபவிக்கத் திரண்டிருந்த துடிப்பைத்தான் கொண்டிருந்தது என்பதை அவன் புரிந்தான்.

சூழலுக்கு மீண்டு, 'வருவேன்' என அவளது வினாவுக்கு விடையளித்துவிட்டு குடிலைவிட்டு வெளியே வந்தான் நாகன்.

அப்போதுதான் வீடாணனும் படையாட்களும் தெற்குக் கோட்டை வாயிலை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதைக் கண்டான்.

துண்ணென்றது மனம். அவனது பார்வையிலிருந்து தப்பியது நல்லது என்று நினைத்துக்கொண்டான். வீடாணனின் பிரசன்னம் அவனது உயிர்மையை அச்சப்படுத்துவதாகும்.

லங்காபுரத்துச் செல்வத்தின் அளவையும் இருப்பையும் அறிய அவாக்கொண்டிருப்பவன் அவன். ராவணன் தன்னிடத்தில் அதன் இரகசியம் கூறியிருப்பது தெரிந்தால் விளைவு என்னவாகும் என்பது நாகனுக்குத் தெரியும். கூட மந்தாகினியின் சேர்க்கை அவனுக்கிருப்பது இன்னும் கூடுதலான அச்சுறுத்தல்.

வீடாணனின் பயணத்து விபரத்தை நாகன் அறிவான். கீழைப் படைவீடுகளின் பார்வையிடலைச் செய்ய அவன் போய்க்கொண்டிருக்கிறான். திரும்ப நாட்களாகும். சிலவேளை மஞ்சட் கதிரொளிப் பெண் அந்தச் சீதையைக் கவர்ந்துவரச் சென்றிருக்கும் ராவண வருகைக்கும் பின்னாலேகூட அது நிகழலாம்.

வீடாணனின் செல்லுகை ஒரு படை நகர்வின் அதிர்வைத் தன்னில் ஏற்படுத்தியதை அப்போது நாகன் நினைத்தான். ராவணன் சரியாகவேதான் தன் சகோதரர்களைப்பற்றி எடைபோட்டு வைத்திருக்கிறான் என்பதை அப்போது அவனால் நம்பக்கூடியதாக விருந்தது.

வீடாணன் சென்றுவிட்டான் என்பது தெரிந்த பின்னர் மனஅவசமொன்று அடங்கியதுபோலுணர்ந்தான் அவன்.

கதக்கண்ணனிடம் சொல்லிச் சென்றாலென்ன என ஒரு யோசனை பிறந்தது. பின்னர் வேண்டாமெனத் துணிந்துகொண்டு மேலே நடந்தான்.

கதிரொளி நிறைந்திருந்த தலைநகர் சற்றுப் பரபரப்பாகவே இருப்பதாய்ப்பட்டது அவனுக்கு. அவன் அவ்வரண்மனை புகுந்த வேகமென்ன, திரும்பும் நலிவு என்ன. ஒரு தோல்வியும் சுமையுமாய்த்; தனது திரும்புகை ஆகியிருப்பதாய் எண்ணிக்கொண்டிருந்தான் நாகன்.

இயல்பில் அது அப்படியிருப்பதில்லை.

ஒரு பயணம் அனுபவத்தின் பதிவுகளுடனேயே பூர்த்தியுமாகிறது. இல்லாவிடின் அது அர்த்தமற்றது. அவனது இரண்டாண்டுப் பயணம் எதுவித பிரயோசனமுமற்றுக் கழிந்திருக்கிறது. பயண முடிவுக்கு முன்னர் அவனறிந்த வடதிசை அரச நங்கை சீதைபற்றிய ஒரு தகவல் ராவணனுக்குப் போதுமாகப்போய்விட்டது. அவன் சிந்தையைப் பெரிதாய் உலுப்பிய நிலத்தின் உள் எழுந்த சத்தம்பற்றி அவன் கண்டுகொள்ளவேயில்லை.

இயல்பலாத அந்தச் சத்தம் நாகனைப் பொறுத்தவரை மிக முக்கியமானது. ஆனால் அதை மிகச் சுலபமாக அது வேறெதோவின் சத்தமென ராவணன் ஒதுக்கிவிட்டிருந்தான். அதை அவனால் கற்பனைகூடச் செய்துபார்க்க முடியவில்லை. அது அவனது அவதானிப்பைக் குறைத்து மதிப்பிடுவதாகும். ஒரு பயணியாய் அவன் வாழ்ந்த காலம் அந்த அவதானிப்பை மூலதனமாகக் கொண்டது. முக்கியமானது. பயணி ஒருவன் சிதறும் கணங்கள் அவை. நாகன் சிதறியே சென்றுகொண்டிருந்தான்.

வழக்கமானதைவிட சிறிது கூடிய உற்சாகம் தலைநகரில் இருந்து கொண்டிருப்பதை அப்போது நாகனால் அவதானிக்க முடிந்தது. லங்காபுரம் உழைப்பும் இன்பமுமென்று பகலையும் இரவையும் கொண்டிருந்த நகரம். அந்த உழைப்பின் அசைவு அடைமழை நாளிலும் தேங்குவதில்லை. இன்பமும் அவ்வண்ணமே. அது படையெழுச்சி கண்டு பலகாலம். சில நாக இன அரச குலத்தாரின் நில விஸ்தரிப்பை அழிக்க ராவணன் சென்றதே அவர்கள் கண்டிருக்கக் கூடிய கடைசி யுத்தமாகவிருந்தது. அதுகூட பாரிய படையெழுச்சியாக இருக்கவில்லை. தன் பொறுக்கியெடுத்த வீரர் சிலருடன் ராவணன் சென்றது தெரிந்து மக்கள் அதுகுறித்துப் பேசத் தொடங்கும்போது ராவணன் சென்ற காரியம் வெற்றியாகித் திரும்பிக்கொண்டிருந்தான். அவர்களால் ஆரவாரப்படுவதைத் தவிர வேறுசெய்ய முடியவில்லை. பிற நாட்டின் படையெடுப்புப் பற்றிய ஒரு அச்சம் எப்போதும் அவர்களை அணுகாதது. அந்தவகையில் அவர்கள் அடைந்தது நல்வாழ்க்கையே. நாகன் கண்ட சில நாடுகள் யுத்த ஆயத்தங்களால் அவதியோடிருந்தன. சிலவற்றில் யுத்தத்தாலான அழிவுகளின் அவலம் நிலைத்து இருந்தது. மற்றும்படி சொல்லக்கூடியவிதமான

படையெடுப்புகள் எதுவுமிருந்ததில்லை. அங்கேயும் நிலைமை அவ்வாறாகவே இருந்தது.

யுத்தங்களின் காலமல்ல அது. அவை விரிய இன்னும் நாளாகலாம். சூர்ப்பாநகை சொல்லியிருந்தாள், தான் இளவரசியாய் ஆகிக் கொண்டிருப்பதாய் மந்தாகினி குறிப்பிட்டதாக. அது மெய். அரசுகள் கட்டுமானமும், இறுக்கமும் பெற்று விரியும் தருணத்தில் அரசனும் அரசியும் இளவரசனும் இளவரசியும் தேவைப்படலாம்தான். அது ஒரு தேவையிலிருந்து உருவாகும். அப்போது யுத்தங்கள் நிகழும். அவை பெரும்பாலும் செல்வத்துக்கும் நிலத்துக்கும் ஆனவையாயே இருக்கும். லங்காபுரத்தின் அப்போதைய சூழ்நிலைமையை வைத்துக்கொண்டு நாகனால் அவ்வாறான முடிவுகளுக்குத்தான் வந்தடைய முடிந்தது.

அதனால்தான் ராவணனின் விசைத்தேரின் புறப்பாடும், வீடாணனின் புறப்பாடும் அவர்களிடத்தில் ஆர்வங்களை விளைத் திருக்கவேண்டும்.

ராவணனின் விசைத்தேர்ப் புறப்பாட்டின் காரணம் அவர்களுக்குத் தெரியாது. அது தெரிகிற நிலைமையிலும் அது என்ன விளைவினை எற்படுத்தக்கூடுமென யாராலும் முன்னனுமானிக்க முடியாது. அது ஒரு தூரதேசம் சார்ந்த வி'யம். ஏன், நாகனாலும்தான் அனுமானமடைய முடியாமலிருந்தது. ஆனால் தான் ஒதுங்கியிருப்பது நல்லதெனவே அவனது உள்ளுணர்வு சொல்லிக்கொண்டிருந்தது.

வியாழியின் உருவம் தனங்கள் குலுங்கக் குலுங்க, பிருஷ்டங்கள் அசைய அசைய அப்போது அவனது மனக்கண்ணில் உதயமானது. சிறிதுநேரத்தில் சுடத்தொடங்கியது, தீவிரமெறியும் அந்த மழைவெய்யில் போல.

# இருபத்திரண்டு

அன்று அதிகாலையே எழுந்துவிட்டிருந்தாள் வியாழி. குடிசையை விட்டு வெளியே வந்தவள், சிலதினங்களின் முன்தான் நாகன் படுத்துறங்கியதும், தான் அவன் மேல் புரிந்த போகத்தின் சாட்சியாக நின்றிருந்ததுமான அடரிலை மரத்தின் கீழ் அப்போதும் உறங்கிக் கொண்டிருந்த மகன் வலியனில் சிறிதுநேரம் பார்வையைப் பதித்தபடி நின்றாள்.

அவளது ஞாபகத்தின் எல்லைவரை அன்றைய அத் துர்சம்பவத்தின் மேல் ஒரு இருள் பரவியிருந்ததாய்ப்பட்டது அவளுக்கு. உண்மையில் என்னதான் நடந்தது அன்று.

நாகன் புறப்பட்டுச் சென்ற அன்றுகாலை திடீரென எங்கிருந்தோ போல் முகம் சிவந்து, விழிகள் சிவந்து குன்று, திட்டி, மரம் என்று எல்லா இடமும் ஒரு வேகத்தில் ஏறியும் குதித்தும் பாய்ந்தும் கொண்டிருந்தான் வலியன். பின் சிறிதுநேரத்தில் எங்கோ மறைந்துபோனான். வியாழிக்கு அது பொருட்படுத்தவேண்டியதாய்த் தோன்றியிருந்தாலும், அவள் அன்று தன் வேட்டையைக் கவனமாய் ஆற்றத் திட்டமிட்டிருந்தபடி அம்புவில்லுடன் வனம் புகுந்துவிட்டாள்.

அவள் மறுபடி தன்னிடம் திரும்பியபோது வெய்யில் விழுந்துகொண்டிருந்தது. கிடைத்த இரைகளைத் தோலுரித்து பதனப்படுத்தி வைத்தபின், தன் மேலில் முள் கிழித்த ரணங்களின் ஆற்றுகைக்காக அருகே வழிந்த அருவி கயமாய்த் தேங்கிய குளிர்நீரில் போய்க் குளித்துவிட்டு வந்தாள்.

காட்டின் விலங்கு விரித்த தடத்தில் இனிமையின் இசை கிளர்த்தி வந்துகொண்டிருந்தவள், ஒரு பதனமாக்கிய மானின் மென் தோலாடையைக் கட்டியிருந்தாள். மேலே சாய்ந்துகொண்டிருந்த எல்லியின் மஞ்சள் நிறக் கதிர்கள் அவள் கருமேனியில் பட்டு

தகதகத்துக் கொண்டிருந்தன. முலைகள் குலுங்கி இசைப்புக்கு இசைந்த கதி எடுத்திருந்தன. அவள் அதுமாதிரியான இனிய மனநிலையில் நீண்டகாலம் இருந்ததில்லைத்தான். ஏதோ ஒருநாளில் படும் அதுமாதிரியான இன்ப மனநிலைக்ககாகத்தான் தான் காலகாலமும் துன்பமும் துயரும் வலியும் உறுவதாய் அவளுக்குத் தோன்றிக் கொண்டிருந்தது.

திடீரென விலங்கு எதுவோ தன்னை உன்னிப்பதாய் அவளுள் உள்ளுணர்வொன்று கிளர்ந்தது. வியாழி திடுக்கிட்டு சூழலில் அவதானமெறிந்தாள். அப்போதுதான் விலங்கின் கண்கள் தன் உயிர்நிலையையன்றி தன் இன்பநிலைகளைக் குறிப்படுத்தியிருப்பது அவளுக்குத் தெரியத் தொடங்கியது. மேனியின் சுகத்தைக் குறிவைக்கும் விலங்கு..? அப்படியும் ஒன்று உண்டா. அது விலங்கல்ல என்பது புரிந்த வியாழி, தன்னில் மொய்க்கும் கண்களின் காமத்தில் வெகு கூச்சமடைந்தாள். நிமிர்ந்தும், மதர்த்தும் கருவளையங்கள் பளீரிட அவளுடலில் எழில் சேர்த்த முலைகளில் அவளது கைகள் முதன் முதலாய்க் கவிந்தன.

அவள் விரைந்து நடக்க முனைந்தாள். அவளைத் தீட்சண்யித்த பார்வையும் அவளைத் தொடர்ந்து விரைந்தது. அவள் குடிசையை அடைகிற வரையில்தான் தெரிந்தாள், அந்தக் காமக் கணைகளின் எறிவு எங்கிருந்து பிறந்ததென.

வலியன் ஒரு சிரிப்போடு அப்பால் நகர்ந்துகொண்டிருந்தான், ஒரு அடர்புதரின் மறைவிலிருந்து.

தான் அவளது மகனென்பது அவனது இதயத்தில் கிளர்ந்திருந்த ஆசைக்கு எதுவுமில்லைத்தான். அவளேகூட ஆசைப்பட்டுவிடலாம். ஆனால் அங்கே இருந்த தடை, தன்னின் அதிகாரத்தைமீறி தன்கீழ் அடங்கி நிற்பவர்கள் கிளர்ந்துவிடக்கூடாது என்பதாகத்தான் வியாழிக்கு இருந்தது. அவளது வில் தேர்ச்சி அவளை எவரிலும் முன்னிலைப்படுத்தவே வேண்டும். அவன் குச்சிகளைச் செய்யலாம். ஆனால் கணைகளைச் செய்துவிடமுடியாது. அவன் ஒரு மனிதனைக் கொன்றுவிடலாம். ஆனால் ஒரு மிருகத்தை வேட்டையாடிவிட முடியாது அவளளவு சுளுவோடு. அது சுவடறிதல், சுவட்டின் விலங் கறிதல், விலங்கின் விசையறிதல், விசைபெறு விலங்கின் உயிர்நிலை யறிதலெனப் பல திறமைகள் கோருவது. அந்த வித்தை தெரிந்திருந்த வகையில் அவள் எவரையும்விட அதிகாரம் செய்பவளாயிருக்க முடியும்.

அவன் சிறுவன்தானே தவிர சிறியவனல்ல. ஆகிருதி பெரிது படைத்தவன். வலிமையால்கூட வித்தைகளையும் சாதனைகளையும் சிலவேளைகளில் அடக்கிவிட முடியுமே.

அன்று இரவு விழுந்த நேரத்திலிருந்து வியாழிக்கு மனதே சரியில்லாதிருந்தது.

வலியன் காலையில் கண் சிவந்திருந்தான்.

முதல்நாள் மாலை எங்கே உன் மகன்? எனக் கேட்ட நாகனிடம் தான் கூறியதுபோல் அவன் இரவில் வராதிருக்கவில்லை. அவனுக்கு இருளும், இடியும் அச்சமாவது அரிதாகிக்கொண்டிருக்கிறது. அவன் அந்தக் கரும்புகார் அசைவின் பின்னரும், இருள் கறுத்து உலகை மூடிய பின்னரும் அங்கே வந்திருக்கிறான். அவள் நாகனில் புரிந்த காமங்களைக் கண்டிருக்கிறான். பல தடவைகள் முன்பும் அவளை அவன் தன் குறியின் எழுச்சியோடு அணைத்திருந்தவன்.

வியாழி வலியள். அப்போதும்தான். அவனுக்கும்தான். அவள் வெகு அநாயாசமாக அவனது அணுக்கங்களை விலக்கிவிட்டிருந்தாள். ஆனாலும் அவன் தன் வலி பெருகப் பெறுவதும், அவள் தன் வலி குறைவு பெறுவதும் காலத்திலே இயல்பில் நடக்கின்றவை. அவன் போதையேறி ஒரு வலிந்த புணர்ச்சியை அவளில் எப்போதாவது முனையக்கூடும்தான். வெற்றியும் அடையக்கூடும்தான்.

குடிசை திரும்பிய வியாழி அன்றைய நாளுணவை உண்டாள். பின் வலியனுக்கான உணவையெடுத்து வைத்தாள். அப்போதுதான் தான் வேட்டைக்குச் சென்ற சமயம் வெகுபோதைகொடுக்கும் ஒருவகைச் செடியின் துளிர்களைப் பறித்து வந்து போட்டிருந்தது அவளது பார்வையில் பட்டது. உடனேயே அவற்றைக் கசக்கிப் பிழிந்து மதுக்குடுவையில் போட்டு வைத்துக்கொண்டாள். அது சமயத்தில் தேவைப்படலாம்போல் எதுவோ ஒன்று அவள் மனத்தில் சொல்லிக்கொண்டிருந்தது.

வலியன் மறுபடி குடிசை வந்தபோது நிறையப் போதையேற்றும் காய்களைப் புசித்திருந்தான்போலிருந்தது. வாசலில் நின்றபடியே அவளைப் பார்த்துக்கொண்டிருந்தான். பின்னர் இலேசாகச் சிரித்தான். அவள் முலைகளில் பார்வை குவித்தான். அவள் அசைவுகளை ஒரு வெறியோடு தொடர்ந்தான். பிறகு ஒரு சமயத்தில் பாய்ந்து உள்ளே நுழைந்து அவளை இறுக அணைத்தான். விசித்திரமான காமக் கிளர்ச்சி ஒலிகளை எழுப்பினான்.

வியாழியிடம் ஏற்கனவே திட்டமிருந்தது.

தன்னுள் அவன் எய்திடாதவாறு தடுக்க அவனது தழுவல்களைச் சுகிப்பதாய்ப் பாவனை காட்டினாள் வியாழி. இடையிடையே முனகினாள். குடுவையையெடுத்து ஒரு மிடறு அருந்திவிட்டு, வலியனிடம் நீட்டினாள். வலியன் வலுமகிழ்ச்சியேறினான். குடுவையை வாங்கி மடமடவென குடிசாரத்தைக் குடித்தான். பின் அவளைப் பின்புறமாய்க் கட்டியணைத்தபடி விலங்குமுறைப் புணர்ச்சிக்கு முனைந்தான்.

அவள் தன் வலிமையெல்லாம் சேர்த்து விலகிச் சென்று, மீண்டும் குடுவையெடுத்து அவனிடம் கொடுத்தாள். அவன் அதை வெறுமையாக்கி வெளியில் எறிந்தான். பின் சிரித்தான். பித்தன்போல் தலையசைத்தான். அவள் பதனப்படுத்திய இறைச்சியை எடுத்துக் கொடுத்தாள். அவன் அதை வாயுள் திணித்தான். வெகுநேரமாய்ச் சப்பினான். நினைவின் குறி தவறியவன்போல் நீண்டநேரமாய் வாயிலிருந்த இறைச்சியை மென்றுகொண்டேயிருந்தான். வியாழிக்கு மதுரசம் வேலைசெய்யத் தொடங்கிவிட்டமை தெரிந்தது. எட்டச் சென்றமர்ந்து அவனைப் பார்த்தாள். அவன் எதை மென்றான்? அவனது வாயிலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

வலியன் அப்படியே சரிந்து படுத்தான்.

வியாழிக்கு இனி அச்சமில்லை. அவளும் ஒரு பக்கலில் சரிந்தாள்.

இரவிலே அவளுக்குத் திடுக்கிடும் கனவுகள் தோன்றின. மிருகமொன்று அவளைப் புணர பின்தொடர்வதுபோல்.. அவள்மீது பாய்ந்து அவள் அங்கமெல்லாம் நாவு நீட்டி நக்குவதுபோல்.. அவள் தனது கால்களை அகட்டி இணக்காமாகாதிருக்கவே, தன் விரல்களுள் அமுங்கி நின்ற உகிர்களை வெளிப்படுத்தி அவளைக் கிழித் தெடுப்பதுபோல்.. கனவுகள்.

எவ்வளவு நேரம் உறங்கியிருப்பாள். வலியனின் அலறலில் ஒரு திடுக்காட்டத்துடன் அவளுக்கு விழிப்பு வந்தது. என்ன? என்ன? என்றாள். வலியன் பேசமுடியாது பதைபதைத்தான். ஊமையனாய் நின்று குரலெடுத்தான். பின் ஓடினான். ஓடியே போனான்.

அன்று மாலை அவன் வந்தபோது அவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது வியாழிக்கு. அவ்வளவுக்குச் சோர்ந்துபோயிருந்தான். போதையின்றியும், வலுவெல்லாம் இழந்த ஒரு பலஹீனத்துடனும் இருந்தான். அப்படியே அந்த யாவறணை மரத்தின் கீழ் போய்ப் படுத்துக்கொண்டான்.

அளவானால் போதையும், அதிகரித்தால் மரப்பும் தரும் செடிச்சாறின் அருந்துகையால் தாடை மரத்து அவன் இறைச்சியென தனது நாவையே தின்றுவிட்டிருந்தது வியாழிக்குப் புரிந்தது.

அவள் இரக்கப்படலாம். ஏனெனில் அவன் அவளது மகன்தான் இன்னும்.

வியாழி திரும்பினாள்.

அப்போது மேற்றிசையிலிருந்து ஒரு நரைத்த புகார் அசைந்து வருவதாய்த் தெரிந்தது. அவள் தன் கட்புலனைக் கூர்மைப்படுத்தினாள். புகாரில்லை, புழுதிப் படலம்! எப்படி.

அது கிளர்வது கீழ்த்திசையிலிருந்து. இப்போது அவளால் விளங்க முடிந்தது.

விசை நெடுந்தேர் கிளர்த்தும் தூசி மண்டலம்.

வியாழி ஊரடைந்தாள். இன்னும் சிறிதுநேரத்தில் ராவணன் அவ்விடம் கடப்பான்.

அவள் உள்ளே சென்று ஒரு தோலாடை எடுத்து மார்பில் எறிந்து கொண்டு விரைந்து நெடும்பாதை வந்தாள்.

தூரத்தே ராவண தேர் தெரிந்தது. ராவண கம்பீரம் சிறிதுநேரத்தில்.

பக்கத்தே யார். ஓ..அந்த மாயன் மாரீசனா.

# இருபத்து மூன்று

**ரா**வணனுக்கு முகம், தேகமெங்கும் வியர்த்துப்போயிருந்தது. காலையில் அவனிலிருந்த வனப்பும், ஒளிர்ப்பும் அழியத் தொடங்கியிருந்தன. குதிரைகள் கிளப்பிய தூசிப் படலம் காரணமாய் பார்வையைக் கூர்த்தபடி வேறெதன் கவனமுமின்றித் தேரைச் செலுத்திக்கொண்டிருந்தான். குதிரைகளும் அவனது காரியத்தின் தன்மையறிந்து செயலூக்கம் பெற்றனபோல் காற்றிலேறிப் பாய்ந்து கொண்டிருந்தன.

அவனுக்குமே விசைத்தேர் செலுத்தி நீண்டகாலம்தான். அதனால் செலுத்துகையின் இன்பம் தானாய்ப் பொங்கிப் பெருகிக் கொண்டிருந்தது அவனது மனமெங்கும்.

மாரீசன் இறுகத் தேர்க் காலைப் பற்றியபடி தேர்த்தட்டில் குந்தியிருந்தான். அது ஒரு கருங்குரங்குடனான யுத்தம் போலிருந்தது. அதுவரையிருந்த பாதையின் சீர் அறுந்து மேடுபள்ளமாகியிருந்ததில் தேர் குலுங்கத் தொடங்கியிருந்தது. காற்றின் மேனியில் புழுதியை அப்பிவிட்டு அதுவரை பறந்து வந்துகொண்டிருந்த தேர் மேலே விசையடங்கி வரவேண்டியதாயிற்று.

ராவணன் தன் தீவிரமடங்கி மாமனைத் திரும்பிப்பார்த்தான். மாரீசனிருந்த நிலை அவனிடத்தில் சிரிப்பை வரவழைத்தது. 'என்ன மாமா, நீ அமைத்த தேரே உன்னைத் தன்னிலிருந்து உருட்டிவிடப் பார்க்கிறதா' என்று கேட்டுச் சிரித்தான். மாரீசன், 'நீ ஓட்டு' என்று விட்டு இன்னும் தன் பிடி தளராமல் இரு கைகளாலும் தேர்க்காலை இறுகப் பற்றியிருந்தான்.

அடர்வன எல்லை நெருங்குகையில்தான் ராவணனுக்கு நாகனின் நினைப்பும், அதனடியாக வியாழியின் நினைவும் எழுந்தன. வியாழியின் வாசம் அங்கேதான் சமீபத்தில் எங்கோ இருந்துகொண்டிருந்தது. நாகனின் மனநுட்பங்கள் தெரிந்து அவள் நடந்துகொள்வாளென்று ராவணனுக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும், அதுமாதிரியான

இணைவுகள் நாகனுக்கு ஆரோக்கியமானது என்பது ராவணனின் எண்ணம்.

நாகனின் நெடும்பயண முடிவுகள் அந்தமுறை மாதிரி என்றுமே கலகலப்பற்றதாய் இருந்ததில்லை என்பதையும் அப்போது அவனால் நினைக்க முடிந்தது. அவனது பயண முடிவு தன் தேவையொன்றை நிறைவேற்ற வேண்டிப்போல அத்தனை பொருத்தமான தருணத்தில் அமைந்திருந்ததில் ராவணனுக்கு ஆரம்பமுதலே மகிழ்ச்சிதான். லங்காபுரத்தின் அளவிடற்கரிய மணிக் குவைகள் ஒருவகையில் ராவணனுக்குப் பாரமானதாகவே ஆகியிருந்தன என்று கூறவேண்டும். அவன் தன் குடும்பம், அரச காரியம் எதனிலும்கூட அதிக அக்கறை காட்டாதிருந்தான். எல்லைப்புற படைவீடுகளின் நிலபரங்களை அதிகமும் மற்றவர்களை அனுப்பியே அறிந்துகொண்டிருந்ததும் அதனால்தான் நிகழ்ந்தது. மணிக்குவை நினைப்புகளால் தன்னையே ஒரு வதைக்குட்படுத்தி அவன் வருந்தினான் என்றாலும் சரிதான். அதனால்தான் நாகனிடம் அந்தச் செல்வக் குவைகள் இருந்த பாதாள அறைகளை ஒரு பின்னடித் தேவை கருதி அவன் காட்டிவைத்தது.

இப்போது நினைக்க நாகனை தான் சரியானபடி கவனிக்க விலையோ என்றொரு சமுசயம் எழுந்தது அவனிடத்தில். அவன் தன் செல்வ இருப்பினைத் தெரிந்த சாட்சிக்காரனாக மட்டுமில்லை, கொண்டுவந்திருந்த பொன்னொளிர் மங்கைபற்றிய தகவலினால் தன்னை அப்போது மேற்றிசைநோக்கிப் பயணிக்க வைத்திருப்பவன் என்பதும் மனம் முழுக்க வியாபகமாகியது.

உண்மையில் பயணமென்பதுதான் என்ன. ராவணன் நினைத்துப் பார்த்தான்.

அது அறிவின் அடைதலாகவிருந்தது. அற்றைநாளுக்கு பிறதேசங்களின் பண்பாட்டு, படையிருப்பு, செல்வ விவகாரங்கள் பயணங்களின் வழியேதான் அடையப்பட்டுக்கொண்டிருந்தன. மொழி பேச்சுவழியாக மட்டுமே புழங்கிக்கொண்டிருந்தது. ஒருவகையான எழுத்துருக்களை நாக இனம் கண்டடைந்திருந்தது. அதேவேளை இயக்க இனத்தாரிடையேயும் வரிவடிவ எழுத்துக்கள் புழக்கத்தில் வந்துகொண்டிருந்தன. வெவ்வேறு மொழிகளானாலும் அவற்றிற் கிடையே நெருங்கிய ஊடாட்டம் இருந்ததாய் நாக, இயக்க இனத்து ஞானவான்கள் அவனுக்குக் கூறியிருந்தனர். வடமேற்கின் கபாடபுரத்தரசு தனக்கான ஒரு மொழியைக் கொண்டிருந்ததாய் முதன்முதலில் அவனுக்கு அறிவித்தது நாகன்தான். அது எழுத்துமொழியாகவும், மக்களின் வளமான பேச்சுமொழியாகவும் ஆகியிருந்தது மட்டுமல்லாமல், பாடல்கள் புனைந்தெழுதும் மொழியாகவும் ஆகிக்கொண்டிருந்ததாய் அவன் தெரிவித்திருந்தான்.

ராவணன் அது மெய்யாயிருக்கலாமெனவே எண்ணினான். மலைக்கோயிலின் முதன்மைச் சிற்பி தன் மகனை வருவிக்க ஓலையனுப்பினான். ஓலையில் எழுத்துருக்கள் இருந்தன. ராவணன் அதிசயத்தோடு அவற்றைக் கண்டிருந்தான். இன்னும் பிறதேசங்கள் பலவற்றில் அவ்வகையான எழுத்துருக்கள் உருவாகாதிருந்ததையும் அவன் கேள்வியில் அறிந்திருக்கிறான். இன்னுமின்னுமான வடமேற்கில் பல்வேறு நாடுகளிருந்ததையும், அவற்றின் மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசியதையும், சில இனங்கள் வேறுவேறு நிறத்தினவாய் இருந்ததையும்கூட அவன் அறிந்தது கேள்வி யினால்தான். கடவுளரும் சில நாடுகளில் லங்காபுரத்தில்போலவே ஒன்றாக இருந்தனர். அச்சில நாடுகளில் இசைபற்றிய எழுதா மறை இருப்பதாய் அவன் அறிந்ததும் அவ்வண்ணம்தானே. இசைக்கு அவ்வாறான வழிபாடு இருப்பதறிந்து ராவணன் அடைந்த ஆச்சரியம்தானென்ன. அவனது யாழிசை மீட்பு இரட்டிப்பாகியது அதுபற்றி அறிந்த காலத்திலிருந்துதான். இவ்விதமான புவிச் சூழலில் அறிதலின் தீவிரம் அடங்க பயணமென்பதே ஒரே வழியாக இருந்தது. அந்தவகையில் நாகனின் உதவி பாரியது. அவன் அறிவுகாட்டும் ஆதாரமாக இருந்தான். முதுமையெட்டியும் அது கடந்துசென்று அறிவு கொண்டுவந்து சேர்த்தவன் அவன். அவன் நட்பாளன் மட்டுமில்லை. அறிவுகொள்ளச் செய்தவனும்.

இவ்வாறெல்லாம் நாகன் பற்றிய எண்ணங்கள் எழுந்து கொண்டிருந்தன ராவணனிடத்தில்.

வனம் அடர்த்தியாகிக்கொண்டிருந்தது. அப்போதுதான் அந்தக் காட்சிகள் ராவணனின் பார்வையில் பட்டன. மரமெங்கும் புதரெங்கும் முகங்கள் முளைத்திருந்தமை கண்டான் பெருமிதம் பொங்க. அவன் எதிர்வர அஞ்சி, மரங்களின் அடர்த்திகளுள் ஒளிந்திருந்து லங்காபுரத்தின் புறநகர்வாசிகளும், வனவாசிகளும், மலைவாழுநரும் தங்கள் தலைவனைத் தரிசித்துக்கொண்டிருந்தனர்.

வனமெங்கும் தும்பிகள் பறந்துகொண்டிருந்தன. குருவிகள் ஏதோ மகிழ்ச்சியில்போல் கூவிக்கொண்டிருந்தன. அடர்வனத்தின் பசிய இலைகளில் தூய்மையின் பளபளப்பு. மழைபெய்திருக்குமா அப்பகுதியில். ‘மாமனே, மழைபெய்திருக்கிறதா’ என்றான் மாரீசனைப் பார்த்து.

‘தூசி படலமாய்க் கிளம்பிக்கொண்டிருக்கிறது. ஆனாலும் வனம் கழுவப்பட்டதுபோல் தெளிவுடன் இருக்கிறது. மெல்லிய மழை பெய்திருக்கலாம்’ என்றான் மாரீசன் ராவணனுக்குப் பதிலாக. பின், ‘மழை பெய்திருந்தால் வனம் முடியத் தொடங்கும் பரவெளியில் பயணம் கடினமாயிருக்குமென்று யோசிக்கிறாயோ’ என்றான்.

‘அப்படித்தான்.’

‘அந்தளவுக்கு மழைபெய்திருக்காது.’

‘மழைத்தடங்கள் வழியில் தென்பட ஆரம்பிக்கின்றன, மாமனே.’

‘என்றாலும் கடுமையான மழையாக இருந்திராது. சிறுமழை பயணத்தை இனிமையாக்கும். ஓட்டு தேரை.’

நேரமாக ஆக புழுதி அடங்குவது கண்டாள் வியாழியும். ஆனால் ஒரு திருப்பத்தில் மறைந்திருந்த தேரின் மணிச் சத்தம் வரவர பலமாகக் கேட்கத் தொடங்கியிருந்தது அப்போது. தேர் நெருங்கிவிட்டதை உணர்ந்தாள் அவள். இன்னும் முன்னே வந்து வீதியில் ஏறினாள் பரபரப்புடன். சில இமைப்பொழுதுகளுள் தேர் அதன் நிறங்களுடன் பிரமாண்டமாய்த் தெரிந்தது. கறுப்பும் வெள்ளையும் சிவப்புமான நான்கு புரவிகள் விசை வீறுமிதக்க வந்துகொண்டிருந்தன.

வியாழியைக் கண்டான் ராவணனும். அவள் உடனே ஒதுங்கி முழங்காலிட்டுப் பணிந்தாள். தலைகுனிந்தாள்.

நிமிர்ந்தபோது தேர் கடந்து சென்றிருந்தது, ஒரு கூப்பிடு தூரம். பள்ளந்திட்டிகளில் விழுந்தெழும்பியும் விரைவு மிகவறாதிருந்தது.

வியாழி எழுந்தாள்.

எல்லி மேலெழ ஆரம்பித்திருந்தது. நிறையக் கதிர்கள் வெளிச்சமெறிந்துகொண்டிருந்தன. அந்தச் சாய்வு வெளிச்சத்ஜீல் ஏதோ பாதையில் மினுங்குவது கண்டாள் வியாழி. ஓடிப்போய்ப் பார்த்தாள். ஒரு மணி. அதன் மினுக்கம் அவளை வசீகரித்தது. மண்ணில் அதுபோல் நிறைய மினுக்கங்கள் லங்காபுரத்தில். அவளே கண்டிருக்கிறாள். ஆலம் விதையளவாய். சிலவேளை அதைவிடவும் சற்றுப் பெரிதாய். அவற்றைப் பொறுக்கி என்ன செய்வது. மினுக்கம்தவிர அவை வேறென்ன பயன்செய்யக்கூடும். அவள் அவற்றை அசட்டையாய் ஒதுக்கியிருக்கிறாள். இப்போது அவள் கண்டதோ ராவணத் தேரின் மணி. செப்பனிடப்பட்ட ஒளிர் மணி.

வியாழி குனிந்தெடுத்தாள்.

கழன்ற விரிசல் இருந்தது மணியில். கிலுக்கினாள். கிணுகிணுவெனக் கிலுங்கியது. அது அவளைப் பரவசப்படுத்தியது.

தந்தத்தினால் ஆன ஆபரணங்கள்கூட அவள் அணிந்ததில்லை. அவை அணியும் உள்நகர் மனிதர்பற்றி அவள் அறிந்திருக்கிறாள்தான். சில மலைப்புற வேடரும் காதுகளைத் துளைத்து கொம்பாபரணங் களும், தந்த ஆபரணங்களும் அணிந்திருப்பது கண்டிருக்கிறாள்.

காதுகளில் சிறு வளையங்களும், கைகளில் பெருவளையங்களுமாய் அவை அவர்களை அழகுசெய்து மட்டுமில்லை, கலகலத்து இசையதிர்வும் செய்து இன்பமூட்டின.

பொன்மணிக் கிணுகிணுப்பில் வியாழியின் முகம் மலர்ந்தது. மனம் புளகித்தது.

மெல்லக் கிலுக்கி கிண்கிணி நாதம் எழுப்பியபடி வியாழி தன் குடிலை அடைந்தாள். அதைப் பார்த்தபடியே வாசலில் குந்தினாள். வெளிப் பிரக்ஞையற்று நீண்டநேரம் அவ்வாறு அமர்ந்திருந்தாள்.

# இருபத்து நான்கு

**ரா**வணத் தேரே நொருங்கிவிடுமோ என்று நினைக்கிற அளவுக்கு மேடும் பள்ளமுமாயிருந்தது வழி. ராவணன் ஓரளவு நிலைமையை உணர்ந்து தேரினை மெதுவாகச் செலுத்தவே முயன்றிருந்தாலும், புரவிகள் தாவிப் பாய்ந்துகொண்டிருந்தன. வேகம் தடுக்கப்பட முடியாததாயிருந்தது. அது விரைவுக்காகவே அமைக்கப்பட்ட தேர். புரவிகளும் விசைபெற்றனவாய் இருக்கும்படி பயிற்சியும் ஊட்டமுமாய் வளர்க்கப்பெற்றவை. மாலையாகிற வேளையில் அடர் வனம் கடந்து, எல்லையிலுள்ள ராவண மடத்தை அடைந்தது தேர்.

பாழடைந்து கிடந்தது மடம். ராவணன் அங்கே வந்து தங்கியும் நீண்டநாள்தான். அரச அலுவலர் போக்குவரத்தும் அரிதாகவே இருந்தது அக் காலப்பகுதியில். அப் பாதையை செல்லலரிதானதாய் விட்டுவைத்திருக்க நினைத்ததும் ராவணன்தான். பொருட் போக்குவரத்துக்கு வேறு மார்க்கம் இருந்தது. லங்காபுரத்துக்கு வரவும், போகவுமான வண்டிப் பாதை அது. ஆனால் அடர் வனமறுத்தோடிய அது குறுக்குப் பாதை. பெரும்பாலும் ராவணனுக்கும், கால்நடைகாரர்களுக்குமானது. அதுவே சொற்ப காலத்துக்கு முந்திவரை சீரானதாய்த்தான் இருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளிலுமாய்த்தான் அது கவனிப்பற்று கைவிடப்பட்ட நிலையடைந்திருந்தது. ஆறலை கள்வர் பயம் அவ்வழியில் அதிகம். அதுவும் அண்மைக் காலத்தில் அதிகரித்ததுதான்.

மடத்தை அடைந்த ராவணன் குதிரைகளை அவிழ்த்துவிட்டுக் காலாறவைக்க மாரீசனைப் பணித்துவிட்டு, மண்கட்டு ஒன்றில் அமர்ந்து இளைப்பாற ஆரம்பித்தான்.

மழை கடந்த இரவு வனமறுந்து பாலை தொடங்கும் அவ்வெளியில் நன்றாகப் பெய்திருப்பதற்கான அடையாளங்கள்

தெரிந்தன. ஒருவேளை இன்னும் மேற்கே இதைவிடக் கூடுதலான மழை பெய்திருப்பின் பாலை கடத்தல் அரிதாகக் கூடும்.

இனம்புரியாத களைப்பொன்று ராவணனில் வந்து விழுந்தது அப்போது. தான் நாகனின் வார்த்தைகளைப் பொருட்படுத்தாமல் அந்த நீண்ட பயணத்தைத் தொடங்கியது பிழையோவென எண்ணத் தலைப்பட்டான்.

ஆனாலும் இனி மீட்சியில்லை. அவன் தேரெடுத்துப் புறப்பட்ட காட்சி கண்டு மக்கள் ஆரவாரித்திருந்தனர். அது தலைமையின் மீதான பக்தி காரணமானது. அவன் சாதிப்பவன் என்ற கீர்த்தியுள்ளவன். அவன் விசைத் தேரெடுத்துப் புறப்பட்டுவந்து வெறுங்கையோடு திரும்பியதாய் ஒரு காலம் என்றுமிருந்ததில்லை. இனியும் அது இருக்கக்கூடாது.

அது அவனது இறையாண்மையைக் கேள்விக்கு உள்ளாக்கிவிடும். மண்டோதரியிடம் இளக்காரப்பட நேரிடும். அரச காரியங்களில் கவனமற்று குலத் தலைவர்களாய் மட்டும் இருக்கும் நாக இன அந்த இளம் அரசுரிமைக்காரர், மீண்டும் படை திரட்டி அவனை ஒழிக்க காப்பும் கட்டக்கூடும்.

அவன் அதற்கெல்லாம் ஆட்பட்டவனில்லை. அது ராவண வாழ்வில் என்றும் நடைபெறக்கூடாதது.

அலுவல்களை ஒழித்துக்கொண்டு ராவணன் முன்பு வந்து குந்திய மாரீசன் இனி என்ன செய்யப்போகிறாய்? என்பதுபோல் ராவணனை ஏறிட்டு நோக்கினான். அவன் பார்வையின் பொருளுணர்ந்து, 'தொடரவேண்டியதுதான், மாமனே' என்றான் ராவணன். 'சிறிதுநேரம் குதிரைகள் இளைப்பாறட்டும். சாமத்தின் நடுக்கூறுவரை போதும். மேலே நம் பயணம் தொடங்குகின்றது. நாகன் திசைமட்டும்தான் சொன்னான். இடம், வழியெதுவும் அவனே தெரிந்திருக்கவில்லை. அத்திசையில் சென்று அப் பொன்மணியைக் கவர்ந்து வருவதென்பது சிரமத்தையே செய்யப்போகிறது. உனக்கு இந்தத் திசையில் நிறைந்த பரிச்சயம் உண்டல்லவா. அவர்கள் இருக்குமிடத்தை நீதான் விரைவில் அறிந்து சொல்லவேண்டும்.'

'பாலையின் அக்கரையில் என்னைச் சேர்ப்பித்துவிடு. நீ சற்று ஓய்வெடுக்க நான் அதுபற்றி விசாரித்தறிந்து வருவேன். இப் பகுதியில் நானறிந்த காட்டுவாசிகள் நிறையப்பேர் இருக்கிறார்கள். அதுபற்றிய கவலையை விடு' என்றான் மாரீசன்.

'நீ அவர்களோடு என்ன மொழியில் பேசுவாய், மாமனே.'

'இயக்க மொழிக்கு அண்மித்தான ஒரு மொழியைத்தான் அவர்கள் பேசுவது.'

'வடக்கிலிருந்து வரும் அவ்வரச குல மூவரும் என்ன மொழி பேசுவார்கள்.'

'அவர்கள் மொழியைப் பேசுவார்கள்.'

'அது சரிதான். ஆனால் நாம் எப்படி அவர்களோடு தொடர்பாடுவது. நான் அப் பொன்னிறத்தாளொடு எந்த மொழியில் பேசுவது.'

'குரங்குமொழியில் பேசிவிடலாம்.'

'ஆனால் அது எனக்குத் தெரியாதே.'

'ஒருவர் மொழியை ஒருவர் அறியாத இருவர் சந்திக்கிற வேளையில் வாய்மொழி அல்ல, அவயவ மொழியே பேசும். அதுதான் குரங்கு மொழி.'

'நிறைய வனப்பெண்களையும் இப்பகுதியில் நீ அறிந்திருப் பாயல்லவா.'

'வனம் தன் அழகை அவர்களிலிருந்துதான் பிறப்பிக்கத் தொடங்குகிறது.'

ராவணன் சிரித்தான். மேலே பேசவில்லை.

திட்டமிட்டபடி அவர்களது பயணம் நடுச்சாமம் கடந்த ஒருபொழுதில் ஆரம்பமானது.

ராவணன் எதிர்பார்த்திருந்தபடி பாலைவெளியில் மழை பெய்திருந்தது. சற்றுப் பலமாகத்தான். ஆங்காங்கே வெள்ளங்கள் தேங்கி நின்றிருந்தன.

ராவண விசைத் தேர் அந்த வெளியில் இறக்கை கட்டிப் பறந்தது. சேறு சகதி தோய எல்லி முழுதாய் எழுந்திருந்த காலையில் அவர்கள் மறுகரையை அடைந்தனர்.

மேலே கரம்பு நிலம். பறுகுகள், பற்றைகள் நிறைந்திருந்தன. கரும்பையும் ஈஞ்சும் மலிந்த பூமி. ஆயினும் புரவிகள் ஆவேசம் கொண்டு இரண்டு கால் பாய்ச்சலில் பாய்ந்தன கபாடபுரத்தின் எதிர்ப்புறத்தில்.

ஒரு எல்லையில் வனத்தின் விருத்தி அதிகமாயிருந்தது. மாலையும் அடைந்த வேளை. தேரை நிறுத்தச் சொன்னான் மாரீசன். அது தானிறங்கவேண்டிய களம் என்று கூறிக்கொண்டு மாரீசன் இறங்க, ராவணனும் கூட இறங்கினான். ராவணனை அங்கே காத்திருக்கச் சொல்லிவிட்டு இருள்விழும் அவ்வனத்துள் நுழைந்தான் மாரீசன்.

தேர்த்தட்டில் அமர்ந்து கால்களைத் தொங்கப்போட்டான் ராவணன். இடையிலிருந்த வாளைக் கழற்றி கைக்கெட்டிய தூரத்தில்

வைத்தான். மேலே அவனுக்கு கண்ணுள் விரிந்ததெல்லாம் மணிக்குவைகளின் கதிரொளி கொண்டு நளினமாய் நடந்து கொண்டிருந்த ஒரு வேற்றுநிறப் பெண். ராவணன் தன் கற்பனைகளை வளர விட்டுக்கொண்டிருந்தான்.

விழித்த பின்னால்தான் தெரிந்தது தான் உறங்கிப்போயிருந்தமை. அது விடிகாலமாயிருந்தது. மாரீசன் அதுவரை வரவில்லை. எப்போது வருவான். அவன் சொன்னபடி சீதைபற்றிய தகவலறிந்து வருவானா. அல்லது அந்த வனவாசிகளிடம் தன் ஆண்குறியையும் விரைகளையும் இழந்து அவர்களைக் கொண்டாட்டம் போட வைத்துவிட்டு வருவானா.

ராவணன் நிறை யோசனையிலிருந்த வேளை வனத்தில் மெல்லிய சலனமெழுந்தது. அவன் எச்சரிக்கையடைந்தான். சிறிதுநேரத்தில் வனமரங்களிடையே தாவி வந்துகொண்டிருந்த மாமனின் உருவம் கண்ணில் தெரிந்தது.

# இருபத்தைந்து

அரச குலத்தவர்மூவர்மேலும் வடக்கே அல்லது வடமேற்கேயுள்ள அடர்மர, மலர்நிறை வனமொன்றில் சின்னாட்களாய் காணப் படுவதனை மாரீசன் உறுதிசெய்த மறுகணத்திலேயே துள்ளி யெழுந்தான் ராவணன்.

அதுவரையிருந்த சோர்வு, நம்பிக்கையீனம் யாவும் ராவணனிடத்தில் பறந்துபோயின. வந்த காரியம் கைகூடவில்லையெனில் எப்படித் தலைநகர்செல்வதெனத் தான் தடுமாறியிருந்ததை விபரித்தான் மாமனிடம். 'எண்ணிய காரியம் கைகூடாமல் மாமனே, எந்நா ளெனினும் திரும்பியதுளதோ வாணாளில்?' என அவனது தோள்கள்பற்றிக் குலுக்கினான். நகர், தான் விசைத் தேர்ஏறியதறிந்து குதூகலித்து ஆர்ப்பரித்ததை நினைவு கூர்ந்து, அதன் வெறியடக்கும் படியான வெற்றி அல்லது செல்வக்குவை இல்லாமல் தான் திரும்பப் போவதில்லையெனத் தீர்மானித்ததை வெளியிட்டு, இனி தனக்கு தன் நகர்திரும்புகையில் தடுமாற்றத்துக்கு இடமில்லையென உற்சாகவொலி எழுப்பினான். 'விரை! விரைந்து கிளம்பு, மாமா. காட்டு! அந்த மஞ்சட் கதிரொளிப் பெண்ணாளிடத்தைக் காட்டு' என துரிதம் காட்டினான்.

மாரீசன் மாறிப்போயிருந்தான்போல் தோன்றியது. அவன் அவசியமான தருணங்களில் தன் விகடப் போக்கு, பேச்சு முதலிய வற்றை மாற்றிக்கொண்டு உடனடிப் புதுப் பிறவி எடுக்கக்கூடியவன் தான். அவன் ராவணனின் அவதியைத் தணிக்கும்படியான ஆலோசனைகளை முதலில் கூறினான். பின்னர்சொன்னான்: 'நீ தேடி வந்த பெண்ணாளுடன் தங்கியிருக்கும் இரு அரசகுல உடன் பிறப்புக்கள் பற்றிய நிறையத் தகவல்களை வனவாசிகள் கூறக் கேட்டேன். இருவரின் ஆற்றல்பற்றியும் அற்புதமான கதைகளை அவர்கள் தெரிந்திருக்கிறார்கள். அவர்களில் மூத்தோன் வில்வலி அளவிடற்கரியது என அதிசயத்தோடு கூறுகிறார்கள் எல்லோரும். காற்றைக் கிளப்பியும், சருகுகளைப் பறக்க வைக்கவும் செய்கிறதாம்

அவனது அம்பு. விரும்பி வேட்டை செய்வதில்லையென்றும், கொடுவிலங்கு தவிர வேறெதனையும் நோக்கி அவர்கள் இலக்கணைப் பதில்லையென்றும் தெரிகிறது. வனவாசிகளோடு மிக்க அன்பு பாராட்டி நடந்துகொள்கிறார்களாம். தகவல் சொல்வதற்கே வனவாசிகள் மிகவும் தயக்கம் காட்டினார்கள்.'

'அந்த அரசகுல இளவல்களைக் கண்டு பயந்துபோனாயா, மாமனே? அவர்களில் மூத்தோனின் வில்வலி என் மகன் சித்தனின் திறமைக்கு நிகராகுமா? நீ பார்த்ததில்லை, சித்தனின் வில் திறன்?'

'சித்தன் திறமான வில்லாளிதான். இவன்பற்றிய கதையோ, இன்னும் அதிசயங்களைச் செய்பவனாகவே காட்டுகிறது.'

'பாராப் பொருளில் எப்போதும் ஒரு மயக்கம் எவருக்குமே வந்து விடுகிறதுதான்.'

மாரீசன் மெல்லிய ஒலி கிளரச் சிரித்தான். 'அப்படியானால் நீ பார்த்திராத அந்தப் பெண்ணும் அப்படியான தன்மை பெற்றவளாய் இருப்பாளேயானால் என்ன செய்வாய், ராவணா?'

'வெறுங்கையோடு திரும்புவதில்லை. அவள் இனி எப்படியான வளாயிருந்தாலும் சரிதான்' என்ற ராவணன் சிறிது தன்னைத் தெளிவடையச் செய்துகொண்டு, 'நாகன் உன்போலில்லை, மாமா. அவன் எதையும் தீர விசாரியாமல் ஒரு கருத்தைக் கூறிவிடுபவனல்ல? அவள் நாகன் சொன்னதைவிடவும், நான் எண்ணுவதைவிடவுமே அழகின் மின்னல் பாவையாகவே இருப்பாள். அதுபற்றிய ஐயம் அறு. சரி ஞ்சரி, அவர்கள் இடம் காட்டும் வனவாசி யாரையேனும் உடனழைத்துக்கொண்டு, வா அங்கே போகலாம்.'

அதன் மேல் விசைத்தேரை பாதுகாப்பான ஓரிடத்தில் விட்டுவிட்டு மாரீசனும், ராவணனும் மேல்வழி செல்லத் தொடங்கினர். இடையிலே மாரீசன் தமக்கு திசையும், குறிப்பிட்ட வனமும் காட்டக்கூடிய ஒரு வனவாசியைத் துணைக்கு அழைத்துக்கொண்டான்.

நாள்கள் பலவாய் அவர்கள் நடை தொடர்ந்தது. மாரீசன் களைத்துப்போனான். மூச்சு வாங்கினான். தளர்ந்து தளர்ந்து அவ்வப்போது உட்கார்ந்தான். கூடவந்த வனவாசியின் நிலையும் ஏறக்குறைய அதுதான். அவன் இளையோனாய் இருந்தாலும் காரியத்தின் தன்மையால் மனத்தளர்ச்சியடைந்தவன். முன்பே பலமுறையும் திரும்பிப் பார்த்து ராவணன் இடையில் தொங்கிய உடைவாள் காரணமாய் மறுபேச்சும், முகமாற்றமும் காட்டாது வந்துகொண்டிருந்தான்.

ஒருபோது, வனம் அழுகிறது! என்றான் வனவாசி. மாரீசன், ஆம், மெல்லவாய்! என்றான். அவர்கள் உரையாடல் புரியாத ராவணன், ' அவன் என்ன சொன்னான், அதற்கு நீ என்ன பதிலுரைத்தாய்' என வினவினான்.

'அவன் வனம் அழுவதாகச் சொன்னான். அதற்கு நான், ஆம் மெல்ல அழுகிறதுதான் என்றேன்.'

'வனம் அழவில்லை, மாமா. நீர்தெளித்து என்னை வரவேற்கிறது' என்றான் ராவணன். அதற்கு மாரீசனிடமிருந்து மௌனமே தொடர்ந்தது.

அவன் களைத்துவிட்டதை உணர்ந்தான் ராவணன். தானுமே தளர்ச்சியடைந்து வருவதை அவனால் உணரக்கூடியதாகவிருந்தது. பின்னால் நகரத்து எண்ணங்கள் புற்றீசலாய்க் கிளரத் தொடங்கின ராவணன் மனத்தில். ஓர்அவசரத்தில்போல் கதக்கண்ணனிடம் அரச காரியங்களைக் கவனிக்கச் சொல்லிவிட்டு, காற்றில் பறப்பதுபோல் தேரெடுத்துப் புறப்பட்டவன் அவன். மலைக்கோயிலின் உச்சியில் மணி அமைத்து, அது லங்காபுரமெங்கும் அதிர பெருநாவசைத்து ஓசையெழுப்பும் நாளை ஆவலோடு காத்திருந்தவன். மந்தாகினியை அழைத்துச் சென்று சிவதெய்வத்தின் கழுத்தில் நாகசின்னம் செதுக்கப் பட்டிருப்பது காட்டி, தன் காதலைத் திரும்பப் பெற கனவு கண்டு கொண்டிருந்தவன். அவையெல்லாம் ஓரிரு நாள்களில் சித்தியடையும் வேளையில், பொன்னொளிர்பெண்ணாள்பற்றிய கதைகேட்டு, எல்லாம் மறந்து ஓடிவந்திருந்தான். அந்தக் கணத்தில்...கண அளவாய் மட்டும்ஞ் தான் செய்வது சரியானதுதானா என்றொரு வினா அவனில் பிறந்தது. பின் தன் மாமனுக்குக் கூறியதுபோல் இனி வெறுங்கையோடு திரும்புதல் இல்லை என்ற திண்ணமெழப்பெற்றான். மறுகணம் பொன்னொளிர்பெண்ணாள் மனக்கண்ணில் காட்சியானாள். முகமெது, உடலெது எனவறியும் அளவுகள் தெரிந்தன. மற்றும்படி அவ்வுரு ஒரு அதீத ஒளிர்வில்தான் காட்சியானது அவனுக்கு.

அப்போது திகிலோடு ஒரு நினைவெழுந்தது. வனம் அழவுமில்லை, நீர்தெளிக்கவுமில்லை, வானம்தான் பொழிகிறது. பெருமழையல்ல. ஆனாலும் மழை. அங்கே குறைவாகவிருந்து, பாலை வழியில் அடைத்துப் பெய்திருந்தால், நகர்திரும்புகை நம்பிக்கையிழப்பாகிவிடும்.

எல்லாம் நினைக்க திடீரென ஓர்அவதி மனதில்.

அப்போது மெல்லிய சமிக்ஞையொலி எழுந்தது மாரீசனிடமிருந்து. அரவம் அடக்க ராவணன் நடை தளர்த்தினான். பின் நின்றான். 'ராவணா, அதோ பார், பொன்னொளிர்மடந்தை!'

ராவணன் மாரீசனின் கைநீண்ட திசையில் கண்ணொளி வீசினான்.

நிலத்துள்ளிருந்து கரு கிழித்துவரும் தங்கச் சுடராய் ஒரு பெண். அவளை நாகன் சீதையெனக் குறிப்பிட்டிருந்தது அப்போது ராவணனுக்கு ஞாபகமாகியது.

அவன் தன் மேனிக்குள்; ஞாயிற்றின் வெப்ப எறிகையை உணர்ந்தான். காணக் காண அது வெகுத்தது. அதைத் தணிவிக்கும் நிலா அவள்தானா?

தான் முன்பு குறிப்பிட்டிருந்த அரச குல இளவல்களும் சற்றுத் தொலைவில் இருப்பதை மாரீசன் இனங்கண்டுகொண்டு ராவணனுக்கு குறிப்பில் புலப்படுத்தினான்.

'என்ன செய்வது மாமா' என காற்றில் வினாவெடுத்தான் ராவணன். அவனது கை உடைவாளில் படிந்தது அப்போது.

பொறு எனச் சைகைசெய்த மாரீசன், சிறிதுநேர யோசனையின் பின், 'உடனுள்ளாரின் கவனத்தைத் திருப்பி என்னை ஒரு கொடுவிலங்கென எண்ணித் துரத்தும்படி செய்துகொண்டு விசித்திர ஓசையெழுப்பி நான் ஓடுவேன். என்னை இந்த வனவாசி பின்தொடர்வான். தனிமை சூழும் அந்நேரம் சீதையைத் தூக்கிக் கொண்டு தேரினிடத்துக்கு வந்துசேர். குறியைச் சரியாகக் கணித்திருந்தாயானால், அது இங்கிருந்து வெகுதொலைவிலில்லை' என்றான். பிறகு வனவாசியிடமும் அவன் செய்யவேண்டியதை விளக்கினான்.

வனவாசிக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. ஓடுவதானால் அவனுக்குச் சரிதான். அது ஓடுவதா பறப்பதா? இரண்டாகவும் இருக்கும். அவனளவில் அந்தப்பொழுதில் ஓடுவதென்பது அவனது தப்புகையாகவும் இருந்தது.

தற்சுதாரிப்பில் சிறிதுபொழுதைச் செலவிட்ட மாரீசன் மறுகணம் விநோத ஒலியெழுப்பியவாறு ஓடத்தொடங்கினான். வனவாசி அவனைப் பின்பற்றினான்.

காடதிர்ந்தது. அக் காலைவேளையில் அடங்கிக் கிடந்த புள்ளினம் யாவும் அவதியாய் அலறிப் பறந்தடித்தன.

'என்ன அது' என்றான் மூத்தோன்.

'விசித்திரமான விலங்கு. அது தாண்டியோடும்போது ஒரு ஒளிச் சிதறலில் பார்த்தேன்' என்றான் இளவல்.

'நானும் காணவே செய்தேன்' என்றாள் சீதையும். மறுகணம் ராமனும், அவன் தம்பி இலக்குவனும் ஒலியெழுந்துகொண்டிருந்த திசையில் பறந்தனர்.

ராவணன் தன் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டான்.

சீதை கண்டு துணுக்குற்றாள். ஆனாலும் அவன் தன்னைக் கவர வந்தானாய் அறியாததால் ஆகிருதிப் பயமே கொண்டாள்.

ராவணன் அவள் தனிமையை நிச்சயப்படுத்தியிருந்தானானதால் மிக நிதானமாக சீதையை அடைந்து அவள் மெல்லிய உடலை ஒரு பொன்மாலைபோல் எடுத்து தோளில் அணிந்துகொண்டு தேரிடம் நோக்கி விரைந்தான்.

புதுப்பொன்மாலை சிலவேளை உறுத்தச்செய்யும். அப்போது அது ஞாபகம் வந்தது அவனுக்கு.

# இருபத்தாறு

**ரா**வணன் தேரில் ஏறுகிறவளவில் அருவி மேனியனாய்ப் போனான். ஒரு மெல்லிய காலைக் குளிர், காற்றில் விரவியிருந்தும் அப்படியொரு வியர்வைச் சுரப்பு. அந்த ஒடிசல் உடம்புக்கு அவ்வளவு வலிது இருக்குமென்று அவன் நினைத்துக்கூடப் பார்த்திருக்கவில்லை. அவன் தோளில் சுமையற்ற ஒரு பொருளாய்க் கிடந்திருந்தவள் பண்ணிய அட்டகாசம் கொஞ்சமில்லை. ஆனாலும் அவளை ராவணனால் மிகச் சுலபமாகவே கொண்டுவர முடிந்திருந்தது.

மேனியின் நீர்த் துளிச் சுரப்பில் அவன் களைப்பை அறியாதிருந்தாலும், ஓர் எரிவு தோளிலும் முதுகிலும் புதிது புதிதாய் ஏற்பட்டுக்கொண்டிருந்தது அவனுக்கு எரிச்சலாக இருந்தது. அவள் உகிர்களினால் விளைத்த ரணங்களின் எரிவே அவையென்பதை சிறிதுநேரத்தில் ராவணன் உணர்ந்தான்.

தேரை நெருங்கிய பொழுதில் தன் பலமெல்லாம் இழந்து சீதை பஞ்சாகிப் போனாள். அவளது கதறுகையும் திமிறுகையும் மெல்ல மெல்லக் குறைவுபட்டுப்போயின. தான் தன் மனிதர்களிடமிருந்து வெகுதூரம் எடுத்துச் செல்லப்பட்டுவிட்டதை அவள் உணர்ந்து கொண்டதே அதன் காரணமென்பதை ராவணன் தெரிந்து கொண்டான்.

தேரில் அவளை ஏற்றுவதுகூட சிரமமாயிருக்கவில்லை அதன்பிறகு. மாமன் மாரீசனுக்காகக் காத்திருக்கவேண்டுமா என ஒருகணம் யோசித்தான் அவன். அது கவர்பொருளோடு போய்விடுவதற்கான வாய்ப்பான தருணம். நின்று அசம்பாவிதங்களை ஏன் வீணே வருவித்துக்கொள்ளவேண்டும். மாரீசன் எப்படியும் வந்துசேர்ந்துவிடுவான்.

ராவணன் தேரினைச் செலுத்தவாரம்பித்தான். அச்சாணிகள் தெறித்துவிடுவனபோல் பேரோசை எழுப்பின. தேர்க் கூடாரத்தின்

விளிம்புகளில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த பொன்மணிகள் சலீரித்தன. பல சிதறித் தெறித்;தன.

வனப் பிரதேசம் தேய்மானமாகி வெளி விரிய ஆரம்பித்தது. சீதையின் கணவனோ, அவனிளவலோ பின்தொடர்ந்து வரக்கூடுமென அவன் எண்ணியதில்லை. அவனளவில் அவர்கள் பார்வையில் படாது சீதையைக் கவருவதே எண்ணமாக இருந்தது. அது பயத்தினாலல்ல. மாரீசனுக்காகவே அவ்வண்ணம் செய்தான்.

மாமன்பற்றி நினைவிருந்தது. ஆனால் அந்த வனப் பகுதியையும் பாலை வெளியையும் மாரீசன் நன்கறிந்தவன். அதனால் அவன்பற்றிய கவலை ராவணனுக்கு இருக்கவில்லை. பாலை வெளியில் பார்வை பதியத் துவங்கிய பிறகுதான் எதிர்பாராத கவலை பிறக்கவாரம்பித்தது அவனில்.

ராவணன் உத்தேசமாய் எண்ணியிருந்ததுபோல் வனத்திலல்ல, பாலைவெளியில்தான் மழை பெய்திருந்தது. நீர்த் திட்டுக்கள் கீழைக் கரையில் சூரியன் பிரகாசமாய்க் காலித்திருந்ததில் வைரக் குளமாய்ப் பளீரிட்டுத் தெரிந்தன.

பயணம் சிரமமாகப் போகின்றது என எண்ணினான் ராவணன். ஆயினும் பயணத்தையே முறிக்கும் அளவுக்கான மழையல்ல அது என்பதும் தெரிந்தது.

சிறிதுநேரத்தில் அந்த நீர்வட்டங்களின் ஒளிப் பிரதிபலிப்புகள் காட்சியில் மங்கலடையத் தொடங்கின. சூரியன் மேகத் திரணைக்குள் மறையவாரம்பிக்கிறதென்று தெரிந்துகொண்டான் ராவணன். மேகங்களும் கார் கனக்கத் தொடங்கின. அவை மாரியின் மேகங்கள். இப்போது அவன் அக்கறைப்பட்டாக வேண்டும். இன்னுமொரு மழையில் பாலைவெளி நீர்வெளியாக மாறிவிடும்.

ராவணன் கடிவாளத்தை இறுகப்பற்றிக்கொண்டு சாட்டையைச் சொடுக்கினான்.

அது வேகத்துக்கான விடுதலை. உணர்ந்த புரவிகள் தாவத் தொடங்கின.

சீதை தேர்க்காலை இறுகப் பற்றியபடி விழிகளை நானா திக்குகளிலும் எறிந்தபடி நின்றுகொண்டிருந்தாள். தன் கணவனும் அவனது இளவலான இலக்குவனும் இனி தேடித் தன்னை அடைதலென்பது அரிதாய் ஆவதை அவள் உணர்ந்து வெகுநேரம்.

திசையும் கடந்த வெளிகளில் இராக்கதர்கள் வசிப்பதாய் சின்னவயதினிலே அவள் சொல்லப்பட்டிருக்கிறாள். அவர்கள் மனிதனைத் தின்னும் ஒருவகை ஜீவ இனமென்று அச்சமூட்டப்

பெற்றிருக்கிறாள். கேட்டு அவளுக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது அப்போது. அதை அவள் நம்பியதேயில்லை. வளர்ந்த பருவத்தில்கூட யாராவது அதைப் பேச்சிடை குறிப்பிட்டாலும் நம்ப அவள் தயங்கியே இருந்திருக்கிறாள். அவள் கண்ட வெளி அப்படியானது. அழகும், அமைதியும், வசீகரமுமாய் இருந்தது அது. அங்கு அச்சம் இருந்திருக்கவில்லை. வாழ்வின் தன்மை மீறிய வகைமைகள் பெரும்பாலும் கண்ணிலும் தென்பட்டதில்லை.

ஆனால் இப்போது நம்பினாள். மனிதரைத் தின்னும் விசித்திர ஜந்துகள் இருக்கவே செய்கின்றன.

அத்தனை திடத்துக்கிடையிலும் அந்த எண்ணத்தை வலுவாக்கும் விதமாக தன் சிறைப்பிடிப்பாளன் காணப்படாதிருந்ததை ஏதோ ஒருவகையிலும் அளவிலும் அவள் தன்னுள் உணர ஆரம்பித்தாள்.

தேர் விசைகொள்ளக் கொள்ள நாற்றிசையும் சுரி விசிறி அடிக்கப்பெற்றது. தேரிலும் பறந்தது. புரவிகளிலும் பறந்தது. காற்றிலும் எகிறியது. அம்மாமனிதனிலும், பிறகு அவளிலுமாய்த் தெறித்தது.

ராவணன் ஒருமுறை அவளைத் திரும்பிப் பார்த்தபோது அவன் முகத்தில் சிரிப்புப் பொங்கிக் கொண்டிருந்தது கண்டாள் சீதை. அது மனித சிரிப்புத்தான். அவளுக்குச் சந்தேகமேயில்லை. அப்படியானால் அவன் மனிதனா.

ராவணன் மனத்திலும் உணர்வுப் படர்கைகள். அவள் கதறி அழுதபோது, வேண்டாம்! விட்டுவிடலாமே! அழுகிற பொன்னை எனக்கு எதற்கு? என்றுகூட எண்ணியிருந்தான் அவன். ஒரு பெண் கதறி அவ்வாறு அழுதது அவன் அதுவரை கண்டதில்லை. அதுவும் ஒரு அரசகுலப் பெண். மந்தாகினி அழுதது அவன் கண்டதே யில்லைப்போல இருந்தது. வாடியிருக்கிறாள், வெகுண்டிருக்கிறாள் வெடித்திருக்கிறாள், ஆனால் அழுததில்லை.

அப்போது சீதை அழுகை தணிந்திருந்தாள். சற்று அச்சம் பெற்றிருந்ததாய் அனுமானிக்க முடிந்தது. அக்கணம் அவளொளி தன்னருகிலும், வெளியிலும் வியாபகமாகுவதாய் அவன் நினைத்தான். அவளை மூடியிருந்த பேயழகு விலகிப்போனதாய்த் தெரிந்தான்.

அவளது மெல்லிய உடலினை ஒரு வன்துகில் சுற்றியிருந்தது. அவள் மெலிந்த வெண்கால்கள் அதனிடை தெரிந்தன. மெல்லிய கைகள் தேர்க்காலினைப் பற்றியபடி வலிமைக்குப் போராடிக் கொண்டிருந்தன. கருங்குழல் காற்றில் பறந்தடித்தது. அவள் இடையே இல்லாதவளாய் இருந்தமை அவனை இன்னும் ஆச்சரியப்பட

வைத்துக்கொண்டிருந்தது. மந்தாகினி இடை சிறுத்தவள். இன்னும் சில இயக்கப் பெண்கள் திண்ணிய இடை பெற்றவர்கள். யாரேனும் இடையே இல்லாதிருக்கவும் கூடுமோ? கூடும்தான். இதோ, இப் பொன்னொளிர்ப் பெண் இருக்கிறாளே!

தேர் விசையில் அவளது தணயங்கள் இரண்டும் குலுங்கிக் கொண்டிருந்தன. ஆனாலும் அவை கனதியானவையல்ல. அவற்றில் அவள் வறிதானவளாய் இருந்தாள். மந்தாகினி பெருஞ்செல்வி இவைகளில். அவள் நடந்தால் அவை சதிரிடும். சாயவும், தழுவவும் சுகம் செய்யும். எனினும் இவளதோ தாமரை மொட்டுகள்போல் அழகானவையாய்த் தோன்றின. மெல்லத் திறக்குமென இருக்கும்பொழுதினில் திறவாதே இருந்துவிடும் வகைமைத்தனவாய் அவை. ஆர்வத்தைக் கிளர்த்தும் வாகுவும் அதுதான்.

மேனியில் ஒரு மந்தாகினித் தேடல். ஆனாலும் சூழ்நிலைமை அந்த தேக விளைச்சலை அடங்கவைத்தது.

தான் ஆரம்பம் முதலே பொன்னொளிரினால் குழம்பிப்போனதை உணர்ந்தான் ராவணன். அவள் வெண் மேனியள்தான். பொன் நிகர்த்த ஒளி வீசப்பெற்றுக்கொண்டிருந்தவள்தான். ஆனாலும் ஒரு பெண். அழவும் சிரிக்கவும் காமப்படவும் பின் இறக்கவும் கூடிய சாதாரணப் பெண். ஆனால் அவனது பொற்குவைகள் பத்துத் தலைமுறையின் காப்பும், சேர்ப்பும் கொண்டவை. அவை வளர்தல் பெறுபவை. ஒவ்வொரு மணியும் அழிதலின் நியதி அறுத்தது.

ஒரு பெண்ணாய் மட்டுமே இனங்காண முடியப்பெற்ற பின்னால் அவளை எங்கே கொண்டுபோய் வைப்பது என்ற பிரச்சினை அடுத்துத் தோன்றியது. மந்தாகினியுடனான உறவை விலக்கி தனியே அரண்மனை வாழ்வைக் கழிக்க ஆரம்பித்த பிறகு, பொன்னொளிர்ப் பெண்ணாளை கூடவே கொண்டுபோய் வைத்துவிட முடியாது. அவளை தன் பாதாள அறைக்குள்ளே பொற்குவையோடு ஒரு பொன் சிற்பமாயும் வைத்துவிட முடியாது. அவற்றில் எதுவும்தான் மந்தாகினியுடனான உறவை வெட்டிப்போட்டுவிடும்.

மனித வாசமற்று வளரப்பெறும் குறிஞ்சி நிலப் பகுதியின் மலைவாரத்தில் கொண்டுபோய், தெரிந்த இயக்கியர் காவலில் பாதுகாப்பாய் வைத்தாலென்ன.

நீண்டநேர யோசிப்பின் பின் அதுவே சரியான வழியெனத் தெரிந்தது.

இருள் விழ ஆரம்பித்த வேளையில் ராவணன் லங்காபுர வனவெல்லையை அடைந்தான். அன்றைய இரவை மடத்திலே தங்கிக்

கழிக்கும் திட்டமுடன் தேர் அரச தங்குமடத்தில் நிறுத்தப்பட்டது. தேரின் மணிநா அசைவில் வனம் அருண்டது. அது ஒலியடங்கிய மறுகணம் அங்கே உதயமாகினர் சில பணிவிடைகாரர். கண் விரித்த காட்சியில் மௌனமானார். பின் குன்று நிகர்த்து அசைவறுத்தார்.

அந்தநேரத்தில் அங்கே ராவணனை மட்டுமல்ல, ஒரு பெண்ணையும், அதுவும் வெண்ணிலாப்போல் உடுக்கள்போல் ஒளி சிந்தும் ஒரு ஒல்லிய மங்கையைக் கண்டதினாலும் அது.

வனவாசிகளைக் கண்டு சீதைக்குப் பயம் பிறந்தது. அதனால் அடங்கிய கலைமானாய் ராவணன் பின்னால் மறையப் பார்த்தாள்.

அது கண்டு ராவணன் கலகலவெனச் சிரித்தான். பின் உள்ளே நுழைந்தான்.

தன் உடைவாளையெடுத்து அருகேயுள்ள ஒரு ஆசனத்தில் வைத்துவிட்டு ஆசுவாசமாய் அமர்ந்தான்.

நீண்டதாய், கணீரெனச் சத்தமெழுப்புவதாய், ஒரு அதிர்வை வைக்கப்பெறும் இடத்தினில் மட்டுமின்றி கேட்போர் மனத்திலும் எழுப்புவதாய் அவனது உடைவாள் இருந்தது கண்டாள் சீதை. அவளது கணவனின் கையாயுதம் வில்தான். வனவாச காலத்திலும் அதை அருகே வைத்துக்கொண்டுதான் படுத்தான். உடலுறவுறகளின் போதுகூட அது அந்த இடத்தில் ஒரு சாட்சியாய் நின்று கொண்டேயிருந்தது. இவனுக்கு வாள்தான் கையாயுதமா.

உறையிலிருந்து மெல்லவாய்த் தெரிந்த அதன் உடலின் ஒளி அவனது சிரிப்பேபோல் பளீரென இருந்ததைக் கண்டாள் அவள்.

ஏதோ ஒரு ஆற்றாமையொன்று அவள் நெஞ்சில் வந்து விழுந்தது.

# இருபத்தேழு

உயர்ந்து வளரத் துடித்து, மெலிந்தெனவானாலும் கிசுகிசுவென மேலேமேலேயாய்ச் சென்றுகொண்டிருந்த ஒரு பசுங்கொடியினைப் போலத்தான் எட்டி நின்றிருந்த சீதையின் தோற்றம் தோன்றிக் கொண்டிருந்தது ராவணனுக்கு. காற்றில் அப் பலவீனக் கொடி பற்றற்று அலைப்புறுவது போலவேதான், அப்போது அவளும் மெல்ல நடுங்கிக்கொண்டிருந்தாள்.

அவளை ஒரு பொன் மாலைபோல் தோளில் சுமந்து வந்து கொண்டிருந்த வேளையிலும், தேர்த்தட்டில் இறக்கிவிட்டு தேரைச் செலுத்திக்கொண்டிருந்த வேளையிலும்கூட அவளை லங்காபுரம் கொண்டுசேர்க்கப் போகும் ஒரு செல்வமாய் மட்டுமே அவன் எண்ணிக்கொண்டிருந்தான். அப்போது தெரிந்தது, அவள் ஒரு மனிதி என்பதும்.

அவள் மழையிரவின் இருளிலும் பொலிந்து ஒளி சிதறிக் கொண்டேயிருந்தாள். ஆனாலும் ஒரு மனிதியாக அஞ்சி நடுக்குறவும் செய்துகொண்டிருந்தாள். அவளில் ஒரு வசீகரம் இருந்ததை அவன் கண்டான். அவளடைந்திருந்த அக் கையறுநிலைக் கணத்தில், அது வேறொரு பரிமாணம்பெற்று ஒரு விசித்திர அவலமாய்த் தோன்றிக் கொண்டிருந்தது. கிட்ட யாரையும் நெருங்கத் தூண்டாத அவலம். ஆசையைக் கிளர்த்தி நெருங்கத் தூண்டுகின்ற அழகி மந்தாகினி. இவளோ அவ்வாசையோடு எட்டவாய் ஏங்கி நிற்கவைக்கிற அழகியாகவிருந்தாள்.

அப்போது மடப் பராமரிப்பாளி எங்கிருந்தோ அங்கே வந்து தோன்றினான். அன்றிரவு அங்கே தங்கிச் செல்லும் உத்தேசமா? எனக் கேட்பதுபோல் எட்டவாய் நின்று அரசன் முகம் பார்த்திருந்தான்.

‘நீ போ, தேவையானால் பின்னர் உன்னை அழைக்கிறேன்’ என்று கூறி அவனை அங்கிருந்து அனுப்பிய ராவணன், பிறகு என்ன நினைத்தானோ ‘நில்’ என்றான். மடப் பராமரிப்பாளி திடுக்கிட்டுத் திரும்பி நின்றான்.

‘உனக்கொரு மகள் இருக்கிறாளல்லவா?’ ராவணன் அவனை உசாவினான்.

ஓடிவந்து முன்னால் பணிந்து நின்றபடி, ‘இருக்கிறாள், தலைவா. பேர் சடைச்சி’ என்றான் அவன்.

‘ஓ..இப்போது ஞாபகம்’ என்று அவளது பிரமாண்டமான ஆகிருதியும், சடைத் தலையும், கனிந்த முகமும், கலங்காத கண்களும் ஞாபகமாகிக் கூறிய ராவணன், ‘எங்கே அவள்? அவளால் ஒரு வினை ஆகவேண்டும்’ என்றான்.

திடீரென அவன் முன்னால் மண்டியிட்ட மடப் பரிபாலகன், ‘சடைச்சிக்கு இதைவிடப் பேறு என்ன, தலைவா?’ என வாய் குழறினான். மறுகணம் எழுந்து மகளை அழைத்துவர விறுவிறுவென நடந்தான்.

ராவணனுக்கு அந்தப் பணிவும், நம்பிக்கையும், அர்ப்பணிப்புமான மட பரிபாலகனின் நடத்தை மெய்சிலிர்க்க வைத்தது. அவனது குடிகள் எல்லோரும் அப்படித்தான். ஆனாலும் ஒரு வாழ்க்கை முறைமையின் மாற்றத்துள் அமுந்திக்கொண்டு போனதினால், அவர்களது அர்ப்பணிப்பு மனோபாவம் குறைந்துகொண்டு போவதையும் அவன் சிலரிடத்தில் கண்டிருக்கிறான். பரிபாலகன்போன்ற வனப்பகுதி மக்களே இன்னும் முன்னர்போல மாறா உளம் கொண்டவர் களாயிருந்தனர். அவனது மகளால் ஒரு காரியம் ஆகவேண்டி யிருக்கிறது என்றதுமே, என்ன காரியம், அது அரச மாளிகையிலா, வெளியிலா என்ற எந்த வினாவுகையுமின்றியே, அதைப் பெரும் பேறாகக் கருதி மகளை அழைத்துவரப் போயிருக்கிறான் அவன்.

ராவணன் சீதை பக்கம் திரும்பினான். அவள் புரியாத அவர்களது உரையாடலில், மேலும் திகைத்தவளாய் நின்றுகொண்டிருந்தாள். எப்படி அவளிடம் தெரிவிப்பது? உட்கார் என்றால் புரிந்து கொள்வாளா? அவள் பேசும் மொழி எது? இயக்க மொழிக்கு மிக அணித்தாக இருக்கும் நாகமொழி போன்ற ஒரு மொழியாக அவளது மொழியும் இருக்குமா? என்றவாறான பல கேள்விகளும் அவன் மனத்துள் திரையெறிந்தன.

அப்போது அவனுக்கு தவிர்க்க முடியாதபடிக்கு நாகனின் ஞாபகம் வந்தது. அவன் ஆறாடியாய் அலைபவன். பல்வேறு தேசங்களுக்குச்

சென்றிருப்பவன். பல்வேறு மொழிகளைப் பேசும் மக்களோடு பழகியிருப்பவன். பல்வேறு நாடுகளின் கதைகளையும் லங்காபுரம் காவி வருவதோடு, லங்காபுரத்தின் கதைகளையும் பல்வேறு நாடுகளிலே சுவறவிட்டு வருபவன். இயக்க, நாக மொழிகள் தவிர்த்து வேறேதேனும் ஓரிரு மொழிகளாவது புரிய, பேச தெரிந்துவைத்திருப்பான். அவன் இவள் பேசும் மொழியை அறிந்திருக்கக்கூடும். அப்படி இல்லையென்றாலும், அவள் பேசும் மொழி எது என்றாவது தெரிந்திருப்பான். இவ்வாறு பலவும் எண்ணியவன் அவளை அமரும்படி சைகை செய்தான்.

அவள் உடனேயே அமர்ந்துகொண்டாள். உடலசதி அவளை எங்காவது சாயவேண்டும்போல் படுத்திக்கொண்டிருந்ததுதான். ஆனாலும் அவள் நின்ற கால்நிலைகூட மாற்றாது நடுங்கிக் கொண்டிருந்தாள் அந்த இடத்திலேயே. அவன் உட்கார் எனச் சைகை செய்ததும் அவள் அமர்ந்ததுகூட உடலசதியினால் அல்ல. அவன் மீதான பயத்தினாலேயாகும்.

அவள் தன் சைகையைப் புரிந்து அமர்ந்தது ராவணனுக்கு மெல்லிய மனச் சிரிப்பை வரவழைத்தது. அப்போது மாமன் மாரீசன் அதைக் குரங்கு மொழி எனச் சொன்னது அவனுக்கு மனதில் கொண்டான். மாமனுக்கு என்ன நடந்திருக்கக்கூடும்? என்ற எண்ணம் தொடர்ந்து எழுந்தது.

துரத்திச் சென்ற இளவரசர்களை ஏமாற்றிவிட்டுத் தப்பும் சாதுர்யம் மிக்கவனே மாரீசன். அதனால் அவனை எப்படியும் லங்காபுரத்தில் சந்திக்க முடியுமென நம்பிக்கொண்டு, யாமம் எதுவென அறிய விண்ணை எட்டி நோக்கினான்.

அப்போது சடைச்சி வந்தாள். ராவணனை வணங்கினாள். அவன் ஏவலறியக் காத்திருந்தாள்.

ராவணன் சொன்னான்: 'உன்னிடம் ஒரு முக்கியமான பொறுப்பை ஒப்படைக்கப்போகிறேன் இப்போது. இந்தப் பொன்மணிப் பெண்ணின் பெயர் சீதையென்றான் நாகன். இவளைப் பாலைவெளி கடந்துபோய் கபாடபுரத்துக்கும் தொலை வடக்கேயுள்ள வனத்திலிருந்து கவர்ந்து வந்திருக்கிறேன். இவளை அரண்மனை கொண்டுசெல்லும் உத்தேசம் இப்போது இல்லை. அதற்கான காலம்வரும்வரை இவளை வலுவான ஒரு காவலில் லங்காபுரத்தின் தென்மேல் புறத்திலுள்ள மலைத்தொடர்களின் வாரத்தில் விட்டுச்செல்ல எண்ணியிருக்கிறேன். இவள் நம் மொழியைத் தெரிந்திருப்பாள் என நான் எண்ணவில்லை. என்னமாதிரிப் பேசுவியோ, இவளை நீதான் பொறுப்பாகக் கவனித்துக் கொள்ள வேண்டும். சரிதானே?'

சடைச்சி பேச நா வராது தலையைமட்டும் ஆட்டினாள். பின் ராவணன் தலையசைப்பில் சுட்டிய திசையில் தன் முகம் திருப்பினாள்.

அழகிய துகில் அலைக்கழிந்து கிடக்க, வெண்ணிலாப்போல் ஒளி வீசும் ஓர் அழகிய பெண்ணை அவள் அங்கே கண்டாள். அவளில் இடைவெளியற ஏதோ சோகம் அப்பிக்கிடந்தது.

ஏக்குற்றவள்போல் பார்த்துக்கொண்டிருந்த சீதையின் கண்களில் சடைச்சியின் ஈரம்விளைந்த கண்களைச் சந்தித்த கணத்தில் ஒரு துளிர்ப்பு வந்திறங்கியது.

# இருபத்தெட்டு

சீதையை மலையடிவாரத்து அசோகமரச் சோலையொன்றில் சடைச்சியுட்பட்ட சில காவல் திறன்மிகு இயக்கியருடன் பாதுகாப்பாக விட்டுவிட்டு, மலைப்பகுதி கடந்து, பெருவனத்தின் பெரும் பகுதியும் தாண்டி மும்மலையை நெருங்கிக்கொண்டிருந்தான் ராவணன். நள்ளிரவின் முன் அரண்மனையை அடைந்துவிடும் திண்ணத்தில் வேகவேகமாக தேரினைச் செலுத்திவரும் வேளையில் மழை தூறவாரம்பித்தது.

ராவணன் அங்கலாய்த்தான். சிறிதுநேரத்தில் மழை பலமாகப் பெய்யத் தொடங்கியது. ராவணன் எரிச்சலடைந்தான். பின்னர் பெருமழையாய்ப் பிடிக்க ராவணன் கையறுநிலையடைந்தான். இருட்டும், பாதைச் சீரின்மையும் அவனைத் தொடர்ந்தும் தேரூர்தல் சாத்தியமில்லாது பண்ணிற்று. புரவிகள் பாதை மேடுபள்ளமாய், சறுக்கல் நிறைந்ததாய் இருப்பது கண்டு ஆமைவேகத்தில் நகர்ந்தன. சிலவேளை நின்று தம் குழம்படி பதிக்கப் பிரயத்தனப்பட்டன. சிலபொழுதுகளில் தேர்சாய்ந்து நிமிர்ந்து, பின் மறுபுறம் சாய்ந்து மீண்டு நிலைபெற்றது.

ராவணன் தேர்த்தட்டில் நின்று அப்போதும் புரவிகளை உன்னிக்க குரல்கொடுத்துக் கொண்டிருந்தான். ஆனாலும் புரவிகள் வேகமேற மறுத்தன. அது தமது மட்டுமில்லை, தம் தலைவனது பாதுகாப்பு மாகும் என்பதை அவை உணர்ந்திருந்தனபோல் தெரிந்தது. ஒருபோது தேர்சறசறவென ஒரு பள்ளத்தில் சறுக்கிச் சென்று ஒரு கல்லில் பொறுத்து கவிழ்வு தவிர்த்தது.

தன் நாட்டில், தன் பாதையில் தனக்கே பயணம் முடியாது போவதைக் கண்டான் ராவணன். அவன் அந்தப் பாதைகளுக்கு அந்நியப்பட்டவனில்லை.

ராவணன் மேற்கொண்டு தாமதிக்கவில்லை. தேரிலிருந்து குதித்திறங்கினான். தம் வேகத்தில் குதிரைகளை நடக்க விட்டுவிட்டு, தான் முன்னே நடந்தான். அப்போது அவை சற்று வேகமாய் நடப்பனபோல் தோன்றியது அவனுக்கு.

ராவணா, இது சாய்வு தவிர்த்துப் பயணம் செய்யும் வல்லபம் கொண்டதாய்க் கட்டுமானமான தேர்! கனதி குறைந்த மரங்கள் பொருத்தப்பட்டு, தேரின் எடை குறைதலுக்கான சகலமும் செய்திருக்கிறது! எனினும் இதன் நிலை இதன் அமைப்பிலேயே தங்கியுள்ளது! குடைசாய்ந்துவிட வாய்ப்பே இல்லாத கட்டுமானம்! என மாரீசன் சொல்லியிருந்தது அப்போது அவனுக்கு ஞாபகமாயிற்று. உடனிகழ்வாய் மாமன்பற்றிய எண்ணம் மறுபடியும் எழுந்தது.

நான்கு கால்களில்போல் பெருவோசை எழுப்பிக்கொண்டு ஒரு விலங்காக அவன் துள்ளிப் பாய்ந்து ஓடியதே அவன் கண்ட கடைசிக் காட்சி. அவன் அரண்மனை சென்றிருப்பான் என்று தானே கொண்ட சமாதானத்தில் அப்போது அவன் நம்பிக்கையீனப்படத் தொடங்கினான்.

மேலே பாதை சற்று சீர்மையாவது கண்டு தேரேறி ராவணன் நனைந்த ஆடையனும், மேனியனுமாய் அரண்மனை வந்து சேர்ந்தான்.

நள்ளிரவாகும் அந்த யாமத்திலும் அரண்மனை உறங்காதிருந்தது. தன் இன்மையாலான வெறுமையில் அரண்மனை ஏக்குற்றிருக்கும் என எண்ணியிருந்தவன் திகைத்துப் போனான். அது மகிழ்ச்சியான திகைப்பாயிருந்தது. தம்பி கதக்கண்ணன் தானுள்ளபோது ஏறுமாறான நடத்தையும், மிகுந்த சுகபோகியுமாய் இருப்பினும், தானில்லாத வேளையில் தன்னிடத்திலிருந்து தான் ஆற்றவேண்டிய காரியங்களைச் சரியாகச் செய்துவருகிறான்தான் என மகிழ்வெய்தியவாறே விரைந்தோடிவந்த காவலாளிகள் வசம் தேரினை ஒப்படைத்துவிட்டு அரண்மனை புகுந்தான் ராவணன்.

அரண்மனைக் கூடத்தில் ஒரு பெருந்தவிசு இருந்தது. அது எவரிருந்தாலும் அவரைக் குள்ளமாகக் காட்டிவிடும் கம்பீரம் பெற்றது. ராவணனுக்குத்தான் அமைப்பானது. அந்தத் தவிசில் மந்தாகினி ஏறுபார்வையில் மந்தகாசமாக உட்கார்ந்திருந்தாள். அங்கே எப்போது வந்தாள்? ஏன் வந்தாள்? அவன் அப்போது அங்கே வரப்போவதை அவள் ஏற்கனவே அறிந்திருந்தாளா? தன்னைக் கண்டும் ஒரு அசைவு காட்டவில்லையே அவள், முடிந்தது எப்படி?

அருகே பணிவோடு வீடாணன். கதக்கண்ணனிடம்தான் அரண்மனைப் பொறுப்பை அவன் கையளித்துச் சென்றிருந்தான்.

அவன் எங்கே? தலைமைப் பொறுப்பில் விட்டுவந்திருந்தும்கூட கதக்கண்ணனானால் அத் தவிசின் மருங்கு செல்லவும் அஞ்சுவான். மந்தாகினி துணிந்தாளே? தலைவி என்று நினைத்தமர்ந்தாளா? கணவன் தவிசு என்ற சொந்தத்தில் அமர்ந்தாளா? கேள்விப் புற்றீசல்கள் அடர்ந்து பிறந்தன.

வீடாணன் அண்ணனைக் கண்டதும் மேலும் பணிந்தான். அது புதியதாக இருந்தது ராவணனுக்கு. அவன் தம்பியர்எல்லோருமே அவனிடத்தில் அடக்கம் காட்டுபவர்கள்தான். ஆனாலும் அப்போதைய வீடாணனின் பணிவு..! அது பல்வேறாய் அவன் முன்னர்யூகங்கொண்டிருந்த கதைகளையும் நிச்சயப்படுத்திற்று. ஆனாலும் அப்போது அவைபற்றி தான் அதிகம் யோசிக்க வேண்டியதில்லை என அவன் ஒதுக்கிவைத்தான்.

ராவணன் தவிசின் நேரெதிர்வந்தான் நீர்சொட்டச் சொட்ட.

தவிசு ஒரு பிரமாண்டம்போல் நின்றிருந்தது அவன் முன்னால். அது வளர்ந்திருக்கிறதா? பின்னர்தெரிந்தது, அது உளி கலை செய்த மரத் துண்டங்கள் சேர்த்து கால்கள் உயர்த்தப்பெற்றிருப்பது. இன்னும் அந்த இடம் ஒரு சபை கணக்கில் அமைப்பும் பெற்றிருந்தது. சில ஆசனங்கள் புதிதாய்ப் போடப்பெற்றிருந்தன. யார்வேலை அது? மந்தாகினியினதா? அதுதான் அவளது மந்தகாசத்தின் காரணமா?

'நீ எப்போது திரும்பினாய்?' ராவணன் வீடாணனைக் கேட்டான்.

'நான் புறப்பட்ட இரண்டாம்நாள் மாலையிலேயே வந்துவிட்டேன், அண்ணா.'

'பாசறை நிலைமைகள் எப்படி இருக்கின்றன?'

'இயல்பாகவே இருக்கின்றன.'

'ம்...' என்றவன் சிறிது தாமதமாகி, 'மாரீசன் மாமா வந்தானா?' என்றான் யாரைக் குறித்தென்றில்லாமல்.

'மாமனா? இல்லையே. அவன் உன்னோடு வந்ததாய்த்தான் நாங்கள் எண்ணிக்கொண்டிருக்கிறோம்' என்று பதிலளித்தான் வீடாணன்.

'என்னோடுதான் வந்தான். பிறகு மாயமாய் மறைந்துபோனான்.'

எங்கோ, ஏதோ தவறு நடந்திருக்கிறது என எண்ணினான் ராவணன். மேலே தாமதிக்காமல் அவன் உள்ளே செல்ல வாரம்பித்தான். வீடாணன் மேலும் தாழ்ந்து பணிந்தான்.

ராவணன் மனத்துக்கு சட்டெனத் தெரிந்தது அவன் தவறுசெய்து கொண்டிருக்கிறான் என்று. நேற்றும், முன்பும் செய்த தவறுகளல்ல. இது புதிது. பாரியது. என்ன தவறு என்று தெரியவில்லையே தவிர,

அவன் மனம் முழுக்க உறைந்துபோயிருந்த கசடுகளின் மேலடுக்கான தவறுகள் அவை. .வற்றின் இருப்பு அவனது முகத்தில் துல்லியமாய்த் தெரிந்தது.

ராவணன் வேகமாய் நடந்தான். அவ் வேகம் மனவேகமாய் இருந்தது. அவ்வேளையில் பின்னால் காலடியோசை கேட்டது. வீடாணனாய் இருக்குமென்ற எண்ணத்தில் முகம் திரும்பிப் பாராமல் மேலும் வேகமாய் நடந்தான். தன்னறைக்குள் திரும்புகிறபோதுதான் தெரிந்தது, தொடர்ந்துகொண்டிருந்தது வீடாணனல்ல, மந்தாகினி என்பது.

ராவணன் முகம் குப்பென்று வியர்த்தது. மழையிரவின் குளிர்வெளியிலிருந்து வந்திருந்த வேளையிலும்தான் வியர்த்தது. ஆனந்த வியப்புக்கள் எவ்வேளையிலும் வியர்க்கவைக்கும்தான். கோடி இன்பங்கள் அவனைப் பின்தொடர்ந்து கொண்டிருக்கின்றனவா? கபாடத்தை திறந்தபடியே விட்டு ராவணன் உள்ளே புகுந்தான்.

பின்னாலாயே தானும் உட்புகுந்த மந்தாகினி கபாடத்தை ஓங்கிச் சாத்தினாள். 'ஏன், எனதிந்த வனப்புக்கு என்ன குறை வந்தது?' எனக் கேட்டு மார்பில் கிடந்த மேலாடையை இழுத்து ராவணன் முன்னால் வீசினாள்.

உன்னித்த இரு கருநீல முலைகளும் அவள் மேலாடையை வீசியெறிந்த அதிர்வில் குலுங்கி அமைந்தன.

ராவணன் ஆசையேறினான். ஆனாலும் அவளது உக்கிரத்தின் காரணம் அறிய அவனது மனத்தில் அன்புதான் ஊறியது. அவள் மதம், இனம் சார்ந்த எத்தனை வேறுபாடுகளுற்றிருந்த போதிலும், மனைவியாகவே இருக்கிறாள் என்பதறிந்ததில் அச்சுரப்பு. அவள் தன்னைப் புரிந்துகொண்டாளா? நாகமும் சிவனும் சேர்ந்த சொரூபம் வழிபாட்டுக்காக நிலைநிறுத்தப்படப் போவது தெரிந்து தன் கோபம், புறக்கணிப்புகளை நீக்கிவிட்டாளா? எல்லாம் நினைக்க அவனுக்கு அவளை எடுத்து மடியில் போட்டுக்கொண்டு யாழெடுத்து மீட்டி, இசையாய்ப் பொழியவேண்டும் போலிருந்தது.

சற்றுத் தாமதமாகத்தான் புரிதலானது, அவளது அச் செயற்பாட்டின் காரணம். ஆம், சீதையைக் கவர்ந்துவந்த செயலும், அவளை மானுடர்உறலரிய வளர்மலைக்கருகேயுள்ள அசோக வனத்தில் சிறைவைத்திருப்பதும் மந்தாகினிக்குத் தெரிந்துவிட்டன! அம்சங்கள் பெருகிய தான் மனைவியாய் இருக்க, உனக்கேன் இன்னொருத்தி மீதான ஆசை என்ற எரிவிலிருந்து பிறந்தது அவள் கேள்வி!

ராவணன் இனி அவளுக்கு உண்மையை விளக்கியே ஆக வேண்டும்.

அவன் அவளை நெருங்கிவந்தான். அப்படியே அள்ளியெடுத்தான்.

'மந்தாகினி, உன்போல் எனக்கு எவர்அமைவர்? அவளைப் பெண்ணாக அல்ல, பொன்னாகவே கொண்டுவந்தேன்' என்றான்.

மந்தாகினி அதிசயம் மேவ அவன் கண்களை ஊடறுத்தாள்.

'மெய்யாகவேதான். அவள் இரவிலும் சுடரும் பெண்ணாயிருக்கிறாள்.. எலும்பாலும் ஊனாலும் அல்ல, அவளைப் பொன்னாலேயே செய்திருக்கிறது. சுவாசிக்கும், நடக்கும், பேசும், கதறும், கண்ணீர்விடும் பொற்சிற்பம் அவள். எப்போதும், எங்கேனும் நீ கண்டதுண்டா? கேள்வியிலேனும் அறிந்ததுண்டோ? ஒளிர்தல் எதுவுமே ராவணனுக்கானது. அதனால்தான் கவர்ந்துவந்தேன்' என்று மெல்லிய கலகல சிரிப்புச் செய்தான் ராவணன்.

அவன் கைகளில் கிடந்திருந்த மந்தாகினி, அதிசயப்பட்டாலும், நம்பாது போகவில்லை. ராவணனை அவள் ஓரளவு சரியாகவே புரிந்திருக்கிறாள்தான்.

மேலே, அவன் கைகளிலிருந்து இறங்க மனமறுந்திருந்தது அவளுக்கு.

# இருபத்தொன்பது

**கா**ர், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என காலம் பஞ்செனப் பறந்துகொண்டிருந்தது ராவணன் வாழ்வில்.

அவன் மீளாஉளுமைப் பட்டிருந்தான். மந்தாகினியின் இல்லம் இடையறா இசையின் வெள்ளம் பொங்கும் தளமாகியிருந்தது. ராவணனின் யாழிசை மட்டுமில்லை, காமத்தின் இசையும்கூட அங்கே பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது.

குறிஞ்சிப் பிரதேசத்தின் அசோக மரக் கூடலொன்றுள் சீதையை திரிசடை உட்பட்ட சில இயக்கியப் பெண்கள் மத்தியில் பாதுகாப்பாய் விட்டுவிட்டு ராவணன், அரண்மனை வந்த நாள் அரண்மனையின் அரச மஞ்சம் அமளிதுமளிப்பட்டு அடங்கிய வைகறையில், ராவணனைத் துயிலுணர்த்தியது ஓங்கியெழுந்து அலையெனப் பரவிவந்த வெண்கல நாதப் பெருவெள்ளமொன்று. ராவணன் கண்விழித்து பரவசித்தான். மலைக் கோவிலிலிருந்துதான் இசைப் பரம்பல் தொடங்கியிருந்தது என்பதை அனுமானிக்க அவனுக்கு வெகுநேரம் ஆகவில்லை. 'சிவனே' என்று அவன் வாய் நெஞ்சுருகிய நாதம் எழுப்பியது. எல்லாம் மறந்தவனாய் மலைத் திசையில் விழி பதித்து நின்று நீருகுத்துக்கொண்டிருந்தான்.

அவனது சிவனோலத்தில் கண்விழித்த மந்தாகினி அவன் நிலையில் மெல்ல நகைப்புற்றவளாக கிட்ட வந்தாள். அவனது தோளில் கையை வைத்து, 'ராவணேசா!' என விளித்தாள். 'உன் பரவச மனநிலையின் காரணம் உலோக மணியோசையா' என்றாள்.

ராவணன் திரும்பிப் பார்த்து தலையசைத்தான். பின்னர் கேட்டான்: 'யார் செய்தது.'

'கதக்கண்ணன்.'

'வீடாணனோ என்று நினைத்தேன்.'

'அவன் கதக்கண்ணன் முயற்சியைத் தடுக்கத்தான் முன்னின்றான். கதக்கண்ணன் என்னிடம் வந்து, அண்ணன் காலையிலேயே மணியை மலைக்கோவிலில் நிறுவ நினைத்திருந்தான், அவனில்லா விட்டாலென்ன, அவன் நினைத்ததை நாம் நிறைவேற்ற வேண்டும் தானே? என்று சொன்னான். நான், நீ சொல்வது சரிதான்! என்று அனுமதியளித்தேன்.'

ராவணன் வார்த்தையருகியவனாய் விண்ணோக்கி நிமிர்ந்தான். முதல் நாளிரவு வீடாணன் குழைவிலிருந்த நம்பகமின்மை உடனடியாக ஞாபகமானது. அவனுள் ஒரு அசுர எண்ணம் குடிகொண்டுவிட்டதை மந்தாகினியின் வார்த்தைகளில் நிச்சயப்பட அவனால் முடிந்தது. புசிப்பும் குடிப்பும் பரத்தமையுமாய் அலையும் ஒரு தம்பி எவ்வளவு கச்சிதமாய் தன் எண்ணத்தை நிறைவேற்ற எண்ணியிருக்கிறானென்று எண்ண ராவணனுக்கு புளகிதம் ஏற்பட்டது. அதேபோது காரியகாரனென்று எண்ணியிருந்த மறுதம்பி நடந்துகொண்டவிதத்தை எண்ண அவனுள் சினம் மூண்டது. ஆனால் அப்போதைக்கு அந்த மனவெழுச்சியை அடக்கிவைக்க அவன் தீர்மானமெடுத்தான்.

அடக்கிவைக்க நினைத்தது அமிழ்ந்துபோய்விட்டிருந்தது அத்தனை நாட்களிலும்.

பருவம் வந்தது. வந்ததுபோல் மனங்களைக் கிளரச்செய்து மாறிப்போனது. வேறு பருவம் வந்தது. வந்ததுபோல் அதுவும் தன் மாந்தர் கடமையான மனங்களைக் கிளர்த்தவோ அடக்கவோவான அலுவலை முடித்துக்கொண்டு விலகிச் சென்றது.

ராவணன் யாழெடுத்து காலையில் மட்டுமில்லை, மாலையில் பாடினான், இரவிலும் பாடினான். நண்பர்களை அழைத்து இசைத்துக் காட்டினான். ஊர்மக்கள் கேட்க அரண்மனை உப்பரிகையில் இசையைப் பெருகவிட்டான். காலம் இனிமைகளை அவனுக்காய்க் கொட்டிச் சென்றுகொண்டிருந்தது.

ராவணன் உடம்பும் பெருக்கத் துவங்கியிருந்தான்.

அவன்போல் இப் பு+ப்பரப்பில் செல்வந்தன் யாவன்.

அள்ளவள்ளக் குறையாத மணிகள் பாதாள அறைகளில். அவை வீசுமொளி புவிக்குத் தெரியாவிட்டால் என்ன, அவனுக்குத் தெரிந்தது. மந்தாகினிக்குத் தெரியாவிட்டால் என்ன, மேகங்களின் மோதுகையிலிருந்து வெளிச்சமடித்ததே.

பொன்னிறப் பெண்ணாளை எவர் கண்டிருப்பர் அவன் தலைமுறையில். ஆனால் அவனோ அவளையே உடையவனாக

இருக்கிறான். அவன் இயக்கன். நாகர்கள் அறிவுத் தேடர்களாய் இருக்கட்டும். இயக்கன் பொருட் தேடகனாய் இருந்தான்.

மந்தாகினியும் அவ்வாறு கருதித்தான் அடங்கியிருப்பாளோ.

ஓரொரு பொழுதில் ராவணன் நாகனையும் நினைத்தான். அவன்தான் பொன்னிறப் பெண்ணாள்பற்றிச் சொன்னவன். அவன் ஆண்டாண்டாய்ச் சொன்ன அத்தனை கதைகளையும் விஞ்சிய அழகிய கதை சீதைதான்.

மட்டுமில்லை. அவன் அப்போது மாகனதியான ஓர் இரகசியத்தின் காப்பாளனும். அவன் எங்கிருந்தால் என்ன. இரகசியக் காப்புகள் அணுக்கமற்றவையாய் இருப்பதும் நன்மைக்கானதே.

ஆனாலும் அவன் வருவான். அதுவும் விரைவிலேயே.

ராவணன்போலவே தன் நட்பாளனைப்பற்றி தருணங்களில் நாகனும் நினைத்தான். அணுக்கமறுந்த நிலைமை அவனையும் வருத்தவே செய்தது. ஆனாலும் தன் பயணியாயிருந்த நிலைமையின் முறைமை கெட அவன் நடந்துகொண்டது சொல்லொணா மனச் சுமையை ஏற்றிவிட்டிருந்ததுதான்.

நாகன் இப்போது வியாழி குடிலில் தங்கியிருந்தான். பயண நினைப்புகள் மரத்துப்போயிருந்தன. மீண்டும் எப்போதாவது அவ்வெண்ணம் தலைகாட்டுமா என்றும் தெரியாமலிருந்தது.

மனதால் தவிர, அவன் உடலால் இன்னும் தளராதவனாகவே இருந்தான். வியாழியுடனான காமம் தடைகளேதுமற்றுப் பெருகிக் கொண்டிருந்தது. அரண்மனையிலிருந்து திரும்பி வியாழியின் இல்லுக்கு வந்த நாளில் நடந்தவைகளை நாகன் எப்போதும் மறக்கமுடியாதவனாக இருந்தான். அதுதான் அவனை அங்கே கட்டிப்போட்டதென்றும் சொல்லவேண்டும்.

நாகன் நெடுவழி கடந்து வந்துகொண்டிருக்கிறான். வியாழியின் குடிசை நெருங்கிக்கொண்டிருக்கிறது. குன்றொன்றில் அசையாத சிலையாக கையில் எதையோ வைத்துக்கொண்டு ஓங்கியபடி யிருக்கிறான் வியாழியின் மகன். நாகனுக்கு அதிசயமாக இருக்கிறது அது. பின்னர் தெரிகிறது அவன் எதையோ குறிவைத்துக் கல்லை ஓங்கிக்கொண்டிருப்பது.

அது குழந்தை வேட்டையின் ஓரம்சம். அவன் நாக்கிழந்த நாளிலிருந்து மறுபடி வாலிபம் கழன்று குழந்தைமை அடைந் திருக்கிறான்.

அறியா நாகன் வியாழி குடில் வருகிறான். அவன் மனத்தில் நிறைந்த திட்டங்கள். வியாழியின் மகன் இன்னும் அங்கே இருந்து கொண்டிருப்பது அவனில் ஒரு கவலையையும் விளைத்திருக்கிறது. நாகன் பிரசன்னத்தை வியாழி மகன் விரும்பியவனல்ல என்றைக்கும். அது தெரிந்திருந்தவன் நாகன்.

நாகனைக் கண்டுகொண்டு ஓடிவருகிறாள் வியாழி. அவன் முன்னே நின்று கலகலக்கிறாள். பின், இன்னும் நாகன் தன் மாற்றம் காணாதிருப்பது தெரிந்து முகத்தை அங்காந்து அசைக்கிறாள்.

தூரத்தே அவளது இரண்டாவது குழந்தையிருந்து சிரிக்கிறது.

அப்போதுதான் நாகன் காண்கிறான். அவள் முகம்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது, அவளது ஒற்றைக் காதிலிருந்த பொன் மணி. அதை காதில் துளையிட்டு வியாழி கொழுவியிருப்பாள் போலும்.

அவன் கேட்டான்: எங்கிருந்து கிடைத்தது.

ராவணத் தேரிலிருந்து விழுந்தது.

நாகன் இப்போது மெல்லிய முறுவல் கொண்டான். அதையெடுத்து காதில் போட்டுக்கொண்டாயா.

வியாழி தலையசைத்து ஆமென்கிறாள்.

எங்கே தெரிந்துகொண்டாய் காதணி அணிகிற விதம்.

சில நாகப் பெண்களில். இன்னும் சில மலைப்பகுதிப் பெண் களிடத்திலும்.

நாகன் பேசாதிருக்க, வியாழி தொடர்ந்து சொல்கிறாள்: நீர் எப்போது வருவீரென்று காத்துக்கொண்டிருந்தேன்.

நாகன் பேருவகையோடு வியாழியின் கையைப் பற்றுகிறான்.

வாழ்வு நாகனுக்குத் தளிர்த்தவிதம் இதுதான்.

வியாழி ஒருபோது கருவுண்டானாள். வேட்டைக்குப் போய் ஒரு கரடியோடு போராடியவிடத்தில் குருதியாய் அழிந்துபோயிற்று.

நாகனிடத்தில் இன்னும் ஒரு குழந்தைக்கான தவனம் இருக்கிறது.

ஒருநாள் பாலைவெளிக்கப்பாலிருந்து ஒரு வழிப்போக்கன் குடிலுக்கு வந்தான். குடிலுக்குள்ளோரை அழைத்து ஏதோ கேட்டான். அவன் மொழி புரியாததாய் இருந்தது. இருந்தும் சைகையிலும், சில மொழியின் ஒலியது புரிகையிலுமாய்த் தலைநகர் செல்லும்வழி கேட்பதை உணர்ந்து, நாகன் ஆற்றுப்படுத்தினான். அவன் சுலபமாகத்

தன் சைகைகள் புரிவதறிந்து, வழிப்போக்கன் அவனையும் உடன்வர அழைத்தான். நாகன் மறுத்தான். பின் என்ன நினைத்தோ, அவன் நோக்கம்பற்றி உசாவினான். வழிப்போக்கன் தெரிவித்தவை புரிந்த நாகன் திகைத்துப்போனான்.

சீதையென்னும் ஒரு மஞ்சளொளிப் பெண்ணை ராவணேசனான அவர்களது அரசன் கவர்ந்து வந்திருப்பதறிந்து அவளைத் திரும்ப அழைத்துப் போகவே தான் செல்வதாக அவன் கூறியதானது, ஒரு களரியின் உற்பவிப்பை முன்னறிவிப்பதாயே இருந்தது நாகனுக்கு.

நாகன் தன் சிந்தையை மாற்றினான். அவன் சென்றாக வேண்டும். காட்டுவாசியின் மொழிமாற்றுக்காரனாக அல்ல, ஒரு தூதனாகவே.

நாகன் தலைநகர்நோக்கிப் புறப்பட்டான்.

# முப்பது

**நா**கனின் திடீர்ப் புறப்பாடு வியாழிக்கு ஆச்சரியமாகவிருந்தது. இனிமேல் தலைநகருக்குச் செல்லப் போவதில்லை, ராவணனைப் பார்க்கப்போவதில்லை, பழைய நட்பு வலைக்குள் வீழப்போவதில்லை, முடிந்தால் பயணங்களையும் தொடரப்போவதில்லையென அவன் பலமுறையும் அவளுக்குச் சொல்லிக்கொண்டிருந்தான். காதலும் காமமுமான ஒரு மென்மையில் இளகிப்போயிருந்தவன், சடுதியில் வன்மைபெற்று துண்துண்ணென நடந்துபோகும்படிக்கு என்னதான் நடந்திருக்கமுடியும்.

பாலை வெளி கடந்த மேற்றிசை நிலக்கூறின் ஒரு காட்டுவாசி வந்து ஏதோ விசாரிப்புச் செய்ய, மனமற்றவனாய்த்தான் பதிலை உடல்மொழியைப் பிரதானப்படுத்திச் சொல்லிக்கொண்டிருந்தான் நாகன். பின்னால் என்ன நினைத்தானோ, எடு கைக்கோலை எனப் பெற்றுக்கொண்டு, செலவு தொடங்குகிறேன், திரும்ப நாளாகும் என்றுவிட்டு காட்டுவாசியைப் பின்தொடர்ந்துவிட்டான். அந்த அவசரம் ஒரு அவசியத்தைத் தெரிவிக்கிறதா. ஓர் ஆபத்தின் முன்னனுமான எறிகை அதில் இருக்கிறதா.

வியாழிக்கு எதுவுமே புரியவில்லை.

ஆனால் ஒன்று விளங்கியது, காட்டுவாசி அப்போது லங்காபுரத்து மக்களின் பேச்சாகியிருந்த சீத்தா என்ற பெண்ணாளைப்பற்றியே விசாரித்திருந்தான் என்பது.

நாகன் மறுபடி அவள் குடில் வருமுன்னரே காற்றிலேறிப்போல் வனமும், மலையும் எங்கும் திரிந்துகொண்டிருந்தது ராவணன் கவர்ந்துவந்த பெண்பற்றிய கதை. அவள் ராவணனின் தாயைப் போலிருந்தாள் என்றொரு கதையும், அவள் அவனது தங்கை சூர்ப்பா நகைபோலிருந்தாள் என்றொரு கதையும், அவள் பேய்களையும் கொடுவிலங்குகளையும் அடக்கும் சூனியம் தெரிந்தவள் என்றொரு கதையுமாய் அவை.

அவளே அப்பெண்ணாளைக் காண பலமுறையும் விருப்பப் பட்டிருக்கிறாள். ஆநிரை கவருவார்கள், கேள்விப்பட்டிருக்கிறாள். தீசெய் கடைக்கோல்களுக்கான சண்டைகளும், அபகரித்தல்களும் கேள்விப்பட்டிருக்கிறாள். பெண்ணையுமா அவ்வாறு. ஏன். எவ்விதத்தில் அவர்கள் கவர்படுதலுக்குக் காரணமாகிறார்கள். தோற்றமோ. எவ்வகையில் தோற்றம் ஒரு பெண்ணின் அபகரணத்துக்கு மூலமாகக் கூடும். அவளென்ன மும்முலை பெற்றவளா. ஈர் அல்குல் அமைந்தவளா. கண்டறிய வியாழி பெருவாசைப்பட்டாள்தான். ஆனாலும் அப்பெண்ணாள் திரிதர விடப்பட்ட இடம் பல் கதைகளின் காடாக இருந்தது. விலங்குகளும் செல்லுதலற்ற பெருமலைக் கூட்டமாக இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, வசப்படுத்தி வதைப்படுத்தும் அணங்குகளின் சஞ்சாரம் கொண்ட பரப்பாகவிருந்தது. அங்குள்ள வனங்களும் மலைகளும் பேய்களாலும், உயிர்பெறு மேகங்களாலும் காக்கப்படுவதாக அறியப்பெற்றிருந்தது.

வியாழிக்கு முதலில் இருந்த வியப்பு, பின்னால் வெறுப்பாயும் போய்விட்டது. இனக் குழுக்களின் தலைவர்களும் அம்மாதிரி பெண் கவர்தல்கள் செய்வார்களா என்று அவளுக்கு அதிசயமாகவிருந்தது. அது குடிமக்கள் தரத்தில், குடியர்கள் மத்தியில் இச்சைகள் காரணமாய் விளையும் செயற்பாடெனத்தான் அவள் எண்ணியிருந்தாள். ஆனால் அவர்களின் தலைவனே அப்போது அவ்வாறு செய்திருக்கிறான். ஒருவேளை மந்தாகினி லங்காபுரத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்திருந்தால் அவ்வாறெல்லாம் நிகழ்ந்திருக்காதல்லவா என நினைத்தபோது, ராவண அதிகாரம் அவளை அச்சுறுத்தியது. அப்போது தன் மகன் தன்மீது புரிய முனைந்த பலவந்தங்கள் அவளுக்கு ஞாபகமாயின.

தாய்கள் போற்றப்படுவதுதான் அவள் அறிந்த சமூக வழக்கமாகவிருந்தது அன்றைய வரைக்கும். அவர்கள் அதிகாரத்துடன் வாழ்வியலை முன்னெடுத்த சமூக முறைமையே அவள் அறிந்திருந்ததும், ஒப்புக்கொண்டதுமாகும். வனம் கடந்த நிலப்பரப்பில் பெண்ணின் வாழ்நிலை வேறுகளை அவள் முழுவதும் அறியாதிருந்தாள்.

நாகன் வந்துதான் பல வி'யங்களில் அவளைத் தெளிவுபடுத்தியது. விசைதரு தேரோடு ராவணன் மாறிப்போனான் என்றுதான் அவன் தன் விளக்கத்தை முடித்திருந்தான். அவனது அலைவு தேரின் திரிதரு வலிமையளவானதாய் இருப்பது சாலும்தான்.

அவளும் விசைத்தேரின் வியன்விரைவு கண்டிருந்தாளாகையால் அதை ஒப்புதல்கொண்டு மன அலைவுறுதல் அடங்கிச் சிலகாலம்

இருந்தாள். இப்போது பிறநிலக் காட்டுவாசியின் வருகையோடு எல்லாம் மறுபடி குழப்பத்தை உண்டுபண்ணிவிட்டிருந்தன.

வியாழி கலங்கியபடியே நாகன் செல்வதை, அவன் உரு மறைந்த பின், அத்திசையினையென்று நெடுநேரம் பார்த்தபடி நின்றிருந்தாள். அவ்வாறான ஒரு வெறிப்பிலேயே நாகன் பலமுறையும் தன்னை நிறுத்திச் செல்வதாக ஏனோ அப்போது அவளால் நினைக்காமலிருக்க முடியவில்லை.

அது கூதிர் முடிவுற்று இளவேனில் தொடங்கிய காலமாகவிருந்தது. பாதை அப்போதும் சேறடித்து நடத்தலரிதானதாய். முதுவேனில்வரை அந்நிலை தொடரும். இனி இடையுறப்போகும் மும்மலை கடத்தலும் அரிதாகவேயிருக்கப் போகிறது. காற்று சுற்றிச் சுழன்று நீர்மேகங்களை மும்மலை நோக்கி நகர்த்தி வர பெரும் பிரயத்தனம் பட்டுக் கொண்டிருந்தது.

ஒருபோது உடன்வந்துகொண்டிருந்த காட்டுவாசி வெகுவாக ஆரவார ஒலியெழுப்பி நாகன் கவனம் திரும்பிப்பார்க்க மேலே சுட்டிக்காட்டினான். மெய்தான். அச்சுறுத்தும்படியாகவே இருந்தது. மேலே தொகுதி தொகுதியாக நீர் காவிய சாம்பல் புகார்கள் அடித்துப் புரண்டு கீழ்த்திசை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தன. வலிய மழையாக இருக்காதுதான். ஆனாலும் இனிச் செய்வதற்கு எதுவுமில்லை. வழியில் எங்கு தங்கிச் செல்வதும் இயலாதது அவ்வழி. அத்தகைய தருணத்தில் பயணத்தைத் தொடங்கிவந்தானேயென காட்டுவாசியை மனத்துள்ளாய் வைது எரிச்சலைத் தீர்த்துக்கொண்டு, 'கடுதியாய் நட. நள்ளிரவுக்கு முன் லங்காபுரம் சேர்ந்துவிடலாம்' என திரும்பிக் கூறினான் நாகன்.

லங்காபுரத்து வயல்கள் நீர்மலிந்து கிடந்தன. நீர் முகங்களின்மேல் நெல்லும் வாழையும் கரும்பும் தலை நிமிர்த்தி நின்றிருந்தன. வேளாண்மைத் தொழிலர் கூட்டம் கூட்டமாய் வயல்களில் வேலைசெய்துகொண்டிருந்தனர். நெல்லும் கம்பும் வரகும் தினையும் அவ்வயல்களில் செழிப்புற வளர்ந்து விளைந்தன. நகர மாந்தர்க்கு அவைதாம் தீனி. அரண்மனைவாசிகளுக்கு அவை தேனிலும் தேறலிலும் கலந்த பாகமாய் அளிக்கப்பட்டன. ஊன் அரண்மனை அட்டில்சாலையில் அதிகம். ஊனும் தேனும் கனியும் கிழங்குகளும் காட்டு மலை வாசிகளுக்கும் நிறையவே கிடைக்கும். ஆனால் அரண்மனையில் அவை பக்குவப்படுத்தப்படும் விதம் வேறு. அங்கே சுவையைப் பக்குவமே தீர்மானித்தது.

ஒரு நடுச்சாமப் பொழுதில் தலைநகரை வந்தடைந்தனர் நாகனும் காட்டுவாசியும். கோட்டைக்குள் அவ்வேளை புகுந்துவிட முடியாது.

அதுவும் காட்டுவாசியோடு அதைச் செய்ய நாகன் பிரியப்படவில்லை. பரத்தையர் சேரிப் பக்கமாய் நடந்தான். அங்கே களி மக்கள் வெறிப்பட்டும், நெறிகெட்டும் தன்னிலை மறந்து விழுந்து கிடப்பர். அதுதான் அந்தப்பொழுதைக் கழிக்க வாய்ப்பான இடம்.

நாகன் காட்டுவாசியிடம் அதைச் சொன்னான். ஏதும் மறுமொழியின்றி நாகன் காட்டிய இடத்தில் குந்தினான் காட்டுவாசி.

பக்கத்தில் அமர்ந்து கால்களை நீட்டி ஆசுவாசப்பட்ட நாகனுக்கு, ஒருபோது ஒரு பகற்பொழுது நேரத்துள்ளேயே ஒருவர் மொழியை ஒருவர் விளங்கிக்கொள்ளும் ஒரு புரிதல்வந்துவிட்டமையை உணர வியப்புப் பிறந்தது. அப்படியே காலையில் செய்யவேண்டிய வேலைகள்பற்றி அவனது மனது திட்டமிட்டது. பின்னர் அப்படியே உறங்கிப்போனான்.

நாகன் குற்றியொன்றோடு சாய்ந்தும், காட்டுவாசி குந்தியபடியுமான நல்லுறக்கப் பொழுதில் டாண்..டாண்.. என்ற வெண்கலநாதம் எழுந்து திசையெல்லாம் அதிர்ந்து பரவியது. இருவரும் திடுக்கிட்டு விழித்தனர்.

நாகன் உடனடியாகவே மலைக்கோவிலில் வெண்கல மணி பொருத்தப்பட்டாகிவிட்டது என்பதை உணர்ந்துகொண்டான். காட்டுவாசிதான் மலைத்துப்போனது. நாகன் விளங்கப்படுத்தினான். புரிந்தானோ புரியவில்லையோ, காட்டுவாசி இன்னும் மலைப்பு நீங்காமலேதான் இருந்துகொண்டிருந்தான்.

வானெங்கும் வெளிர்ப்பு விரிந்துகொண்டிருந்தது. இனி நாகன் புறப்பட்டாகவேண்டும். அப்போது உடனடியாக ஒரு சிக்கல் எழுந்தது நாகனிடத்தில். காட்டுவாசியை விட்டுப்போய் ராவணனைச் சந்தித்த பின் வந்து அழைத்துப்போவதா, அல்லது உடனழைத்துப்போய் அரண்மனையின் வெளியே நிறுத்திவிட்டுப் போய் அரச சம்மதம் கேட்டு கூட்டிப்போவதா என்று நாகனுக்குத் தெரியாமலிருந்தது.

ராவணனின் மனநிலை மாறும் விந்தைகள் தெரிந்தவனான தாலேயே அவன் பலவும் பலமுறையும் யோசிக்கவேண்டியவனா யிருந்தான். எதற்கும் அவனது மனநிலை அறிந்த பின் அகநகருள் அழைத்துப்போவதே உசிதமாகப்பட வியத்தை காட்டுவாசியிடம் தெரிவித்தான் நாகன்.

கேட்ட காட்டுவாசி மணியோசை கிளர்த்திய மலைப்பு நீங்கி ஆர்த்தெழுந்தான். ஆ..ஊ.. என ஊளையிட்டான். நிமிர்ந்தெழுந்து நின்று மார்பில் அறைந்தான்.

நாகனுக்கு வியப்பாய் இருந்தது. ராவண நகரில் நின்றா இந்த ஆர்ப்பரிப்பு. அரண்மனை ஆள் எவர் கண்ணில்பட்டாலுமே அது ஆபத்து. இந்த நிலையில் வேற்றுநாட்டாளாய் இருந்துகொண்டும் என்ன குதி குதிக்கிறான்.

நாகன் அவனைக் குள்ளமாக்குவதுபோல் எழுந்து நின்றான். பின் அவனது காரியத்தின் பிரியாத அவனது மனநிலையை எண்ணிச் சாந்தமானான். அதன்மேல் அவன் அமைதியாகும்படிக்கான வார்த்தைகள்தான் நாகனிடத்தில் பிறந்தன.

காட்டுவாசி சம்மதித்தான். ஆனாலும் அப்போதே எங்காவது ஓடிப்போய் தான் தேடிவந்த பெண்ணாளை தானே தனியாகக் கண்டடையப் போவதுபோலவே நின்றுகொண்டிருந்தான்.

நாகனுக்கு உள்ளுக்குள்ளே சிரிப்பு வந்தது.

அடக்கிக்கொண்டு கேட்டான்: 'உன்னை எவ்வாறு அழைப்பார்கள்.'

'மருதன் என.'

'நல்லது, மருதன். சொன்னவைகளை மறந்துவிடாதே. நீ எதிர்பார்ப்பதுபோலல்ல லங்காபுரம். இங்கு வெளியாட்களின் வரவு சந்தேகத்துக்கிடமானது. அரச காவலாளிகளிடம் அகப்பட்டு விசாரணையாவது எவரும் விரும்பக்கூடியதல்ல. முடிந்தவரை எவர் கவனமும் கவராமல் நடந்துகொள். கடிதில் வருவேன்.'

நாகன் அவசரமாக கோட்டைக் கதவுகள் தாண்டி அகநகருள் பிரவேசித்தான்.

அரண்மனையை அடைய அவனுக்கு அதிகநேரம் பிடிக்கவில்லை. இயல்பான காலைக் கலகலப்போடு இன்னும் இனம்தெரியாத ஒரு கிளர்வோடும் அரண்மனை விளங்கிக்கொண்டிருப்பதாய் நாகனுக்குத் தெரிந்தது. அதன் காரணம் அவன் அரச மாளிகைக்குள் பிரவேசிக்க வெளிப்பாடானது.

கூடத் தவிசில் உடைவாள், தலைமுடி, மார்பணிகளுடன் கம்பீரமாக வீற்றிருந்தான் ராவணன். அவன் முகத்தில் முறுவல் முறுகித் தெறித்துக்கொண்டிருந்தது. கண்களில் ஒரு வி'மம். தனது வருகையை எதிர்பார்த்தே அவன் காத்திருந்தது போலிருந்தமை நாகனுக்கு ஆச்சரியமாகவிருந்தது. ஆனாலும் பெரிய பாதிப்புகளைச் செய்யாத ஆச்சரியம் அது. அதுமாதிரியான பல ஆச்சரியங்களை நாகன் ராவண மாளிகையில் அனுபவித்தவன்.

நாகன் ஆச்சரியத்தில் நடை தயங்க, 'வா, நாகா' என்று வரவேற்றான் ராவணன். 'வெகுநேரமாய் உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்.'

'காத்துக்கொண்டிருக்கிறீரா. நான் வரப்போவதை முன்பே எப்படி...'

ராவணன் சிரித்தான் மெல்லென்ற இசையெழுப்பி. பின் சிறுநகை அரும்ப, 'மருதன் கூடவந்திருப்பதும் தெரியும்.'

'நானே அவன் பெயரை காலையில்தான் கேட்டறிந்தேன்.'

'நீ அவனைப் பார்த்ததும் நெருநலின் பகலாகவே இருக்க முடியும். நான் அவன் பாலைவெளி தாண்டிய மறுகணமே அறிந்து கொண்டேன். சரி, பேசுவோம். இப்படி அமர்.'

நாகன் ராவணனுக்கு அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்தான்.

'விரைந்த பயணத்துக்கு அவனது பகுதியில் வெகுபெயர் பெற்றவன் மருதன். ஒவ்வொரு தூதுவனும் மருதனாக நடக்குமாறு சொல்லும் படிக்கு அவனது திறமைகளும் அதிகமானவை...'

ராவணன் சொல்வது கேட்கக் கேட்க சிலையென ஆகிவந்தான் நாகன்.

'தீதோ நன்றோ, சீதையைக் கவர்ந்து வந்தாகிவிட்டது. கவர்ந்துவந்த இத்தனை காலத்தில் பலமுறை இதுபற்றி நான் எண்ணி முடித்துவிட்டேன். இனி எது செய்தாலும் அது ஏற்பட்டுவிட்ட முரண்களினைத் தீர்த்துவிடாது. மாரீசனை இழந்ததற்காகவேனும் நான் அப் பெண்ணை வைத்திருந்தேயாகவேண்டும். நாம் இனங்களாய்ப் போரிட்டுக்கொண்டிருந்தோம். இனி நாடுகளாய்ப் போர்புரியப் போகிறோம். அவ்வளவுதான். சரி வா, சிவனீசன் கோயில் போய்வருவோம்' என்று கூறிமுடித்து எழுந்தான் ராவணன்.

'மருதன்...?'

'அவனுக்கான பதிலைத்தான் நான் உன்னிடம் தெரிவித்தது.;

ராவணன் நடக்க அவனை மவுனமாய்ப் பின்தொடர்ந்தான் நாகன். முந்திய தடவை லங்காபுரம் வந்த சமயம், கரும்புகார் ஓடிவந்து லங்காபுரத்தில் கவிந்ததை அப்போது எண்ணாமலிருக்க முடியவில்லை நாகனால்.

# முப்பத்தொன்று

**ம**ந்தாகினியின் மாளிகையில் மெல்ல இருள் கவிய ஆரம்பித் திருந்தது. அதை விரட்டும் பெருவினையில் இயக்க மாதர் சிலர் ஆரவாரமாக ஈடுபட்டிருந்தனர். மந்தாகினி அவ்வேளை மாளிகையின் மேல்தளத்தில் நின்றிருந்தாள். விழிகள் வெளி மேய்ந்துகொண்டிருந்தன.

மாலையின் மயக்கமடைந்த தும்பிகள் சில ரீங்காரித்துப் பறந்துகொண்டிருந்தன கீழுள்ள நந்தவனத்தில். தூரத்தே புதர்களில் உடலில் விளக்கேற்றிய வண்டுகளின் அலைவு. தூரவாய் செவ்வெளிச்சம் அடிவானில் இருப்புக் காட்டியிருந்தும், சூழல் கருமையடைந்தே கிடந்திருந்தது. மேலும் அதன் கறுப்புச் செறிந்து செறிந்து வந்தது, மேற்கின் செவ்வொளி மறைய மறைய.

இன்னும் சில கணங்களில் அம்புலி மேற்கிளம்பி உலாத் தொடங்கிவிடும். உலர்காட்சி பசுமைபெறும். வெதுவெதுப்பாகியிருந்த காற்று இதமடையும். மேனியில் அடங்கும் வெம்மை, உள்ளுடம்பில் அடங்காது எகிறத் தொடங்கும்.

ஒன்றையென்று குறிப்பிட்டில்லாதபடி விரிவெளியில் எல்லாம் கண்டபடி நின்றிருந்த மந்தாகினி, சில திங்கள்களாகவேதான் அக் காட்சிகள் மறுபடி தன் வாழ்வில் அழகும், அனுபவமும், ஆசையும், அமைதியும் கிளர்த்திக்கொண்டிருக்கின்றன என்பதை மனங் கொண்டாள். வாழ்தலில் கணமும் வெறுத்த நிலையடைந்து வந்த காலத்தில் சீதையின் அபகரம் அவள் வாழ்வில் நிலைமாற்றைச் செய்திருக்கிறது. மலையுச்சியில் சிவன் சிலை நிர்மாணமும், அதன் உச்சியில் காண்டாமணி ஏற்றமும் அதுவரை காலமாய் அவள் மனத்தில் கிடந்த வன்மங்களை அழித்துவிட்டிருக்கின்றன. தாய்வழி

உரிமைக்காரியாய், நாக இனத்தாளாய் அவளுள் எழுந்திருந்த தலைமை விழைச்சு மனைவியாய்த் தளர்ந்து அடங்கியிருக்கிறது.

அவள் மனதடங்கி நிம்மதியின் நிலைகளை அடைந்து கொண்டிருந்த காலம் அது.

குறிஞ்சிப் புலத்தில் காவல் வைக்கப்பட்டிருந்த சீதையைப் பார்க்க சிலமுறைகள் ராவணன் சென்றிருந்தாலும், அவன் அவளது அபகரணம்பற்றிச் சொன்னதற்கு மேலே விருப்பார்வக் காரணம் எதுவுமில்லையென மந்தாகினி நம்புமளவுக்குதான் நிலபரங்கள் அமைந்திருந்தன. தன் ஏதோவொரு தேடலின் எல்லை கண்டடையப் பெற்றதுபோல் ராவணனும் தன் கொதிப்படங்கி நகரும், ஊரும், மக்களும் கரிசனமாகி, மீதிப்பொழுதில் கலைகளும், இசைமீட்டும் என சாந்தம் அடைந்திருந்தான். இவையெல்லாம் புறநிலை வாழ்வில் அன்பையும் அமைதியையும் பெருக்கெடுக்கச் செய்ததோடு, அவனின் அணுகுதல்கள் அகத்தில் இன்பச் சுரப்பையும் நாள்தோறும் மிகுப்பித்துக்கொண்டிருந்தன மந்தாகினியிடத்தில்.

காமம் என்றேனும் தணிக்கப்பெறுதல் இல்லைத்தான். அது அடக்க அடக்கக் கொதிநிலையடையும். தணிக்கத் தணிக்கப் பெருகுநிலை உறும். வியப்பானவோர்பேருணர்ச்சி அது.

அன்று காலையில் தலைநகருக்கு நாகன் வந்தது அவளுக்குத் தெரியும். ராவணனும் நாகனுமாய் அதன்பின்னர்மலைக்கோயில் சென்றதும் அவள் அறிவாள்.

நாகனை எண்ண அவள் மனத்தில் அப்போதொரு கழிவிரக்கம் பிறந்தது. காலம்போல் ஓய்வின்றிப் பயணித்துக்கொண்டிருந்த அந்த மனிதன்மீது ஒருகாலத்தே எவ்வளவு காழ்ப்புக்கொண்டிருந்தாள். வீடாணனின்மேல் விருப்பும், நாகன்மேல் வெறுப்புமான அவை மாறுதலையான அவளின் உணர்வு வெளிப்பாடுகளல்லவா.

அவன்மீதான அவளின் வெறுப்பு அடங்கிவந்த தருணத்தில் அவன் அரண்மனையில் காணக்கிடைக்காது போனான். நாகனைப்பற்றி ஒருநாள் ராவணனிடம்தான் அவள் கேட்டாள். அதற்கு, ஏன்? என்று எதிர்வினா தொடுத்தான் ராவணன். லங்காபுரத்தின் மணிக் குவைகளின் இருப்பை அறிந்தவன் அவன் என்பதால் அந்த வினா வந்திருக்கவும் முடியும். இன்னுமா பொற்குவைகளின் இருப்பறியும் விழைவு.

அவள், மறுபடி பயணம் தொடங்கும்வரை எந்நேரமும் உன்னோடு காணப்படுவானே என்பதனால் கேட்டேன்! என சாதுர்யமான ஒரு பதிலைச் சொன்னாள்.

போய்விட்டான், என்னோடு மாறுபாடுகொண்டு போயே விட்டான்! எனப் புகன்றான் ராவணன்.

சிலவேளைகளில் அதுபோல் அவளுக்கு பிரானது நினைவும் வந்தது. அவனுக்கும் ராவணனுக்குமான முரணை அவள் அறிவாள். அவன் சிற்பியாய் அகங்காரம் கொண்டிருந்தவன். அது அவனுக்குத் தகும்தான். ஆனால் என்ன கருத்தாலோ, மும்மலைக் கோவில் நிர்மாணத்தை கபாடபுரச் சிற்பிக்கு ராவணன் அளித்துவிட்டான். பிரான் காயம்பட்ட இடம் அதுதான். அதனால் அவன்பற்றி ராவணனிடம் கேட்டுக்கொள்ளவில்லையெனினும் அவனையும் ஒருமுறை சந்திக்கும் விருப்பம் அவளிடம் இருந்தது. அவன் பல சிற்ப நிலைகளை அவளுக்கு செதுக்கிக் காட்டியிருக்கிறான். அவளது மாளிகை அவன் அமைத்த சிலைகளினாலேயேயும்தான் மிகுவழகுபெற்று விளங்குகிறது. நேரில் காண்கையில், அவன் ராவணனோடு கொண்டுள்ள முரணினை விட்டுவிடும்படியாக உபதேசம் செய்யுமெண்ணம் அவளிடமுண்டு.

அப்போது யாரோ மேலே வருவதன் காலடியொலிப்பில் மந்தாகினி திரும்பினாள். இருளின் புறவுருவில் அது யாரென இலகுவாகவே இனங்காண முடிந்திருந்தது மந்தாகினியால்.

ஓர் அவசரத்திலெனினும் சூர்ப்பாந்கை ஓயிலாக வந்து கொண்டிருந்தாள்.

'தாயே!' என அழைத்து மந்தாகினி முன் பணிந்தாள்.

'வா,. சூர்ப்பாநகை!' என மொழிந்த மந்தாகினி, 'அரண்மனையில் தான் உள்ளாயா, இல்லை எங்காவது அலைச்சலில் இருக்கிறாயா என்பதே தெரியாமல் இருக்கிறது. இரண்டு நாட்களுக்கு மேலாக உன்னைக் காணவில்லையே' என்றாள்.

'எங்கே தாயே, செல்ல. அண்ணனின் கட்டளை வலிதாக இருக்கிறதே. இங்கேதான் ஏதேதோ வினைகளை ஆற்றிக் கொண்டும்.. ஏதேதோ நிகழ்வுகளைத் தனியேயிருந்து எண்ணிக்கொண்டும், பலவாய நினைவுகளை மனத்துள்ளே மீட்டிக்கொண்டும்..அவ்வப்போது கொண்டனாமிகையுடன் பேசிக்கொண்டுமாய்ப் பொழுதைக் கழிக்கிறேன்.'

'உன் ஒழுகலாறு மகிழ்வு தருகிறது.'

'தாயே, அரண்மனைப் பக்கம் தாங்கள் செல்லவில்லை?'

'இல்லையே.'

'அங்கே எழுந்த ஆரவார ஒலி கேட்கவில்லையா.'

'ஆரவார ஒலியா. நான் கேட்கவில்லையே. ஏன் அந்த ஆரவாரம்.'

'சீதையை விடுதல் செய்யக் கேட்க, அவள் கொழுநனிடமிருந்து காட்டுவாசி ஒருவன் தூதாக வந்தானாம். தலைநகர்வரை கூட்டிவந்தது நாகனென்று பேச்சாயிருக்கிறது. கோட்டைக்கு வெளியே அவனை நிற்கச் செய்துவிட்டு நாகன் உள்ளே வந்து ராவணேசனிடம் தூதுரைக்கக் கேட்ட அனுமதி கிடைக்கவில்லையாம். அதனால் வெகுண்டெழுந்து கோட்டை வாசலில் நின்று வருவோர் போவோரைத் தாக்கியும், வைதும், வீதிகள் வீடுகள் அங்காடியை தாறுமாறுசெய்தும் பெரும் குழப்பம் விளைத்திருக்கிறான் அந்தத் தூதன். சேதி அண்ணனுக்குத் தெரிய, கோட்டைக் காவலனை ஏவி அத்தூதனைப் பிடித்துவரச் செய்திருக்கிறான். மண்டபத்திலும் பெரிய கலகம் விளைத்தானாம் அத் தூதன். லங்காபுர எல்லைக்குள் மறுபடி அவன் காணப்படக்கூடாதென்று எச்சரித்து அவனை மேற்கெல்லைவரை கொண்டுசென்று விட்டுவர கட்டளையிட்டிருக்கிறான் அண்ணன். தூதனை சற்று முன்பாகத்தான் பாலை வெளியில் விட்டுவர காவல் புறப்பட்டதாய் என் தோழி சொன்னாள்' என நிறுத்தினாள் சூர்ப்பாநகை.

மந்தாகினியிடமிருந்து நெடுநேரம் பேச்செழவில்லை. 'தாயே!' என்றழைத்த சூர்ப்பாநகையின் விழிப்பும் செவியேறாது போனது. சிறிது பொறுத்து மறுபடியும் மந்தாகினியை அழைத்து உசுப்பினாள் சூர்ப்பாநகை.

மந்தாகினி மன ஆழ்ச்சி நீங்கினாள். கீழே குரலெடுத்து பணிப் பெண்கள் அங்கே பந்தங்கள் கொண்டுவந்து பொருத்தவைத்தாள்.

பணிப்பெண்கள் நீங்கிச் செல்ல, 'இவ்வளவும் நடந்திருக்கிறதா' என தன் அதிசயம் காட்டினாள். 'தூதுவன் தூதுரைக்கவும் அனுமதி கொடுக்காது போனது நல்லதில்லை, சூர்ப்பாநகை. தூதுரைக்கவும், அவனது தகவல்கள், வேண்டுதல்கள் சரியாக இருந்தால் சீதையை உடன்செல்லவும் விட்டிருக்க வேண்டுமடி.'

மந்தாகினி ஒரு கையறுநிலையில்போல் சலித்துத் தொடர்ந்தாள்: 'கிழக்கேயிருந்து பண்டங்கள் எடுத்துவரும் வாணிகக் கூட்டமுள்ள நாடுகள்போல்தான் மேற்கிலும் பல்வேறு நாடுகள் இருப்பதாகக் கூறுகிறார்கள். நாடுகள் வெவ்வேறு இனங்களும், வளங்களும், அதனால் வேறுவேறு பண்புகளும் வலிமைகளும், வேறுவேறு போர்முறைகளும் கொண்டவையெனவும் தெரியவந்திருக்கிறது. அவர்களிடத்தில் வெவ்வேறு மொழிகளும் பயில்வுறுகின்றனவாம். இந்த நிலையில் சீதையை உடன்விடுதலே செய்திருக்கத் தக்கது.

ராவணேசன் ஏன் இம்மாதிரி யோசிப்பின்றி நடந்துகொண்டான். நன்மைக்கானதில்லையடி, சூர்ப்பாநகை. சொல்கிறேன், குறித்துக்கொள், இது நன்மைக்கான்தேயில்லை.'

மந்தாகினியின் பிரலாபம் காற்றிலேறிக் கலந்துகொண்டிருந்தது.

சூர்ப்பாநகை தேறுதல் சொல்வதா, என்ன சொல்வது எனத் தெரியாது திகைத்து நின்றிருந்தாள்.

அப்போது ராவணன் குரலொலி கூடங்கள் அதிர எழுந்தது. 'மேற்கெல்லையில் காவலை வலுப்படுத்து. கதக்கண்ணா, படைகளைத் தயார்நிலையில் எந்நேரமுமிருக்கும்படி பார்த்துக்கொள். வீடாணன் எங்கே. அதிகாலையில் கீழெல்லைப் படை முகாங்களுக்குச் செல்கிறான் அவன். கிழக்கில் சிறுதொகுதிச் சேனையிருக்க பெருந் தொகுதியை மேற்கெல்லை நோக்கி நகர்த்துகிறான். போரொன்று வெகுவிரைவாக வந்துகொண்டிருக்கிறது. பாலைவெளியில் குருதிப்புனல் பரக்கப்போகிறது. போய் உறங்கு. விழிப்போடு உறங்கு. புலரியில் சந்திப்போம்.'

தும்..தும்மென நிலவதிர்வு நகர்ந்தது.

ராவணன் வருகையை அறிந்துகொண்டு இருவரும் மேல்தளத்திலிருந்து கீழிறங்கி வந்தனர்.

# முப்பத்திரண்டு

அன்று உச்சிவேளை கடந்த ஒரு பொழுதில் வனமுடறுத்த பெருவீதிக் கரையினில் நின்றிருந்த வியாழியின் பார்வையில் தூரத்தே சடைச்சி வந்துகொண்டிருப்பது தெரிந்தது. அவளைச் சந்தித்து மட்டுமில்லை, பார்வையில் கண்டுமே பல திங்கள்கள் ஆகியிருந்தன.

எப்போதும் வேட்டையின் அலைவும், வனவிலங்கு அச்சமும், மனிதர்களின் எதுஎதற்கோவான தாக்குதல் அச்சமுமாக வாழ்க்கை மாறிவிட்டிருக்கிறபோது, அறிமுகமான ஒரு மனித சந்திப்பு எப்போதும் பேருவகை செய்வதாகவே இருக்கிறது. மட்டுமில்லை. படுஞாயிறுத் திக்கில் தொலைதூரத்திலுள்ள வனத்திலிருந்து அந்த நெடிய காட்டுவாசி தூதனாக வந்துசென்றதன் பின்னர், தலைநகர்ப் பக்கமெழுந்துள்ள விரைவசைவின் அரவத்தை வனப் பகுதியிலும் உணரக்கூடியதாக இருந்தது. ஒரு போரின் சகல ஆயத்தங்களும் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருந்ததும் வெளிப்படை யாய்த் தெரிந்தது.

போரென்பது முந்திய காலங்களில்போல் இயக்க, நாக இனங் களுக்கிடையிலானதாகவோ, குழப்பம் செய்யும் மலைஞர், ஆறலை கள்வர் கூட்டங்களுடனானதாகவோ இந்தமுறை இருக்கப் போவதில்லையென்பதுதான் இதிலிருந்த விசேஷம். மக்களின் உணர்வுக் கெழுமலினதும், அவசரங்களினதும், சிலபேரது பதட்டங்களினதும் ஆரவாரம் லங்காபுரம் முழுக்கவுமே பரந்திருந்தது.

லங்காபுரம் பெரிய நாடுதான். அதன் எல்லைகள் எவையென எவராலும்தான் திண்ணமாக உரைக்க முடியாதிருந்தது. மேற்கே பாலைவெளி ஒன்று தவிர மற்றைய மூன்று எல்லைப்புறங்களும் நிறுதிட்டமற்றவையாயிருந்தன. அதன் கீழெல்லை ஒரு கடல் தொடங்கும் இடம்வரை பரந்திருந்ததாய்க் கேள்வியாகியிருந்தது.

அந்தக் கேள்விமட்டும்தான் குடிகள் அறிந்தது. மற்றும்படி அக் கடலைக் காணாதவர்கள் அவர்கள். விந்தையானதும் ஒன்றுண்டு. கடலென்பது என்னவென்பதே பலருக்குத் தெரியாதிருந்ததுதான் அது.

கடல் லங்காபுரத் தலைநகருக்கு வெகுதூரத்திலிருந்தது. வாணிபம் அதனூடாகத்தான் நடந்ததாய்த் தெரிந்தது. சில கீழ்த் திசை வாணிகர்கள் லங்காபுரத்தில் தென்பட்டிருக்கிறார்கள். ஆனால் பண்டமாற்று என்னவோ அரண்மனையளவிலேயே நடந்து முடிவதாய் இருந்தது. பண்டமாற்றாக என்ன பொருள் இருந்திருக்கு மென்று ஊரிலே ஊகம் இருந்தது. சதிராடும் பரத்தையொருத்தி நறவமருந்திய மயக்கத்தில் நகைப்பிற்காய்ச் சொன்ன கதை நீண்டகாலமாக வேடிக்கைப் பொழுதுகளில் நாவிலிருந்து இறங்கி செவிவழி ஏறி சிரிப்பலைகளைக் கிளர்த்திக்கொண்டிருந்தது விஷய ஆர்வம் உள்ளவர்களிடத்திலே. மென்துகிலும், அதியுயர்ந்த மதுரசமும் கொடுத்து, மாற்றாக லங்காபுரத்திலிருந்து துணிமுடிப்பில் மண் எடுத்துச் சென்றுகொண்டிருந்தார்கள் வாணிகர்கள் என்பதே அக் கதையின் குறுக்கம்.

இது தவிர்ந்து போர் வகையான பிறநாட்டுத் தூது, படையெடுப்பு என்று எதுவும் அறியாத நாடு அது.

காட்டுவாசியுடன் நாகன் அன்று கூடிச் சென்றுகொண்டிருந்ததை வியாழி நீண்டநேரம் நோக்கியபடியே நின்றிருந்தாள். அவர்கள் புறவுரு தூர தூரவாய்ச் சென்று மறைந்த பின்னரும் அவள் ஸ்திதி மாறாமலே இருந்தாள். ஏதோ, துயரொன்றைச் சுமந்துவந்தவன்போல் அக் காட்டுவாசி காணப்பட்டமை அதன் ஒரு காரணமெனினும், வேறு காரணங்களும் இருந்தன. அந்தத் துயரத்தை அங்கே அவன் இறக்கிவிட்டுப் போகப்போவதைப்போல ஓர் எண்ணம் தோன்றிச் செய்த வதையே அதன் தலையாய காரணமாகும்.

நாகன் திரும்பி வந்தான். அதற்குள்ளே ஆயிரம் கேள்விகள் அவளிடத்தில் பிறந்துவிட்டன. ஆனால் கேள்விக்குப் பதிலளிக்கும் நிலையிலா நாகன் வந்தான். இரவுகளில் பிதற்றினான். பகல்களில் தனியே இருந்து யோசித்து வருந்தினான். பின் எங்கோ சென்றான். பல நாட்களின் பின் திரும்ப வந்து மறுபடி அங்கே நிலைபெற முடியாதவன்போல் வேறெங்கோ சென்றான். பயணியாகமலே காணாமல் போய்க்கொண்டிருந்தான்.

அதற்குள் அவளும் தன் கேள்விகளை மறந்து நாகன் நினைப்பானாள்.

பின் சீதைபற்றிய கதை உலாவரத் தொடங்கியது. அவளைப் பொன்னென்றாள் ஒருத்தி. தந்தம் என்றாள் இன்னொருத்தி. அவள் அழகில் யானைகள் மதமடங்குகின்றன என்றும் பேச்சு வழங்கியது.

வியாழி நாகனைத்தான் எதிர்பார்த்திருந்தாள் தன் மனத்தே எழுந்த கேள்விகளின் விடையறிய. ஆனால் அவனது வருகை தாமதமாகிக்கொண்டே போனதில் ஒரு புதிரின் தவிப்பில் வியாழி விழுந்து பலநாள்கள் ஆகிவிட்டிருந்தன. அதனால் சடைச்சியின் எதிர்ப்பாடு வியாழியில் ஓர் ஆவலைக் கிளர்த்தியது ஆச்சரியமாக இருக்கவில்லை.

சடைச்சி தன் திண்ணிய நடையில் வியாழியை நெருங்கி நின்றாள். 'தவ்வையே' என விளித்து முகம்மலர்ந்தாள்.

'கண்டு நெடுங்காலம்' என்றாள் வியாழி.

'சீதைப்பெண்ணின் காவலில் இருக்கிறேன். குளிர்மலைப் பகுதியிலேதான் பெருங்காலமும் கழிகிறது. இப்போது எந்தையைப் பார்க்கப் போய்க்கொண்டிருக்கிறேன். மனத்தின் அவாக்கள் இயல்புதானே.'

'மெய்ஞ்மெய். தாயாகியவள் சிறுவயதிலேயே மடிந்துபோக உண்டியும் காவலும் உறைவிடமும் தந்து வளர்த்தெடுத்தது அவன்தானே. உன் பற்று பொருத்தமானதுதான். ஆனாலும் அந்தக் குளிர்மலைப் பகுதியும், போகும் வரும் வழிகளும் அஞ்சத் தக்கவையென்று அறியப்படுகின்றன.'

'அப்படித்தான். தலைவன் அழைத்துக் காவலுக்குக் கட்டளையிட்ட நாளில் அங்கு செல்வது எனக்கும் பெரிய அச்சம்தான். புகார்களும், குளிர்களும், காற்றில் மிதக்கும் எழில் நங்கையரும், நாமறியாக் கொடு விலங்குகளுமாய் அக்குறிஞ்சி இருக்குமென்று அறிந்திருந்ததால், அங்கு செல்வது என்னை ஒரு கொலைப்பாடாய் வதைத்தது. ஆனால் அங்கே காவலிருந்த நாளில்தான் அது எவ்வளவு இதம்தரும் சூழல் என்பதை நானறிந்தேன்.'

'கொடுவிலங்குகள்கூடவா இல்லை.'

'எங்கே அவை இல்லை, அங்கே இருக்கிறதென்று அஞ்ச.'

'அணங்குகளின் அலைவுகள்பற்றி என்ன.'

'என் கண்ணால் அவை நான் கண்டதில்லை. காதாலும் நடமாட்டம் கேட்டதில்லை. புகார் வந்து அவ்வப்போது தழுவிக்

கொள்கிறது. பின்னால் பார்த்தால் அதுவே தூர அசைந்து அசைந்து போய்க்கொண்டிருக்கும். மூச்சு முட்டுகை நின்று காட்சி கண்ணில் விரிய, உறைந்திருந்த அச்சம் விலகிக்கொண்டு அப்பால் ஓடிவிடும். அப் பகுதியை அஞ்சுவதென்ன. அது ஒரு பரவசம்.'

வியாழி மனத்தில் சீதைப்பெண்ணாளைச் சென்று காணும் ஒரு பெருவிருப்பம் ஆழக்கிடந்திருந்தது அப்போதுகூட. அது சடைச்சியின் பேச்சில் மெல்ல மேலெழுந்து வந்தது. ஆனாலும் போர்பற்றிய பேச்சும், அனுமானங்களும் செலவினைக் கடுமையானதாகவே ஆக்கியிருக்கின்றது. ஆனாலும் கண்டவர் சொல்ல கேட்டவரிடம் அறிந்த சீதைபற்றிய விபரங்களை, அவளை நேரிலே தெரிந்த சடைச்சியிடமே கேட்டாலென்ன என்ற விருப்பார்வத்தில் வியாழி வினா தொடுத்தாள்.

'அதுசரி, ஒருமாரி.. இன்னொரு மாரியென்று காலம் கழிந்து போனது. இப்போது மறுபடி ஒருமாரி வரப்போகிறது. எவ்வளவு காலம்! ஏன் சடைச்சி, அந்த சீதைப்பெண் எப்படி இருக்கிறாள்.'

'வாடித்தான் போனாள், தவ்வை. ஆனாலும் எங்கள் மொழியைப் பேசக் கற்றும், நிலைமையைத் தவிர்க்க முடியாததாய் ஒப்புக்கொண்டும் அவள் வந்துகொண்டிருந்தாள். ஆனால் தூது வந்ததான பேச்சு அவளைப் பழைய நிலைமைக்கு ஆளாக்கிவிட்டது.'

'தூதன்பற்றிச் சொன்னது யார் அவளுக்கு.'

'நானேதான் சொன்னேன். தெரிந்தால் இன்னும் கொஞ்சம் மகிழ்ச்சியடைவாளேயென்று சொன்னேன். அவள் இயல்பாகக் காணப்பட்டாள்தான் என்றாலும் உள்ளுக்குள்ளே வாடிக் கொண்டிருந்தாள். தலையெல்லாம் புழுப்பிடித்து தன்னையே கவனியாதிருந்தாள்.'

'அவளது மனிதனின் பிரிவு அவளை வருத்தத்தான் செய்யும்' என்று இரக்கத்தோடு கூறிய வியாழி, 'அவள் நிறைந்த அழகி என்கிறார்களே,. அது எப்படி. எங்கள் தலைவி மந்தாகினியைவிடவுமா அவள் அழகானவள்' என்று அடுத்த கேள்வியைத் தொடுத்தாள்.

'எமது தலைவிக்கு இணையாக முடியுமா. அவளது திண்மையென்ன, திமிர்ப்பு என்ன, நீலக் கண்களென்ன. சீதைப்பெண் அப்படியில்லை. ஆனாலும் அதுவும் ஒருவகை அழகுதான். மெலிந்திருப்பதிலான அழகு. அந்த அழகும் நிலாப்போல் சுடரும். இருட்டிலும் அவளை என்னால் பார்க்கமுடிந்தது, தவ்வை. நம்புவாயா.'

சீதையைத் தூக்கிவந்ததில் ராவணன்மேல் ஓர் உள்;ர்ந்த மெல்லிய வெறுப்புக் கொண்டிருந்த வியாழிக்கு, அத்தனை பேரொளி படைத்தவள் ராவணனிடத்தில், லங்காபுரத்தில் இருப்பதுதான் சரியெனவே ஒருகணம் நினைப்புத் தோன்றிவிட்டது.

சடைச்சி கூடிச்சென்று தன் குடிலுக்கான வழியில் செல்லத் தொடங்கி நெடுநேரம் ஆகியும்கூட வியாழிக்கு அந்தச் சிந்தனை ஓயவில்லை. இருளிலும் பார்வையில் தெரியக்கூடிய அழகு!

அப்போது செய்திகொண்டோடி ஒருவன் அவ்வழியில் வேர்வையை நீராய்ச் சொரிந்து கொட்டியபடி மேற்றிசையிலிருந்து தலைநகர் நோக்கி ஓடிக்கொண்டிருப்பதை வியாழி கண்டாள்.

# முப்பத்து மூன்று

எழு ஞாயிறுத் திசைநோக்கி ஓடிக்கொண்டிருந்த காட்டான் மூச்சு முட்டுவதாய் உணர்ந்தாலும் வேகத்தைக் குறைக்காமல் தொடர்ந்துகொண்டிருந்தான்.

அவன் அதுவரை கண்டு கேட்டு அறியாத காட்சியாகவிருந்தது அது. பாலைவெளியை அவன் அவ்வப்போது கண்டிருந்தான்தான். பல்வேறு காலநிலைகளிலும்கூட. நுரைப் பாய் விரித்ததுபோல் காய்ந்து பரந்திருந்த காலத்தில், சேற்றுத் ததும்பலாய் விரிந்திருந்த மற்றும் நீர் அலையடிக்க பரவையாய்க் கிடந்த காலத்திலென்று பலவாய அதன் வடிவங்களும் அவன் அறிவான். ஆனால் மாரிக்கான முன்னறிவிப்புக்களை மக்கள் காண எதிர்பார்த்திருந்த பொழுதில், பாலைவெளியின் மறுகரை தூசிப் புயலடிக்க ஆரம்பித்திருந்தது அவனுக்கு விந்தை. அவன் மேற்றிசைக் காவலுக்காய் முதுவேனிற் காலத்தில் அங்கே அனுப்பப்பட்ட வேவுகாரன். பலமுறையும் அவன் செய்திகொண்டு சேர்க்கும் தூதனாகவே பணியாற்றியிருப்பினும், காட்டுவாசித் தூதன் வந்துபோன பின் ராவணன் அவனைத்தான் மேற்கெல்லை வேவுக்கு அனுப்பினான்.

காட்டுவாசிகளோடு, அபகரமாகியிருக்கும் பொன்னிறப் பெண்ணாகிய சீதையின் நாயகனும் அவனது தம்பியும் ஒரு போர் முயற்சியை முன்னெடுக்கக் கூடுமென அவன் மெய்யாலுமே நம்பவில்லை. ராவண கீர்த்தி அப்படியானது.

அவன் நிறை தீனிக்காரன். நிறைய மது அருந்துபவனும். நிறைய வேட்டையாடியும், நிறைய ஊன் புசித்தும் நீர்விளையாடியும் பலம் மிகப் பெருக்கியிருப்பவன். குன்றுகளை அவன் அநாயாசமாகப் புரட்டுவதை காட்டானே கண்டிருக்கிறான். விசைத்தேர் செய்து முடிந்த புதிய காலத்தில் அதன் சில்லினை இடறி நிறுத்திய ஒரு

குன்றை அப்படியே தூக்கி ராவணன் கடாசி எறிந்திருந்தான். செவிவழி படர்ந்த கதையாக அல்ல, அவனே நேரில் கண்டது. அவ்வாறான பலம் மிக வாய்ந்தவனை சில காட்டுவாசிகளும் இரு அரசகுமாரர்களும் துணிந்து எதிர்க்க வருவதென்பது நகைப்பிற்கிடமானது. அதை நம்புவது இன்னும் சிரிப்புக்கிடமானது. ஆனாலும் அப்போது அதுபோன்ற ஏதோவொன்று நடந்து கொண்டுதான் இருந்தது என அவன் நம்பினான்.

அன்று மதியத்தில் ஊண் முடித்து ஆயாசமாய் அயர்தியாகிற நேரத்தில் தான் எதையோ தவறவிட்டுக் கொண்டிருப்பதாய் உணர்விலாக, மறுபடி எழுந்து மேற்கரையின் எல்லைவழியே குறியேதுமின்றி நடக்கத் தொடங்கினான் காட்டான். அவ்வாறு நடந்துகொண்டிருந்தவன் ஒருபோது மேற்றிசை நோக்கினான். முதற் பார்வையில் எல்லாம் இயல்பாகவே தோன்றியது. மேற்கின் சூரியக் குழியில் சாம்பல் நிறப் பெருமேகமொன்று அசைந்துகொண்டிருந்தது. அதற்குள் முழுகப்போல் சூரியன் விரைந்துகொண்டிருந்தது. எல்லாம் சகஜமாகவே காட்சியாகின. பார்வை திருப்பு முன் மறுபடி உன்னித்தபோதுதான், அது புகார் அல்ல என்பதுபோல் ஒரு எண்ணம் அவனுள் எழுந்தது. புகார் அசையும்தான். ஆனால் மண்ணிலிருந்து கிளர்ந்துகொண்டிராதே.

அப்போதே அவனுக்குத் திண்ணமாகிவிட்டது, காட்டு வாசிகளுடன் ராவணன் எதிர்பார்த்த அவ்விரு அரசகுமாரர்களின் படையெடுப்பே அதுவென்று. அத்தனைக்குப் பெரிய கூட்டமா அது. ஓ...!

விலங்குகளாய்ப் பாலையைக் கடக்கும் பெரும்படைதான், புழுதிப் படலம் எழுந்து திரண்டு அசைந்து நகர்ந்துகொண்டிருக்கக் காரணமாவது.

காட்டான் அதற்குமேல் தாமதிக்கவில்லை. கைக்கோலை எடுத்தான். மறுகணம் தூரம் அவன் கால் கதியில் கரையத் தொடங்கியது.

தன்னால் முன் யாமத்திலேகூட அரண்மனையை அடைந்துவிட முடியாதென்பது அவனுக்குத் தெரியும். கோட்டை வாசலை யடைந்தாலும், உள்ளே புகுந்தாலும்கூட, தலைவனைப் பார்த்துவிட முடியாது. ஆனாலும் முயன்றுதான் பார்க்கவேண்டும். விடியாமத்திலாவது ராவணனைக் காண முயலவேண்டும். நிலைமை பாரதூரமானது.

ஒரு நடுச் சாமத்தில் கோட்டை வாசலையடைந்த காட்டான், அரை நாழிகைப் பொழுது வாதாட்டத்தின் பின் காவலர்களின்

அனுமதி பெற்றுக்கொண்டு உள்ளே நுழைந்தான். இனியும் அவன் காத்திருக்கத்தான் வேண்டும். ஆனால் அரண்மனை வாசலில் தெரியும் முதல் அரவத்திலேயே அவன் ராவணனிடத்தில் தன் அவசர வருகையைத் தெரியப்படுத்தி விடுவான்.

இன்னும் அரண்மனை வாசல் இருள் மூடியே கிடந்தது. இருளைத் துழைத்து காட்டானின் கண்கள் களைத்துப் போயின. அப்போது தெரிந்தது ஒரு அசைவு. பின் எழுந்தது ஒரு அரவம். காட்டான் வாசலை அடைந்தான். அவன் அவ் இயக்க காவலாளியோடு போட்ட சத்தத்தில் ராவணனே எழுந்து வந்தான்.

'யார் அது.'

ராவண உறுமலில் அரண்மனை கிடுகிடுத்தது.

காட்டான் தன் முகம், வீசிய மங்கலொளியில் தெரியும்படி சற்றே முன்னகர்ந்து நின்றான்.

'யார் நீ. நீ..காட்டான்தானே. மேற்கெல்லை வேவுக்கு அனுப்பி வைத்தேன் உன்னை.'

காட்டான் ராவணன் முன்னே பாய்ந்துவந்து தலைகுனிந்தான். பின் நாக்குழற தான் கண்ட காட்சியையும், தனது அனுமானத்தையும் கூறி அடங்கினான்.

நிசப்தம் அலையடித்த ஒரு சிறுபொழுது. ராவண மூச்சு கேட்டது. பின் குனிந்து காட்டானைப் பார்த்து, 'நீ கண்டதைச் சரியாகத்தானே சொல்லியிருக்கிறாய்' என்று கேட்டான். 'படையொன்று நகர ஆரம்பித்திருப்பதுபோல் உனக்குத் தோன்றியிருக்கிறது. இல்லையா.'

'ஆம், தலைவா. புழுதிப் புயல் எழுந்தது. படையின் ஆரவாரம்கூடக் கேட்டதாய்த் தோன்றுகிறது.'

'லங்காபுரம்நோக்கிப் படையெடுப்பு? அதுவும் ராவணேசன் காலத்தில்? விந்தைதான், காட்டான். ஆனாலும் நீ சொன்னதில் பிழையிருக்குமென நான் எண்ணவில்லை.' இவ்வாறு கூறிய ராவணன் நிமிர்ந்தான். பின் அரண்மனையின் தூண்கள், சுவர்கள், சிலைகள், கூடங்கள் சிரிப்பலைகளைக் கிளர்த்தின.

அரண்மனை உறக்கம் கலைந்தது. தீப்பந்தங்கள் ஒளி பரப்பத் தொடங்கின. மந்திரி பிரதானிகள் அவசர அவசரமாய் அரண்மனைநோக்கி ஓடிவந்தனர். படையெடுப்புச் செய்தியை தெரியப்படுத்தினான் ராவணன். பின் முதலமைச்சரைப் பார்த்து, 'ஒன்றும் பதட்டமடையவேண்டியதில்லை. நாங்கள் எப்போதும் ஒரு போருக்கு ஆயத்தமாகவே இருக்கிறோம். இல்லையா, அமைச்சரே.

கீழ்த்திசைப் படை முகாங்களின் வீரர்கள் ஒரு போரை எங்கேயென்று தேடிக்கொண்டிருப்பவர்கள். வெட்டவும், குத்தவும், கிழிக்கவும், கொல்லவும் காத்துக்கிடப்பவர்கள்' என்று முகத்தில் ஒரு வெறியின் நிழலடிக்க கூறியவன், பின் அப்போதுதான் அங்கே வந்த தன் தம்பியிடம், 'கதக்கண்ணா, வீடாணனை அழைத்துவா' என்றான்.

'வீடாணன் அரண்மனையில் இல்லையண்ணா. படை முகாம் போயிருக்கிறான்.'

'இப்போதெல்லாம் எனக்குத் தெரிவிக்காமலே படைமுகாம் போய்விடுகிறான். அடிக்கடியும் போகிறான்போலத் தெரிகிறது. சரி, இப்போதே ஆள் அனுப்பி, உடனடியாக அரண்மனை திரும்பச்சொல். குல மூத்தோருக்கும் செய்தியனுப்பி நண்பகலுக்கு முன் என்னை வந்து காணச் செய்;.'

மறுகணத்தில் ராவண கட்டளை லங்காபுரமெங்கும் பறந்து கொண்டிருந்தது.

கட்டளைப்படி நண்பகலுக்கு முன்பாகவே தலைநகரில் குடியிருந்த குலமூத்தோர் அரண்மனையில் கூடிவிட்டிருந்தனர். ராவணன் போர் எதிர்வந்திருக்கும் விபரத்தைச் சொன்னான். தலைநகர் எவ்வகையிலும் காக்கப்பட வேண்டியதை வற்புறுத்தினான். 'இந்தப் போர் நாக அரசனோடு நடந்த போர்போலச் சாமான்யமானதாக இருக்காது. ஆனாலும் வெற்றி லங்காபுரத்துக்கு நிச்சயம். சரி, போய்வாருங்கள். இந்தப் போர் முடிந்த பின்னால் நடைபெறவிருக்கும் வெற்றிக் களிவிழாவில் மீண்டும் சந்திப்போம்.'

குலமூத்தோர் போய்விட்டனர்.

மாலையானது. இரவுமானது. ஆனால் வீடாணன் வரவில்லை.

ராவணனுக்கு அவன் போக்கு, பேச்சு, பாவனைகளில் கடந்த காலங்களில் தோன்றியிருந்த சமுசயம் இப்போது வலுக்கவாரம்பித்தது. சரி, விடியும்வரை காத்திருக்கலாம் என எண்ணி ராவணன் அமைதியாயிருந்தான்.

அடுத்தநாள் விடிந்தபோதும் வீடாணன் வரவேயில்லை.

# முப்பத்து நான்கு

மந்தாகினியின் மாளிகைக்கு அன்றிரவு ராவணன் வரவில்லை. இருள் பரவ ஆரம்பித்த நேரத்திலிருந்து அவளது பார்வை மாளிகையின் வாசல் நோக்கியே பரந்துகொண்டிருந்தது. அவன் வரத் தாமதம் ஆகும் பொழுதுகளில் ஏனோ அவ்வாறுதான் அவளுக்கு ஏற்பட்டுக்கொண்டிருந்தது. சித்தன் கண்டு தனக்குள்ளாகவே நகைத்ததை அவள் கவனித்தாள். ஆனால் செயற்பாட்டைமட்டும் நிறுத்திக்கொள்ளவில்லை. அவளுக்கே தன் பரபரப்பின், கவலையின் காரணம் அச்சொட்டாகத் தெரியாதிருந்தது. அது அன்புக்காக இல்லை. காமத்துக்காகவும்கூட அல்ல. அன்றொரு நாள் காட்டு வாசியொருவன் வந்து பெருங்கலகம் விளைத்துப் போனதன் பின்னர் அவள் அப்படித்தான் குழம்பியவள் ஆகியிருந்தாள். அரண்மனையில் அவனது தனியாளுமைக்கெதிராகச் சில நாக இனம்சார் ஒன்றுசேர்தல்கள் தொடங்கியதை அவள் அறிந்திருந்த வகையிலும், வீடாணன் இப்போதெல்லாம் அதிகமும் அரண்மனையில் காணப்படாதிருக்கிறான் என்பதிலுமிருந்து ராவணனுக்கு ஏதேனும் ஆகிவிடலாமோவென்ற கரிசனை அவளை அப்படித்தான் இயங்க வைத்துக்கொண்டிருந்தது.

ஆனாலும் சீதைப் பெண்ணாளின் அபகரணம் காரணமாக அவள் கணவனும் தம்பியும் போரெடுத்து வருவதான தகவல் அன்று காலையிலேயே அரண்மனை வந்து சேர்ந்திருந்ததனால், நிலைமையை அவளால் ஊகிக்க முடிந்திருந்தது. இனி அந்தப் படையை நிர்மூலமாக்கும்வரை ராவணன் உறங்கப்போவதில்லை. மந்தாகினி மாளிகைக்கு இனி அவன் வரவு அந்தக் காட்டுவாசிப் படையின் ஜெயத்துடன்தான் இருக்கப்போகிறது.

சித்தன் படுத்து நெடுநேரமாகியும் அவள் தனியே தன் பணிப்பெண்ணை அவ்வப்பொழுது அரண்மனைக்கு அனுப்பி

நிலைமையை அறிந்துகொண்டு விழித்தபடியிருந்தாள். ராவணன் கீழ்த்திசைப் படைவீடுகளுக்குச் சென்ற வீடாணன் வரும்வரை காத்திருப்பதான செய்தியைக் கொண்டுவந்தாள், இறுதிமுறையாகச் சென்றுவந்த பணிப்பெண்.

படுக்கைக்குச் சென்ற மந்தாகினிக்கு வெகுநேரம் சென்றே தூக்கம் வந்தது. அதுவும் இடையீறுகள் கொண்டதாகவே இருந்தது. திறந்த சாளரத்தினூடு குளிர் காற்று நுழைந்துகொண்டிருந்தும், மேனி நசநசப்புக் கொண்டதிலும் தூக்கமறுந்தது.

ஒருபொழுதில் முகில்களின் மோதலொலிபோல் கேட்டு திடுக்கிட்டுக் கண் விழித்தாள் மந்தாகினி. விண்வெளியில் அல்லாது, அரண்மனைக்குள்ளிருந்துதான் அந்த இடியோசை எழுந்திருந்த தென்று பின்னர் தெரிந்தது. அவள் படுக்கையைவிட்டு எழுந்தாள். அன்று நேரத்தோடேயே அரண்மனை செல்ல எண்ணி ஆயத்தமானாள்.

கூடத்துள் அவள் வந்தபோது சித்தனின் அறைப் பக்கம் அவள் கண்கள் திரும்பின. சித்தன் அங்கே இல்லையென ஆக, மாளிகையெங்கும் பார்வை பரத்தினாள். சித்தன் வெள்ளெனவே எழுந்து மாளிகை போயிருப்பானென்பது நிச்சயமானது அவளுக்கு. அவன் பாதி ராவணன். அந்த வயதிலேயே. யுத்தம், விளையாட்டுக் களம் இருவருக்கும்.

புலரி கண்ட வேளையிலிருந்தே அரண்மனை, கூடங்கள், மாளிகைகள் அதிர ராவணன் பெருங்குரல் எழுந்துகொண்டிருந்தது. அத்தனை நேரத்துக்குள் ஒரு பத்துமுறையாவது ராவண முழக்கத்தை அவள் செவிமடுத்திருப்பாள். இடிமுழக்கம் என்ன செய்யும். ராவண முழக்கமோ எல்லாம் செய்யும்.

தாதிகள், காவலர்கள் என்று அவளது பணிவிடைகள் செய்பவர்கூட வருவதும் போவதுமாக இருந்தார்களே தவிர, அருகிருந்து ஏவல்செய்பவர்களாய் எவரும் இல்லை. ஒரு புழுகம் அவர்கள் மேனியெங்கும் பொங்கிக்கொண்டிருந்ததை அவள் கவனித்தாள். யுத்தம் அவர்களுக்குப் பேருவகையைச் செய்திருக்கிறது. அப்படியானால் ராவணன் அவ்வாறு கோபத்தில் கத்துவது எதற்காக. அவனுக்கு உவகையில்லையா. ஒருவேளை ஏதாவது ஏற்பாடு இலக்குத் தப்பிப் போயிருக்கிறதோ.

அவள் துரிதமாக அரண்மனையை நோக்கி நடந்தாள். அந்தளவில் ராவண கர்ஜனை நின்றிருந்தது. அதன் காரணம் அவள் அரண்மனையை அடைய விளங்கியது.

ரதக் கொட்டகை பார்த்த வெளியில் நின்றபடி பிரானும், ராவணனும் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

பிரான்! அந்த மகாசிற்பி! சில ஆண்டுகளின் முன் ராவணனோடு பிணக்குக்கொண்டு நட்பறுத்துப் போனவன் மறுபடி அரண்மனையில். பிரான் கூறும் வியங்களினாலேயே ராவணன் சினம் குறைந்துவருவதை அவளே நேரில் பார்க்கச்செய்தாள். ஆனாலும் பிரானை நேரில் காண்பதொன்றும் அவளுக்கு உவப்பான காரியமாக இருக்கவில்லை. முன்பொருமுறை தமது நாக இனக் கூட்டில் பிரானையும் சேர்த்துக்கொள்ள வீடாணன் முயன்றது அவளுக்குத் தெரியும். ஒருவேளை அந்த வீடாணன் தன்னைப்பற்றி ஏதேனும் அவனிடம் சொல்லிவைத்திருப்பானோ என்று அப்போது அவளுக்குத் திகைப்பு வந்தது.

மந்தாகினி உள்நுழைந்த அரவத்திலும், அசைவிலும் இருவரும் திரும்பிப் பார்த்தனர். பிரான் மெல்லிய புன்னகை காட்டினான். ராவணக் கண்களின் உணர்வலைகளை அவளால் பகுத்துணர முடியாதிருந்தது. ஆனாலும் பதிந்த பார்வையில் இறுகிய தீர்க்கம்.

இனித் திரும்புதல் சாத்தியமில்லை. மந்தாகினி அவர்களை நெருங்கினாள்.

ராவணனும், பிரானும் தமது உரையாடலில் கவனமாயினர்.

பிரானின் பாவங்களில் தன் ஐயத்துக்கு ஆதரவான எந்தச் சமிக்ஞையையும் காணாத மந்தாகினி நிதானமடைந்து அவர்கள் பேச்சைச் செவிமடுத்தாள்.

பிரான் சொன்னான்: 'இருள் கவிந்துவந்த அந்தப் பொழுதில் யாரென்பதறியச் சிரமம் கொண்டேன். ஆனாலும் கிட்டே சென்றதும் அவன் உம்முடைய சேவகன்தான் என்பதையறிய எனக்குச் சிரமமிருக்கவில்லை. குற்றுயிராய்க் கிடந்த வேளையிலும் அவன் தனக்கு நிகழ்ந்ததைக் கூறி உம்மிடம் அதைத் தெரிவிக்கக் கேட்டான். உடனேயே இறந்தும் போனான்.'

'பிறகு?'

'நான் அந்த இடத்தைவிட்டு விலகுமுன்னரே சிலர் எழுவான் திக்கிலிருந்து ஓடிவரும் காலடி ஓசைகளைக் கேட்டேன். ஒதுங்கியொழிந்து நின்று பார்த்தால்ஞ் தென்கீழைப் பாடிவீட்டு வீரர்கள்.'

'தென்கீழைப் பாடி வீட்டு வீரர்களா.'

'நிச்சயமாக. அவர்களை நான் நன்கறிவேன்.'

'சரி, எந்தத் திக்கில் ஓடினார்கள்.'

'மேற்குத் திக்கில். வீடாணன்போல தலைநகர் வரும் பாதையிலன்றி, படுவான்குழிப் பாதையில் திரும்பியே அவர்கள் போய்க் கொண்டிருந்தனர்.'

இருவரின் உரையாடலையும் கேட்டவரையில் எதையும் அனுமானிக்க முடியாத மந்தாகினி, 'வீடாணன் எங்கே போகிறான். படைவீரர்கள் எதற்காக மேற்கெல்லை நோக்கி ஓடுகிறார்கள். வீடாணன் இங்கே வரத்தானே கட்டளை' என்று கேட்டாள்.

கேட்டு ராவணன் கடகடவெனச் சிரித்தான். பின்னர், 'வீடாணன் எங்கே போனானென யாருக்குத் தெரியும். ஆனாலும் ஊகிக்க முடியும். அவன் எதிரிகளோடு போய்ச் சேர்ந்துகொள்ள எனது சேவகனைக் கொன்று அவனிடமிருந்து குதிரையை அபகரித்துக்கொண்டு மேற்கெல்லைக்கு ஓடியிருக்கிறான். அவனது விசுவாசிகளும் அவனைப் பின்தொடர்ந்துவிட்டனர்' என்று கூறி மறுபடி சிரித்த ராவணன், பிரான் பக்கம் திரும்பிக்கொண்டு சொன்னான்: 'நடை கதியில் சென்ற விசுவாசிகள் இந்தநேரம் வரைக்குள் மேற்கெல்லையை அடைந்துவிட முடியாது. இல்லையா, பிரான்.'

பிரான் முடியாதுதானென தலையசைத்துக் காட்டினான்.

'நில், வருகிறேன்' என்ற ராவணன் அரண்மனைக் கூடம் தாண்டி வெளியில் நடந்தான். ஒரு கால் நாழிகையின் பின் அவன் திரும்பிவந்தபோது அவனது முகத்தில் ஒரு வஞ்ச முறுவல் முளைத்திருந்தது.

மறுகணத்தில் வெளியே விரைவுப் புரவிகள் சிலவற்றின் புறப்பாட்டொலி கேட்டது.

வீடாணனும், அவனுக்கு விசுவாசமான படைவீரர் சிலரும் எதிரிகள் பக்கம் சேர்ந்துவிட்டனர் என்ற ராவண வார்த்தையைக் கேட்டுப் பதறிப்போய் நிலைகுத்தியிருந்த மந்தாகினி, சிறிது தெளிந்து ஓசைகேட்ட திசையில் பார்த்தபோது கதக்கண்ணன் வீற்றிருந்த புரவி முன்னேயும், சில கொடுமறவர்களின் புரவிகள் பின்னேயுமாக ஒரு சிறுபடை கோட்டை வாசலைநோக்கி விசைபெறத் தொடங்கி யிருப்பது தெரிந்தது.

'ராவணரே, எப்போது படை புறப்பாடு.' பிரான் கேட்டான்.

'இன்றிரவு இரண்டாம் யாமத்தில்.' இவ்வாறு பிரானின் கேள்விக்குப் பதிலிறுத்த ராவணன், 'மனம் மாறுகொண்டிருந்த போதிலும் மிகவும் தேவைப்பட்ட ஒருவேளையில் நல்ல கைங்கரியம்

செய்தாய், பிரான். ஏற்கனவே நான் வீடாணனின் நடத்தையில் ஐயுறவுகொண்டேன்தான். ஆனாலும் என்ன காரணத்தாலோ சிரத்தையெடுத்துப் பகுத்துப் பார்க்காமல் இருந்துவிட்டேன். கடைசியில் யார் அவன், என் தம்பிதானே என்ற எண்ணம்தானாய் இருக்கும்.'

உடைவுபட்டனபோல் எழுந்தன ராவண வார்த்தைகள்.

ராவணனிடமா உடைவு! பிரான் திடுக்கிட்டான். மந்தாகினியின் கண்கள் கலங்கிவிட்டன.

வெளியே எழுந்த சூரியப் பிரகாசத்தில் அரண்மனை வெளித்துக் கொண்டிருந்தது. எண்ணெய் அற்றுப்போய் அணைந்த தீப்பந்தத்திலிருந்து புகை கிளர்ந்தெழுந்து மணத்தது.

சித்தன் அரண்மனையைச் சூழ்ந்த புல்வெளியில் அம்புகளோடும், வில்லோடும் நின்று மரத்து இலைகளில் அம்பினால் துளை செய்துகொண்டிருந்தான். துளைசெய்து விழும் அம்புகளை ஓடியோடி எடுத்துக் கொடுத்துக்கொண்டிருந்தான் ஒரு இயக்கவினச் சிறுவன்.

ராவணன் சிறிதுநேரத்தில் தானே தெளிந்துகொண்டு சொன்னான்: 'பிரானே, செய்த இந்தப் பெரிய உதவியோடு இன்னுமொரு உதவி நீ செய்யவேண்டும். அதுவும் அவசரமாக.'

'சொல்லும்.'

'நாகனை அறிவாயல்லவா. அவனில்லமும் அறிவாயோ. எப்படி யெனினும் இன்று எல்லி மறைவின் முன் அவனை வந்து என்னைக் காணச்செய்ய உன்னால் முடியுமா. புரவியில் செல்லலாம். அதை நாகனிடம் கொடுத்து அவனை அதிலேயே விரைந்து பயணித்து வரச் செய்துவிட்டால்போதும்.'

'செய்கிறேன். ஆனால் இப்போதே நான் புறப்படவேண்டும்.'

'செய். அடுத்தமுறை தலைநகர் வருகிறபோது மலைக்கோயிலை ஒருமுறை சென்று பார். கபாடபுரக் கலைஞனும் உன் திறமைக்குச் சளைத்தவனில்லை.'

ராவணன் மனது நொய்துபோயிருந்த தருணமாயிருந்தது அது. பிரான் அதை நன்கறிந்தான். அதனால் தன் மனமறுப்பை அவ்வேளை காட்ட விருப்பமின்றி, அப்படியே செய்வதாகச் சொன்னான்.

மந்தாகினி திரும்பி வந்தபோது பிரான் புறப்பட்டுப் போயிருந்தான். ராவணனை மெல்ல நெருங்கிய மந்தாகினி, 'வீடாணன் இவ்வாறாகச் செய்த பின்னர் நாம் வலிதிழந்தில்லையா, ராவணேசா' என்றாள், தன் கேள்வியின் அர்த்த பாரம் வெளித்தோன்றாத அவதானத்துடன்.

‘என் தம்பியான இழப்புத் தவிர, வேறெந்த இழப்பாகவும் எனக்கு அது இல்லை. அவனது வெளிப்டையான ஒழுகலாறுகளில், செய்த அற உரைகளில், காட்டிய பணிவுகளிலிருந்த போலியைக் கண்டு கொள்ளாமல் இருந்துவிட்டேனே என்றுதான் நான் வெகுண்டது. வேறில்லை. நீ அச்சமுற வேண்டாம். இந்தநேரத்தில் மாரீச மாமன் இல்லையே என்பது என் இன்னொரு வருத்தம். அவனிருந்தால் நான்கூட யுத்தமுனைக்குப் போகவேண்டியதில்லை. அரண்மனை நந்தவனத்தில் நான் யாழிசைத்துக்கொண்டிருக்க அவனே வெற்றியை என் காலடிதேடி வரச்செய்துவிடுவான்.’

பிறகு ராவணன் அப்பால் நகர்ந்துபோய்விட்டான்.

மந்தாகினி மனம் சற்றுத் தெளிந்தாள். வீடாண இழப்பு உண்மையில் எதுவுமில்லைத்தான். அவள் சித்தனைத் தேடி நடக்கத் தொடங்குகிற நேரம், எதிரே பார்த்தாள். சூர்ப்பநகை ஆயுததாரியாக வந்துகொண்டிருந்தாள்.

# முப்பத்து ஐந்து

வெகுட்சியென்பதன் பிரமாண்டம் சூர்ப்பாநகையைப் பார்த்தபோதுதான் மந்தாகினிக்குப் புரியலானது. அதுவே போரில் கெழுமியெழும் சன்னதத்தையும் அப்போது அவளுக்குக் காட்டியது.

சூர்ப்பாநகை உடல்வாகுவில் சிறியவள்தானெனினும் நாலு விரற்கடையாவது உயரத்தில் கூடியவள் மந்தாகினிக்கு. அவள் அழகியும். மந்தாகினியைப் போலல்லாவிடினும் அவள் நகை செய்கிறபோது, அந்த அழகு ஈடுஇணையற்றதாக விளங்கும். மாநகை என்பதுதான் ஆரம்பத்தில் அவள் பெயராகவிருந்தது. அவள் நகைக்கும் அழகு கண்டு சூர்ப்பாநகையாளென கபாடபுரத்திலிருந்து வந்த பாணன் ஒருவன் பாடிய பிறகுதான் அவள் சூர்ப்பா நகையானாள். தேயாத முறுவலைக் கொண்டவள் என்று அதற்குப் பொருள்.

தோலாடை கட்டியிருந்தாள் சூர்ப்பாநகை. நெஞ்சை மூடி முழங்கால்வரை இறங்கியிருந்தது அது. தன் நீண்ட தலைமுடியை முடிந்துவிட்டிருந்ததில் முகம் கனதியாகத் தோன்றியது. அம்பறாத் தூணி வலப்புறத் தோளில் தொங்கிக்கொண்டிருக்க, நாண் வலுவேறிய வில்லை இடப்புறத் தோளில் கொழுவியிருந்தாள். பதம் செய்த கொடியில் இயன்ற நாண், மார்பக இடையில் விழுந்திருந்தது. முலைகள் அதன் நழுவுதலைத் தடுத்துக்கொண்டிருந்தன. அவள் தனங்களின் பருவரைக் காட்சி இளமையினதும், உடல் வலிவினதும் சாட்சியாய்க் காணக்கிடந்தது. தோலாடைக்கூடாகவுமே.

அவள் கண்கள் புகார் மூடிய இருமதிகள் கணக்கில் இருளடித்துக் கிடந்தன. கிட்ட நெருங்கியபோதுதான் அக் கண்களின் வெண்படலத்தில் ஓடியிருந்த செவ்வரிகள் தெரிந்தன. அவள் சினமடைந்திருக்கிறாள். ராவண குலத்தின் சினம் எவரையும் அதிரவைக்கும். அது மறத்தின் இமுக்கறியாதது. அவர்களின் தாய்

அப்படித்தான் இருந்திருந்தாள். அவள் தனக்கு ஒரேயொரு ஆண்துணை கொண்டிராதவள். காமம் அவள் உதிரத்தில் எந்நேரமும் ஓடிக்கொண்டிருந்திருக்கிறது. மதுவும், மலைவாழ் குழுவின் ஆட்டம் பாட்டத்தின் இச்சிப்பும் கொண்டவளாய் இருந்தும், அவள்தான் அந்த லங்காபுரத்தை அவ்வளவு அற்புதமான காவற்கோட்டையும், அழகு நகருமாய் ஆக்கிவைத்தவள்.

எல்லாம் ராவணன் சொல்லி மந்தாகினி அறிவாள். அவனேதான் தங்கை சூர்ப்பாநகை தன் தாய்போல் போகமும் மதுவும் கேளிக்கை அவாவும் கொண்டவளாய் வளர்ந்திருப்பதாய்ச் சொன்னதும். சூர்ப்பாநகைபற்றி வீடாணன் சொல்லியும் சில அவள் அறிந்திருந்தாள்.

மந்தாகினியின் இனத்தில் சில பெண்கள் அவ்வாறு உண்டுதான். ஆனால் நாக இனம் அம்மாதிரி வாழ்முறையைத் தீதானது என விலக்கத் தொடங்கி வெகுகாலம். மந்தாகினி அச்சம் தவிர்ந்தவள்தான். ஆனாலும் சூர்ப்பாநகைபோல் ஆயுததாரியாய் அந்தமாதிரியெல்லாம் வில் அம்புகளை எடுத்துக்கொண்டு வந்துவிடமாட்டாள். அவள் தாயாகியிருந்தவள் என்பதல்ல, அவள் தலைவியாகியிருந்தாள் என்பதே அதன் காரணம். தலைவி ஏவுதல் செய்பவள்தானே தவிர தானே செயல் படுபவளில்லை.

ஒரு கல்விசார் இனமாக நாக இனம் ஆகிக்கொண்டிருப்பதன் அடையாளம் அது. எழுத்து அவர்கள் மொழியில் உருவாகிக் கொண்டிருந்தது. பேசுவதுபோல் எழுத அங்கே சிலர் முயன்று கொண்டிருந்தார்கள். ஏற்கனவே சில நடுகல்களில் அவரவர் அடையாளக் குறியீடுகளை இட சிலர் செய்திருந்தனர். ஆனால் இயக்கர்கள் இவர்கள் போல் ஆக நெடுங்காலம் செல்ல வேண்டி யிருக்கும் என அவள் எண்ணியிருந்தாள். அதை உறுதிப் படுத்துவது போலத்தான் இருந்தது சூர்ப்பாநகையின் பிரசன்னம்.

பின்னே வருவது யார். மந்தாகினி பார்வையைக் குவித்தாள். சூர்ப்பாநகையின் தோழி, கொண்டனாமிகை. அவளும் தோலாடையே அணிந்திருப்பினும் ஆயுததாரியாக இல்லை.

அப்போது பிரானை அனுப்பச் சென்றிருந்த ராவணன் அங்கே வந்தான்.

அந்தக் காட்சி அவனை அசைத்தது மனத்துள்ளாய். ஒருபுறம் சித்தன். புல்வெளியில் தினவேறப்பெற்று அம்புவிட்டு மரவிலைகளைப் போழ் செய்துகொண்டிருக்கிறான். மேனியே செம்மையாய் ஒளிவீச ஆயுததாரியாய் அவன் தங்கை. அணுகிவிட முடியுமா லங்காபுரத்தை காட்டுவாசிப்படை. லங்காபுரத்தின் அரண்மனையின் பாதாளக்

கிடங்குகளுக்குள்ளே லங்காபுரத்தையே இரவினை நீக்கி ஒளிபெற வைத்துவிடக்கூடிய அளவுக்கு மணிகள் மலிந்து கிடக்கின்றன. அந்த மணிக்குவைகள் அந்நியர்வசப்பட்டோ, அறியா நிலைபெற்று மறுபடி மண்மடிக்குள்ளே சென்று அடங்கிவிடவோ சாத்தியமே யில்லையே.

ராவணன் மெல்லிய முறுவலோடு கிட்ட வந்தான். 'என்ன இது' என்றான்.

'நானும் களம் வருகிறேன்' என்றாள் சூர்ப்பாநகை.

'நீயும் வருகிறாய்தான். இரவு இரண்டாம் யாமத்தில் லங்காபுரப் படை பாலைவெளியை நோக்கி நகரும். அப்போது தயாராய் இருந்தால்போதும். அதற்குள் நான் செய்யவேண்டியதாய்ப் பல கருமங்கள். நாகன் மாலைக்குள் வந்துவிடுவானெ நினைக்கிறேன். அவன் வந்ததும் அவனோடும் மந்தாகினியோடும் சிவனீசனை வழிபட்டுவருவேன். திரும்பியதும் அப்படியே படை நகர்த்தலைச் செய்வேன்.'

ராவணன் மேலே பேசவில்லை. அதிராமல் அப்பால் நடந்தான். மந்தாகினி தயங்கியபடி பின்தொடர்ந்தாள்.

ராவணன் அந்தமாதிரி நொய்திருந்த நாள் மந்தாகினிக்கு நினைவில்லை. அதிகாலையிலெழுந்த கர்ஜனை என்ன! நிலமதிர்ந்த நடைகளென்ன! அந்த வல்லுடம்பில் தோள், நரம்புகள் யாவுமே புடைத்தெழுந்திருந்தன. இப்போது அவள் காணும் காட்சி?

அதுவே ஓர் உள்ளோடிய திகிலை அவளுள் ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

படுக்கையில் சாய்ந்து கிடந்திருந்தான் ராவணன். மந்தாகினி அவனை நோக்கியபடி அருகே அமர்ந்திருந்தாள். அப்போது திடீரென அவளது கண்கள் துடித்ததை உணர்ந்தாள். எந்தக் கண் துடிக்கிறதென்று மனம் அவதானிப்பைச் செய்தது. வலது கண்! வலம் துடிப்பது தின்மையின் அறிவிப்பு. அப்படியானால்...? பிறநாடிருந்து வரும் படை... கூடப் பிறந்தவனே கைவிட்டு எதிரியோடு ஒட்டிக் கொள்ள ஓடிவிட்ட நிலைமை... இந்தத் தருணத்தில் போர் அவசியம்தானா. அந்த மஞ்சளொளிச் சீதைப் பெண்ணுக்காகவா இத்தனையும்.

மேலும் யோசிக்க, அப்படியொரு நிலைமை அன்றைக்கு நேர்ந்திருக்காவிட்டாலும் போர்போலச் சூழ்ந்து ராவணனை அழிப்பதற்கான சூதொன்று வீடாணன் பின்னணியில் நிகழ்ந்தேதான்

இருக்கும் என்றோ ஒருநாள். இப்போது சூதின் முதல்வனே ஓடிப்போய் எதிரியோடு சேர்ந்துகொண்டிருக்கிறான். ராவணனின் பலம், பலஹீனங்கள் அறிந்தவன் அவன். அவனால்தான் ராவணனுக்காக அதிகமும் அஞ்சினாள் மந்தாகினி.

ஆனால் ராவணனிடம் அதைச் சொல்லும் துணிவு மந்தாகினியிடம் இல்லை. துணைவலி, தன் வலி, மாற்றார் வலியென்று அனைத்தும் பார்த்துப் போர்முகம் செல்வதே தக்கதென ஓர் அறிவுரையாக எடுத்துச் சொன்னாலென்ன. ஆனால் ராவணன் அதை அப்போது உணர்ந்து ஒப்புக்கொள்ளும் நிலையில் இல்லையென்பதை அவள் உணர்ந்தாள். அவன் மேனிக்குள் எரி எழ ஆரம்பித்துவிட்டது.

அவள் தலை குனிந்தபடியே யோசித்தவாறிருந்தாள்.

சிறிதுநேரத்தில் ராவணன் அசைவு தெரியத் திரும்பினாள்.

ராவணன் கண்கள் அவளையே துளைத்தபடியிருந்தன.

அவள் கண்களுள் நீல அலைகள் எழுந்து வா வா என்று உரத்து அழைப்பனபோல் உணர்ந்துகொண்டிருந்தான் அவன். அது புதுமையானதுதான். ஆனாலும் அதில் பெரு ஆர்வம் குறையாதபடி எழுந்துகொண்டேயிருந்தது.

வாழ்நாளில் இல்லாத அந்த அனுபவம் ஏனென்று அவன் நினைக்க முயன்றான். பிறகு அவ்வாறு நினைக்கக்கூடாதெனத் திண்ணமெடுத்துக்கொண்டு அதை மறக்க அவள் விழியலைகளின் அழைப்புக்குள் தன்னைப் புகுத்த முனைந்தான் ராவணன்.

எப்போது எப்படி அந்த எழுச்சி ஏற்பட்டது, பகலானது எப்படிக் கண்ணுக்குள் இருண்டது, கதவம் திறந்திருந்த அல்லது மூடியிருந்த பிரக்ஞை ஏன் மறந்ததென இருவருக்குமே தெரிந்திருக்கவில்லை. அப்படியே பாய்ந்து அவனை அணைத்து, காமத்தின் இதமெல்லாம் செய்தாள் அவள். ராவண அமளி அரை நாழிகை நேரம் காம யுத்தத்தின் களமாயிற்று.

இறுதியில் களைத்து விழுந்தன இரு தேகங்களும்.

அவள் கண்களிலிருந்து மணிகள் சிதறித் தெறித்தன. பின் ஒருவாறு தெளிந்துகொண்டு, ' இப்படியோரு யுத்தம் அவசியம்தானா' என்று மெல்லக் குரல் கிளர்த்தினாள்.

ராவணன் சட்டென எழுந்தான். அவள் கையைப் பற்றி இழுத்துக்கொண்டு மேல்தளம் சென்றான். அவள் பயந்துதான் போனாள். ஆனாலும் அவன் முகத்தில் சினத்தின் ரேகைகள் வெகுவாய்ப் படராதிருந்தது கண்டு நெஞ்சத்தே அமைதியடைந்தாள்.

ராவணன் கோட்டையின் வாயிற் புறத்தைச் சுட்டி, 'அங்கே பார், நமது தலைநகரின் கோட்டை வாயில் இதுபோல் எப்போதும் பரக்கத் திறந்திருந்தது நீ கண்டதுண்டா' என்று மென்மையாய் இரைந்தான்.

மெய்தான். காலையிலிருந்து கோட்டைக் கதவுகள் இதுபோல் என்றும் திறந்தே கிடந்ததில்லைத்தான். அன்று என்றுமில்லாத திருநாள். பகை வருதலின் செய்தி அன்றைய தினத்தை திருநாளாக ஆக்கியிருந்ததுபோலும். பகை வருகிறதெனில் கோட்டைக் கதவுளைத் தாழிட்டு அடைப்பதே அதுவரை கால வழக்கமாயிருந்தது. லங்காபுரத்தில் மட்டும்தான் கோட்டைக் கதவுகள் கொண்டாட்டுச் செய்வதற்குப்போல் அகலத் திறந்துவிடப்பட்டிருந்தன.

அவள் இல்லையெனத் தலையசைப்பில் தெரிவித்தாள்.

'மெய். போரின் வருகையில் மக்கள்கொண்ட மகிழ்ச்சியில் அது நிகழ்ந்தது, மந்தாகினி. வீடாணன் போய்விட்டான். கீழ்ப்புறப் படைவீட்டின் அதிகார நாயகம் போனபின் சண்டையில் வாகை நிச்சயமற்றது என்று நினைத்துவிட்டாயா.' ராவணன் கேட்டுவிட்டு கடகடவெனச் சிரித்தான். பின் தணிந்துகொண்டு சொன்னான்: 'மந்தாகினி, வீடாணன் என் ஏவு தாங்குபவன். நான் சொன்னதைச் சொன்னபடியே செய்கிற ஆற்றலாளன் மட்டும்தான். அவன் பலமும் எனக்குப் பொருளில்லை. அவனைப்போல் பதின்மரை ஒரேநேரத்தில் கசக்கியெறிக்கக் கூடியவன் கதக்கண்ணன். எவருமேதான் என் மனத்தில் இழப்பாக எனக்கு இல்லை. ஆனால் ஒரேயொருவனின் இழப்புத்தான் எனக்கு மனமெல்லாம் இருந்து கலக்கம் செய்கிறது. என் மாமன் மாரீசன் இப்போது இருப்பானேயானால் நானேன் களமுனை செல்லப்போகிறேன். அவன் ஒருவனே போதும் அந்தக் காட்டுவாசிப் படையை அழிக்க. அவனது வலிமையென்ன, தந்திரங்கள் என்ன, மாயங்களென்ன. ஓ...பாவி மாமனே, எப்படி அழிந்தாய்.'

பின் தானே தெளிந்துகொண்டு சொன்னான்: 'ஆனாலும் அவனது மருகன் நான். எங்கள் குலத்தின் வீரமும், வலிமையும், உபாயங்களும், மாயங்களும் நானும் ஓரளவு அறிந்தவன்தான். ஒரு பகல்...இல்லையேல் இரண்டு பகல்... பகைவென்று மறுபடி உன்முன் வருவேன், ஐயமறு.'

அவனது நம்பிக்கையைத் தானும் அடையவே மந்தாகினி முனைந்தாள்.

அப்போது வெளிக் கதவத்தின் மணி ஒலியெழுப்பியது.

மந்தாகினி எழுந்து வந்தாள்.

வாசலில் ஓரமாய் முதலமைச்சன் நின்றுகொண்டிருந்தான்.

# முப்பத்தாறு

நிறைய ஆயத்தங்களைச் செய்து முடிக்கவேண்டியிருந்தது ராவணனுக்கு. குல மூத்தோர் வருவதும் போவதுமாய், திட மல்லர்.

வருவதும் போவதுமாய், மதி சிறந்தோர் வருவதும் போவதுமாய் லங்காபுரத்து அரண்மனை கலகலத்துக்கொண்டிருந்தது. ஆனாலும் ஒரு விசித்திரத்தில்போல சகல அலுவல்களையும் அன்று பொழுது படுவதன் முன்னரே நிறைவேற்றிவிட்டிருந்தான் ராவணன்.

வழக்கம்போல் அமைதியுறும் பின்னிராப் பொழுதில் அன்றைக்கு மக்கள் கலகலத்துத் திரிந்தனர் வீதியெங்கும். பரத்தையர் சேரியில் பெருவெள்ளம் அடித்தது. ஆனால் அன்று தலைவர்களைச் சந்திக்க விரும்பாத பரத்தையரின் சேரியாக இருந்தது அது. ஆடலும், பாடலும், இசைக் கருவிகளின் இசைப்புமாய் அந்நேரத்தில் அல்லோல கல்லோலப்படும் பரத்தையர் தெரு நெடுக பரத்தையர் சூழ்ந்து அப் பெருஆரவாரத்தை ரசித்துக்கொண்டு நின்றிருந்தனர்.

அவர்களைப் பலநேரங்களிலும் காணுதலுக்கும் பிடிக்காத பலர் அன்றைய கோலாகலத்தையொட்டிய அமளியில் அவர்கள்மேல் பார்வையை எறிந்து மதுமாந்திய தும்பிகளாயினர். பரத்தையரின் துகிலணியாக் கொங்கைகள் எக்காள வேளைகளில் குலுங்கி காண்போரைக் குதூகலம் அடையச் செய்துகொண்டிருந்தன.

அறம் புகலப்படாக் காலமாயிருந்தது அது. பண்புகளும் ஒரு பகுதி மக்களுக்கானதாய் மட்டுமே கொள்ளப்பட்டிருந்தன. அதிலும் ஒருசிலரே அதன் நுண்மை தெரிந்திருந்தனர். மீதியானோரதே அதிகாரமாயிருந்தாலும், அவர்கள் தலைவன் என்ற ஒரு சொல்லுக்குக் கட்டுப்பட்ட நல்ல குடிமக்கள்தான். அவர்கள் மறவர்களாயிருந்தனர். அவர்க்கான பண்பாட்டடையாளங்கள் வேறுவேறானவை. அவர்கள்

கள் புசிக்கவும், கூத்தியரைச் சேரவும், நடனங்கள் ஆடவும் காணவும், இசை இசைப்பவும் கேட்கவும் அவா கொண்டவர்களாயிருந்தனர். மறம் ஒரு வாழ்க்கை முறையாகவிருந்தது.

மறமே வாழ்தலுக்கான அறமெனப் பெயர்கொண்டுமிருந்தது.

மேலைத் திக்கில் எல்லி விழுந்தும் தலைநகர் ஒளிச் சூழ்களிலும் விளக்குகளிலும் பிரகாசமடைந்து கிடந்தது. தண்மதி அன்று தன் கண்ணில் காமமேறி இணைதேடும் களிவெறி கொண்டிருந்ததோ. அப்படிக்கு விண்ணிலிருந்து ஒளி சிந்தியது.

அவ்வேளை விசைத் தேரின் மணியொலி கேட்டது. ராவணன் அரண்மனையைவிட்டு வெளியே ஓடிவந்தான். கதக்கண்ணன் வந்துகொண்டிருந்தான். தேரை நிறுத்திவிட்டு குனிந்த தலையோடு வந்தான். வீடாணன் தப்பிவிட்டதை தம்பி சொல்லாமலே அறிந்து கொண்டான் ராவணன். ஆனாலும் எங்கே போய்விடப்போகிறான். சண்டை முடிவில் சாவு அவனுக்கு எழுதப்பட்டிருக்கிறது.

பழிக்குப் பழியாக ஒரு வெஞ்சினம் மனத்திலிருந்ததுதான். அது, கதக்கண்ணன் அவனைப் பின்தொடர்ந்த பாடிவீட்டு படை மறவருக்கு நேர்ந்த அவலத்தைச் சொல்லக் கேட்டதும் பறந்துபோய்விட்டது ராவணனுக்கு. மேற்கெல்லையின் வனப் பகுதியைக் கடக்குமுன்னரே அவர்கள் கண்டதுண்டமாய் வெட்டிக் கொல்லப்பட்டிருந்தார்கள்.

அந்தநேரத்தில் நாகன் அங்கு வந்துசேர்ந்தான்.

சிறிதுநேரத்தில் மந்தாகினி, நாகன் இருவர் மட்டுமே சூழ ராவணன் மலைக்கோயிலுக்குப் புறப்பட்டான். காவல் படையொன்று பின்னால் தொடர்ந்துசென்றது.

மலைக் கோயிலைச் சென்றடைந்த ராவணன் எதுவும் பேசாமலே தன் வணக்கத்தை முடித்தான். நாகனும் தொழுதான். மந்தாகினி அன்று நீண்டநேரம் கண்மூடிநின்று வார்த்தைகளற்ற வழக்காடலைச் செய்துகொண்டிருந்தாள்.

அது அமைதியும் அமைதி கொண்டிருந்த நேரமாயிருந்தது. மலைக் கோயிலுக்குள் காற்று வலிதாய் உள்நுழைந்து சரசரப்புச் செய்தது. அது உரசிய வேகத்தில் அடிக்கப்படாதிருந்த பெருமணியின் நாவு தன்னுள் அசைந்து உலோக உராய்வொலி எழுப்பியது.

நாகன் எதிரே பார்த்தான். சிவன் தலைவன்போல் நிலைத்த தவிசில் நின்றிருந்தது. அதன் நெற்றியில் அரவத்தின் பை. அழுத்தமாய்ப் பொழியப்பட்டிருந்து நாக சின்னக் கல்லை நினைவுறுத்தியது. இயக்க இனத் தெய்வம் சிவத்தில், நாக இனத் தெய்வமான அரவம்! பிறதேயம் பார்த்ததில்லை. வாணிகர் தவிர்ந்த பிறமொழியார் பேசக்

கேட்டதில்லை. இருந்தும் இனப்பகையின் மூலமறிந்து அதை நிவர்த்திக்க ராவணன் செய்த செயல் அற்புதமாய்த் தென்பட்டது நாகனுக்கு. ராவணன் இவ்வளவு பேரறிவை எப்படிப் பெற்றான். எங்கு பெற்றான்.

அவனுக்கு ஆறாடிகளில் பிரியம் அதிகம். நாகனில் மிகமிகப் பிரியம். அவனும் அவன்போல் பிற ஆறாடிகளும் கொண்டு சென்றதுபோல் கொண்டும்வந்த தகவல்கள், கதைகள்மூலமாகவா ராவணன் தன் அறிவை மிகுப்பித்தது.

ராவணன் வணக்கம் முடிய அப்பால் நகர்ந்தான். நாகனும் பின்தொடர்ந்தான். சிறிதுநேரத்தில் மந்தாகினியும்; வர, புறப்படும் அவசரமின்றி தொலைதூரத்தில் பார்வை பதிய நின்றபடியேயிருந்தான் ராவணன். அவள் வரவு தெரிந்து மெல்லத் தெளிந்தவன் முகம் சற்றுத் தெளிவடைய, 'அதோ அங்கேதான் பகை நிற்கிறது. நாளை அதனுடன்தான் என் யுத்தம். அங்கே நிற்கும் அறியாப் பகையைவிட, அறிந்த பகையே என் முழுக் கவனத்தினதும் மய்யமாக இருக்கிறது. நான் பலகாலம் யோசித்திருக்கிறேன்;. நாக இன மக்களும் என் மக்களே. ஆனாலும் அவர்கள் என்னை அந்நியனாக நினைத்தே அடங்கி நடந்தனர். குறிப்பாக இந்த மலைக்கோயிற் கட்டுமானம் தொடங்கியவேளை அவர்கள் என்னை ஓரளவு பகைகொண்டும் நோக்கியதாய்த் தெரிந்தது. நாக இனமும், இயக்க இனமும், மலைவாழினமும் எல்லா இனமும் ஒன்றே. அதனால்தான் கபாடபுரச் சிற்பிமூலம் சிவத்தின் தலையில் நாக சின்னத்தை பொழிவிக்கச் செய்தேன். மந்தாகினிக்குக்கூட அதன்பிறகுதான் என் அகம் புரிந்து உட்கனல் ஆறியது, இல்லையா' என்றபடி மந்தாகினி பக்கம் திரும்பினான்.

அவள், 'இல்லை ராவணேசா..'வென ஏதோ சொல்லவர, 'வேண்டாம், நீ மறுத்துரைத்தாலும் உண்மை அதுதான். வீடாணனும் வேறுபாடு கொண்டிருந்தான். அது வேறு பேர்கள்; காரணமாய். அவனும் அதுவாறியிருப்பான் என்பதே என் எண்ணமாகவிருந்தது. இல்லை, அவன் உட்சினம் ஆறவில்லை. பொன்னிறப் பெண்ணாள் அச் சீதையைக் காரணம் வைத்து அவன் அவளது கணவன் பக்கமாய் அக் காட்டுவாசிப் படையோடு போய்ச் சேர்ந்துகொண்டான். ஆனால் அவன் அவ்வாறு ஓடியதற்கான மெய்யான காரணம் எனக்குத் தெரியும்' என்று கூறி நிறுத்தி நாகன், மந்தாகினி இருவரையும் மாறிமாறிப் பார்த்தான் ராவணன்.

மந்தாகினியின் மனம் திக்கென்றது. அவளும் ஒரு சூதில் அகப்படுமளவுக்கு அதற்கு வெகுவெகு அணித்தாகச் சென்றிருந்தவள். ஆனாலும் ராவணன் அவளை அதிகமும் அவதிப்பட வைத்துவிடாது,

தன் எண்ணத்தை வெளிப்படுத்தத் தொடங்கினான். 'என் தாய் தலைவியாய் இந்த நாட்டைப் பராமரிக்கமட்டும் செய்யவில்லை, அவள்தான் லங்காபுரத்தின் செல்வத்தைப் பகைகளிடமிருந்து காத்தாள். அவளது குலத்தினரின் ஒன்பது தலைமுறைச் சொத்துடன் தானும் தன் பங்குக்காய் அளவற்ற மணிக்குவைகளை அவள் சேர்த்துவைத்தாள்.

'நான் குழந்தையாய் இருக்கையில் அந்த மணிக் குவை அறைகளில் விளையாடியிருக்கிறேன். அவள் என்னுடன் அங்கே விளையாட அனுமதித்த ஒரே நட்புச் சிறான் மாமன் மாரீசன் மட்டும்தான். என் இளவயதுக் காலமே பொன்னும் மணியும் பற்றிய கனவாகிவிட்டது. என் கனவு தெரிந்துதான் அந்தச் சின்னவயதிலேயே லங்காபுரத்து அரண்மனையை எனதும் மாமனதும் பொறுப்பில் விட்டுவிட்டு பொறுப்பில்லாமல் தான் திரிந்தாள் என் தாய். அவள் இச்சைகளை அடக்கத் தெரியாத ஒரு அணங்காகவே இப்போதும் எனக்குத் தெரிகிறாள்.

'அவள் தான் விரும்புபவருக்கு வசமாகும் அணங்காக இருந்தாள் என்பதுதான் மெய்யாய் நடந்தது. அதனால்தான் அவளது இச்சைகளை நானும் மீற முயற்சியெதுவும் காட்டியதில்லை. ஒருவர் இருவர் அறிகிறவரைதான் ஒரு வியம் இரகசியமானது. அதனால்தான் பாதாளக் கிடங்கிலிருந்த மணிக் குவைகளை யார் பார்க்கவும் நான் அனுமதித்ததில்லை. என் உடன்பிறப்புகள்கூட அக் குவைகளைப் பார்த்ததில்லை. மந்தாகினிகூட அதன் இருப்பிடம் அறியாள். கதவும் அதைத் திறக்கும் சூட்சுமங்களும் யாரும் அறியார்.

'இவ்வாறு நான் கட்டிக்காத்த இந்த மணிக்குவைகளின் மேல் எப்படியோ வீடாணனுக்கு இச்சை பிறந்திருக்கிறது. அவன் அவற்றை அடையும் வழியை மட்டுமல்ல, அவற்றின் அளவும் அறிய மாட்டான். அதை அறிந்தவர் இரண்டே பேர்கள்தான். ஒன்று நான். மற்றது என் மாமன் மாரீசன். மாமனின் மறைவின் பின்பும் அதை அறிந்தவர் இருவர். ஒன்று நான். மற்றது....இந்த என் நட்பாளன் நாகன்.

'யுத்தம் வெற்றிக்கானது. வாகைசூடிக் களிப்பது ஒரு இன்பம் மட்டுமில்லை, ஒரு தேவையும். ஆனால் முடிவுகள் நினைப்பதற்கு மாறாக நடக்கவும் முடியும். அப்படி ஏதும் நடந்துவிட்டால் மந்தாகினி நாட்டைப் பராமரிப்பாள். அப்போது பாதாள நிலவறைக்கான சூட்சுமத்தை நாகன் மந்தாகினியிடம் தெரிவிக்க வேண்டும். மணிக்குவை லங்காபுரத்தினதுதான் எனினும், கட்டுக் காவலுடன் பாதுகாத்தால் மட்டுமே லங்காபுரத்தின் பெருமை எங்கெங்கும் விளங்கும். அதனால் என்போல் அதைக் கட்டிக்காத்து

தன் அடுத்த தலைமையாளிக்கு அதைக் கையளிக்கவேண்டியது மந்தாகினியின் கடமை.

'இதைச் சொல்வதற்காகவே இந்த இடத்துக்கு உங்களை நான் அழைத்துவந்தது. நாகன் யுத்தம் தொடங்க அதன் அதிர்வே தெரியாத இடத்துக்குப் போய்விடவேண்டும். முடிந்தால் நாகநாடு போ. யுத்தம் முடிய திரும்பி வா. முடிவு எதுவோ அதற்குத் தக நட. ஒன்று சொல்கிறேன் நன்றாக ஞாபகம் வைத்துக்கொள், நாகா. மந்தாகினிக்குத் தவிர, பாதாள அறையைத் திறக்கும் சூட்சுமம் வேறெவருக்கேனும் தெரியவரக் கூடாது. அப்படியொரு நிலைமை நேரின் நீயே உன் உயிரைப் பறித்தெடுத்துவிடு.'

யாரும் எதுவும் பேசவில்லை.

ராவணன் திரும்பி ஒருமுறை கீழ்த்திசை நோக்கினான். இருள் மெல்லியதாய் தன் இருப்புக்காட்டியது.

# முப்பத்து ஏழு

**வி**ருந்தினர்விடுதியில் அழகான விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்து தன் சுடரைப் பரக்க விரித்திருந்தது.

நாகன் பல்வேறு எண்ணங்களில் மூழ்கியிருந்தான். அவனுக்கு தன்மீது ஒரு தாங்கமுடியாத சுமை விழுந்துள்ளதாகவே உணரமுடிந்திருந்தது. ராவணன் மலைக்கோயிலில் பிறப்பித்த கட்டளைக்கு ஏறக்குறையச் சமமான ஒன்றுதான் சிலகாலங்களின் முன்னரும் அவன் மீது சுமத்தப்பட்டிருந்தது. தன் அளப்பரிய மணிக் குவைகள்பற்றி ராவணன் அவ்வப்போது நாகனுக்குச் சொல்லி யிருந்தான். எனினும், பாதாள அறைக்கே அழைத்துச்சென்று கண்மறைத்த அந்த வகைவகையான மணிக்குவைகளின் ஒளிப் பிரவாகத்தைப் பார்க்க வைத்ததில்லை. அந்தநாள் நாகனுக்கு இன்னும் மறக்காமலே இருந்தது.

அன்றிலிருந்து சற்றொப்ப ஓராண்டளவானதுதான் அந் நிகழ்வின் கால எல்லை. இருவரும் போதை கொஞ்சம்கொண்டதாக இருந்தது அந்தநாள். பல்வேறு விஷயங்களையும் பேசிக்கொண்டிருந்த நிலையில் திடீரென எழுந்து அரண்மனையின் உட்புறமாகச் செல்லத் தொடங்கி விட்டான் ராவணன். வா என்று சொல்ல பின்னால் தொடர்ந்தானே தவிர, எங்கேயென்றுகூட நாகன் கேட்கவில்லை. ஒரு இருளடர்ந்த சுவர்க்கரையை அடைந்தவன் அங்கேயிருந்த தீப்பந்தத்தை எடுத்துப் பிடித்தபடி சில விசைகளை அழுத்தி வாயில் உண்டாக்கிக்கொண்டு, கீழே தெரிந்த படிகளில் இறங்கத் தொடங்கினான். நாகனால் செய்யமுடிந்தது ராவணனைப் பின்தொடர்வது மட்டுமே.

தீப்பந்தச் சுடரொளியின் உதவியுடன் சிலபடிகளை அவர்கள் இறங்கிய பின் தீப்பந்தம் வேண்டாத அளவுக்குக் கீழேயிருந்து ஒளிப்பிரவாகம் அடிக்க ஆரம்பித்துவிட்டது. கீழே சென்றபின் நாகன் அசைவறுத்துச் சிலையாகிப் போனான். அந்த வியனுலகின் காட்சி

தனது கதைகள் காவும் பயணங்களுக்கான சன்மானமாகவே அப்போது நினைக்க முடிந்திருந்தது நாகனால். நன்றியில் நாவு மரத்துப்போயிற்று. பேச மறந்தவனை ராவணன்தான் அழைத்து அழைத்துப் பேசினான். வெளியே வந்தபின் ராவணன் சொன்னவை அவனை அதிரவைத்துவிட்டன. வீடாணனும், மந்தாகினியுமே அறிந்திராததும், மாரீசனும் ராவணனும் மட்டுமே அறிந்ததுமான அந்த பத்துத் தலைமுறைகளாய்ச் சேகரிக்கப்பட்ட மணிக்குவைகளின் இருப்பிட ரகசியத்தை அரண்மனை ஆளும் அரசகுல ஆளும் ஆகாத ஒருவரும் அறிந்திருத்தல் அவசியமென்று அவனை அந்த ரகசியப் பொறிமுறையை அறிந்திருக்க ராவணன் வற்புறுத்தியபோது நாகன் செய்வதும் சொல்வதும் அறியாது திகைத்தான். ஆனாலும் ராவணன் அதுமாதிரியான நொய்மையான தருணங்களிலும் ஒருவர்மறுப்பை விரும்பமாட்டான் எனத் தெரிந்திருந்தானாகையால் பேசாது பார்த்துக்கொண்டிருக்கச் செய்தான்.

மறுநாள் மாறுபாடுகொண்டு நாகன் அரண்மனையைவிட்டுப் புறப்பட்டபோது அவன் அவ்வாறு அணுக்கம் அறுத்து இருப்பதே நல்லது என்பதுபோலத்தான், அவனைத் தடுக்க ஆள்மூலமாகக்கூட முனையச் செய்யாது ராவணன் வாளாவிருந்திருப்பான் என்று அப்போது எண்ணினான் நாகன்.

எல்லாவற்றையும் நினைக்கிறபோது வீடாணனின் மனத்துக் கபடத்தை அன்றே ராவணன் அறிந்திருப்பான் என்றே பட்டது. அவன் செய்ததெல்லாம் ஓரளவில் முன்னேற்பாடுகளே.

போரில் தனக்கேதேனும் விரும்பத்தகாதது நிகழுமானால் பாதாள அறைகளைத் திறக்கும் பொறிமுறையை நாகன் மந்தாகினியிடம் மந்தாகினியிடம் மட்டுமே தெரிவிக்கவேண்டுமென்று ராவணன் சொன்னபோது, மந்தாதகினியின் உடம்பு மெல்ல நடுங்கியதை ராவணன்போல் நாகனும் காணவே செய்தான். அவன் நடுங்கா விட்டாலும் உள்ளதிர்ந்தான்.

எப்படியோ சண்டையொன்று நிச்சயமாயிற்று. இனி எதையும் தாங்கும் மனவலிமையோடு இருத்தலே தக்கது என நாகன் இறுதியாகத் தெளிந்தான். பின் ராவணன் படையோடு புறப்படும் நேரமாவது உணர்கையிலாக, சுதாரித்துக்கொண்டு எழுந்தான்.

அவன் அரண்மனை வந்தபோது அரசகுல சுற்றம் முழுவதும் நின்றிருந்தது. சித்தன், கதக்கண்ணன், சூர்ப்பாநகை, மந்தாகினி யெனவும், குலக்குழுத் தலைவர்களும், அப்பால் ஓரமாக விறைத்தவள்போல் ஒடுங்கியவளாய் வீடாணன் மனைவி எனவும் ஒரே கூட்டம்.

அவ்வளவு பெண்கள்; கூட்டத்தினரிடையிலும் மந்தாகினிதான் முக உணர்வுகள் தவிர்த்துப் பார்த்தால் ஜொலித்துக்கொண்டிருந்தது. அவள் கழுத்தில் அந்த அதிசய ஆபரணம் கிடந்து மினுங்கிக்கொண்டிருந்தது. முத்தலை தாங்கிய தாலி. அவள் அதை அதிகமாக அணிவதில்லை அல்லது அணிந்திருப்பதை பிறர்காண முடிவதில்லை. அன்று அந்தத் தாலி மங்கலகரமாய் அவளது கழுத்தில் மின்னிக்கொண்டு கிடந்தது.

அரச நிர்வாகத்தில் நேரடியாய் மந்தாகினிக்குப் பொறுப்பாக இருக்கப்போகும் குலக்குழுத் தலைவர்கள் சிலர்அவள் சமீபமாக நின்றிருந்தனர். முதிய அமைச்சனும் கூட நிற்கவே செய்தான்.

சொல்வனவெல்லாம் சொல்லப்பட்டு விடைபெறுதலெல்லாம் முடிந்த கணமாயிருந்தது அது. ராவணன், சித்தன், கதக்கண்ணன், சூர்ப்பநகை, அவள் தோழி கொண்டனாமிகை ஆகியோர்புறப்படும் தயார்நிலையில்.

அந்த இறுதிக் கணத்தில் ராவணன் பார்வை எவரையோ தேடியதுபோல் அலைபாய்ந்து படர்ந்தது. நாகன் முகம் காண நின்று சில கணப்பொழுதுகள் அதில் நிலைத்தது.

அவை என்ன பேசின. நாகனது கண்களும் அவை விளங்கியது போல் கலங்கி ஏதோ சேதியுரைத்தனவாய் உணர்வு வெளிச்சம் அடித்தன. ராவணன் முகம் ஒரு நம்பிக்கையின் மலர்ச்சி காட்டியது. அவ்வளவுதான். அவன் அப்பால் நகர்ந்தான்.

ராவணனும் பிறரும் அரண்மனை முன்றிலுக்கு வரவும் காத்திருந்த கூட்டம் வெல்க! வெல்க! வெல்க தலைவா! என்று களிக்குரல் எடுத்தது. வானமெடுத்த குரலாய் திசையெல்லாம் பரந்தது அவ்வொலி.

வீடாணன் பக்கம் சேராத கீழைப் படைவீட்டைச் சேர்ந்த பயிற்றப்பட்ட மறவர்களும், படைகளாகிய குடிமக்களும் ஏற்கனவே லங்காபுரத்தின் மேலைக் கரைக்கு அனுப்பப்பட்டுவிட்டதனால் வயதானவர், அங்கஹீனர், பெண்கள் குழந்தைகள் மட்டுமே அரண்மனை முன்னால் நிறைந்து நின்றிருந்தனர். அரசனுடன் செல்வதற்கான ஒரு படை முன்னணியில் பரபரத்துக்கொண்டும், மாளிகைக் காவலுக்கான ஒரு சிறிய ஆயுததாரிகளான இயக்க இன ஆண்கள் கூட்டம் பின்னணியில் உறைந்தும் தயாராயிருந்தன.

ராவணன் சென்று விசைத் தேரில் ஏறினான். கூட சித்தன். கதக்கண்ணன் ஒரு புரவியில் ஏறினான். சூர்ப்பநகை தன் தோழி கொண்டனாமிகையுடன் சென்று ஒரு தேரில் ஏறினாள். இன்னும் மீதமிருந்த உறவுகள் அவரவர்க்கான 'ஊர்திகளில் ஏறின.

ராவணன் தேர்நகரத் தொடங்க, புறப்பாடு செவ்வனவாய்த் தொடர்ந்தது. மெல்ல நகர்ந்த படை சிறிதுநேரத்தில் கோட்டை வாசலை அணுகியது. பின்னர் அதையும் கடந்து விசாலமான பாதையில் விரையத் தொடங்கியது.

கோட்டைக் கதவுகள் இழுத்து மூடப்பட்டன.

ஆரவாரமெல்லாம் அடங்க நாகன் அரண்மனை வாசலையடைந்தான். மந்தாகினியும் தோழியரும் நின்றிருந்தனர். தலையசைப்பில் மந்தாகினியிடம் விடைபெற்ற நாகன் விருந்தினர் விடுதியைநோக்கித் திரும்பினான்.

இனி அவளை அவன் சந்திக்க நேராது. காலையில் அவன் பயணம் தொடங்குவானானால் இனி போரின் பின்னேதான் எல்லாம். அதை மந்தாகினியும் உணர்ந்ததாகவே தெரிந்தது. அவன் பிரிவில் அவ்வளவு நெகிழ்ச்சி காட்டி அவள் எப்போதும் முகம் கனிந்திருந்ததில்லை என்பது நாகனுக்கு ஞாபகமாகியது.

அன்றிரவு விருந்தினர்விடுதியில் படுத்துறங்கிய நாகன் அதிகாலையில் புலரியின் முன்னமே கண்விழித்தான். கோட்டைக் கதவுகள் அப்போது திறந்திருக்கா. ஆனாலும் அவனைத் தெரிந்த கோட்டைக் காவலனானால் கண்டதுமே வழிதிறந்து விடுவான்.

அரச குலத்தான்போல அரண்மனை வந்தான். அப்போது ஒரு நெடுந்தொலைவுப் பயணிபோல் கைக்கோல், மேல்துண்டு, தோல்பை சகிதம் தன் நடையைத் தொடங்கினான்.

நாகன் எதிர்பார்த்தபடியே கோட்டைக் காவலன் நாகனைக் கண்டதும் வாசலின் ஆள் புகு கதவினை உடனேயே திறந்துவிட்டான். நாகன் கோட்டையின் வெளியில் காலடி பதித்தான்.

இரவு நெடுநேரம் விழித்திருந்ததனால்போலும் தலைநகர்இன்னும் பாதி உறக்கத்தில் இருந்தது. அந்தநேரத்தில் களிமாக்களையாவது காணக்கூடியதாய் இருக்கும் முந்திய நாட்களில். அப்போது பார்வையில் மனித நடமாட்டமே அற்றுப்போய்க் கிடந்தது. பரத்தையர்சேரி களைப்புற்று இருக்கவில்லையெனினும் உறக்கத்தில் அடங்கித்தான் கிடந்தது. காகங்களெல்;லாம் ஏதோ வெறிகொண்டன போல் ஒரே கத்தலாகக் கத்தியபடி மேற்றிசைநோக்கிப் பறக்கத் தொடங்கியிருந்தன.

யுத்த அவலங்களின் முதல் காட்சியாய் அதை நினைத்தான் நாகன். கையும் காலும் கண்ணும் தொடையும் குடரும் குருதியும் சுவைக்க மீதமான நரமாமிச பட்சணிகளும் பாலைவெளியில் குவியத் தொடங்கிவிடும். இரு நாட்டுப் பறவைகளின் தொகையில்

பாலைவெளியின் இருகரை மரங்களின் கிளைகளும் கொள்ளாது முறியப்போகின்றன. அது கேட்டு வனத்தின் ஏனைய பட்சிகள் மிருகங்கள் மருண்டு ஓடப்போகின்றன.

அவன் அவையெல்லாம் காண அங்கே இருக்கமாட்டான்தான். வியாழியையும் அழைத்துக்கொண்டு நாகநாடு போவதே அவனது எண்ணமாகவிருந்தது.

அன்று வெய்யில் மந்தமாக இருந்தது. நடையில் களைப்புத் தெரியவில்லை. அது வெயிலாயிருந்து களைப்புத் தெரிந்திருந்தாலும் அவன் தாமதித்திருக்கமாட்டான். ராவண ரகசியத்தைக் காப்பாற்ற அவன் அந்த நிலம்விட்டு விலகியே இருக்கவேண்டும். விரும்பிய நிலத்தைவிட்டு நீங்கியிருத்தலென்பதும் ஒரு கொடுமைதானே.

ஒருபோது பின்னே திரும்பிய நாகனின் பார்வையில் லங்காபுரக் கோட்டை உச்சியில் வாளரக் கொடி பறந்துகொண்டிருப்பது பட்டது. என்றோ ஒருநாள் அது தன்னை போ! போ! எனச் சொல்லிப் பறப்பதாய் உருவகமாகியமை ஞாபகமாகியது நாகனுக்கு.

# முப்பத்தெட்டு

பல்வேறு பருவங்களிலும், பல்வேறு நாடுகளின் சீதோஷ்ணங் களிலும் பயணியாய் இருந்தவன் நாகன். அவனாலேயே அந்தக் காலநிலையைப் பொறுக்க முடியாதிருந்தது. மேலெங்கும் வியர்வை ஒழுகி, வழித் தூசிகள் படிந்து.. நடை முன்புகள்போல் இருக்கவில்லை.

ஆனாலும் இடைத்தங்கிவிடாது தொடர்ந்து நடந்து கொண்டிருந்தான்.

வரலாம், இதோ வரப்போகின்றது என்றிருந்த யுத்தம் இறுதியாக வந்தேவிட்டது. நாளைய பகலில், ஒருவேளை அன்றைய பகலிலேகூட, மேற்றிசைப் பாலைவெளியில் ராவண சேனைக்கும், தொலைதூர நாடொன்றின் இளவரசர்களின் சேனைக்கும் இடையே சண்டை தொடங்கியிருக்க முடியும். அது காரணமாய் எழுந்த புழுதிப் படலமாயும் அது இருக்கலாம்தான்.

ஆனால் யுத்தமென்பது அவ்வாறான நிறுதிட்டங்கள் இட்டுக்கொண்டு தொடங்குவதில்லையே. அணுகியணுகி, மிகவும் அணித்தாய் அண்மித்து, நேர்முன் நிற்போர் யாரென்பது அறிந்து, எதிரிப்படையின் அளவறிந்து, அப்படையின் வலிவறிந்து, வரவேண்டிய உதவிகள் யாவும் வந்து சேர்ந்துவிட்டனவா என்பதறிந்து கொண்டுதான் அதுவரைகாலத்தில் எந்த யுத்தமும் நடந்திருந்தது. இதுவும் அவைமாதிரித் தவிர வேறுமாதிரி நடந்துவிட ஏது ஏதுமில்லை.

நாகனின் நடை மாலைவேளையாக இதமாக இருந்தது.

வனம் வரண்டிருந்தாலும் பசுமை ஆங்காங்கே இருக்கத்தான் செய்தது. அது பார்க்கப்போனால் முதுவேனில் காலம். சருகுகள் பறந்துகொண்டிருந்தன எங்கும். தூசி காற்றின் மேனியெங்கும் நிறைந்திருந்தது. அது கண்ட கண்ட இடங்களிலெல்லாம் தன் கைவரிசை காட்டிச் சென்றுகொண்டிருந்தது.

பொறுப்புகளினால் அவன் பாரமாகி, இயக்கம் குறைந்துபோனான் எனினும், மனத்திடமழிந்து போகவில்லை. வயதின் வலிந்திமுப்பை அழுத்திக்கொண்டு அவன் நிதானமாய் நடந்துகொண்டிருந்தான்.

அன்றைய நாளின் மாலை கழிந்து இருள்விழுந்த சிறிது நேரத்தில் நாகனால் வியாழியின் குடிலை அடையமுடிந்திருந்தது.

குடிலும் உறங்கிக்கொண்டிருந்ததுபோல்தான், நிசப்தம் அதனிலிருந்து கிளர்ந்துகொண்டிருந்தது. வியாழி தூங்கிக் கொண்டிருந்தாலும் அவளை அழைத்து எழுப்பவேண்டியதில்லை. குடிசையை சற்று பலமான கால்அழுத்தங்களால் நெருங்கினாலே அவள் எழுந்துவிடக்கூடியவள்.

நாகன் பாதங்களை அழுந்தவைத்து நடந்து குடிலை நெருங்கினான். 'நாகரே!' பக்கத்து யாவறணை மர இருளிலிருந்து அழைப்பு எழுந்தது.

வியாழிதான். தூங்காமலிருந்தாள். இன்னுமேன் அவ்வண்ணம். நாகன் நூதனமாய் அதை எண்ணியவாறே மரஇருளை அடைந்தான். 'வியாழி, இன்னுமாய் உறங்காமலிருக்கிறாய்.'

படுத்திருந்தவள் எழுந்தமர்ந்தாள். கரிய மலைகளாய் மாரப்பிக்கிடந்தன முலைகள். வழிந்திருந்த தோலாடையை எடுத்து நெஞ்சகம் மறையும்படியாய்ப் போட்டுக்கொண்டு பாய்ந்து அவனது கால்களைக் கட்டிக்கொண்டாள் வியாழி. பின் சொன்னாள்: 'கண்மூடிக் கிடந்திருந்தேன். தூக்கம் எப்படி வரும். நெருநல் காலையில் விரைப்புரவியில் பிரான் என்ற கல்தச்சன் வந்து அழைக்கப் போனீர். அன்றே ராவணப் படை யுத்தத்துக்காய் மேற்கெல்லை புறப்பட்டது. சண்டை முடியும்வரை நீரும் அரண்மனையிலேயே தங்கியிருப்பீரா, அல்லது சண்டைக் களத்துக்கே போவீரா என்பதொன்றும் தெரியவில்லை. மட்டுமா..'

'வேறென்ன.'

'மகனையும் சண்டைக்கு அனுப்பிவிட்டேன்.'

நாகன் குந்தியமர்ந்தான். அவளை வாரி எடுத்து மடியில் போட்டான். 'அவனையா. அவன் பேசக்கூட மாட்டானே.'

'அவன் பேசமாட்டவதன்தான். அதனாலென்ன. அவன் பலம் எந்தக் காட்டுவாசிக்கு இருக்கிறது. அவன் குறி யாருக்கு வரும். என் அம்புகளையும் வில்லையும் கொடுத்துப் போய்வா என்றுவிட்டேன்.'

'விருப்பத்துடனும் மகிழ்வுடனும்தான் போனானா.'

'வேறென்ன. நான் அவ்வாறு அனுப்பியிருக்காவிட்டால்தான் அவனுக்கு வருத்தமாய் இருந்திருக்கும். காட்டிலே அவ்வாறு பலபேர் தானும் தானும் என்று கூறிக்கொண்டுதானே படையின் பின்னால் ஓடினார்கள்.'

'அவ்வாறு நிறையப் பேர் சென்றார்களா.'

'எப்படியான படை! சொன்னால் நம்புவதே கடினம். ஆனாலும்..'

'ஆனால் என்ன.'

'அது என் மகன் கொண்டுசென்ற அளவுகூட எந்த ஆயுதமும் இல்லாத கூட்டமாய் இருந்தது. கல்லாயுதங்களும், மர உலக்கைகளும் எதை ஒரு பெரிய சண்டையில் செய்யமுடியும். எதிரிகளிடம் அதைவிட வலியதும் கொடியதுமான ஆயுதங்கள் இருக்குமோ.'

வியாழியின் உண்மையான கவலையின் மையம் கண்டான் நாகன். தன்னைப் பற்றிக்கூட அல்ல, தன் மகனைப்பற்றிக்கூடவும் அல்ல, தன் நாடும், தன் மக்களும், தன் தலைவனும் பற்றிய கவலையே வியாழி கொண்டிருக்கிறாள். நாகன் அவளைத் தேற்றும்முகத்தான் பின்வருமாறு கூறினான்: 'அவர்களிடமும் இவைபோன்ற ஆயுதங்களே இருக்கமுடியும். ராவண வாள்போல, கதக்கண்ணன் வாள்போல, சித்தன் அம்புகள்போல் அவர்களிடம் இருக்கலாம். ஆனால் அவை சொற்பமாகவே இருக்கமுடியும்.'

'உண்மைதான். எல்லார்க்கும் அவ் வன்போர்க் கருவிகள் சாத்தியமில்லைத்தான்' என்று மனதடங்கி எழுந்தமர்ந்தவள், சிறிதுநேரத்தில் கேட்டாள்: 'வீடாணரும் அவருடன் சென்றுவிட்ட கீழ்த்திசைப் படையும் நம் படைக்குப் பாதகம்தானே.'

ராவணனிடமே அம்மாதிரியான ஒரு சிறிய பயம், நாகன் முதல்நாள் மாலை மலைக்கோட்டைக் கோவில் சென்றிருந்தபோது வணக்கத்தின் பின்னான பேச்சில் இழையோடியிருந்ததை அப்போது இரகசியமாய் நினைத்துப் பார்த்தான்.

அவனிடமே அதுகுறித்து ஒரு சிறிய அச்சம் இருந்ததுதான். ஆனாலும் அதைச் சொல்லி வியாழியைக் கலவரப்படுத்துவதில் எந்த அர்த்தமுமில்லை. நாகன் தெளிந்துகொண்டு சொன்னான்: 'அந்த எண்ணத்தை இப்போதே அழித்துவிடு, வியாழி. கீழ்திசைப் படை வீட்டில் வீடாணருடன் ஓடிப்போன படை ஒரு சிறிய அளவானது. அதுமட்டுமா. அவர்களும் இதுவரை எதிரிப்படைகளுடன் சேர்ந்து கொண்டதற்கான எந்த அறிகுறியும் இல்லை. லங்காபுரத்தின் கிழக்கெல்லைக் காட்டுக்குள்ளேதான் இன்னும் சுற்றி

அலைந்துகொண்டிருக்கக் கூடும். அதைப்பற்றி நாம் கவலைப் படவேண்டியதில்லை.'

'அப்படியானால் ராவணருக்குத்தானே சண்டையில் வெற்றி வரப்போகிறது.'

'திண்ணமாக.'

வியாழி வீறுகொள்ளவென நாகன் கைகளை விலக்கினான். வியாழியும் எழுந்தமர்ந்து தன்னில் ஆவல் பொங்குவதை அவன் காணும்படிக்கு மேலாடை நழுவவிட்டாள்.

நாகனின் கண்களுக்கு அவளை அந்த இருளினுள்ளும் கருமையாய்க் காணமுடிந்திருந்தது. அவளது பலம்பெறுதல் மெல்ல நடைபெற, அப் பலத்துக்கு ஆட்படுதலாய் நாகனின் ஆண்மை இடம் கொடுத்துக்கொண்டு சென்றது. நகை, அழுகை, இழிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம் என்று எந்த மெய்ப்பாடுதான் காமத்தில் அழிவடைவதில்லை. அவர்கள் தம் மனப்பாரமெல்லாம் அழிந்தனர்.

தமது வாழ்வின் ஒரு படலத்து இறுதி நேரப்போவதுபோல் வேகவேகமாயும், உக்கிரமாயும் அவர்கள் இயங்கி ஓய்வடைந்த காலை, விடியலில் காணும் வெள;ளி கிழக்கில் பு+த்திருந்தது.

நாகன் மெல்ல எழுந்தமர்ந்தான். 'வியாழி, கிளம்பு' என்றான்.

வியாழி அதிசயம் மேவினாள். 'எங்கே.'

'நாம் நாகநாடு செல்கிறோம்.'

'சண்டைக்குப் பயந்தா. அது எங்கோ நடக்கிறது..'

நாகன் ஒரு சின்னச் சிரிப்பொலி கிளர்த்திவிட்டு, 'சண்டையிலிருந்து ஒன்றைக் காப்பாற்ற' என்றான்.

சிரிப்பாய் இருக்கச் செய்யப்பட்டதெனினும் அது உண்மையில் ஆழ்துயரத்தின் எறியம் கொண்டிருந்ததென்பது வியாழிக்குத் தெரிந்தது.

# முப்பத்தொன்பது

எல்லி கீழைத் திக்கில் எழுந்தது, மேலைத் திக்கில் மறைந்தது. காற்று அவ்வப்போது வடபகுதியின் நேரெழுந்து வளர்ந்த மரக் கூடல்களை ஊடறுத்து ஊழையிட்டு விரைந்தது. மேலே புகார்கள் அசைந்து நகர்ந்தன. இரவில் விண்மீன்களும், நிலாவும் வெளிச்சமிட்டன. எல் கதிரில் தாமரைகள் மலர்வதும், அல் ஒளியில் முல்லைகள் விரிவதும் செய்தன. இயற்கையின் இயக்கத்தில் எந்த மாற்றமும் இல்லை.

நாகநாடும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்ததுபோல்தான் பரபரப் பாகவும், திகில்கொண்டதாகவும் வாழ்வின் சமநிலை இழந்து இருந்து கொண்டிருந்தது, நாகனும், வியாழியும், குழந்தையுமாய்ச் சென்ற சமயத்தில். பசி வீதிகளிலும், வீடுகளிலும் விரவிக் கிடந்தது.

நாக அரசின் ஒரு பகுதி படைவீரர்கள் போரில் ராவணனுக்கு உதவியாகச் சென்றிருந்ததை அங்கு சென்ற பின்னர் நாகன் தெரிந்தான். அத்தகு தருணத்தில் தேவையான உணவுப் பண்டங்களில் ஒருபகுதியேனும் அங்கிருந்து யுத்தத்தில் ஈடுபட்டிருந்த வீரருக்காய்ச் சென்றுகொண்டிருத்தல் நிகழ்வதும் தவிர்க்கவியலாததே. நாகநாட்டின் இயல்பிழப்பின் காரணம் புரிந்தது.

நாகனை அறிந்தவர்களாகவும், நாகன் அறிந்தவர்களாகவும் இன்னும் பலர் அங்கே இருக்கத்தான் செய்தார்கள். ஆனாலும் நாகன் அவர்களையெல்லாம் காணவோ, அவர்கள் உதவிபெற்று போர் முடியும்வரை அங்கே தங்கியிருக்கும் ஏற்பாட்டைச் செய்யவோ எண்ணங்கொண்டிருக்கவில்லை.

நாடு குழம்பியிருந்த காரணம் ஒன்றாய், தானே குழம்பியிருந்த காரணம் இன்னொன்றாக அவன் அந்தரம் கொண்டிருந்தான்.

நாகநாடு ஒப்பீட்டளவில் லங்காபுரத்தைவிட மிகச் சிறிய பரப்புக்கொண்ட பூமியாகவிருந்தது. மக்களும் லங்காபுர வாசிகளைப்போல் வேற்றுக் குடிகளை, இனத்தாரை ஒத்துப்போகும் மனநிலையுள்ளவராய் இருக்கவில்லை. வியாழி, நாகன் மீது அளப்பரிய நம்பிக்கையைக் கொண்டிருந்திருப்பினும், உள்ளுள்ளே ஒரு கலக்கத்தைக் புஃண்டிருக்கவே செய்தாள். அவள் குழந்தைவேறு மொழி மாறுபாட்டின் புரியாமைகளில் குழப்பம் கொண்டிருந்தது.

அதனால் நாகநாட்டிலும் நீண்ட நாள்கள் அவர்கள் தங்கவில்லை. திரும்ப லங்காபுரத்தின் மலைவாழுநர் பகுதிக்கு வந்தார்கள். பிறகு அங்கிருந்து அதன் அடர்ந்த வனப் பகுதிக்குப் பயணப்பட்டனர். அங்கிருந்து குளிர்மலைப் பகுதி சென்று சீத்தாப் பெண்ணாள் வைக்கப்பட்டிருந்தஉயர்மலைப்பகுதிக்கும் ஏறினர். அப்போதும் தீராத் தாகம்கொண்டதுபோல் அலைவே இறுதியானமுடிவாக இருவர் மனத்திலும் தோன்றிக்கொண்டிருந்தது. மீண்டும் நாகநாட்டுக்கும், மலைவாழ்நர் பகுதிக்கும், வனத்துக்குமாய் அலைவுற்றனர். அதிக சிறார்களைக் கொண்டிருந்த மலைக் குடிகள் ஒன்றுடன் தன் மகளைவிட்டுவிட்டு தனியே நாகனுடன் வியாழி புறப்பட்டது அப்போதுதான் நடந்தது.

ஒருபோது நாகனுக்கே மீள ஒரு யோசனை வந்தது, தான் மறுபடி பயணியாய்ப் புறப்பட்டாலென்னவென. பயணியாய் இருத்தல் சுகமானது. காதைகள் காவுதல் அதைவிட இனிமையானது. நிகழ்வுகளைச் சுமந்துவருதல் இன்னுமின்னும் அர்த்தமானது. அதைப் பகிர்தலோ சுகமும் கர்வமும் கொண்டது. ஆட்சியின் அசைவியக் கத்துக்கு அவசியமானது. ஆனால் அதுதான் அப்போது நடந்து கொண்டிருந்த போரின் வேராய் அமைந்தது என்பதை நினைக்க நாகன் நடுங்கினான். சீத்தாப் பெண்ணல்ல, தானே அப்போரின் காரணமென அவனை எதுவோ உந்தியுந்தி நம்பவைத்துக் கொண்டிருந்தது.

சீதை பற்றிய தகவலறிந்து தான் வந்த வேகமென்ன, வரும் வழியில் தான் அனுபவித்த உற்பாதங்கள் என்ன, தலைநகர் புகும் தறுவாயில்கூட கோட்டையின் உச்சியில் பறந்துகொண்டிருந்த வாளரவக் கொடி 'போ..போ..' எனப்போல்தான் புகன்றதாய்ப் பட்டது. இருந்தும் அவன் யோசனையோடு செயல்படவில்லை. அன்றைய அச் செலவை அவன் தவிர்த்திருக்கவேண்டுமென்று பட்டது. எல்லாவற்றையும் மறக்கவே ஏதாவது திக்கு ஒன்று நோக்கி புறப்பாட்டைச் செய்யவேண்டும்போல் மனம் அவதிப்பட்டது.

ஒரு தருணம் கீழ்த்திசை அவனது குறியாகவிருந்தது. எல்லியெழும் கடல் தாண்டிய நிலப்பரப்பு போய், அங்கு வாழும் மனிதர்களின் மொழியும், வழிபாடும், உணவுப்பாடுகளும்பற்றி அறிவதோடு ஆயுதமும், சண்டைகளும், அவர்களது சண்டைக் காரணங்களும்கூட அறிந்து வருவதை அவன் இச்சித்துக்கொண்டிருந்தான். ராவணனிடம் கூட அதுபற்றி அவன் கதைத்திருந்தான். ஆனால் அது நடைப் பயணம் மட்டுமானதாய் இருக்காது. நாவாய்களையும் கட்டு மரங்களையும்கூட அவன் பயணப் புணையாய்க் கொள்ளவேண்டி நேரும். அது அவனது பயணமுறையில்லை.

யுத்தம் நடந்துகொண்டிருந்தமை பார்வையின் வெளியில் தெரிந்தது. மழை காலத்திலும் அது தொடர்ந்து கொண்டிருந்ததாகவே அவர்கள் அறிந்துகொண்டிருந்தனர். அக்காலத்தில் பாலைவெளியின் இருகரைகளில் ஏதோவொன்றில் அது நடந்ததாம். அடை மழைக்காலத்தில் யுத்தம் நிறுத்தப்பட்டிருக்கக் கூடும்தான். அது சின்னாட்களுக்கானதாகவே இருக்கமுடியும்.

யுத்தம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தவகையில் ராவணன் நிலைமைபற்றி நம்பிக்கைப்பட முடிந்திருந்தது.

ராவணன் சிவன் பக்தன். சிவன்போல் கருமேனியன். சிவன்போல் உறுதியானவன். அவன்போல் இறுதியற்றவன். மலைக்கோயிலில் எழுப்பப்பட்டுள்ள சிவனது கம்பீரம் நாகனென்ன, பலரும் அறிந்தது.

மற்றவர்களுக்கு என்ன நடந்ததென்பதுதான் நாகனுக்குத் தெரியவேண்டியிருந்தது.

லங்காபுரத்தின் வடமேல் மூலையிலுள்ள சிறுமலைப் பகுதியில் அலைந்தகாலை பிரானைச் சந்திக்கமுடியுமோவென நாகன் ஆசைப் பட்டான். ஒன்று அவனோடு தங்குவதில் காலத்தைச் சுலபமாகக் கழிக்க முடியும். இரண்டு, அவன் யுத்த நிலவரங்களை அவ்வப்போது தெரிந்துகொள்ளும் சாத்தியம் கொண்டவன். ஆனால் வாய்ப்பற்றுப் போனான் நாகன். பிரானைக் கண்டதாய்க்கூட, விசாரித்த வேளை களில், யாரிடமிருந்தும் தகவல் கிடைக்கவில்லை.

தலைநகர் சென்றால் நிலைமையினை அறிய முடியும்தான். ஆனால் நாகனுக்கு அந்த எண்ணம் நிச்சயமாக ஏற்படாது. அது ராவண ஆக்ஞை. போரின் முடிவுவரை அவன் யாருமறியாது நகர்ந்து கொண்டிருக்கக் கேட்கப்பட்டவன். மந்தாகினிகூட அதை விரும்பமாட்டாள். அவள் ராவண ஆகர்'த்துக்குள் அப்போது பு+ரணமாக வந்துவிட்டிருந்தாள். அவள் இனி ராவணனாகவே சிந்திப்பதும், இயங்குவதும் செய்வாள். ராவணன் மலைக்கோயிலில் சொன்னதுபோல் போரில் அவனுக்கு ஏதாவது உயிரூறு நிகழுமானால்

லங்காபுரத்தின் தலைவியாய்த் தவிசேறுபவள் அவளாகவே இருப்பாள். அதற்கு அவள் தகுதியானவளும்தான். அப்போதுதான் அவன் அவளைச் சந்திப்பான். சந்திக்கவும் வேண்டும்.

போர்முகத்திலிருந்து நகருக்கு வந்து, திரும்பி மறுபடி போருக்குப் போய்க்கொண்டிருந்த சிலரை ஒருபோது நாகன் எதிர்ப்பட்டான். கலகலவெனச் சிரித்து, திமிறும் தோள்களும் மார்புகளுமாய் போர் உத்வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தார்கள். நிறுத்தி, போர்முனையின் நிலைமைபற்றி விசாரித்தபோது அவர்கள் சொன்னார்கள், மழை கார்காலம் முடிந்தும் சிறிதுகாலம் தொடர்ந்து பெய்துகொண்டிருக்குமானால் வெற்றி ராவணேசருக்கே என.

மழை அவர்களின் தாய் என அவன் அறிந்திருந்தான்தான். மழையெனில் இயக்க இனம் இன்னுமின்னும் வலிமைபெறும். இன்னுமின்னும் வீறுபெறும்.

திரும்ப நாகன் மலைப்பகுதி சென்றபோது, என்றுமில்லாதவாறான தொகையில் ஜனங்கள் பெருகியிருந்தார்கள். யுத்தம் அப்போது இரண்டு கரைகளிலும் நடப்பதாயும், வெளியாய்க் கிடந்த பகுதியில் வீழ்ந்த பிணங்கள் மழையில் அழுகி கெட்டவாடை அடித்துக் கொண்டிருப்பதாகவும் நாகனின் விசாரிப்புக்குப் பதில் சொன்னார்கள் சிலர்.

போரின் அவலங்களை அவன் அறிந்திருந்தான்தான். அந்த நிலப்பரப்பில் ஒரு போர் எவ்வண்ணம் நடைபெறக்கூடுமென அவனால் எண்ணிப்பார்க்க முடியும். மாரிக்கு முன்னான காலங்களில் தங்கள் தங்கள் பகுதி வீரர்களை யுத்த ஓய்வின்போது புதைக்க முடிந்திருக்கும். ஆனால் மழையின் நீரைத் தேக்கி சதுப்பாகிவிடும் மண்பாங்குடைய பாலைவெளியிலே மாரிகாலத்தில் புதைப்பு முடிவதாய் இருந்திருக்காது. வீழ்ந்த பிணங்கள் நாற்றமெடுக்கத் தொடங்கும். கூட ஏற்கனவே ஆழமற்றுப் புதைக்கப்பட்ட பிணங்களும் அழுகத் தொடங்கிவிடும். காற்று அடிக்கும் தொலைவுக்கு குடல் அறுந்துவிடும்படியான வீச்சம் எழுந்து, எல்லையிலுள்ள கிராமங்களை வெறுமைபண்ணிவிடும். யுத்த காலத்தின் மரண பயமல்ல, பலரை அதுமாதிரியான அவலங்களின் பயமே தத்தம் கிராமங்களை நீங்கச்செய்திருக்கிறது. பசி அடுத்ததாய். பயம் மூன்றாம்பட்சம்தான்.

அங்கேதான் லங்காபுர படைத் தரப்பின் சில இழப்புகளை அவன் அறிந்தது. மனம் விண்டது. ஆனாலும் வியாழி அறியாவண்ணம் தன் மனத்துள்ளேயே அவற்றைப் பூட்டிவைத்துவிட்டான் நாகன்.

நாகனும் வியாழியும் தொடர்ந்து பயணத்திலேயே இருந்தனர். ஆனாலும் ஏதோ வேளையில் தம் காமத்தின் கனல் குறைக்கவும் அவர்களுக்குப் போது இருந்துகொண்டிருந்தது.

நாகன் ஓடும் முயல்களை தன் கைக்கம்பைச் சுழற்றி வீசியே வீழ்த்தி வியாழிக்கு வித்தைகள் காட்டினான். அந்த வலிமையில் கண் சிவந்து அவள் தலை கிறுகிறுப்பாள், சிறக்கண் நகைப்புடன். முயல் உணவாகும் அவர்களுக்கு. கனியும், கிழங்கும், ஒருவகை வேரும், நறலும் என அவ்வப்போது உண்ணவும் கிடைத்தன.

இருந்தாலும் நாகன் களைத்துப்போனான். பதினெட்டுத் திங்கள்கள் பறந்துவிட்டிருந்தன யுத்தம் தொடங்கி. காலம் விரைவாக அவ்வாறு கடந்ததை தன் வாழ்வில் நாகன் என்றும் கண்டிருக்க வில்லை.

வியாழியே மாறிப்போயிருந்தாள். தன் இன அடையாளங்களான குணங்கள் பல அவளிடத்தில் மறந்துபோயிருந்தன. உருவ அடையாளங்களையும் அவள் இழக்க ஆரம்பித்திருந்தாள்.

நாகனும், வியாழியும் காட்டிடையில் பெரும்பொந்து கொண்டிருந்த ஒரு மரத்தினடியைத் தம் இருப்பிடமாய்க் கழித்துக்கொண்டிருந்த ஒருநாள்.

அது மதியநேரமாக இருந்தது. கார்காலம் முடிந்து வந்த முன்பனியின் உறைத்த வெய்யில் அடித்துக்கொண்டிருந்தும், வெய்யில் வெளிச்சமளவிலேயே அவ்வனத்தை ஊடறுத்திருந்தது. நிழல் இதம்செய்தது. மறைந்து ஓடிக்கொண்டிருந்த ஒரு ஆற்றின் சலசலப்பு அவ்வப்போது கேட்டது. கான்யாறும் காலவோட்டத்தில் நீட்டிப் பிக்கவோ, அகலிக்கவோ செய்யுமோ. நாகன் அதிசயித்தான்.

அப்போது எங்கோ ஆள்காட்டிப் பறவையொன்று கூய்கூயெனக் கூவியது. மனித அரவத்தினை புள் கண்டுகொண்டதன் அடையாளம் அது. சாய்ந்து படுத்திருந்த நாகன் நிமிர்ந்தமர்ந்தான். மனித ஊசாட்டத்தின் திசையை உன்னித்தறிய முயன்றான். ஆள்காட்டியின் கிரீச்சிடல் ஒன்றும் சாதாரண சமயங்களில் இயல்பலாதது அல்ல. ஆனால், போர்க் காலத்தில் முக்கியமானது. எந்தச் சத்தமுமே தன்னுள்ளே ஒரு இரகசியத்தை அல்லது பயங்கரத்தைக் கொண்டிருத்தல் கூடும்.

திடீரென கானத்துப் பறவைகளெல்லாம் அல்லோலகல்லோலப் பட்டு வானத்தில் எழுந்து கிரீச்சிட்டுப் பதறியடித்தன. துடித்தெழுந்தான் நாகன். காரணம் புரியாது மருண்டான். அச்சத்தின் ஒரு கீறு அவனுள் விழுந்தது.

எட்ட நின்றிருந்த வியாழியும் சூழ்நிலை மாற்றத்தில் அதிர்ச்சியும், மிரட்சியும் அடைந்தவளாய் நாகனை அணுகினாள்.

ஒரு பயணியும், ஒரு காட்டுவாசியுமாய் காலம்பூராவுமிருந்த அவ்விருவருமே காரணம் புரியாது திகைத்து ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு நின்றிருந்தனர்.

சிறிதுநேரத்தில் மனிதக் கூக்குரல்கள் மெதுமெதுவாய் எழுந்தன. சிலவாகியவை பலபலவாய்ப் பின் விரிந்தன. விரிந்தெழுந்து வனத்துள் மறைந்தன. மறைந்த குரல்களைத் துரத்தும் குரல்களாய்ப் பின்னால் சில அதிர்ந்தெழுந்தன. இவ்வாறு ஓடுவதும் துரத்துவதுமான குரல்கள். எழுவதும் மறைவதுமாய் அவை தொடர்ந்து கொண்டிருந்தன.

நாகன் நிலைமையைப் புரிந்துகொண்டான். 'அய்யோ, நட்பாளா' எனப் பிதற்றினான். பின், 'உனக்கா இந்தக் கதி' என உறைந்தான்.

'என்ன நடந்தது, என்ன நடந்தது' என வியாழி அவனை உசுப்பினாள்.

'நாம் தோற்றுவிட்டோம், வியாழி.'

'எப்படி...'

'தோற்றோடும் லங்காபுரப் படைகளின் அவல ஒலிதான் நாம் கேட்பது.'

'அப்படியானால் நம் தலைவர்...?'

'அவனும் முடிந்திருப்பான். அவனது இறுதி நேராமல் லங்காபுரப் படை தோல்வியை அடைந்திராது.'

'கதக்கண்ணன்...சூர்ப்பாநகை...?'

'அவர்கள் ஏற்கனவே முடிந்துபோயினர்.'

'தெரிந்திருந்தீரா. சொல்லவேயில்லை என்னிடம். அப்படியானால் சித்தன்...?'

'சித்தனும்தான் முன்பே மாண்டுபோனான்.' வியாழி ஏதோ கேட்க உந்துகையில் நாகப் பிரலாபம் தடுத்தது. 'எல்லாம் அழிந்தது. எல்லாம் முடிந்தது. லங்காபுரமும் தொலைந்தது' என்று தடாலென நிலத்தில் விழுந்தான் நாகன். பின்னால் அவனிடமிருந்து எந்தப் புலம்பலும் எழவில்லை.

# நாற்பது

அன்றைய மாலையில் பதினெட்டு முழுத் திங்கள்களைக் கண்டுகொண்டிருந்த யுத்தம் ஒரு முடிவுக்கு வந்திருந்தது. வெற்றி தோல்வி சொல்லவியலாதவாறு, சித்தனும் கதக்கண்ணனும் சூர்ப்பாநகையும் இறந்த பின்னரும், சமபலத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த யுத்தம், ஒரு இமைப்பொழுதில் ராவணனின் ஒரு சறுக்கலால் ராமனின் அம்புகள் மார்புக்கவசத்தை சல்லடையாய்த் துளைக்கப்பெற்று அவன் நெடுமரமாய் மண்ணில் விழுந்த கணத்தில் ஓர் இறுதியை அடைந்தது.

பகலவன் மேற்குப் பாட்டில் செங்குருதிக் குடமாய் வானம் பூமியெங்கும் சிவப்பாக்கியபடி என்றுமில்லாத சோகத்தோடு இறங்கத் தொடங்கும்வேளை, யுத்த முடிவை எடுத்துக்கொண்டு தலை நகர்நோக்கி ஓடத் தொடங்கியவன்தான் அந்தச் செய்தி கொண்டோடி. அவனது வேகத்துக்குச் சற்றும் சளைக்காதவர்களாய் முன்னேயும் பின்னேயுமாய் லங்காபுரப் படைஞர் ஓடி வனத்துக்குள் மறைந்து கொண்டிருந்தார்கள்.

தலைநகரை அண்மிக்கும்போது அவன் காவிக்கொண்டிருந்த செய்தியின் அவலம் அவனது குழறுகையிலேயே தலைநகரத்தாரை சேரத் தொடங்கிவிட்டது. வீதிகளிலும், வீடுகளிலும், மரங்களடியிலும், கோட்டைச் சுவரோரமாயும் பசியும், பிணியும், இழப்பின் வருத்தங்களுமாய் படுத்துறங்கிக்கொண்டிருந்த லங்காபுரவாசிகளில் பலர், அந்த அவலக் குரலில் போரின் முடிவறிந்து செயலற்று ஸ்தம்பிதமாகினர். அழவும், அரற்றவும்கூட முடியாத ஆற்றாமை.

விடியவிருந்த அத்தருணத்தில் ஒரு இருளாய் ராவணனின் மரணச் செய்தி தலைநகரில் கவியலாயிற்று.

அரண்மனையின் சயன அறையிலே மந்தாகினி படுத்திருந்தாள். தூமென் தூவிகள் பொதிந்த அப்படுக்கை, என்றைக்கும் இல்லாதவாறு

அன்றைய நாளில் உறுத்தல் செய்ததுபோல்தான் அவளது உறக்கம் இடையிடையே கலைந்துகொண்டிருந்தது. எழுந்து படுக்கையில் அமர்ந்தும், சிலவேளை அதன் காரணமறிய யோசித்தவாறு நடந்தும்தான் இரவின் பெரும்பொழுதைப் போக்கியிருந்தாள் அவள்.

விடிகாலையில் உறக்கம் சற்றுக் கண்ணை அழுத்தி வரும்வேளையில் அவள் செவியை அடைந்தது செய்தி கொண்டோடியின் அவலக் கூச்சல். மந்தாகினி திடுக்கிட்டு விழித்தாள். திடுமென எழுந்து படுக்கையில் அமர்ந்தாள். நெஞ்செலாம் உளைந்து வலியெடுத்தது. செய்தி முழுமையாய்த் தெரியாதபோதும் அவலமொன்று தன்னை அடைந்தாயிற்று என்பது புரிந்தது. சிறிதுநேரத்தில் அவளது உயிரை வதைக்கக்கூடிய செய்தி அரண்மனை வாசலிலிருந்து உரத்துக் கேட்டது: 'தாயே, தலைவர் வீழ்ந்துவிட்டார், தாயே. லங்காபுரப் படை தலைவரின் வீழ்ச்சியோடு பின்வாங்கி ஓடி காட்டுள் மறைந்துவிட்டது. எதிரிப்படைகள் சூழ வீடாணர் தலைநகரைநோக்கிப் புறப்படவிருப்பதாக, வெற்றிபெற்ற களிப்பில் எதிரிப் படைஞர் சிலர் கூச்சலிடக் கேட்டேன், தாயே.'

மந்தாகினியின் வெறுமார்பில் கிடந்த முத்தலைத் தாலி நடுங்கி அவிழ்ந்து வீழ்ந்தது. செய்திகொண்டோடியின் குரல், பின்னால் அவனது பிரலாபம் யாவும் நின்றுவிட்டன. ஆனால் அவன் வெளியிட்ட செய்தியின் அதிர்வுகள் மந்தாகினி மனத்தில் மட்டுமில்லை, அரண்மனை, அரசகுலத்தார் மாளிகைகள் அடங்கிலும் நடுக்கங்களை எழுப்பிக்கொண்டிருந்தன அவ்வைகறை நேரத்தில்.

பணிப்பெண்கள் சயன அறை வாசலில் கூடினர். சேடியர் அறைக்குள் நுழைந்து ஆற்றமுடியா அவலத்தில் விறைத்து சிவ லிங்கமாய் மஞ்சத்தில் அமர்ந்திருந்த மந்தாகினியை அழுகையோடு பார்த்தபடி நின்றனர். அரண்மனையில் இனக் குழுத்தலைவர்கள் குழுமினர். அரண்மனைக்கு வெளியே மக்கள் கூடினர். அனைவர் மனத்திலும் 'இனி'யென்ற கேள்வியின் ஓராயிரம் அலைகள் எழுந்தடித்துக்கொண்டிருந்தன.

உலகின் எந்த நாட்டினது செழிப்பையும் செல்வத்தையும் விஞ்சிய லங்காபுரம், எல்லாம் இழந்ததுபோல் அழுதுகொண்டிருந்தது.

சித்தனின் இறப்புச் செய்தி கேட்டபோதுகூட அவள் கலங்கியழியவில்லை. அடிவயிறு நொந்து அழமட்டும்தான் செய்தாள். அப்போது அவளுக்கென்று அவள் கணவன் இருந்திருந்தான். இன்று எவருமில்லை. அவனது இடம், தலைமை, பதவி மட்டுமே அவளை வெறித்துப் பார்த்தபடி இருந்துகொண்டிருக்கின்றன. அவளின் பங்களிப்பைக் கேட்டுக்கொண்டிருக்கின்றன. அவள் என்ன செய்யப்போகிறாள்.

அவள் அரச குலத்தவள். போரும், அழிவுகளும், மரணங்களும் அவள் அறியாதவைகளல்ல. போரென்பது ஒரு பகுதியினரின் பெருமரணத்திலேயே எப்போதும் முடிவுறுகிறது. குறிப்பாக எதிர்ப் படைத் தலைவனின் மரணத்தோடு. வெற்றிகொள்ளப்பட்ட படைத் தலைவனைக் கட்டியிழுத்துக்கொண்டு செல்வார்கள். அது தன் நகர மாந்தரிடத்தில் தன் ஜெயத்தினைக் காட்டுவதற்கான செயலம்சமாக இருந்தது. மேலே அவன் வெட்டப்படுவதோ, இருண்ட குகையொன்றில் சாகும்வரை அடைத்துக் காவலிடப்படுவதோதான் நிகழ்வது. ராவணன் தன் தோல்வியை அனுபவிக்க உயிரோடு இல்லாதுபோனது ஒருவகையில் நல்லதுதான். அவன், பத்துத் தலைமுறையாகக் கட்டிக்காத்து வரப்பட்ட ஒரு தேசத்தின் அழிவைக் காண்பதற்கின்றி மரணித்தமை தோல்வியில் துன்பமில்லாத தோல்வி.

ஆனால் அவள் கருத இன்னொரு அம்சம் இருக்கிறது. அதுதான் முக்கியமானது.

மந்தாகினி சேடியரை நோக்கி கைவிலக்கினாள். யாவரும் மெல்ல அகன்றனர். வாசலில் குழுமி நின்றிருந்தவர்களிடம் தலைவியின் நிலையுரைத்து அழுதனர். யாவரும் பிரலாபம் கொண்டிருந்த வேளையில், அவர்களது இனி என்ற கேள்வியின் விடை தம் தலைவியிடமிருந்து வரப்போகின்றது என்ற எதிர்பார்ப்பு அவர்களுள் விளைந்துகொண்டிருந்தது.

மந்தாகினி நிலாமுற்றம் வந்தாள். செம்பருதி தன் வெளிப்பின் தயக்கத்தைக் காட்டிக்கொண்டிருந்தது, ராவணன் இல்லாத நாள் ஒன்று விடிவதன் துக்கமாக. மரங்கள் அசைந்துகொண்டிருந்தன அவலமாக. தூர மலைக்கோயில் வெள்ளி நிறத்தில் தெரிந்தது தனியாக.

அந்த இடத்திலே நின்றுதான் போர் தொடங்குவதற்கு ஒருசில நாள்கள் முன்னதாக ராவணன் கோட்டை வாசல்புறத்தைச் சுட்டிக்காட்டி, போரின் வரவில் குதூகலிக்கும் அத்தனை மக்களின் வலிமை இருக்கிறபோது மாரீசனின் மறைவையோ, வீடணன் எதிரிகள் பக்கம் சேர்ந்ததையோ தான் பொருட்டாக எண்ணவில்லையென்றும், வெற்றி லங்காபுரத்துக்கேயென்றும் அவளுக்கு உரைத்திருந்தான். இன்று எல்லாம் பொய்யாய்ப் போனது. துக்கத்துக்கு அழக்கூட முடியாதபடி பாரத்தை அவள்மீது சுமத்திவிட்டு அவன் முடிவை அடைந்துவிட்டான். அவன் வழிபட்ட சிவனும் தன் திண்மை, நெடுமைகளை அளித்திருந்தும், அழிவின்மையை அவனுக்குள் செறிக்க மறந்ததேயென்று ஒரு சினம் அவளில் பிறந்தது. அவன் இரவு பகலாய் இயக்க நாக இனங்களின் இணக்கத்துக்காய் கனவில் பிறப்பித்த சிவனும் நாகமும் சேர்ந்த அக்

கோயில், அவனைக் காக்க முடியாதிருந்த பலஹீனத்தைக் கொண்டிருந்ததில் அது அழிந்தால்தான் என்னவென ஒரு கணம் நினைத்தாள் மந்தாகினி.

ராவணன் இறந்துதான் இருப்பானா என்றும் ஒரு சபலம் வந்தது. ஏனெனில் அவனது வலிமை அப்படியானது. குன்றுகளைப் புரட்டும் வலிமை கொண்ட தோளான் ராவணன். ஆனாலும் செய்திகொண்டோடியை அவள் அறிவாள். காட்டான் வேகத்துக்கு மட்டுமில்லை, செய்திகளின் துல்லியத்துக்கும் ராவணனாலேயே பாராட்டப்பட்டவன். அவன் பகைவர் பாசறைவரை சென்று உண்மைகளறிந்து வரும் சாதுர்யம் கொண்டவன். அவன் செய்தியைச் சந்தேகிக்க ஏது எதுவுமில்லை.

அப்படியானால் அவன் சொன்ன செய்தி உண்மையானது. அதில் அவன் அடுத்துச் சொன்ன செய்தி மகாமுக்கியமானது. 'வீடாணர் எதிரிப்படை சூழ லங்காபுரம்நோக்கிப் புறப்படப்போகிறார்.'

எவன் லங்காபுரத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாய் இருந்தானோ, அவன் அதனுள் வெற்றிவீரனாய் உள் நுழையப் போகிறான். லங்காபுரத்தின் வீறாண்மை அழிந்ததற்கு உபகாரணமாய்க்கூட அல்ல, முற்றுமுழுதான காரணமாய் இருந்தவன் அவன்.

ஒருசிறிது காலம், ஒருசில அளவுக்கேனும் அந்த அரண்மனையில் கிளர்ந்துகொண்டிருந்த ஒரு சதியின் வலைப் பின்னலில் தன்னை விழுத்த அவன் செய்த முயற்சியை அப்போது நினைத்துப் பார்த்தாள் மந்தாகினி. தான் பெரிதாக எதையும் கருதவும் முயலவும் செய்யாதுவிட்டிருப்பினும், அந்தச் சதி முயற்சியே பலனற்றதாய் இறுதியில் இற்றுப் போயிருப்பினும் அதில் தான் உடன்பாடு கொண்டிருந்த காலம் முழுவதும் ராவணனோடு மனம் மாறுபட்டிருந்ததை அவளால் நினைக்காமலிருக்க முடியவில்லை. அதை அவளை உடலார்த்தமாய் மட்டுமில்லை, உளவார்த்தத்திலும் நடுக்கியது.

வீடாணனின் நோக்குகளிலிருந்த வி'த்தையும் அப்பொழுது அவளால் எண்ணிப்பார்க்க முடிந்தது. அப்போது ராவணன் உயிரோடிருந்தான். அவன் வலிமை மெய்ப்பிக்கப்பட்டிருந்தது. சினம் பெயர்பெற்றிருந்தது. அவற்றை அஞ்சாமலேதான் தன் மேனியில் வீடாணன் கண்ணோடினான். தன் விருப்பம் கிடைத்தால் அனுபவித்துவிட அவன் ஒரு கணம்கூடத் தயங்கியிருக்கமாட்டான். அப்படியானவன்தான் வெற்றிபெற்று எதிரிப்படையோடு வந்துகொண்டிருக்கிறான்.

ஒரு வாகையில் பெண் வதைப்புத்தானே பிரதான இன்பமாய் வெற்றியாளன் அடைவது. வீடாணன் அவளை அனுபவிக்கப் பின்னிற்க மாட்டான்.

அதை அவளால் உடனடியாகவேனும் தவிர்க்கவியலும். அரண்மனையெங்கும் இனக் குழு மூத்தோர் நிறைந்திருக்கையில் வீடாணனால் அப்படியெல்லாம் வந்தேன், அடைந்தேன் என்பதுமாதிரிச் செய்துவிட முடியாது. ஆனால் வேறு விஷயங்கள் இருக்கின்றன.

வீடாணன் எதிரிகள் பக்கலில் சேர்ந்ததற்குக் காரணம், பாதாள அறைகளில் கொட்டிக்கிடக்கும் மணிக்குவைகளே என ராவணன் சொன்னது சரியெனில், அரண்மனையில் முனைந்தெழுந்த சதியில் வீடாணனின் பங்குக்குக் காரணமும் அதுவாகவே இருக்கக்கூடும்.

ராவணனின் மறைவின் பின் அரசதிகாரம் அவளது கைகளில் வீழ்கிறதென்பதால் அந்த அளப்பரிய செல்வத்தைக் காப்பதுவும் அவளது கடமையே ஆகிறது. அதன் திறவுச் சூத்திரமுறை அவள் அறியாள். அது அறிந்த ஒரேயொரு வாழும் மனிதன் நாகன்தான். ஆனால் அதை வீடாணன் நம்பமாட்டான். தன்னைத் துண்டு துண்டாகச் சிதைத்தேனும் அந்த உண்மையை அறியவே முனைவான்.

மதியவேளையின் மேல் கோட்டைக்கு வெளியே ஆரவார மெழுந்தது. அரண்மனையிலுள்ளோருக்கு நிகழ்வது என்னவெனத் தெரிந்துவிட்டது. ஆம், வீடாணன் வந்துவிட்டான். என்ன செய்வது. கடைசி லங்காபுரவாசிவரை போரிட்டு மடிவதா.

சேடியர் தலைவியிடம் நிலைமையைத் தெரிவிக்க உள்ளே நுழைந்தனர். ஒளிபெருக்கியபடி மந்தாகினியின் முத்தலைத் தாலி மஞ்சத்தில் கிடந்தது. ஒளியிழந்து அப்பால் கிடந்தது மந்தாகினியின் உடல்.

சிறிதுநேரத்தில் கோட்டைக் கதவுகள் எதிர்ப்பின்றித் திறந்தன. கோட்டைக்குள் முதலிலும், அரண்மனைக்குள் தொடர்ந்துமாய் காலடி எடுத்துவைத்தான் வீடாணன். உள்ளே அவன் ஆசை களெல்லாம் அழிந்துபோயிருந்தமை தரிசனமாயிற்று.

# நாற்பத்தொன்று

**கா**லத்தின் நகர்ச்சி அவரவர்க்குமான மனநிலையின்படி விரைவாகவோ மெதுவாகவோ நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது எப்போதும். அதுதான் வாழ்தல் என்பதின் உயிர்த்தலம். காலம் இல்லையேல் வாழ்தல் இல்லை. நாட்கள், வாரங்கள், திங்கள்கள், ஆண்டுகள் என அது தன்னைப் புதுப்பித்துக்கொண்டிருக்கிறது, மாந்தர்கள் உணர்ந்துமோ உணராமலுமோ.

காலக் கரைவில் உயிர் வகிர்ந்தெடுக்கப்பட்டு பாதி தேய்ந்த உடலோடு அடையாளம் அழிந்துபோனாள் வியாழி. நரையும் திரையும் அவளை மொய்த்துவிட்டிருந்தன. கட்டிறுக்க மார்புகள் வற்றி வயிற்றில் வழிந்திருந்தன. ஆனாலும் இன்னும் சிலராலேனும் அவளை வியாழியென அடையாளங்காண முடிந்திருந்தது.

ஆண்டுகள் பலவற்றின் முன் ராம ராவண யுத்த முடிவை அறிந்து நெட்டை மரம் அடியிழந்ததுபோல் நிலமதிர வீழ்ந்த நாகன் பின்னர் எழுந்திருக்கவேயில்லை. அதைக் கண்முன்னால் அதிரவுணர்ந்த வியாழி, அக்கணமே உயிரை உருவி எறிந்துவிடலாம்போல் தவித்தாள். பின்னால் அவளது வாழ்வின் போக்குகள் வேறுவிதமாகத்தான் நடக்கவைத்தன.

அவள் இப்போது தனிமரம். களிவெறி மிகுப்பில் தன் நாவைத் தானே கடித்து உண்டுவிட்டு ஊமையாய்ப்போன மகன், போருக்கென்று போனவன் பின்னர் எக்காலமும் திரும்பவில்லை. சின்ன வயதினனாய் மலையின மக்களோடு விட்டுவைத்த சின்ன மகனும் இல்லாதுபோனான். ஆசை வலயத்துள் அரவணைத்து வைத்திருந்த நாகனும் மாண்டுபோனான். தனியளாய் நின்று உயிர்த் தரிப்பைத் தொடங்கியிருந்தாள் வியாழி.

ராவண காலத்தினதுபோன்றதாய் லங்காபுரம் அப்போது இல்லையென்பது அவளுக்கு அறிய வந்திருந்தது. மகனை, கணவனை, தந்தையை இழந்தவர்களாய் அந்த யுத்தம் பலரையும்தான் இழப்பின் வலியை உணரவைத்திருந்தது. வெஞ்சினம் கொண்டு போரெனின் ஆர்த்தெழும் மக்களினம் அது. அது மட்டுமே அவ்வினம் கண்ட போரல்ல. தம்தமக்கு இடையிலேயென்று, இனக் குழுமங் களுக்கிடையேயென்று, அண்டைய நாடான நாகநாட்டுடனென்றும் அது பல்வேறு சண்டைகளையும் யுத்தங்களையும் கண்டதுதான். ஆனால் தம் தலைவனும் தலைவியுமான ராவணனும் மந்தாகினியும் இல்லாத நாட்டில், அவர்களின் அழிவுக்கு முதற் காரணமாயிருந்த வீடாணனின் ஆட்சி அவர்களுக்கு உயிர்வலி. ராவணன் வீற்றிருந்து அரசும் இசையும் செய்த தவிசில், எதுபொருத்தமும் இல்லாத வீடாணன் அமர்ந்திருந்து மக்களை நிர்வாகம் செய்து கொண்டிருந்தான். அந்த வெறுப்பு அவன் பெயரே தம் செவி எட்டாத தொலைவிற்கு மக்களைக் கூட்டம் கூட்டமாய் மெல்லமெல்லவாய்ப் பெயரச் செய்துவிட்டிருந்தது.

படைஞரையும் புடை சூழ்ந்தவரையும் தவிர்த்து லங்காபுரத்தில் குடிமக்களே இருக்கவில்லைப்போல பிரமை தெரிந்தது. நாடு சுடுகாடாகிப் போன விந்தை நிகழ்ந்திருந்தது.

திசையளாவி மக்கள் அள்ளுண்டு ஓடிவிட்டிருந்தனர். களனிகள் காய்ந்து பிளவைகள் கண்டு கிடந்தன. தோட்டங்கள் கள்ளியும் தாழையும் நெருஞ்சியும் காவிளாயும் சம்பும் புதரும் அடர்ந்து பெரும் அழிச்சாட்டியத்தில். கானப் பறவைகள்கூட நாடுவிட்டோடி விட்டிருந்தாற்போல் அவற்றின் குரல்கள் அழிந்து காலை மாலைக் காற்றுகள் இழைந்தன.

எப்பேர்ப்பட்ட தேசம் அது. தூர தூர இடங்களிலிருந்தெல்லாம் வாணிகரும், தோணிக்காரரும், நாவாய்க்காரரும், கட்டுமரக்காரருமாய் வந்து அங்கே மொய்த்தபடியிருந்த ஒரு காலம் இருந்தது. பொன் அள்ளிக்கொடுத்து பிறநாட்டு அதிசயமும் அபூர்வமுமான பொருள்களை வாங்கிக்கொண்டிருந்தான் ராவணன். இப்போதோ அவன் வம்சமே அழிந்து பேர் சொல்லக்கூட ஒருவர் இல்லாது தொலைந்துபோயிருந்தது.

தன்னை ஒருமுறை காணாதவருக்கும் ராவணன் ஆதர்'மான தலைவனாயிருந்தவன். அவன் புணர்ச்சியின்பத்துக்குக்கூட மந்தாகினி தவிர வேறு பெண் நாடியிராதபோதும், அவனாகம் தழுவ இயக்கவினத்தில், நாகவினத்திலுமே, பெண்களுக்கு மோகம் அலையடித்துக்கொண்டிருந்தது. இன்று அந்த நெடுவுடல் காற்றுவழி

மேகமாகக் கலைந்துபோனது. ஆனாலும் குடிமக்களைப் பொறுத்தவரை அது அகலாத கனவாகவிருந்தது.

வியாழியும் அவனை மறந்துவிடவில்லை. நாகனை எண்ணும்போது மட்டுமில்லை, தன் காதுத் துளையைத் தொட்டுணர நேரும் சந்தர்ப்பங்களிலும் ராவணனை நினைவுகொள்கிறாள். பலவாண்டு களின் முன் ஒருபோது அவன் சென்ற விசைத் தேரின் கிண்கிணிப் பொன் குண்டொன்று கழன்று விழுந்துவிட, அதை எடுத்து வியாழி தன் காதில் ஆரமாய்க் குத்தித் தொங்கவிட்டுக் கொண்டிருந்தாள் நெடுங்காலமாய். இன்று அந்தக் குன்றிமணியன்ன பொன் குண்டு எங்கோ போய்த் தொலைந்துதான் விட்டது. ஆனால் நினைவு தொடர்ந்து வாழ்வுபூரா நினைக்கச் செய்துகொண்டிருந்தது அவளுக்கு.

காடும் மலையும் தவிர்த்தால் வியாழிக்கென்று வேறுபோக்கிடம் இல்லை. நகர்கள் அவள் கண்டதில்லை. நாகனோடான உறவில் நகர மாந்தர் சிலர் தெரியவந்திருந்தனர். நகர் வாழ் கணிகையரின் உல்லாசங்களையும், உணர்வுகளையும் அவள் அறிந்திருந்தாள். பரத்தையர் சேரி குறித்தும், கோயிலின் ஆடற் கணிகையர் பற்றியும்கூட அவள் கதைகளாய்க் கேட்டிருந்தாள். ஆனால் கடல் தெரியாதிருந்ததுபோல் அவள் நகரும் தெரியாதிருந்தாள். அதிர எழும் அலைக் கரங்களும், மண்விழுங்கும் மகாவலியும் நீலநிறச் செறிவுமாய் எல்லை கடந்து தெரிவது கடல்என அவள் கேள்வியில் அறிந்திருந்தாளே தவிர, அதை அவள் கண்கொள்ளக் கண்டதில்லை.

நாகனோடு நாகநாடு சென்றிருக்கிறாள். நாகன் அவளை அழைத்துச் சென்ற இடம், ஏறக்குறைய ஒரு சிறுகிராமமாகவே இருந்தது. நகர், பெருநகர் எதுவும் அவள் காணப்பெற்றதில்லை. தலைநகரை அவள் எப்போதுமே அறிந்திருக்கவில்லை. லங்காபுரத் தலைநகர் அவளுக்குத் தெரியாது. கடல்போல்தான் எல்லாம் அவளுக்கு. கேள்வியில் பட்டதுதான். மலைக்கோயிலைக்கூட உள்நுழைந்து அவள் கண்டதில்லை. அதன் வெண்நிறத்தைத் தூரவிருந்து பார்ததுமட்டுமே. இருந்தும்தான் அந்த அபகீர்த்தி கொண்ட வீடாணனின் பெயர் கேட்கமுடியாத தொலைவுக்கு அவள் ஓடினாள்.

காமம் அவளளவில் மரித்துவிட்டிருந்தது. அவள் நாகன்மீது கொண்டிருந்த காதல்கூட பெரிதான கிளர்ச்சிக்குரியதாய் அப்போது இல்லை. இருந்தும் நினைவுகளுக்குள் ஒரு பொறியாக இருந்து நாகன் அடிக்கடி அவளிடம் வந்துகொண்டிருந்ததனால் அவளுக்கு ஒரு பித்துப்பிடித்த நிலைமையில்தான் வாழ்தல் சாத்தியமாயிருந்தது.

அவள் நாகநாடு சென்றாள். மலைவாழ்நர் குகைகளுக்குச் சென்றாள். பின் திரும்பவும் நாகநாடு. இவ்வாறு அவளது அலைச்சல் வயதின் தள்ளாமையையும் மேவி நடந்துகொண்டிருந்தது.

அப்போது அவள் நாகநாட்டில் ஒரு குடிலில் தங்கியிருந்தாள். நாகனோடு முன்பு அங்கு சென்றிருந்த தருணங்களில் அவள் அந்த இடத்துக்குத் தக வாழும்வகை தெரிந்திருந்தாள்.

வழக்கம்போல் வானம் ஒளியிழக்கத் தொடங்க தால ஓலையில் அவளே இழைத்த பாயை நிலத்தில் விரித்து விண்மீன்கள் பார்த்தபடி வெளியில் படுத்துக்கொண்டிருந்தாள். சிறிதுநேரத்தில் உறக்கமும் வந்தது இசைவாக. ஆனாலும் வழக்கமில்லாதபடி இரண்டாம் யாமத்திலேயே தூக்கம் திடீரெனக் கலைந்துபோனது.

அவள் எதையோ செவிப்பட்டாளா. பல் நெருமுவதுபோல், எலும்புகள் நொறுங்குவனபோல் இருந்தது அச்சத்தம். அது எதுவாக இருப்பினும், எதையோ அவள் கேட்டாள்தான். ஆனால் எங்கிருந்து எழுந்தது என்பதைத்தான் அனுமானிக்க முடியாதிருந்தது.

அது அவளுக்குப் புதிர். சத்தம், அரவம்போன்ற விடயங்களில் அவளது அனுபவம் பெரிது. அவளது தீட்சண்யம் அப்போதும் பெருமளவு பிழைபடவில்லை என்பதே அவளது நம்பிக்கையாக இருந்தது.

ஆச்சரியத்தோடு எண்ணிக்கொண்டிருக்கையில், ஒலியெழுந்த வேளையில் நிலம் அதிர்ந்ததுபோலுமிருந்ததை அப்போது அவள் நினைவுகொண்டாள்.

அப்படியானால் மண்மடியுள்ளிருந்துதான் அவ்வொலி கிளர்ந்திருக்கிறது. அத் திண்ணத்தை, மண்மடியுள்ளிருந்து என்ன சத்தம் கிளரமுடியுமென்ற ஐயம் அடித்து விலக்கியது.

திடீரென, நாகன் ஒருமுறை தான் அவ்வாறான ஒலியொன்றைக் கேட்டதாகக் கூறி, அவளும் அதைக் கேட்டாளா என வினவியது ஞாபகமாயிற்று. அவர்கள் இருவரும் சேர்ந்து வாழத் தொடங்கிய பின்னர், ஓர் இரவில், ஓர் உச்சபட்ச வெறியாட்டை முடித்த பின்னர், அந்தச் சம்பவத்தை நினைவுகொண்டு, நிலத்தினுள்ளே அவன் என்ன ஒலியைக் கேட்டிருக்க முடியுமென்றும், அவன் அவ்வாறு கேட்டிருந்தானேயாகில் அது பாதாள அறைகளில் கொட்டிக் கிடந்த ராவணனது மணிக் குவைகள் தமக்குள் செய்யும் சரசங்களின் ஒலியாகவே இருக்கமுடியுமெனத் தான் கூறிச் சிரித்ததும் அடுத்து ஞாபகமாயிற்று. நாகன் அன்றும் தான் ஒரு நறமுற ஒலியைக் கேட்டதாகவே சாதித்திருந்தான்.

மெய்தான். மண்மடியுள் சத்தம் எழும்பமுடியும்தான்;.

அதற்குமேல் அவளுக்கு நாகனின் நினைவுகளாகிவிட்டது.

இவ்வாறு வாழ்வு கழிந்துகொண்டிருந்தது விரைவாகவோ, மெதுவாகவோ. அவளது ஜீவனும் வதையுடன் வாழ்வைக் கரைத்துக்கொண்டிருந்தது காலத்தில்.

ஒருநாள் வியாழி ஓர் இருள் கவியும் பொழுதில் இறந்துபோனாள். தன் கடைசி மூச்சைவிட்ட அந்த இறுதிக் கணத்தில்கூட, அவளுக்கு வியப்பளிப்பதாய் லங்காபுரத்து அளப்பரிய மணிக்குவியல்களுக்கு என்ன ஆகியிருக்கக்கூடும் என்ற வினா எழுந்து நின்று கொண்டிருந்தது. வாழ்விலிருந்து சாவை எய்தத் தேவைப்படும் அந்தச் சொற்ப பொழுதில்கூட, தான் மண்மடியுள் முன்பு கேட்டதுபோன்ற ஒரு சத்தம் உணர்கையாகியது வியாழிக்கு. ஆனால் அதிர்ச்சியடையவோ, அதிசயமடையவோதானும் செய்ய காலம் சிலநொடிகளின் அவகாசத்தையேனும் அவளுக்குக் கருணை காட்டவில்லை.

பூமி இருண்டு வந்தது.

# பாகம் 2

# நாற்பத்திரண்டு

பெருநிலப்பரப்பை ஆண்ட ராவணனின் காலத்தின் பின், வெறுநிலத்தை ஆண்ட வீடாணனின் காலமும் முடிந்துபோனது. காலவோட்டத்தில், எத் திசையும் தன் கலைத் திறனாலும், கட்டிட நிமிர்வுகளினாலும், திரவியப் பெருக்கத்தினாலும் புகழ்பெற்றிருந்த லங்காபுரமே இருந்த இடம் தெரியாது அழிந்துவிட்டது.

கடல் பொங்கியெழுந்து அந்நாட்டை விழுங்கிவிட்டதாகக் கதையிருந்துகொண்டிருந்தது. லங்காபுரமிருந்த இடத்தில் அப்போது ஆழ்கடல்தான் அலையடித்துக்கொண்டிருந்தது. நாகனும் வியாழியும் ஒருபோது கேட்டிருந்த மண்ணின் நொருங்குகைதான் பின்னாளில் ஒரு பிரளயமாய்ப் அடர்ந்தெழுந்து அந்த அரசை, மண்ணை விழுங்கியிருக்கவும் முடியும். 'பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடு' போன்ற அயல் மண்களைக் கொடுங்கடல் கொண்டது போன்ற நிகழ்வுதான் அதுவென விபரமறிந்தவர்கள் எண்ணிக் கொண்டனர்.

கிழக்கே இவ்வாறெனில், மேற்கே பாலைவெளியாய்க் கிடந்து ராவண விசைத் தேர் பறந்த நெடுந்தரைவை, அப்போது கப்பலோடும் கடலாகியிருந்தது. மாந்தை ஈழத்தின் மேற்கில் பெருந்துறையாக விளங்கியது. வாணிகம் அதனூடு விரிந்து நடந்தது. ஒருகாலத்திய நடைப் பயணம் இயலாததாகி, அப்போது நாவாய்ப் பயணத்திலேயே தமிழ்நாடு அடைதற்கூடிய தலமாயிருந்தது ஈழவர்க்கு. திருவாலவாய், சோழேச்சுவரம் என்று, ஈழமக்கள் பாட்டெழுந்த தலமெலாம் சென்று வழிபாடாற்றிக்கொண்டிருந்தனர்.

நாகநாடு, லங்காபுரம்போன்ற அரசுகள் பெயர்பெற்றிருந்த ஒரு மண்பரப்பில், அரசுகளே அற்றுப்போயிருந்தது அக் காலப் பகுதியில். யார் தம்மை ஆளும் அரசன் என்ற அறிகை மக்களிடத்தில் அரிதாகியிருந்தது. எது தாய் நாடெனவே பலருக்குக் குழப்பமிருந்தது.

அவர்கள் ஒருபோது ஈழத்தையும், இன்னொருபோது பாண்டிநாட்டையும் சேரநாட்டையும் சோழநாட்டையும் சொல்லிக்கொண்டார்கள். ஓர் அலைவுறு வாழ்க்கையில் பக்தியும், கதையும் ஆறுதலைத் தந்துகொண்டிருந்தன அவர்களுக்கு. கல் எடுத்த இடமெல்லாம் கோவில்களாக உயர்ந்துகொண்டிருந்த வேளை, பெருங்கோவில் வழிபாட்டுக்காய் அண்டைய தமிழ்ப் பரப்புகளுக்கு அவர்கள் யாத்திரையாகினர்.

கிழக்கில் கடல் மக்களை அண்மித்து வந்திருந்தது. அந்த மண்ணிலே கடல் தெரியா மக்களே இல்லையென ஆகியிருந்தது. அவர்களின் மூதாதையருக்கு மேற்குப் பார்க்க இருந்த மலைக்கோவிற் சிவனாலயம், அவர்களுக்கு கிழக்குப்பார்க்க உயரத் தெரிந்து கொண்டிருந்தது. அதிலிரந்த கனத்த காண்டாமணி, அங்கிருந்த ஆயிரங்கால் மண்டபம், உயர்ந்த சிவ வடிவம் எதுவும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. எனினும் கிழக்குப் பார்த்து வணங்குதலை அவர்கள் செய்துகொண்டுதான் இருந்தார்கள். ‘கெட்டவன் கிழக்கே போ’ என ஒரு முதுமொழி அக்காலத்தில் வழக்கத்திலிருந்தது, கிழக்கில் அரும்பெரும் தெய்வமொன்று இருப்பதான அர்த்தத்தையும் அக்காலத்தில் சுமந்திருந்தது.

ராவண காலத்தின் பின் சற்றொப்ப இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் கடந்துபோய்விட்டிருந்த ஒரு காலப்பகுதி அது.

அன்றுவரையிலும்கூட விடை தெரியாக் கேள்வியொன்று கதைகூறற் களத்தில் கூடும் மனிதரில் சிலர் மனத்திலேனும் இருந்து தொந்திரவு செய்துகொண்டிருந்தது. தம் கேள்வியின் விடைக்காக அவர்கள் கதைகள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். தமக்குள் கூடிக் கூடிப் பேசினார்கள்.

ஒருவேளை அக் கேள்வி கேட்போரிடத்திலன்றி சொல்வோன் மனத்துள் எழுந்திருத்தலும் கூடும்தான். அதையே அவன் கதைகளினூடு பரவவிட்டுக்கொண்டிருந்தான் என்றாலும் பொருந்தும்தான்.

சிவன் தமிழ் மண்ணெங்கும் கோயில்கொண்டிருந்தான். காலை மாலை பூஜைகள் தவறாமல் நடைபெற்றுக்கொண்டிருந்தன. ராவணன் தொடக்கிவைத்த லிங்கத்தில் நாகச் சின்னமிடும் பழக்கத்தை ஆதாரமாகக்கொண்டு, சிவனில் நாகம் தோளேறி நின்றிருந்தது அப்போது. அதற்குக் கதைகள் புனைந்தார்கள். புனைவுகளைக் கேட்க மக்கள் கதையுபாசகர்களாய் அலைந்தனர். ஈழ மண்ணில் கதை கேட்கும் மரபு அதன் மக்களது அலைவினின் விதிப்பாகியிருந்தது.

அன்று ஒரு சிவன் கோயில் மண்டபத்திலே, அண்மையில்தான் தமிழ்நாட்டுத் தலைநகரான காஞ்சிக்குச் சென்று திரும்பியிருந்த கதைசொல்லி ஈழநாகன், பொழுதுபடு வேளைக்காய்க் காத்துக் கொண்டிருந்தான்.

மேலே நிலா எழுந்து வெளி வெளிர்ப்பாகியது. உள்ளே நெய் விளக்குகள் எரியவைக்கப்பட்டன.

மக்கள் ஒருவராய் இருவாராய்க் கதைத் தலத்தில் கூடத் தொடங்கினர்.

சிறிதுநேரத்தில் கதை பிறந்தது.

'பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால், அதோ கீழ்த் திசையின் விளிம்பில் வெண்ணிழலாய்த் தெரிந்துகொண்டிருக்கிறதே கோகர்ண மலை, அந்த மலைக்கு அப்பால் அலையடிக்கும் கடல் தீரத்தில் ஒரு பெரிய வளம் பொருந்திய நாடு இருந்துகொண்டிருந்தது. அது லங்காபுரமென்ற இனிய பெயர் பெற்றிருந்தது. இயக்கரும் நாகருமான ஈரின மக்களும், வனமக்களும் மலைமக்களும்கூட, பேதமின்றி இனிதுறைந்திருந்த அந்த நாட்டின் கடைசி அரசன்தான் ராவணேசன்.

'ராவணேசன் மகாவீரன். போரில் யாரும் வெல்வதற்கரிய வாள் பு+ண்டிருந்தவன். ஓட்டத்தில் எதுவும் நிகராவற்கும் அரிய விசைத் தேர் கொண்டிருந்தவன். இயக்கனான ராவணன் நாக இனத்தவளான மந்தாகினியை மணந்து இனவுறவுகள் தழைப்ப இனிதரசாண்டவன்.

'அவனது அரசில் அவன் மிகவும் அரவணைத்து நடந்த ஆறாடிகள் பல பேர் இருந்தனராம். அவர்கள் மூலமாகவே பல்வேறு நாடுகளின் நடப்புகளையும், அவ்வந்நாட்டுக் கதைகளையும் அறிந்து கொண்டிருந்தானாம் ராவணன். அவர்களில் என் பெயர்கொண்ட நாகன் என்பானும் ஒருவன் இருந்ததாக ஐதீகம். கால்கள் ஓய்வுறா, மனம் திருப்தியடையாத நாகன், யூகத்திலும் விவேகத்திலும் சிறந்தவனாயிருந்தானானம்.

'நாகன் ராவணனின் நண்பனாயும் இருந்தான். பிறநாட்டுக் கதைகளைக் கொண்டுவந்து சேர்த்ததுபோல், இங்குள்ள கதைகளையும் வெவ்வேறு தேசங்களுக்கு எடுத்துச் சென்றிருக்கிறான் அவன். நாகனும் ராவணனும் வெகுமகிழ்ச்சியாக இருக்கும் நேரங்களில் மதுவருந்திக் கழிப்பார்களாம். அப்படியான ஒருநாளில் ராவணன் கேட்டானாம், 'ஏன் நாகா, மாலையில் மேற்கே சென்று மறையும் சூரியன் மறுநாள் கிழக்கிலே எவ்வாறு தோன்றுகிறது. நீ சென்றுவந்த நாடுகளில் அதுபற்றி என்ன அறிவு நிலவுகிறது' என்று. அதற்கு நாகன் இவ்வண்ணம் விடை பகர்ந்தானாம்: 'அரசே, அதே ஞாயிறுதான் மறுபடியும் மறுபடியும் உதிப்பதாய் நீர் ஏன் எண்ணவேண்டும்.

கிழக்கில் எழும் ஒரு ஞாயிறு தன் குழந்தைப் பருவம் மாறி வாலிபப் பருவம் அடைந்து கொதித்து, பின் முதுமை எய்தி அக் கனல் அவிந்து மேற்கடலிலே சென்று அமிழ்ந்து அழிவதாக நீர் ஏன் எண்ணக் கூடாது. மறுநாள் கிழக்கிலே எழும் ஞாயிறு ஒரு புது ஞாயிறாகும்.'

'ராவணன் அந்த மறுமொழியில் திருப்தியடையாது அது குறித்தான தன் ஐயத்தை நிவர்த்திக்கும் பதிலுக்காய் நாகனை இடையறாது நிர்ப்பந்தித்துக்கொண்டு இருந்ததாய்க் கதை இருக்கிறது. ஒவ்வொரு நாளிலும் புதிய ஞாயிற்றினை அல்ல, ஒரே ஞாயிறையே நான் உணர்கிறேன் என்றானாம் ராவணன். அதற்காகவே ஒரு நெடிய காலம் ஆறாடியாக நாகன் இருந்தானாம். ராவணன் கொடுத்த சீனத்து மேலாடையொன்றுடன் தண்ணீர்த் தோற்பையும், கைக்கம்பும் தாங்கி தன் அரசனது ஏக்கத்தைப் போக்க நெடுந்தொலைவு அலைவுற்றானாம் நாகன்.

'அவ்வாறு ஓர் அறிவுத் தேடலிலும் இருந்த ராவணன், ராம இலக்குவர்களுடனான போரில் தோற்று இறக்க நேர்கிறது. அவனுக்கு பத்துத் தலைகள் இருந்ததாக தமிழ்நாட்டிலே ஒரு கதை பரவிவருகிறது. அவன் மிகு கொடுமனம் படைத்தவனென்றும், இரக்க மென்பதே என்னவென்று அறியாதவனெனவும் அவர்கள் கதைகளிலே சொல்லக் கேட்டிருக்கிறேன். இது குறித்து நான் பல்லவ தேசத்தில் நின்றிருந்தபோது ஒரு கதாமண்டபத்தில் கதையுரைப்போனுக்கும் எனக்குமிடையே ஒரு வாக்குவாதமே நடந்தது. எனது கருத்து வலுத்து வந்த வேளையில் அங்கு திடீரென எழுந்த ஒரு புத்தபிக்கு, பல்லவர்களின் காஞ்சித் தலைநகர் புத்தகோட்டத்தில் புத்தமும், வேறு கல்வியும் கலைகளும் கற்கச் சென்ற ஈழத்துப் பிக்குவாக இருக்கவேண்டும் அவர், கதையாடியின் கருத்துச் சரியானதெனவும், இயக்க இனம் அப்படி அநாகரிகமானதும், கொடுமனம் உடையது மாய் இருந்ததாகத்தான் அவர்களது வம்சாவளி நூலான பாளி என்கிற மொழி நூலில் எழுதப்பட்டிருப்பதாகவும் உரைத்து என் கருத்துக்களைத் தோற்றுப்போக வைத்துவிட்டார்.

'கதைகள் இன்பத்துக்காகவே புனையப்படுகின்றன. இன்பத்துக்காக புனைவுகள் இறுகி இறுகி உண்மையானவை உருத்தெரியாமல் மறைக்கப் பட்டுவிடுவதும் உண்டு. அதுபோல் இந்த ராவண காதையும் வேறொரு கதைபோல் நாளை உருமாற்றம் பெறலாம். அப்பெரும் பொய்கள் ஒரு கவிஞனால் நாளை காவியமாய்ப் பாடவும் பெறலாம். தமிழ்மொழி உள்ளளவும் அப் பொய்கள் நின்றுநிலைபெறவும் படலாம்.

'அது எப்படியோ, ராவண காதை அதியற்புதமானது. எழுத்து உருவாகியிராததும் இயக்க நாக மொழிகளின் கலம்பகத்தால்

ஈழமொழியென்ற நம் ஆதித் தாய்மொழி உருவாவதற்கும் காரணமா யிருந்ததுமான அந்தச் சில்லாயிரமாண்டுகளுக்கு முன்னான காலப் பகுதியில் ராவணனென்ற மன்னன், எவ்வளவு அறிவுத் தீவிரமும், கதையறியும் ஆவலும் கொண்டிருந்தான் என்பது முக்கியமானது.

'அவன் குவை குவையாய்ச் சேர்த்துவைத்த மணிக்குவைகள் அவனது பாதாளக் கிடங்கிலே கிடந்திருக்கின்றன. அப் பாதாள அறையின் திறவுப் பொறிமுறை ராம ராவணப் போர் தொடங்கிய காலத்தில் இருவர் மட்டுமே அறிந்ததாக இருந்தது. ஒன்று ராவணன். மற்றது நாகன். போரில் தான் இறக்க நேர்ந்தால் மந்தாகினியாகிய தன் மனைவி அரசிருக்கையில் அமர்வாளெனவும், அப்போது நாகன் வந்து பாதாள அறைகளின் திறவுப் பொறிமுறையை அவளுக்குக் காட்டிக்கொடுக்க வேண்டுமெனவும், மந்தாகினி அரச கட்டில் ஏற முடியாது போய் அப்போது எதிரிகள் பக்கலில் சேர்ந்து கொண்டிருக்கும் தன் தம்பி வீடாணன் அல்லது வேறெவரேனும் பட்டமேறினால் உண்மையை உரைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ள அவன் தன் உயிரைக் கொடையாக்கி விடவேண்டு மென்றும் ராவணன் சொன்னதற்காய், யுத்தம் நடந்த பதினெட்டுத் திங்கள் காலத்தில் உள்தேச நாடோடியாக என்றும் ஒரு நகர்ச்சியில் இருந்துகொண்டிருந்த நாகன், ராவணன் இறந்த செய்தி தெரியும் கணத்திலேயே பேராறடித்த நெடுமரமென மண்ணில் வீழ்ந்து உயிரை நீத்துவிடுகிறான்.

'ஒரு அரசனுக்கும் ஒரு ஆறாடிக்கும் இடையே இதுபோல் இருந்த நட்பின் இறுக்கத்தினை எங்கேனும் நீங்கள் அறிந்திருக்கிறீர்களா. உடுக்கை இழந்தவன் கைபோல் ஓடிச் சென்று இடுக்கண் களைவது மட்டுமில்லை, சமயத்தில் உயிரைக் கொடுத்து தம் வாக்கையும் காப்பாற்றும் ஒரு நல்ல நட்பு' என அன்றைக்கான தன் கதையைக் கூறி முடித்தான் ஈழநாகன்.

கூடியிருந்தவர்கள் கலையத் தொடங்கினர்.

சபையில் தனித்தவோர் உருவம்மட்டுமே எஞ்சியிருந்தது. அது வேறு யாருமல்ல, ஈழநாகனின் மனைவி வியாழமாலைதான். ஈழநாகன் வர செல்வி எழுந்தாள். இருவரும் தம் இல் நோக்கி மெல்ல நடக்க ஆரம்பித்தனர்.

வழமைபோல் பேச்சும், கலகலப்பும், சிரிப்பும் கிளர்த்திவரும் வியாழமாலை, அன்றைக்கு ஒரு மவுன மூட்டத்தில் வந்து கொண்டிருந்தது ஈழநாகனுக்கு ஆச்சரியமாய்த்தான் இருந்தது. ஆனாலும் அது குறித்து அதிக அக்கறை காட்டவில்லை நாகன். அவனே அவளது போன்றதொரு சிந்தனைச் சுமையோடேயே வந்துகொண்டிருந்தான்.

நிலாக் காய்ந்த வானம். வீசிநின்ற குளிர் காற்று. அரவம் கிளர்த்திய மரக் கூடல்கள். கால்களுள் நொருங்கி அதிர்ந்த மணற் துணுக்கை

களின் கூச்சத் தொடுகை. யாதும் அவர்கள் கவனத்தில் இல்லை. நீண்டநேரம் அந்த நிலையிலேயே நடந்து கொண்டிருந் தார்கள். திடீரென வியாழி, 'ராவண ராசாவை நினைக்கிற எப்போதும் என்னுள் எழுந்துகொண்டிருக்கும் கேள்விதான் இது. என்றாலும் இன்று விடாப்பிடியாக வெகுநேரம் என்னைத் துளைத்துக் கொண்டிருக்கிறது. ராவணரின் பாதாள அறை மணிக் குவைகளுக்கு அவரது மரணத்தின் பின் என்ன நேர்ந்தது. உங்களுக்கு அதுபற்றி ஏதாவது தெரியுமா.'

'அதே கேள்விச் சுமையோடுதான் நானும் வந்துகொண்டிருக்கிறேன்' என்றான் மெதுவாய் நாகன்.

நாள்கள் ஒவ்வொன்றாய்ப் பிறந்து அவரவரதும் வாழ்நாளை அவரவரும் அறியாமலே வாள்களாகி சிறிதுசிறிதாக ஈர்ந்து கொண்டிருந்தன.

ஒருநாள். வைகறை நேரம். உயிர் சிலுப்பி எழுந்தது ஒரு குரலோசை.

**'நிரைகழல் அரவம்**
**சிலம்பொலி அலம்பும்**
**நிமலர் நீறணி திருமேனி.....**
**கரைகெழு சந்தும்**
**காரகிற் பிளவும்...**
**அளப்பரும் கனமணி வரன்றி ..**
**குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்...**
**கோணமாமலை அமர்ந்தாரே!'**

ஊரே உறைந்தது பக்தி ரசம் மிகுந்த அப் பாடல் வரிகளில்.

நாகன் திடுமென எழுந்தான். நினைவு கலங்கியவனாய்க் குரலெழுந்த திசையில் நடந்தான். அவன் நடக்க இசையும் வளர்ந்து வந்தது. இசையைக் குறிவைத்து அவன் நடையைத் தொடர்ந்தான்.

அவனது ஊர்ப்புறத்துள்ள சிவன் கோவில்தான் அது. குளத்தின் படித்துறையில் ஒரு பரதேசி. யாத்திரை புறப்பட்டு வந்தவனாய் இருப்பான் போன்றிருந்தான். அவனது நற்சாரீரத்திலிருந்துதான் அந்தப் பக்திப் பாமாலை பிரவாகித்துக்கொண்டிருந்தது.

வரி வரியாய்ச் செவியிலிறங்க, நாகன் ஸ்தம்பிதமானான். அக் கணத்திலும் ஸ்தம்பிதமாகாதது அவனது செவிப்புலனாக மட்டுமே இருந்தது.

நாகனின் செவியில் மூன்றாவது பாசுரம் ஒலித்தது.

பின் நான்காவது, அதன் பிறகு ஐந்தாவதென பல பாசுரங்களை அந்தப் பக்திமான் பாடி முடித்தான். அவன் புறப்படுகிற சமயத்தில்தான் நாகனின் ஸ்தம்பிதம் கலைந்தது. கண்டுகொண்டு, 'சுவாமி! சுவாமி!' என அரற்றியவாறு பின்னால் ஓடினான்.

பரதேசி நின்றான். 'என்ன, ஐயா.'

'இந்தப் பாடல்களை .. எமது கோணேசர் மீதான இந்தப் பாடல்களை..' நாக்குழறினான் நாகன்.

பக்தன் இடைமறித்து, 'நானில்லை, ஐயா, தமிழ்நாட்டிலே பாலறாவாயன் என்றொரு பிள்ளை..'

'ஞானசம்பந்தன்..'

'ஆமாம், ஐயா. அந்தப் பிள்ளைதான் பாடியது. அது கேட்டுப் பரவசமாகி கோணேசர் பெருமானைத் தரிசிக்க சோழநாட்டிலிருந்து இங்கே யாத்திரை வந்த பரதேசி, ஐயா, நான். கோயில் கண்ட இடமெல்லாம் நின்று பதினொரு பாடல்களைக் கொண்ட அப் பதிகத்தின் வரிகளையெல்லாம் பாடியும் ஆடியும் அழுதும்கொண்டு வருகிறேன். இப்படியே கோணேசர் ஆலயம் செல்லுகின்றேன்' எனக் கூறிவிட்டு வேறு பேச்சை விரும்பாதவனாய்த் தொடர்ந்து நடந்தான் அப் பக்தன்.

'...குரைகடல் சூழ்ந்து
கொள்ளமும் நித்திலம் சுமந்து..'

'..தெளித்து முன்னரற்றும்
செழுங்கடல் தரளம்
செம்பொனும் இப்பியும் சுமந்து..
கொழித்து வன்திரைகள்
கரையிடைச் சேர்க்கும்
கோணமாமலை அமர்ந்தாரே!'

நடையினொடும் தொடர்ந்துகொண்டிருந்தது பக்தனின் அமுத கானம்.

நாகன் தலையை உசுப்பினான். தன்னைச் சுதாரித்தான். பக்தனின் பாடல்களில் உள்ள சில சொற்களைப் பொறுக்கினான். 'கனமணி வரன்றி.. நித்திலம் கொழிக்கும்... தரளம், செம்பொன்னும் சிப்பியும் சுமந்து..'

ஆகா, இவைதானே ராவணனின் பாதாளக் கிடங்கில் கிடந்த மணிக்குவைகள்!

ஈழநாகன், 'வியாழீ' எனப் பெருங்குரல் எழுப்பியவாறே தன் இல்நோக்கி ஓடினான்.

# பாகம் 3

# நாற்பத்து மூன்று

**17** ஆம் நூற்றாண்டின் கடைக் கூறு அது. வெகுநேரமாகியிருந்த ஓர்இராப்போது. தான் வெளியிட இருக்கும் ஒரு நூலுக்கான தனது பயண, தொழில் அனுபவக் குறிப்புகளை எழுதிக்கொண்டிருந்தான் ஜெறாட் றிக்கோ டி சூசா.

இரவின் லேசான குளிர்காற்று அவனது இரவுடையின் திறந்த மார்புப் பகுதிக்கூடாக மேனியைத் தழுவி இதம் செய்து கொண்டிருந்தது. உள்ளேயோ வெம்மை கனன்றுகொண்டிருந்தது.

திறந்த விறாந்தையில் காப்பிரி லமெக்கா காவல் இருந்து கொண்டிருந்தான்.

சூழ்ந்திருந்த தனிமையில் இரவச்சம் எழ வாய்ப்பே இல்லாத காவல். கடந்த சில மாதங்களின் முன் கோவாவிலிருந்து கடின கட்டிட வேலைகளுக்காகவும், தேவையானபோது போர்வீரர்களாக தொழிற்படவுமாக இலங்கைக்கு அனுப்பட்டிருந்த நூறு காப்பிரிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவன் லமேக்கா. விழித்துக்கொண்டு உறங்கி யிருப்பவன் என அவனை பணியாளனாய் அனுப்பியிருந்த ஒரு போர்த்துக்கீசியன் சொன்னது உண்மையென்பதை இரண்டொரு நாளிலேயே கண்டுகொண்டான் ஜெறாட். லமேக்கா உறங்கு வதில்லையென்பது அவன் உறங்குவதற்கான நேரம் இல்லாதவன் என்பதன் இன்னொரு மொழியே. ஆயினும் லமேக்கா தன் கடமைகளில் கடுகளவும் பிசகாதவன்தான்.

மேசையில் கிண்ணத்தில் இன்னும் மீதியாக பாதி மது இருந்துகொண்டிருந்தது. அதைத் தொடுவதற்கான மனநிலையே அற்றவனாய் ஜெறாட்டின் மனம் தன் எழுத்தில் இறங்கியிருந்தது.

நீண்டநேரத்தின் பின் இறகு மைப் பேனாவை அதன் குத்துண்ட கிண்ண இருக்கையில் வைத்துவிட்டு, மதுக்கிண்ணத்தை எடுத்து அதை

வெறுமையாக்கினான் ஜெறாட். சூழலை ஒருமுறை அவதானம் கொண்டான்.

லமேக்காவின் அசைவுகளின் அரவம் வெளியே கேட்டது.

மனநிறைவடைந்தவனாய் அதுவரை தான் எழுதியிருந்த கடைசிப் பக்கத்தின் வரிகளில் ஒருமுறை கண்ணோடினான் அவன்.

'மலையின் உச்சிக்குச் செல்லும் செங்குத்தான வழி தொடங்கு மிடத்தில் ஒரு கோயிலும், மற்றையது செங்குத்தான பாதையின் மத்தியிலும், மிகவும் சிறப்பு வாய்ந்த பெரிய கோயில் உச்சிமலையிலும் இருந்தனவெனத் தெரிகிறது. இவற்றின் அழிந்த அடையாளங்களைத் துல்லியமாக அங்கே நான் கண்டேன். இவைகள் மூடநம்பிக்கையுள்ள பெருந்தொகையான யாத்திரீகர்களால் வணங்கப்பட்டு வந்தன வென்பதில் எள்ளளவான ஐயத்துக்கும் இடமில்லை.'

அவனது தந்தை கொன்ஸ்ரன்ரின் டி சூசாவின் காலத்தில்தான் அக்கோவில் இடித்தழிக்கப்பட்டது. அந்த அழிவு நடைபெற்ற ஆண்டும் ஞாபகமாகவே அவனுள் இருந்துகொண்டிருந்தது. அந்த ஆண்டு 1624. அது போத்துக்கீசிய அரசின் அக்கிரமத்தின் ஓரம்சமாக அவனுக்கே உள்ளுள் ஓர்அபிப்பிராயம் இருந்துகொண்டிருந்தது. தந்தையே அதனைச் செய்திருந்த தளபதியானாலும் அவனால் அச் செயலை மறக்கவோ மன்னிக்கவோ என்றும் முடியாதிருந்தது.

போர்துக்கீசிய சரித்திர ஆசிரியர்டி குவைறோஸ் பாதிரியாரே, கிழக்கின் ரோமாபுரியாக கோணேசர்மலைப்பிராந்தியம் விளங்குகின்றது என எழுதுகிறாரெனின், அதன் வனப்பும் வளமும் சொல்லும் தரத்தினதாய் இருந்திருக்காதென்பதில் மிகுந்த நம்பிக்கையிருந்தது ஜெறாட்டுக்கு.

கோவிலை இடித்த கையோடு போத்துக்கீசிய அரசனுக்கு கொன்ஸ்ரன்ரின் அனுப்பிய அறிக்கையின் விபரங்களை ஜெறாட் அறிவான். மாணிக்கராசா எனப் பெயர்கொண்ட ஓர்அரசன் அந்தக் கோவிலை கி.பி.1300 ஆண்டளவில் கட்டியிருந்ததாகவும், போர்த்துக்கீசிரியரின் ஆட்சிக்கான அச்சுறுத்தலாக செல்வமும் அதிகாரமும் கொண்டதாக விளங்கியதால் தான் அதனை அழிக்க நேர்ந்ததாகவும் அதில் அவன் குறிப்பிட்டிருந்தான். ஜெறாட்டுக்கு அவற்றில் சந்தேகம் இருந்தது.

அதன் கீர்த்தியும் செல்வமும் அதிகாரத்தின் மய்யமாகின்றது எனும் காரணம் மட்டுமேதான் போர்துக்கீசியனான கொன்ஸ்ரன்ரினுக்கு மனவெக்கையை அளித்ததாய் இருக்க முடியுமா. மாணிக்கராசாவெனப் பெயர்கொண்டிருந்த ஒரு அரசன் பொன்னும் மணியுமாய்க் குவித்து வைத்திருந்ததாக நிலவிய கதையில் மயங்கி, அதுபோல

அக்கோயிலிலும் இருந்திருக்கக்கூடிய பொக்கி'ங்களை அபகரிக்கும் நோக்கத்தோடேயே அவனது கோவில் படையெடுப்பு இருந்திருக்கா தென்பது என்ன நிச்சயம். மணிக் குவைகளைக் கண்டடையும் முயற்சியிலேதான் கோயிலை அவன் தகர்த்தெறிந்தானா. பொக்கி'ம் நிச்சயமாக அவனுக்கு அகப்பட்டிருக்காது. ஏனெனில் அவன் தேடிய இடங்களில் அவை வைக்கப்பட்டிருக்கவில்லை. கோயிலில் நிறைய பாதாள அறைகள் இருந்திருக்கின்றன. அவனுக்கு மிகப் பரிச்சயமான கோயில் அறங்காவலர்களில் ஒருவர்சொன்ன தகவல் இது. இவ்வாறாக அந்தக் கோயிலுக்கும் பொக்கி'ங்களுக்கும் எப்படியோ ஒரு தொடர்பு விழுந்துவிடுகிறதே எப்படி. ஒரு காலத்தே பனைப்பேரலையில் அழிந்ததாகக் கருதப்பட்ட லங்காபுரத்தின் எஞ்சிய பகுதிகளே, அதைக் கிழக்கின் ரோமாபுரியெனச் சொல்ல குவைரோஸ் சுவாமியாரை வைத்ததெனில், முழு லங்காபுரமும் எவ்வாறிருந் திருக்கும்.

இவ்வாறான பல கேள்விகள் அவனிடத்தில் எழுந்திருந்தன.

அவற்றுக்கான விடை கிடைப்பதும் சாத்தியமற்றதாகத் தெரிந்த தாலேயே கோணேசர்கோயில்பற்றிய பெருவியப்பு அவனிடத்தில் நிறைந்துகொண்டிருந்தது. அவனுள், ஆதாரங்களற்றதாயினும் கற்பனை விரித்த கட்டுமானம் மிகப் பெரியதாய் இருந்தது. போர்த்துக் கீசியர்காலம், முன்னதாக குளக்கோட்டன் காலம், அதற்கும் முன்னமான ராவண காலம் என புனைவுகளையும் தரவுகளையும் புரவிகளாக்கி, ஜெறாட் றிக்கோ வரலாற்றுலகில் பயணித்தபடியே இருந்தான்.

காலை புலர்வதன் அடையாளங்கள் வெளியே தெரியத் தொடங்கின.

# பாகம் 4

# நாற்பத்து நான்கு

**கோ**ணேஸ்வரர் ஆலயம் போத்துக்கீசிய அழிதொழிப்பின் பின்னாலும் கட்டி முடிக்கப்பெற்றிருந்தது.

மகாசேனன் காலத்தில் திருக்கோணமலையின் அந்தணர் ஆலயம் அழிக்கப்பட்டமைதான் வரலாறு பதிந்து வைத்திருக்கும் அதன் முதல் அழிப்பு. ஒவ்வொரு அழிப்பின் பின்னாலும் சிவன் நாமத்தோடு கோவிலும் மறுபடி மறுபடியுமாய் நிர்மாணம்பெற்றே வந்தது.

போத்துக்கீசியரின் பின் ஒல்லாந்தரும், அவர் பின்னர் பிரித்தானியருமாக இலங்கையை ஆண்ட பின் இலங்கை இருபதாம் நூற்றாண்டின் அரைவாசிக்கு மேலே சுதந்திர நாடென்ற பெயர் பெற்று விளங்கிக்கொண்டிருந்தது.

ராவண காலத்திலிருந்தே லங்காபுரம் உலக கவனங்களின் மையமாக இருந்துவந்திருக்கிறது. அதனால்தான் பின்னாளிலும் லங்காபுரத்தைப் பிரநிதித்துவப் படுத்தக்கூடிய திருகோணமலை உலக நாடுகளின் ஆதர்'ம் நிறைந்த பகுதியாகப் போனது. அதற்கு அது வகித்துவந்த சமுத்திர, நில மய்யம் காரணியாகிப் போயிற்று. முக்கியமான ஒரு தளமாக இயற்கையே ஆக்கிவைத்திருந்தமை லங்காபுரத்தின் குற்றமாக இருக்க முடியுமா. அதனால் பல்வேறு அவதானிப்புகளும், பல்வேறு ஆக்கிரமிப்புக்களும் நிகழ்தலை அது தவறாது கொண்டிருந்தது. மக்கள் வாழ்க்கை அழுத்தங்களுள் விழுந்து, அழிவுகளைக் கொண்டி ருந்தமையின் மூலவேர் அங்கிருக்கிறது.

எத்தனை அழுத்தத்தினுள்ளும், திருகோணமலை நசிக்குறாது நிமிர்ந்தே நின்றிருந்தது.

கோவிலைச் சூழ சைவநெறியைக் கைக்கொண்ட குடும்பங்கள் பல நிறைந்திருந்தன. திருகோணமலைத் துறைமுகத்தின் கடற்பதை மய்யம் காரணமாய் தொழிலாளர் பெருக்கமும் ஏற்பட்டிருந்தது. அவர்களின் வசதி, வசதியீனங்கள் எங்குமே இடையறாப் பெருமூச்சாக இழைந்து கொண்டிருந்தது.

உலகின் முதல் தமிழர் குடியிருப்புக்கள் ஏற்பட்ட புராதன இடங்களில் ஒன்றான திருகோணமலை, ஈழத்தின் சகல இனங்களும் வாழும் நிலப்பகுதியாக மாறி வந்துகொண்டிருந்தமை அதன் பௌதீகத்தில் தெரிந்தது. எந்த இயல்பின் மாற்றமும் கொண்டிருக்கும் ஓர் அற்புத அழகு அந்த மாற்றத்திலும் இருந்ததா என்பதை காலம்தான் சொல்லவேண்டியிருந்தது.

அப்போதுள்ளது ராவணன்பற்றிய பல கேள்விகள் முளைத்திருந்த காலமாயிருந்தது. இராவண காவியத்தின் தீவிரத்தைப்போல், அதன் மறுப்பான தீவிரமும் ஒருதலைப்பட்சத்தைக் கொண்டிருந்தது. ராவணன் அரக்கனாய் இருந்தான் என்றும், அவன் காலத்தில் கோண மலையென்ற சிவன் கோயிலெதுவும் இருந்திருக்க வாய்ப் பில்லையென்றும் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் அறிவுலகத்தில் எழுப்பப்பட்டுக்கொண்டிருந்தன. மண்ணபகரிப்பிற்கான மதவாத, இனவாத நோக்குகளும் இதில் கலக்கத் தவறவில்லை.

கோணேஸ்வரம் என்ற அதன் நாலாயிரமாண்டு வரலாறு மறக்கப்பட்டு, திருகோணமலையென்ற சமகால வரறாற்றுப் பிரதேசமே வாதப் படிவமாகியிருந்தமை புரியக்கூடியதுதான். லங்காபுரம்பற்றிய ஞாபகமே வாதாளிகள் எவர் மனத்திலும் உண்டாகவில்லை.

அது புராணீகத் திரை எறியப்பெற்று ஒரு மாய நகராய் கற்பனையில் மட்டும் இருந்துகொண்டிருந்தது.

ஆனால் உண்மை வெகுகாலம் உறங்கிக் கிடப்பதில்லை.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஓர் அரிய கடலாய்வு நிகழ்கிறது. கடலாய்வில் புகழ்பெற்ற மேலைத் தேயத்தவர் சிலர், மைக் வில்சன், ஆர்தர் சி. கிளார்க், ரொட்னி ஜெங்க்லஸ் போன்றோர், அந்த ஆய்வில் ஈடுபடுகிறார்கள்.

கற்பனையென மறந்திருந்த நிஜம் அவர்கள் ஆய்வு முடிவுகளில் மூச்சுவிட்டெழுகிறது.

'ஆழ் கடலில் மிகப் புராதனமான ஆலயமொன்று அமிழ்ந்து கிடக்கிறது. பிரமாண்டமான ஒரு மணியும், விளக்குகளும், கோயிலின் பெரும்பெரும் தளங்களும், தூண்களும் சிதறிக் கிடக்கின்றன. இக் கோயில் கடற்கோளினால் அழிந்ததாக இருக்கலாம்.'

திருகோணமலைப் பிரதேசத்தைச் சூழ்ந்த ஆழ் கடலில் ஆய்வுசெய்தோர் வெளியிட்ட இத்தகவல்கள் மூலம் மெய்யிலிருந்தே லங்காபுரம்பற்றிய புராணக் கதைகள் முளைத்த விந்தை புரியலாயிற்று.

பக்திக் காலம்போல் இல்லையெனினும், கோணேஸ்வரத்தில் கோணமலைப் பதிகம் வழமைபோல் வழிபாட்டு நேரங்களில் ஒலித்துக் கொண்டிருந்ததுதான். பக்தர்கள் மலையேறிச் சென்று சிவவழிபாட்டைச் செய்தும், ராவணன் வெட்டு எனப்பட்ட பெரும் மலைப் பிளவைப் பார்த்தும் அருகேயுள்ள ஒல்லி மரத்தில் நேர்த்திக்கும் ஞாபகங்களுக்குமான காசு முடிப்புக்களைக் கட்டியும்கொண்டு பெருமாற்றங்களற்ற சுமுகமான சூழலொன்றை அனுபவித்துக்கொண்டிருந்தனர்.

எண்பதுகளின் நடுப்பகுதியில் ஒரு வெள்ளி காலையில் ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் நாகநாதன் திருகோணமலைகந்தளாய் நெடும்பாதையைத் தொடும் ஒரு கல்லொழுங்கையின் தனது வீட்டிலிருந்தபடியே வரலாற்று நூலொன்றை வாசித்துக்கொண்டிருந்தார்.

வரலாற்றின் வாசிப்பு பல்வேறு மனஎழுச்சிகளைக் கொடுத்த ஒரு காலம் அவருக்கு இருந்தது. இன்று அது மனவெக்கைகளையே ஏற்படுத்துவதாய் இருக்கிறது. அதனாலேயே வாசிப்பை நிறுத்தி விடவும் அவர் சிலகாலம் நினைத்துவந்தார். இப்போது வாசிப்பு மட்டுமே ஒற்றைப் பொழுதுபோக்காய் அல்லது இருப்பின் அடையாளமாய்ச் செய்ய அவரால் முடிந்திருக்கிற வகையில் வாசிப்பைக் கைவிடும் எண்ணத்தைதான் கைவிட்டிருந்தார்.

வெளியில் அமைதி குலைய ஆரம்பித்துள்ள காலப் பகுதிதான் அது. நடந்து சென்றே ஒவ்வொரு வெள்ளியிலும் சிவ தரிசனம் கண்டு வழிபாடாற்றி வந்த ஐம்பது வருட கால வாழ்வை முக்கிய பகுதியாகக் கொண்டது அவரது அறுபத்தைந்து வருட வாழ்க்கை.

அதுபோல் வாழ அவரால் முடியவில்லைத்தான் இப்போது. அதனாலென்ன. அவரின் உள்ளிருக்கும் தெய்வத்தைக் கூவியெடுக்கும் உயிர்க் குரலை எவர், எங்ஙனம் தடுக்க முடியும்.

**'நிரைகழல் அரவம்**
**சிலம்பொலி அலம்பும்**
**நிமலர் நீறணி திருமேனி**
**கரைகெழு சந்தும்**
**காரகிற் பிளவும்**
**அளப்பரு கனமணி வரன்றி**
**குரைகடலோதம் நித்திலம் கொழிக்கும்**
**கோணமாமலை அமர்ந்தாரே!'**

♦♦♦

லங்காபுரம் அழிந்துகிடக்கிறது
வரலாற்றிலும் மனங்களிலும். ஆயினும்
அதன் உச்ச அடையாளமான
சிவனாலயம்மட்டும் காலகாலமான
அழிப்புகளிலும் மீளமீள எழுந்துகொண்டே
இருக்கிறது. லங்காபுரத்தின் அழிவு
பெருங்கடற்கோளினால் மட்டுமில்லை,
அதன் உள்ளோடியிருந்த சாதாரண மனித
பலஹீனங்களினாலும் விளைந்ததெனக்
கொண்டால், எங்கேயும் எப்போதும் ஒரு
லங்காபுரம் தோன்றியும்
அழிந்தும்கொண்டும் இருப்பதாகக்
கொள்ளவும் முடியும். இவற்றின் தோற்றமும்
மறைவுமான சூழல் எந்த விசையிலிருந்து
பிறக்கிறது? இதற்கான விடையைக்
கண்டடைய முயல்கிறது '**லங்காபுரம்**'
நாவல். ராம காவியத்தின் ராவணன்
கதையை, நவீன ஆழ்கடல்
ஆய்வுகளினதும், துல்லியமாக அறியவரும்
சரித்திர கால எல்லைக்
கணிப்பீடுகளினதும் சாத்திய வெளியில்
பொருத்துவதன்மூலம் இந்த முயற்சி
நாவலில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
கொள்ளுவன கொள்ளப்பட்டும், தள்ளுவன
தள்ளப்பட்டுமான பின் உண்டாகியிருந்த
இடைவெளிகளில் நிகழ்ந்திருப்பது
புனைவின் கூத்து. புனைவுகள்மூலம்
வரலாற்றைக் கண்டடைய முடியுமா?
வரலாறுகள் புனைவுகளை
படைபடையாய்க் கொண்டிருக்கிறபோது,
புனைவுகள்தான் வரலாற்றைக் கொஞ்சம்
கட்டமைத்துப் பார்க்கட்டுமேன் என
வழக்காடிநிற்கிறது '**லங்காபுரம்**'

